11.4.2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

ஏப்ரல் 6. 2002

தொகுதி 94, எண் 1.

C

V2:11,31'p00
poo·94·1
2002 1SO

வெளியீடு 20-11-2000

Issued 20-11-2000

870

104/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 6, 2000 – தொகுதி 94 – எண் 1**

**Thursday the 6th April, 2000 – Volume 94 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. 3.00]

[Price Rs. 3.00

D
V211,31 P00
P00.74..1
222780

## 6-4-2000

## உள்ளடக்கம்

*பக்கங்கள்*


| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1. வினாக்கள்-விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-41 |
| *2. விதி 110-ன்கீழ் அறிக்கை—* | |
| தமிழ்நாடு-கேரள மாநிலங்களுக்கிடையே, முல்லைப் பெரியாறு நீர்த்தேக்கம் தொடர்பான பேச்சுவார்த்தை குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை | 41-45 |
| *3. தகவல் கோரல்—* | |
| பொதுப் பணித் துறை அமைச்சர் மீது 4-4-2000 அன்று தாம் குற்றஞ்சாட்டியதற்கு அளித்த ஆதாரத்தின் மீது எதிர்க் கட்சித் தலைவர் தீர்ப்புக் கோருதல் | 45-64 |
| *4. கவன ஈர்ப்பு—* | |
| குத்தாலம் தொகுதி கழனிவாசல்-பொரும்பூர் சாலைப் பணிகள், வனத் துறையின் தேக்கு ம..ங்கள் அப்புறப்படுத்தப்படாததால் பாதிப்பு | 65-66 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அறிவிப்பு— | |
| மானியக் கோரிக்கைகள், 2000-2001, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆசெ) | |
| 6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்— | |
| (அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை | |
| (ஆ) கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | |
| * மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 67, 72, 75,96, 99, 105, 107-109, 111 118, 132-166 |
| திரு. செ. இராமலிங்கம் | 75-80 |
| திரு. சி. வேலாயுதன் | 81-86 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 88-94 |
| * திரு. நா. பெரியசாமி | 94-100 |
| திரு. அ.ல. தங்கவேல் | 100-103 |
| திரு. இரா. விசுவநாதன் | 104-115 |
| திரு. டி. மணி | 115-120 |
| திரு. ஜி.கே. மணி | 120-127 |
| *திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 127 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 168-169 |




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, மற்றும் வணிக வரிகள்.

**2. கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

**3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

**4. வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:**

வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

**5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
கால்நடை பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transpsort, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Sports, Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:**
Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:**
Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:**
Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**
Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:**
Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:**
Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்**

**திரு. சி.டி. தண்டபாணி**

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்**

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**

**திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன் பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜிஎல். | .. | தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. | சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 10. | அழகிரி. திரு. ச. | .. | சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன் திரு. சி. | .. | அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. .. இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)



41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஓட்டன்சத்திரம்

68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

71. சண்முகம், திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்

72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன்,
திருமதி எஸ்.பி. .. டாக்டர்
இராதாகிருஷ்ணன் நகர்

79 சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80 சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி



85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்

89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற
சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

106. செல்வராஜ் என்கிற
கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 107. செல்வராஜ், திரு. து. | .. | உடுமலைப்பேட்டை |
| 108. சேகரன், திரு. ஆர்.ஆர். | .. | ஓமலூர் |
| 109. சேதுநாதன், திரு. ரா. | .. | திண்டிவனம் |
| 110. சைதை கா. கிட்டு, திரு. | .. | சைதாப்பேட்டை |
| 111. சொக்கர், திரு. ஆர். | .. | சிவகாசி |
| 112. சொக்கலிங்கம், திரு. ஜி. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 113. ஞானசேகரன், டாக்டர் ஆ. | .. | மேல்மலையனூர் |
| 114. ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 115. டேவிட் செல்வின், திரு. எஸ். | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 116. தங்கமணி, திரு. கே. | .. | மானாமதுரை (செ.வ.) |
| 117. தங்கம் தென்னரசு, திரு. | .. | அருப்புக்கோட்டை |
| 118. தங்கவேலன், திரு. சுப. | .. | கடலாடி |
| 119. தங்கவேல், திரு. அ.ல. | .. | சேலம்-2 |
| 120. தண்டபாணி, திரு. சி.டி. | .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | .. | இளையான்குடி |
| 122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. வீ. | .. | செங்கல்பட்டு |
| 124. தளபதி, திரு. கோ. | .. | சேடப்பட்டி |
| 125. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | .. | சேலம்-1 |
| 126. தனபால், திரு. வி.ஜி. | .. | குடியாத்தம் |
| 127. தாமரைக்கனி, திரு. இரா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 128. திசைவீரன், திரு. உ. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 129. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |



| | | |
|---|---|---|
| 130. திருவேங்கடம், திரு. பெ.சு. | .. | கலசப்பாக்கம் |
| 131. துரைசாமி, திரு. பா. | .. | வரகூர் (செ.வ.) |
| 132. துரை, திரு. கே. | .. | திருவெறும்பூர் |
| 133. துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 134. தெய்வநாயகம், திரு. எ. | .. | மதுரை மத்தி |
| 135. தேவராஜன், டாக்டர் மு. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 136. நடராசன், திரு. ஆ | .. | பேரூர் |
| 137. நடராஜன், திரு. த. | .. | செஞ்சி |
| 138. நயினா முகமது, திரு. கோ. | .. | கடையநல்லூர் |
| 139. நன்னன், திரு. கொ.வீ. | .. | செங்கம் (செ.வ.) |
| 140. நாகரத்தினம், திரு. ச. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 141. நாசர், திரு. ஏ.வி.ஏ. | .. | புவனகிரி |
| 142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. | .. | திருவல்லிக்கேணி |
| 143. நிஜாமுதீன், திரு. ஜி. | .. | நாகப்பட்டினம் |
| 144. நேரு, திரு. கா.நா. | .. | லால்குடி |
| 145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. | .. | சிவகங்கை |
| 146. பத்மா, டாக்டர் | .. | நன்னிலம் (செ.வ.) |
| 147. பரணிகுமார், திரு. பா. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 148. பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 149. பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். | .. | மதுரை மேற்கு |
| 151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 152. பன்னீர்செல்வம், திரு. மு. | .. | சீர்காழி (செ.வ.) |

153. பாண்டுரங்கன், திரு. ந. .. பொரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ற்காடு (ஆவா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. நளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு



76. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
77. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
78 மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
79. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
'80 மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

| | | |
|---|---|---|
| 198. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 199. ரங்கநாதன், திரு. எம். | .. | குன்னூர் (செ.வ.) |
| 200. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 201. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |



| | | |
|---|---|---|
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு.ச.க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 225. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 226. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 227. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 228. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 230. வைத்தியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 231. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 232. ஜோதிகண்ணன், திரு. மு.த. | .. | முசிறி |
| 233. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 24, பிரமாதி—திருவள்ளுவர் ஆண்டு 2031

## 2000 ஏப்ரல் 6, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சுழன்றும்ஏர்ப் பின்னது (உ)லகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை."*

*பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம், ஏர்த் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.*

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 221, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**221—**

### அரசு கலைக் கல்லூரிகள்

***23681—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நமது மாநிலத்தில் உள்ள அரசு கலைக் கல்லூரிகள் எத்தனை?*

(ஆ) இவற்றில் தமிழ்ப் பயிற்று மொழி வகுப்புகள் எத்தனை கல்லூரிகளில் உள்ளன?

(இ) அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழ் மொழியில் கல்வி பயில வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நமது மாநிலத்தில் உள்ள அரசு கல்லூரிகள் 67. இவற்றில் தமிழ்ப் பயிற்று மொழி வகுப்புகள் 53 கல்லூரிகளில் நடைபெறுகின்றன.

(இ) மாணவர்கள் தமிழ் பயிற்று மொழி மூலம் படிக்க விரும்புவதைப் பொறுத்து தமிழ் வகுப்புகள் பிற கல்லூரிகளிலும் தொடங்கப்படும்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையிலே கூறுகின்றபோது, டில்லியிலே உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கு ஒரு இடம் ஒதுக்கி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வருங்காலத்தில் அனைத்துத் துறை கல்லூரிகளிலும், பொறியியல் துறையாக இருந்தாலும், மருத்துவத் துறையாக இருந்தாலும், வேளாண்மைத் துறையாக இருந்தாலும், கலைத் துறையாக இருந்தாலும் அனைத்துத் துறைகளிலும் தமிழ் மொழியோடு — மேலை நாடுகளிலே ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் எல்லாம், அந்தந்த மொழியோடு வேற்று மொழியும் ஒரு சிறிய அளவிலே கலந்தாவது, தங்களுடைய சொந்த மொழியிலே மாணவர்கள் பயின்று சிறந்த விஞ்ஞானிகளாக, மருத்துவர்களாக வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இங்கே தமிழிலே படிக்கக்கூடிய மாணவர்களும் ஆங்கில மொழி அல்லது வேற்று மொழியாக இருந்தாலும்கூட — அதிலே சிற்சில சொற்களை உள்ளே புகுத்தியாவது முழுமையாகச் சிறந்த முறையில் படிப்பதற்கு ஏற்ற வகையில் ஏற்பாடு செய்யலாம். இன்றுகூட வடநாட்டில் இந்தி படிக்கக் கூடியவர்கள் கூட, வேற்று மொழியை, ஆங்கில மொழியை எல்லாம் ஆங்காங்கே புகுத்தி அங்கே இந்தியிலே படிக்கக்கூடிய அந்தச் சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்திலே வருங்காலத்திலே அனைத்துக் கல்லூரிகளிலும் Professional கல்லூரிகளாக இருந்தாலும் சரி, கலைக்



கல்லூரிகளாக இருந்தாலும் சரி, — மேல்நிலைப் பள்ளிகளிலே எப்படிக் கணிப்பொறியைக் கொண்டுவந்திருக்கிறார்களோ, அதைப்போல அனைத்துக் கல்லூரிகளிலேயும் — கணிப்பொறியைக் கொண்டுவந்து, சிற்சில சொற்றொடர்களை மாற்றி அமைத்தாவது, தமிழிலே மாணவர்கள் முழுமையாகப் படித்து, மாபெரும் வெற்றி அடைவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்து நீங்கள் சொற்பொழிவை நடத்துகிறீர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழிலே நடத்த வேண்டுமென்று இந்த அரசு ஆர்வமாக இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் வினா எழுப்புகிறபோது எப்படி ஒரு குழப்பம் ஏற்பட்டதோ, அதைப்போல ஒரு குழப்பம் ஏற்பட்டு விடும் என்று கல்வித் துறையிலே உள்ள சில பேர் அஞ்சுகிறார்கள். இருந்தாலும், அவற்றையெல்லாம் மாற்றிப் படிப்படியாக உயர்கல்வி வரையில் தமிழிலேயே வருவதற்கான வழிவகை செய்வதற்கு, டாக்டர் குழந்தைசாமி அவர்களுடைய ஆலோசனையோடு பல கடமைகள் நிறைவேற்றப்பட உள்ளன. தொடக்க நிலையிலேயே, அனைத்து மாணவர்களும் தமிழில் படிப்பதற்கு அரசு ஓர் ஆணையிட்டு, அது நீதிமன்ற வழக்கிலே முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 222, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**222—**

### கண்ணாலம்பட்டிக்கு உயர்நிலைப் பள்ளி

***29785—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், கண்ணாலம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம் பெரிய கண்ணாலம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை 1999-2000 கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அந்த கண்ணாலம்பட்டி உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என்பதையும், இடவசதி மற்றும் கட்டட வசதி இல்லை என்பதையும் அரசு அறியுமா, அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் ஒரு சில ஆண்டுகள் தொடர்ந்து, தொடங்கப்பட்ட உயர் வகுப்புகளுக்கான, ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் விடுபட்டுப்போனது; அந்தக் கடந்த கால வரலாறு காரணமாக, இப்போது தொடங்கப்படுகிற பள்ளிகளுக்கு முழு அளவில் ஆசிரியர்களை வழங்கினாலும்கூட, அவர்களை இடமாற்றம் செய்து பயன்படுத்த வேண்டிய ஒரு கட்டாயமான நிலை இருக்கிறது. அதனாலேயே, சில இடங்களில் குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு தொடர்ந்து அரசு முயற்சி செய்கிறது. கட்டடம் முதலான வசதிகளை அரசே உடனடியாகச் செய்து தரக்கூடிய வசதி இப்போது அமையவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், நம்முடைய மாண்புமிகு முதல்வர், தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தித் தந்திருப்பதன் காரணமாக, அதிலே இதையும் கவனித்துக்கொள்ளும்படி அரசு சார்பாக நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 223, திரு. ந. கருப்பண்ண உடையார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 6]

**223—**

**புதிய மின் மாற்றி அமைத்தல்**

***19478—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, அசூர் ஊராட்சியில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதால் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் சட்டமன்றத் தொகுதியிலே அசூர் போன்ற இடங்களிலும் மின் அழுத்தக் குறைவு காரணமாகத் தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை. மேலும் விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய பம்புசெட்டுகளில் உள்ள மின் மோட்டார்களின் காயில்கள் அடிக்கடி எரிந்து விடுகின்றன. அதனால் விவசாயிகளுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாகிறது. அவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, நீரத்தநல்லூர் அல்லது அத்தியூர் போன்ற பகுதிகள் குறைந்த மின் அழுத்தம் உள்ள பகுதியாக இருக்கிற காரணத்தால், 33 கே.வி. துணை மின் நிலையத்தையாவது, அந்தப் பகுதிகளிலே ஆரம்பித்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை 27-5-1998-லே எழுப்பினார். ஆனால் திருப்பனந்தாளிலே 30-1-1999 அன்று 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் தொடங்கி, இயக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதன்பிறகு அசூர் கிராமத்திலே மின் அழுத்தம் மேலும் அபிவிருத்தி அடைந்துள்ளது. அந்தப் பகுதியிலே தொடர்ந்து மின் அழுத்தக் குறைவு குறித்து புகார் வருமேயானால், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

[2000 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 224, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**224—**

**மின்சாரம் தயாரித்தல்**

***24432—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி வரதமாநதியில் நீர் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன், மின்சாரம் தயாரிப்பதற்காக இந்தத் துறையிலே இருந்துவந்து ஆய்வெல்லாம் செய்தார்கள். இப்போது அது எந்த நிலையில் இருக்கிறது? மேல் வரதமாநதியில் அணை கட்டி நீர் மின்சாரம் தயாரிப்பதற்கு மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வரதமாநதியில் புனல் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தின் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் புல ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு இருக்கிறது. இந்தப் புனல் மின் திட்டம் பொருளாதார, தொழில் நுணுக்க மற்றும் சுற்றுப்புறச் சூழலைக் கருத்திற்கொண்டு, ஏதுவாக இருப்பின், இந்தத் திட்டத்திற்கான விரிவான அறிக்கை தமிழக அரசின் ஒப்புதலுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அனுப்பி வைக்கப்படும். அதன்பிறகு, தமிழக அரசு அதுபற்றிப் பரிசீலித்து, தேவைப்பட்டால் அங்கே ஒரு புனல் மின் திட்டம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால், நிச்சயமாக இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.



2000 ஏப்ரல் 6]

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் அணையிலேயிருந்து வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலங்களில் வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை ஒரு குகைக் கால்வாய் வெட்டி மணிமுத்தாறு அணைக்கு விட்டால் மணிமுத்தாறு அணைக்குத் தண்ணீர் வருவதோடு நீர் மின்சாரமும் தயாரிப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக, வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திலேயே ஒரு மதிப்பீடு தயாரித்ததாகக் கேள்விப்படுகிறேன். அந்த அளவில் பாபநாசம் அணையிலிருந்து மீண்டும் மின் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகளை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்திலே மட்டுமல்ல. தமிழகத்திலே எங்கெல்லாம் நீர் மின் திட்டம் தொடங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் ஆராய்ந்து குறைந்தபட்சம் 5 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால் அவற்றை மின்சார வாரியம் இப்போது அமல்படுத்தி வருகிறது. சமீபத்திலேகூட நீலகிரி மாவட்டத்திலே 30 மெகா வாட்டில் அப்படிப்பட்ட ஒரு திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீர் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு எந்த நீரையும் வீணாக்குவதற்கு விரும்பவில்லை. ஏனென்றால், அனல் மின் திட்டத்திலே உற்பத்தியாகின்ற மின்சாரத்தினுடைய விலை அதிகமாக இருக்கிறது. அதேநேரத்திலே, நீர் மின்சாரத்திற்கு—நீரைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதால்—செலவு குறைவாக இருக்கிறது. எனவே, அதற்கு இந்த அரசு முன்னுரிமை வழங்குகிறது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் மின்சாரம் தயாரிப்பதற்குச் செலவு குறைவாக இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், நமக்குத் தேவையான அளவு நீர் கிடைப்பதிலே பிரச்சினை இருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே தரமான நிலக்கரி கிடைக்கிறது. குறிப்பாக, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலே தரமான நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு 300 ஆண்டுகளுக்குத் தேவையான அளவுக்கு மின்சாரம் தயாரிக்கலாம் என்று கூறுகிறார்கள்.

[2000 ஏப்ரல் 6

ஆகவே, நிலக்கரியை நாம் வெளி மாநிலத்திலிருந்து, வெளியிடத்திலிருந்து இறக்குமதி செய்வதைத் தவிர்த்து, உள்நாட்டிலேயே, நமது மாநிலத்திலேயே கிடைக்கக்கூடிய நிலக்கரியைக்கொண்டு, அங்கே மின்சாரம் தயாரிப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தைத் தயாரிப்பதற்கு நிலக்கரி கிடைக்குமா என்று ஒரு பக்கத்திலே ஆராய்ந்து வருகிறோம். அதைப்போலவே, தஞ்சை மாவட்டத்திலே, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலே எரிவாயு கிடைக்குமா என்பதையும் ஆராய்ச்சி செய்து வருகிறோம். இந்த இரண்டில் எது கிடைத்தாலும், அவற்றைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு மின்சார இலாக்கா தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் மின்சாரத்தின் மூலமாக மின்சாரத்தைப் பெருக்குவதற்கான பல திட்டங்களை நம்முடைய மாநிலத்தில் அரசு மேற்கொண்டாலும், சில ஆண்டுகளுக்கு முன்னால் கன்னியாகுமரி மாவட்டத்திலே பரளியாறு என்ற இடத்திலிருந்து 5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று, பெருஞ்சாணி பக்கத்திலே இப்படி ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அவை எந்த நிலையில் உள்ளன? அவற்றின் மூலம் மின் உற்பத்தி செய்யப்படுமானால் அந்த மாவட்டத்தினுடைய மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்த்துக்கொள்ள இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற இடங்களில் உள்ள நீரைக்கொண்டு மின்சாரம் தயாரிக்க முடியுமா என்று ஆய்வு செய்ததில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, 5 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்யமுடியும் என்று முதலிலே தெரிவிக்கப்பட்டது. அந்த 5 மெகாவாட் மின்சாரத்தை ஆண்டு முழுவதும் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றும் அறிக்கை வந்தது. எனவே, அதுபற்றி மின்சார வாரியம் மறுபரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.



2000 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் போகிற வழியிலே மஞ்சளாறு இருக்கிறது. வருஷம் 365 நாட்களும் தண்ணீர் இருந்துகொண்டிருக்கிறது. ஆகையினாலே, அந்தப் பகுதியினுடைய மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அங்கே ஒரு நீர் மின்சார நிலையத்தை ஏற்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருஷம் 365 நாட்களும் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது என்பதற்காக மின்சார உற்பத்தியைத் தொடங்கி வைக்க முடியாது. வருகின்ற தண்ணீரினுடைய வேகத்தைப் பார்க்கவேண்டும். அதைப் பார்த்து அப்படி வருகின்ற தண்ணீர் மின்சார உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்குத் தரம் உள்ளதாக, அதே நேரத்திலே வேகமாக, அந்த இயந்திரங்களை எல்லாம் இயக்கி வைக்கக்கூடிய அளவிற்கு இருக்குமானால், அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 225, திரு. வெ.அ. ஆண்டமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**225—**

**விவசாயத் தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை**

***26131—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அகால மரணமடைந்தால் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 ஏப்ரல் 6

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கூலிகள், பணியில் இருக்கும்பொழுது அகால மரணமடைவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்தச் சூழ்நிலையிலே அவர்களுடைய குடும்பத்திலே இருக்கின்ற குழந்தைகள், கணவன் இறந்தால் அவர்களுடைய மனைவி, இவர்கள் எல்லாம் நடுத்தெருவில் நிற்கவேண்டிய ஒரு காலகட்டத்தில் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அவர்களுக்குக் கொடுக்கப்படும் கருணைத் தொகையைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கூலித் தொழிலாளர்கள், குறு விவசாயிகள் உள்ளிட்ட 44 வகையான ஏழைத் தொழிலாளர்கள் — Occupational Categories — தாம் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது விபத்தினால் மரணம் அடைந்தால், அவர்களது குடும்பத்திற்கு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் 27-8-1996 வரை பத்தாயிரம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தது. அது மறுபரிசீலனை செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 28-8-1996 முதல் பதினைந்தாயிரம் ரூபாயாக உயர்த்தி அரசு நிவாரணம் வழங்கி இருக்கிறது. அதைப்போல, விவசாயக் கூலித் தொழிலுக்கு உட்பட்டு, எந்தக் குடும்பத்தில் ஒருவர் இயற்கையாய் இறந்தாலும், அவர் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்பவராகவும், பொருளீட்டி குடும்பத்தைக் காப்பாற்றும் நபராகவும் இருந்திருந்தால் நலிந்தோர் நலத் திட்டத்தின்கீழ் — Distressed Relief Scheme — 31-7-1998 வரை 7,500 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 1-8-1998 முதல் மேற்படி நிவாரணத் தொகையை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, அரசு நிவாரணமாக வழங்கி வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர்தான், இவ்விரு நிவாரணத் தொகைகளும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றை மேலும் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 226, திரு. வி.ஜி. தனபால், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 6]

**226—**

### குடியாத்தத்தில் வணிக வளாகம்

***29366—திரு. வி.ஜி. தனபால்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகராட்சி, தரணம்பேட்டை பகுதியில் ஆக்கிரமிப்பை அகற்றியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதியில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) குடியாத்தம் நகராட்சி தரணம்பேட்டை பகுதியில் முதல் கட்டமாக ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் 1999-2000 ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டில் 62 கடைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகராட்சியினுடைய மையப் பகுதியான தரணம்பேட்டை பகுதியில் சுமார் 7 ஏக்கர் நில ஆக்கிரமிப்பை அரசு கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு அகற்றியது. மீண்டும் அதை ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க வேண்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் ரூ. 20 இலட்சம் கொடுத்து 24 கடைகள் வரை கட்ட அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 240 கடைகள் கட்ட இடம் உள்ளதால் அரசு தன்னுடைய அதிக நிதி ஒதுக்கீட்டால் சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து, மேலும் வணிக வளாகம் கட்ட ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடத்தில் 228 கடைகள் கட்டலாம் என்றும், அவை உள்ளடங்கிய வணிக வளாகம் அமைக்கலாம் என்றும் நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர்

[2000 ஏப்ரல் 6

அவர்களால் நகர வரைபடம் மற்றும் வடிவமைப்பு வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 62 கடைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வணிக வளாகம் கட்டும் பணி பொதுப் பணித் துறைக்கு வைப்புப் பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது தரைமட்டக் கடைகளுக்கு கான்கிரீட் தளம் எழுப்பும் பணி நடந்து வருகிறது. மீதி 166 கடைகளை உள்ளடக்கிய பணிகளுக்காக 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உத்தேச மதிப்பீடு தயார் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, நகர ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரைப்படி இரண்டாம் கட்டப் பணியை ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திடம் நிதி கோரப்பட்டுள்ளது. நிதி பெறப்பட்டவுடன், வணிக வளாகம் கட்ட இரண்டாம் கட்டப் பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 227, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**227—**

**ஊற்றுநீர்த் தேக்கத் திட்டம்**

***10088—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதி, பொம்மராஜு பேட்டையில் அமைக்கப்படும் ஊற்றுநீர்த் தேக்கத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிப்பட்டு தொகுதி, பொம்மராஜு பேட்டையில் ஊற்றுநீர்த் தேக்கத் திட்டத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, 1999-2000 ஆண்டுக்கான பகுதி-2 திட்டத்தில் சேர்ப்பதற்காக மாநில திட்டக் குழுவிற்கு — State Planning Commission — அனுப்பப்பட்டது. மாநில



2000 ஏப்ரல் 6]

திட்டக் குழு இப்பணியினை மேற்கொள்ள பரிந்துரை செய்யவில்லை. எனவே நடப்பு நிதி ஆண்டில் (1999-2000) பகுதி-2 திட்டத்தில் இத்திட்டம் சேர்க்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 228, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**228—**

**வனப் பள்ளி தொடங்குதல்**

***31961—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், அய்யலூர் உட்பட்ட கோம்பைப் பகுதியில் வனத் துறையின் மூலம் தங்குமிடத்துடன் கூடிய வனப் பள்ளி ஒன்று தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வினாவிற்குட்பட்ட பகுதியில் பழங்குடியினர் எவரும் இல்லாததால் தங்குமிடத்துடன் கூடிய பள்ளி தொடங்கத் தேவையில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அய்யலூர் பகுதியில் பஞ்சந்தாங்கி, கோம்பையில் இருந்து அய்யலூருக்கு 10 கி.மீ. தூரம் — பள்ளிக்கு — வரவேண்டும். அங்கே தார்ச் சாலை வசதி இல்லை. மலைவாழ் மக்கள் 7 ஆயிரத்துக்கு மேல் அங்கே வசித்து வருகிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அங்கே பள்ளி அமைத்துத் தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கிடைத்த புள்ளிவிவரப்படி அந்தப் பகுதியில்

பழங்குடியினர் எவரும் இல்லை என்று கணக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான், பள்ளியை அந்தப் பகுதியில் கட்டத் தேவையில்லை என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பழங்குடியினர் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள் என்பதை எனக்கு ஆதாரபூர்வமாகத் தெரிவித்தால், மீண்டும் அதுகுறித்து அரசு ஆவன செய்ய முற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 229, திரு. செ. மதிவாணன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**229—**

## செய்யூர் வட்டத்துக்குப் பேருந்து வசதி

***21646—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் வட்டம், எண் 42, அகரம் (வைத்தியகாரர்) மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு இதுவரை பேருந்து வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த ஊர்களுக்கு உடனடியாகப் பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அகரம் கிராமம், மதுராந்தகம் - மரக்காணம் பிரதான சாலையில் மதுராந்தகத்திலிருந்து 27.0 கிலோமீட்டரில் உள்ள அகரம் கூட்டுச் சாலையிலிருந்து வலதுபுறம் 2.5 கிலோமீட்டரில் அமைந்துள்ளது. இதைச் சுற்றி மாம்பாக்கம், சித்தூர் போன்ற குக்கிராமங்கள் உள்ளன. இச்சாலை கனரக வாகனங்கள் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, தற்போது பேருந்து இயக்க இயலாது.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 230, திரு. பால. ஆனந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



**230—**

## வந்தவாசி - சென்னை பேருந்து

***21962—திரு. பால. ஆனந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசியிலிருந்து சென்னைக்கு கொவளை என்ற ஊர் வழியாக அரசுப் பேருந்து விடும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கொவளையிலிருந்து மதுராந்தகம் செல்லவும், வந்தவாசி செல்லவும் பேருந்து வசதி உள்ளது. மதுராந்தகத்திலிருந்தும், வந்தவாசியிலிருந்தும் சென்னை செல்ல போதுமான பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, கோரிக்கை வழித் தடத்தில் பேருந்துகளை இயக்கிட தேவை எழவில்லை.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 208 தடம் எண்ணுள்ள பேருந்துகளை வந்தவாசி இயக்கத்திற்குக் கொண்டுவந்து புதிய பேருந்துகளைவிட்டு replacement செய்து கொடுத்திருப்பதன் காரணமாக இந்தப் பகுதி மக்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள். நான் கோரியுள்ள இந்தத் தடமானது கீழ்க்கொடுங்காலூர், கீழ்ப்பாக்கம், கொவளை, செம்முண்டி, மதுராந்தகம் வழியாக வரும் நிலையில், இதற்கு உள்ளிட்ட கிராமங்கள் இருப்பதால் இதை augmentation நிலையில் கொண்டுவந்து ஒரு புதிய வழித் தடம் அமைக்க ஆவன செய்வார்களா, மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கொடுங்காலூரிலிருந்து சென்னைக்கு இப்போது பேருந்து இயக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. கொவளையிலிருந்து கீழ்க்கொடுங்காலூர் 5 கிலோமீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினரைப்போல ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு

[2000 ஏப்ரல் 6

கிராமத்திலிருந்தும் சென்னைக்கு நேரிடையாகப் பேருந்து வேண்டும் என்று கேட்டால், சென்னையும் தாங்காது. போக்குவரத்துக் கழகங்களும் தாங்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் Bus Day கொண்டாடுவது பொது மக்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறது. உல்லாசப்பயணம் செய்கின்ற மாணவர்கள் என்ற போர்வையில் சமூக விரோதிகள் கடையில் புகுந்து சூறையாடுவதைக் கண்டித்து போலீஸ் கமிஷனர் அறிக்கை விட்டிருக்கிறாரே. எனவே Bus Day கொண்டாடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் தடை விதிப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் கல்லூரி மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளை பேருந்து தினமாகக் கொண்டாடுகிறார்கள். குறிப்பாக, கடந்த காலங்களிலே மாணவர்களுக்கும், போக்குவரத்துத் தொழிலாளிகளுக்குமிடையே நிறையத் தகராறுகள் இருந்தது உண்டு. ஆனால் இன்று மாணவர்கள் இதுபோன்ற விழாக்கள் கொண்டாடுவதன் மூலமாக அவர்களுக்கிடையிலே நெருங்கிய நட்புறவும் வளர்ந்து இருக்கிறது. குறிப்பாக நான் ஒரு மகளிர் கல்லூரி நிகழ்ச்சியிலே கலந்துகொண்டபோதுகூட அந்த மகளிர், அவர்களுக்காக அடிக்கடி பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிற ஓட்டுநர்கள், நடத்துநர்கள் போன்றவர்களுக்கெல்லாம் பரிசுகளை வழங்கி மகிழ்வித்திருக்கிறார்கள். ஆகவே இதுபோன்ற விழாக்கள் அவர்களுக்கிடையிலே நெருங்கிய உறவை உருவாக்குகிற வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. இருந்தாலும் இவற்றை வன்முறை எதுவும் நிகழாமல், பொதுமக்களுக்கு அதிகமான தொந்தரவு இல்லாமல் மாணவர்கள் கொண்டாட வேண்டுமென்று உங்கள் சார்பாகவும் மற்றவர்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறோமே தவிர, விழாவை நிறுத்துவதற்கான எந்தவிதமான குறிப்பும் அரசினிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 231, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 6]

**231—**

## உப்பனாற்றில் பாலம் அமைத்தல்

***24123—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றிய,ம் வரவுக்குடியில் செல்லும் உப்பனாற்றில் பாலம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தப்பட்ட விடையை அளிப்பதற்கு அனுமதி கோருகிறேன்.

தற்போது அங்கீகரிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இப்பாலம் இடம் பெறவில்லை. எனினும் இவ்வாண்டு நபார்டு திட்டத்தின்கீழ் இப்பாலம் கட்ட முன்மொழிவு அனுப்பப்படும்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி வரவுக்குடியில் உப்பனாற்றில் அமைக்க வேண்டிய இணைப்புப் பாலம், சீர்காழி தொகுதி மக்களுடைய நீண்டநாளைய கோரிக்கை ஆகும். இந்தப் பாலத்தை அமைத்துக் கொடுத்தால், சீர்காழி சிதம்பரத்திலிருந்து பிரிகிற அரசூர், பட்டவளாகம், அத்தியூர், ஏனாங்குடி, மன்னன்கோயில், நெம்மேலி, வரவுக்குடி, மேலவரவுக்குடி, புங்கனூர், வைத்தீஸ்வரன் கோயில் வழியாக தலைஞாயிறிலே இருக்கக்கூடிய N.P.K.R.R. சர்க்கரை ஆலைக்கு லாரிகள் செல்வதற்கும், வருவதற்கும் இது பயனுள்ளதாக அமையும். இது ஒரு இணைப்புப் பாலம். மேலும் இந்தப் பாலத்தின் வழியாக எரிக்குவளையில் இருக்கக்கூடிய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சார்ந்த M.R.M. மில்லுக்குக்கூட இந்தப் பாலத்தைப் பயன்படுத்தி அங்கிருந்து வருகிறவர்கள் வரலாம். அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய, அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்கள் கல்லூரிக்குச் செல்வதாக இருந்தாலும்... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினாவை சுருக்கமாகக் கேட்டு, முடியுங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** பள்ளிக்குச் செல்வதாக இருந்தாலும் அந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்ல முடியும். எனவே, மீண்டும்

மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டுத் திட்டத்திலே — நபார்டு திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள் — மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை அவசியம் சேர்த்து அமைத்துக் கொடுப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆதங்கம் நெடுஞ்சாலைத் துறைக்கு மிக நன்றாகத் தெரியும். எனவேதான் இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டது. அந்த உப்பனாற்றில் கிட்டத்தட்ட 70 மீட்டர் அகலத்திற்குப் பாலம் அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு 1.75 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அணுகுசாலை அமைப்பதற்கு 80 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆக மொத்தம், 255 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படுகிறது. எனவேதான், உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை. இருந்தாலும், இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே இத்திட்டத்தைச் சேர்ப்பதற்கு நாம் முன்மொழிவு அனுப்ப இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 232, திரு. லா. சந்தானம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**232—**

**பாலத்தைச் செப்பனிடுதல்**

***26749—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி சப்-டிவிஷன் கட்டக்குளம் கிராமச் சாலை மற்றும் பாலத்தைச் செப்பனிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தப்பட்ட விடையை அளிக்க அனுமதி கோருகிறேன்.

கட்டக்குளம் பாலம், இதுவரையிலும் எந்தத் திட்டத்திலும் இடம்பெறவில்லை. என்றாலும், ஏற்கெனவே அளித்த பதிலைப்போல





இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே இந்தப் பாலத்தைச் சேர்த்து முன்மொழிவு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டக்குளம் ஒரு தனி ஊராட்சி. ஏறக்குறைய 3 ஆயிரம் ஜனத்தொகை அங்கேயிருக்கிறது. இந்தப் பாலம் என்பது அந்தக் கிராம மக்களுக்கு மிக அத்தியாவசியமான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருவதற்குரிய பாலம் என்கிற காரணத்தால், இந்த ஆண்டுத் திட்டத்தில் அவசியமாக அந்தப் பாலத்தை எடுத்துச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இந்தப் பாலம் மிக மிக அவசியமானது என்பதைத் துறை உணர்ந்திருக்கிறது. ஆகவே, 5 மீட்டர் அகலத்திற்கு இரண்டு கண் கொண்ட உயர்மட்டப் பாலமாகக் கட்டுவதற்கு 25 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவேதான், இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவம் கருதி, இந்த ஆண்டு நபார்ட் திட்டத்திலே முன்மொழிவு அனுப்புகிறபோது இதையும் சேர்த்து அனுப்ப துறை யோசித்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 233, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**233—**

**பகுதி நேர நியாயவிலைக் கடை**

***24496—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், பனையூர் கிராம நியாயவிலைக் கடையைப் பிரித்து, மேல்மருதூரில் பகுதி நேரக் கடை திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

[2000 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கோட்டூர் ஒன்றியம், ஆதிச்சபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைந்துள்ள பனையூர் கூட்டுறவு அங்காடியைப் பிரித்து மேல்மருதூர் கிராமத்திற்கு பகுதிநேர அங்காடி திறப்பதற்கு வேண்டிய வாடகையில்லாக் கட்டடம் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்வதற்கான வண்டிச் சத்தம், ஏற்றுக்கூலி மற்றும் இறக்குக்கூலி ஆகியவற்றை அப்பகுதி கிராம மக்கள் தர முன்வராததால், பனையூர் கூட்டுறவு அங்காடியைப் பிரித்து, மேல்மருதூர் கிராமத்தில் பகுதிநேர அங்காடி திறப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் ஒன்றியம் பனையூர் அங்காடியைப் பிரித்து மேல்மருதூர் கிராமத்திலே ஒரு துணை அங்காடியை ஏற்படுத்த வேண்டுமென்பது கோரிக்கை. அநேகமாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பிரிக்கலாம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், கொள்கை அளவிலே. அதற்கான சில கோரிக்கைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதி சாதாரண ஏழை எளிய மக்கள் வாழ்கிற பகுதி. வாரந்தோறும் இதற்குரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டுமென்றால் அவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படும். ஆகவே, அதை வங்கியே ஏற்றுச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா? அந்தப் பகுதியிலிருந்து 4 கிலோமீட்டர் தூரம் வரையிலும் சென்றுதான் அங்காடிக்குச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. பாதை வசதி கிடையாது. அது என்னுடைய சொந்தக் கிராமம் வேறு. ஆகவே, அவசியம் அந்த அங்காடியைத் திறப்பதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்மருதூரில் வெறும் 89 அட்டைகள் மட்டுமே உள்ளன. 5 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கூடுதலான செலவினங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலே வளமானதாக இல்லை. இருந்தாலும் நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். பெண்கள் சுய உதவிக் குழு மூலமாக, பெண்களைக் கொண்டு அமைக்க ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கின்ற வகையிலே புதிய ரேஷன் கடைகளைத் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அந்த வகையிலாவது இதனைத் திறக்க முடியுமா என்பதை ஆராய்ந்து திறப்பதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 234, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

***234—***

### தையல் பயிற்சி நிலையம்

***28787—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியான குருங்குளம் மேற்கில் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளத்தில் புதிதாக தொழிலாளர் நல மையம் ஆரம்பித்தால், அங்கு அதிக எண்ணிக்கையிலானோர் சேர்ந்து பயிற்சி பெற வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை. திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மிகப் பின்தங்கிய அந்தப் பகுதியில் இந்தப் பயிற்சி நிலையம் தொடங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல வாரிய சட்ட விதிகளின்படி இதுபோன்ற தொழிலாளர் நல மைய தையல் பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட வேண்டுமேயானால், மாத வருமானம் 5 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக இருக்க வேண்டும். ஆனால், உறுப்பினர் குறிப்பிடுகின்ற கருங்குளத்திலே ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது; வெறும் 150 பேர் மட்டும்தான் அந்தத் தொகையை வாங்குகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் மாத வருமானம் 5 ஆயிரத்துக்கு மேல் வாங்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே, எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தினாலே செய்ய இயலாது. ஆனால், 13 கிலோமீட்டரிலே இருக்கக்கூடிய தஞ்சாவூரிலே தையல் நிலையங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 19 இடங்களில் இருக்கின்றன. அவற்றிற்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மேலே அரசு செலவழித்துக் கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 235. திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**235—**

### விடு கட்டுதல்

***9448—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி நகரப் பகுதியில் சிறிய மற்றும்



நடுத்தர நகர வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு வாணியம்பாடியிலிருந்து 3.5 கிலோமீட்டர் தொலைவில் 18.53 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வாணியம்பாடி உறுப்பினரா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி ஒரு பெரிய நகரம். பல ஆண்டுகளாக அந்த இடத்திலே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக நிலம் கையகப்படுத்தி, வீடுகளைக் கட்டித் தர வேண்டும் அல்லது வீட்டு மனைகளையாவது அங்கே தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து வருகிறோம். ஆனால், கடந்த 8, 9 ஆண்டுகளாக நிலத்தைத் தேடுகிற வேலையிலேயே நம்முடைய வீட்டு வசதி வாரியம் இருந்து கொண்டிருக்கிறதேயொழிய, ஏனோ கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை இன்னும் எடுக்கவில்லை இப்போதுகூட நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகளைத் தொடங்கி இருக்கிறார்கள் என்று கூறினார்கள். அது எப்போது முடியும்? Private negotiation மூலமாக வாங்குகிறார்களா அல்லது 4 (1) Notice கொடுத்து அந்த இடத்தைக் கையகப்படுத்த இருக்கிறார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா நிலங்களைக் கொடுப்பதற்கு நில உரிமையாளர்கள் அதிகமாக விலை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசினுடைய புறம்போக்கு நிலத்தைப் பெறலாம் என சட்டமன்றக் குழு ஒன்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு இடத்தைத் தேர்வு செய்து இருக்கிறார். தனியாருடைய நிலத்தைவிட அதிக விலையாக 8 இலட்ச ரூபாய்க்கு மேல் அந்த நிலத்திற்கான விலையாக, மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, அதை மீண்டும் பரிசீலித்து, குறைந்த விலைக்கு அதை வழங்குவதற்காக அந்த Committee-க்குத் திருப்பி அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவிலே நிலம் தேர்வு செய்யப்பட்டு, அங்கே வீடுகள் கட்டித் தரப்படும்; இரண்டு இடங்களிலும் அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியிலிருந்து ஏறக்குறைய 3½ கிலோமீட்டர் தூரத்தில் ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த இடம் வாணியம்பாடி நகராட்சிக்கு உட்பட்டதோ அல்லது தொடர்புடைய பகுதியைச் சார்ந்ததோ அல்ல. எந்த வகையிலேயும் அங்கே வீடுகள் கட்டினால் வாணியம்பாடிக்குப் பயனுடையதாக இருக்காது. எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கை, வளர்ந்து வருகின்ற ஜனத்தொகையின் தேவைக்கு ஏற்ப வாணியம்பாடி பகுதியில், முடிந்தால் வாணியம்பாடி நகராட்சிக்கு உட்பட்டு அல்லது அதற்குப் பக்கத்தில் இருக்கிற இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதுதான். நகராட்சி மன்றத்திற்கு எதிரே இருக்கிற இடத்தைக்கூட அதற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது அந்தத் துறையினர் தெரிவிக்கின்ற கருத்து. அதை விடுத்து 3½ கிலோமீட்டர் என்பதை எந்த வகையிலும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, நகரத்திற்குள்ளேயே இடத்தைக் கண்டுபிடித்து அல்லது அதற்காக வழி வகுத்து தயவுசெய்து அங்கே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி நகரத்திலே இருக்கின்ற தனியார் அதிக விலை கோருகிறார்கள். ஆகவேதான் அவர்களிடம் எத்தனை முறை பேசினாலும், அரசாங்க விலைக்குக் கொடுக்க மறுக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு உறுதுணையாக இருந்து, அந்த நில உரிமையாளர்களை அழைத்துப் பேசி, குறைந்த விலைக்கு வாங்கிக் கொடுத்தால், கண்டிப்பாக வாணியம்பாடியிலே வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறுகிறபோது தனியார் நிலத்தைவிட புறம்போக்கு நிலத்திற்கு நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகமான விலையை அங்கே நிர்ணயம் செய்து இருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். புறம்போக்கு





நிலமே 8 இலட்சம் ரூபாய் என்று சொன்னால், தனியார் அதிகமாகக் கேட்பதிலே ஆச்சரியமே இல்லை. பொதுவாக, தனியாரிடமிருந்து நீங்கள் private negotiation மூலம் வாங்குகிறபோது, அரசாங்கம் அடிமாட்டு விலைக்குத்தான் நிலத்தைக் கேட்கிறது என்கிற ஓர் அச்சம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல market value-க்கு வாணியம்பாடி நகரத்திற்குள்ளேயே நிலம் கிடைக்கிறது. அப்படி நிலம் கிடைக்கிறபோது, நீங்கள் அதற்கான முயற்சிகளை எடுத்து market value-வை நீங்கள் கொடுப்பீர்கள் என்று சொன்னால், நிறைய நிலத்தைக் கையகப்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஏற்கெனவே, 3, 4 party-கள் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதை விடுத்து, திடீரென்று நீங்கள் புறம்போக்கு நிலத்திற்கு 8 இலட்சம் ரூபாய் என்று சொன்னால், தனியார் தாராளமாக அதைவிட அதிக விலை கேட்பதிலே ஆச்சரியம் இல்லை; அப்படி கேட்பது நியாயமும்கூட. ஆகவே, அமைச்சர் அவர்கள் market விலைக்கு நிலத்தை எடுத்து, இன்னும் 6 மாதத்திற்குள்ளாக அங்கே வீட்டுமனைகளையோ அல்லது வீடுகளைக் கட்டித் தரக்கூடிய பணிகளையோ தொடங்குவீர்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய Guideline value-விற்கு அது அதிக விலையாகிவிடும். அப்படி அதிக விலைகொடுத்து நிலத்தை வாங்கி வீடு கட்டினால், அந்த வீட்டினை வாங்குபவர்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிவரும். அப்படி அவர்கள் வாங்க முடியாது என்ற நிலையிலேதான் அரசு அதற்கான பேச்சு வார்த்தை நடத்தி guideline value-ல் நிலத்தை வாங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. விரைவில் பேசி முடிக்கப்பட்டு, நிலத்தை வாங்கி வீடுகள் கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 236, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 6

236—

**ஊட்டச்சத்து மையம்**

***13051—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதியில் மேலும் ஓர் ஊட்டச்சத்து மையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரியில் மேலும் ஓர் ஊட்டச்சத்து மையம் அமைப்பது குறித்து அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் தொடங்க வேண்டும், அதற்கு என்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்தால், நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரியில், கணேசன் தெரு என்ற இடத்திலுள்ள குழந்தைகள், அடுத்துள்ள மையத்திற்குச் செல்வதற்கு பிரதான சாலையினைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, கணேசன் தெருவில் ஊட்டச்சத்து மையம் அமைத்தால் அந்தப் பகுதி குழந்தைகளுக்கு பலனளிக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஊட்டச்சத்து மையம் அமைப்பதற்குக் குறைந்தபட்சம் 25 குழந்தைகள் இருக்க வேண்டும். அதுபோல, ஜனத்தொகை 1000 இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே இருந்தால், நிச்சயமாக அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.



2000 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 237, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

237—

**சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்**

***28013—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூரில் தனியார் கட்டடத்தில் சார் பதிவாளர் அலுவலகம் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பர்கூர் சார் பதிவகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூரில் தனியார் கட்டடத்தில் — மிகவும் சிறிய கட்டடத்திலே — அந்த சார் பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. அங்கு அதற்கு வாடகை அதிகமாகத் தரப்படுகிறது. அங்கே பொதுமக்கள் சென்று வருவதற்கான வசதி வாய்ப்புகள் அதிகமாக இல்லை. இப்போது இட வசதியும் பர்கூரில் தயாராக இருக்கிறது. பர்கூர் பேரூராட்சி மன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் பணிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆகவே, தயவுகூர்ந்து அங்கே ஒரு கட்டடத்தை விரைவிலே கட்டி முடிக்க ஆணை பிறப்பிக்கப்படுமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, பர்கூரிலே இருக்கிற அந்த சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மாத வாடகை 1,500

ரூபாய்தான். இன்றைக்கு இருக்கின்ற நிலைமையிலே அது குறைந்த வாடகைதான். அங்கு வருமானம் 74.30 இலட்சம் ரூபாய் வருகிறது. இப்போது புதிய சார் பதிவகங்கள், அதிக அளவிலே ஆவணங்கள் பதிவாகின்ற சார் பதிவாளர் அலுவலகங்கள்தான் வரிசை முறையிலே எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிதிநிலையைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது புவனகிரி தொகுதியில் புவனகிரி, புதுச்சத்திரம் ஆகிய இடங்களிலே உள்ள சார் பதிவாளர் அலுவலகங்கள் அரசு கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன. அவை மிகவும் பழுதடைந்திருக்கின்றன. மழைக் காலங்களில் மழை நீர் ஒழுகுவதால் அங்கிருக்கிற ஆவணங்கள் எல்லாம் அழியக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அதனைப் பழுதுநீக்கி, தரமான ஒரு கட்டடமாக மாற்றித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டுதான் நம்முடை மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி கிட்டத்தட்ட தமிழ்நாட்டிலே மிகவும் பழுதுபட்டிருந்த 14 சார் பதிவாளர் அலுவலகங்களை எடுத்து, 133 இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே பணிகள் நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, மிகவும் பழுதுபட்டிருந்தால், அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ப. மோகன் கந்தசாமி. துணை வினா கேட்கும்போது, அவரவர்கள் ஊர்களைப்பற்றிக் கேட்டீர்களானால், அமைச்சரிடம் தகவல் இருக்கும் என்பது என்ன நிச்சயம்? திரு. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே சார் பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்று ஏற்கெனவே ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். காரணம், அங்கேயிருந்து இரண்டு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு பகுதியினர் பொங்கலூருக்குச் செல்ல



வேண்டியிருக்கிறது. இன்னொரு பகுதியினர் திருப்பூர் வட்டம், திருப்பூர் நகரம் பி.என். ரோட்டிற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு சார் பதிவாளர் அலுவலகத்தை என்னுடைய பொங்கலூரிலே அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திலே 2000 ஆவணங்களுக்கு மேல் பதிவாகின்ற எந்த ஒரு இடத்திலும் உடனே சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று அறிவுரை வழங்கி, 2000 ஆவணங்கள் பதிவாகின்ற இடங்கள் அத்தனையும் அறிவிக்கப்பட்டுவிட்டன. ஆனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இடத்தைப் பொறுத்தவரை மொத்தம் எத்தனை ஆவணங்கள் அங்கே அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் பதிவாகின்றன என்பதைக் கணக்கில் கொண்டுதான் புதிய சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பினை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சார் பதிவாளர் அலுவலகங்களில் பத்திரங்களைப் பதிவு செய்வதோடு அந்தப் பத்திரங்களுடைய நகல்களைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. எனவே, பாதுகாப்பான கட்டடங்கள் இருந்தால்தான் பத்திரங்களை எல்லாம் சரியாகப் பாதுகாக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இப்போது தமிழகத்தில் பல இடங்களில் சார் பதிவாளர் அலுவலகங்கள் சேதம் அடைந்த கட்டடங்களிலேயே இருக்கின்றன. உதாரணமாக, வாணியம்பாடியிலே அண்மையில் பன்றிகள் நுழைந்து, இந்த சார் பதிவாளர் அலுவலகத்தில் பல ஆவணங்களை அவை சீர்கெடுத்துவிட்டன; தின்றுவிட்டன. எனவே, தயவுசெய்து ஒரு சிறப்புத் திட்டமாக மேற்கொண்டு, சார் பதிவாளர் அலுவலகங்கள் எல்லாம் பாதுகாப்பான கட்டடத்தில் இருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? குறிப்பாக என்னுடைய் தொகுதியைச் சேர்ந்த வாணியம்பாடியில் நகராட்சி கட்டடத்தில், வாடகைக் கட்டடத்திலே அது இயங்கிக்கொண்டிருக்கிறது; பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறது. எனவே, அதுகுறித்து அரசு கவனம் செலுத்தி புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு உடனே ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 6

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய பதிலுரையில் குறிப்பிட்டது போல் மிகவும் பழுதடைந்துள்ள கிட்டதட்ட 14 கட்டடங்கள் கடந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கு முதல்வர் அவர்கள் 133 இலட்சம் ரூபாய் உடனே நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. தமிழகத்திலே மொத்தம் 650 சார் பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன, மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களையும் சேர்த்து. அதிலே கிட்டத்தட்ட அரசு கட்டடத்திலே இயங்குபவை 324; வாடகைக் கட்டடத்தில் இயங்குபவை 326. ஆக, சரிசமமாக 50 சதவீதம்தான் அரசுக் கட்டடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இனி எதிர்காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் 10 அலுவலகங்கள், 15 அலுவலகங்கள் என்று எடுத்துக்கொள்ளப்பட்டு, மிகவும் பழுதடைந்து இருக்கின்ற கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 238, திரு. செங்கை சிவம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**238—**

**கன்னியாகுமரியில் தொங்குபாலம்**

***20004—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில், விவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் பாறை இடையே கடலில் தொங்குபாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் பாறை இடையே தொங்கும் பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2000 ஏப்ரல் 6]

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் 8-வது அதிசயம் என்று கருதப்படுகின்ற கல்லால் ஆன மிகப் பெரிய அய்யன் திருவள்ளுவர் சிலையை கன்னியாகுமரி கடலில் அமைத்து பெருமை சேர்த்தவர் தமிழ்க்கடவுள், தமிழ்க்கடல் ஐந்தமிழ் அறிஞர் கலைஞர். இச்சிலையை உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அருகில் சென்று பார்ப்பதற்கு அரசு வேறு எந்த ஏற்பாடு செய்துள்ளது? இந்தச் சிலை அமைக்க ஆன செலவு என்ன? அய்யன் திருவள்ளுவருக்குப் பெருமை சேர்க்க வேறு எந்தச் சிறப்புகளை அரசு செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூழும் தென்கடல் ஆடும் குமரியில் அலைகடல் நடுவில் நம்முடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய கனவாக இருந்து உருவாக்கப்பட்ட சிலை ஜனவரி 1 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது. அந்தச் சிலையை வெளிநாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் அருகில் சென்று பார்க்கத்தக்க அளவிற்கு விவேகானந்தர் பாறையிலிருந்து திருவள்ளுவர் பாறை வரையில் இடையில் ஒரு படகுமூலம் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதேநேரத்தில் விவேகானந்தர் பாறைக்கும், தரைக்கும் இடையிலே பூம்புகார் போக்குவரத்து கழகத்தின் மூலம் செல்கின்ற படகிலே அந்த இடத்திலே இருந்து செல்வதற்கான நடவடிக்கையையும் இப்போது அரசு பரிசீலித்து, அதற்கான செயல்பாட்டில் ஈடுபட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, சிலை அமைப்பதற்கு நம்முடைய கலைஞர் அவர்கள் 1975 ஆம் ஆண்டு அறிவிப்பினைத் தந்தார்கள். அப்படி அறிவிப்பினைத் தந்து அந்தச் சிலை வடிக்கின்ற பணி குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடியாமல் போன காரணத்தால், அது கலைஞருடைய கற்பனையில் இருந்து 25 ஆண்டுகளுக்குப் பிறகு அவரே வந்து திறந்து வைக்கின்ற வாய்ப்பு, சூழ்நிலை உருவாகிவிட்ட காரணத்தால், அதனுடைய செலவு ரூ. 965 இலட்சமாக ஆகி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையமாக கன்னியாகுமரி மாவட்டம் இருக்கின்ற

[2000 ஏப்ரல் 6

காரணத்தாலே, பொதுவாக மிக அதிகமாக சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தாலே, விவேகானந்தர் பாறையிலிருந்து, திருவள்ளுவர் சிலை இருக்கின்ற பாறை வரையிலும் Cable Car மூலம் பயணிகள் வந்து செல்வது என்று சொன்னால் அந்தப் பகுதிக்கு, சுற்றுலா மையத்திற்கு அது மிகச் சிறப்பாக இருக்கும்; தமிழகத்திலே அப்படி ஒரு மையம் அமைப்பது சிறப்பாக இருக்கும். சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கான வாய்ப்புகளும் உண்டு. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், Cable Car விவேகானந்தர் பாறையிலிருந்து திருவள்ளுவர் பாறை வரையில் அமைத்துத் தருவதற்கான முயற்சியில் ஈடுபடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் சிலை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சிலையாக கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. பயணிகளுடைய கவனத்தைக் கவருகின்ற வகையில் இருப்பது என்றால் அதை அருகில் இருந்து பார்ப்பதற்கு கடலிலே சென்று, அதுவும் படகிலே சென்றால்தான் சிறப்பாக இருக்கும். கார்களில் எந்த இடங்களிலே வேண்டுமானாலும் போகலாம்; Exhibition-ல் கூடப் போகலாம். ஆகவே, படகிலே சென்று பார்ப்பதற்கு ஏற்ற வகையில் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் கேட்டது கார் அல்ல. Cable Car என்று கேட்டார். குமாரதாஸ் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். Cable Car உயரமான இடத்திலேதான் பயன்படுத்த வேண்டும். ஒரு சிகரத்திற்கும் இன்னொரு சிகரத்திற்கும் இடையிலே செல்வது Cable Car. வெளி நாடுகளிலே எல்லாம் அப்படித்தான் Cable Car உபயோகப்படுத்தப்படுகிறது. இங்கே விவேகானந்தர் பாறையும் குள்ளமான பாறை. திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டிருக்கும் அந்தப் பாறையும் அதைப்போலவே குள்ளமான பாறை. எனவே, இந்த இரண்டு குள்ளங்களையும் இணைத்து Cable Car அங்கே போக முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவேகானந்தர் சிலைக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய, திருவள்ளுவர் சிலை அமைந்து இருக்கக்கூடிய பாறையானது மிகச் சிறிய பாறை. 133



2000 ஏப்ரல் 6]

அடி உயரம் உள்ள அந்தத் திருவள்ளுவர் சிலையைப் பூரணமாகப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அந்தப் பாறையில் சென்று பார்க்க இயலாது. ஏற்கெனவே, அருள்மிகு பகவதி அம்மன் கோயிலுக்குப் பின்புறத்தில் ஒரு அழகான பார்க் அமைக்கப்பட்டிருந்தது. அது இப்போது சேதப்பட்டிருக்கிறது. அதன் பக்கத்திலிருந்து பொதுமக்கள் ஆர்வமாக வந்து உட்கார்ந்து பார்க்கக்கூடிய வகையில் அந்த பார்க்கை மீண்டும் அழகுபடுத்தி, அங்கு பொதுமக்கள் வந்து அமரக்கூடிய வகையில் கவர்ச்சிகரமான ஏற்பாடுகளைச் செய்தால்தான் திருவள்ளுவர் சிலையைப் பூரணமாகப் பார்த்து மகிழக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதை அரசு மீண்டும் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரையிலிருந்து பார்ப்பதற்கு ஏற்றவகையில் ஒரு தொலைநோக்குக் கருவியை அமைப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அய்யன் வள்ளுவருக்கு 133 அடி உயரச் சிலையை அமைத்து உலகப் புகழ் பெற்றிருக்கிறார்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். இப்போது சாதி, சமய பூசல்கள் பெருகிவருகின்ற சூழ்நிலையிலே அங்கே சமரச சன்மார்க்க நெறிமுறைகளைப் பரப்பிய வடபுலத்து சமய அறிஞர்களான விவேகானந்தருக்கும், பரமஹம்சருக்கும் நினைவு மண்டபங்கள் இருக்கின்றன. அதைப்போலவே, தென்புலத்திலே சமரச சன்மார்க்க நெறிமுறைகளைப் பரப்பிய வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாருக்கு நினைவு மண்டபம் கன்னியாகுமரியிலே எழுப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தீரன் அவர்கள் சாதி, சமயப் பூசல்கள் இப்போது இருப்பதாகச் சொல்லுகிறார். சாதி, சமயப் பூசல்கள் இப்போது பெருமளவு குறைந்திருக்கிறது. சாதிக்கு உள்ளேதான் இப்போது நிறையப் பூசல்கள் இருந்து வருகின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

[2000 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 239, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**239—**

**பழங்குடியினருக்குச் சான்றிதழ்**

***28442—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் பகுதியில் வாழும் காட்டுநாயக்கன் இனத்தவர்களுக்கு பழங்குடியினருக்கான சான்று வழங்கப்படாமல், மறுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சான்று வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணம் பகுதியில் இருந்து காட்டுநாயக்கன் சாதிச் சான்றிதழ் பெறுவதற்காக 14 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்கள் உரிய ஆவணங்களைச் செலுத்தாததால், அந்த சாதிச் சான்றிதழ் கோரிய மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. உரிய ஆவணங்களைச் செலுத்தினால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரக்கோணம் தொகுதியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் காட்டுநாயக்கன் இனத்தைச் சேர்ந்தவர்கள், கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 11-11-1989-க்கு முன் வட்டாட்சியர் அவர்களால் கிட்டத்தட்ட 400-க்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்னால் கோட்டாட்சியர் அவர்களால் 60-க்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கடந்த 6 ஆண்டு காலமாக



அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படாமல், நேர்முகத்தேர்விற்குப் பலபேர் அழைக்கப்பட்டும், சான்றிதழ் இல்லாமல் பணி கிடைக்காத நிலை; பணி கிடைத்தும் அங்கே உரிய நேரத்தில் சான்றிதழ் வழங்கப்படாததால் அவர்களைப் பணியிலிருந்து விடுவிக்கும் நிலை; இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். கடந்த 19-1-1997-ல் வடிவேலு என்பவர் இரயில்வேயில் பணிபுரிந்து, இறந்துவிட்டார். அவருடைய மகன் கடந்த 3 ஆண்டு காலமாக அலைந்து, கருணை அடிப்படையிலே 28-1-2000 அன்று பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். ஆனால், என்ன நிபந்தனை என்றால், மூன்று மாத காலத்திற்குள் அவர், காட்டுநாயக்கன் இனத்தைச் சார்ந்தவர் என்ற சாதிச் சான்றிதழை ஒப்படைத்தாகவேண்டும் என்பதாகும். இல்லையெனில், அவரைப் பணியிலிருந்து விடுவிப்பதோடு, அவர் போலியான தகவல் கொடுத்ததாகக் கூறி அவர்மீது criminal வழக்கு தொடரப்படும் என்று C.P.O. அவர்களால்கூட ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இரண்டு மாதங்களாக அலைந்தும் அவருக்குச் சான்றிதழ் கிடைக்கவில்லை. இன்னும், ஒரு மாத காலம்தான் எஞ்சியிருக்கிறது. எனவே, அந்த இனத்திற்கு உதவும் வகையில், விசாரணை என்ற பெயரில், வெகுநாட்களாக அலையவைப்பதை நிறுத்தி, தீர விசாரித்து உடனடியாக அவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டை வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 14 பேர் மனு தாக்கல் செய்திருந்தார்கள். அவர்களுடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்பது உண்மை. ஆனால் காட்டுநாயக்கன் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சாதிச் சான்றிதழ் பெறுவதில் ஏற்படுகின்ற சங்கடங்களைத் தவிர்ப்பதற்காக, கடந்த ஆண்டுகூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அந்த சாதிச் சான்றிதழ்களை விரைவாகப் பெறுவதற்கு, எளிதாகப் பெறுவதற்கு, கோட்டாட்சியரால் வழங்கப்பட்டு வந்த முறையுடன், மாவட்ட ஆதிதிராவிட அலுவலரும் வழங்கலாம் என்று ஓர் அரிய உத்தரவை வழங்கியிருக்கின்றார்கள். அதன்மூலமாக எளிதாகப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில், காட்டுநாயக்கன் சமூகத்தினர், தங்களுடைய வீட்டுப் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக சாதிச் சான்றிதழ் விரைவில் பெறவேண்டும்; அவர்கள் அடிப்படை வசதிகளைப்

[2000 ஏப்ரல் 6

பெறவேண்டும் என்பதற்காக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகின்றது. குறிப்பாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற குற்றச்சாட்டை, இந்தக் கூட்டத்தொடரிலேயே எனக்கு மனு மூலம் தந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வேலூர் கோட்டத்தில் 23 பேருக்கும், திருப்பத்தூர் பகுதியிலே 749 பேருக்கும், இராணிப்பேட்டையிலே 162 பேருக்கும், ஆக மொத்தம் 934 சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ள என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். ஏறத்தாழ 50 உறுப்பினர்கள் இந்த வினாவில் துணை வினா கேட்க வேண்டுமென்று இருக்கிறார்கள். இந்த காட்டுநாயக்கன் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகையினால், காட்டுநாயக்கன் என்று அத்தாட்சி கொடுப்பதற்கு என்ன தகுதி இருக்க வேண்டுமென்று தயவுசெய்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) 50 பேர் கையைத் தூக்குகிறீர்கள். யாராவது இரண்டு பேரை மட்டும் இப்போது அழைக்க முடியும். டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழங்குடியினர் சாதியைப் பொறுத்தவரை, அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதில் மிகப் பெரிய காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவர்கள் பூர்வீகமாக இருக்கின்ற பகுதியிலே உள்ள தாசில்தார் அலுவலகத்திலே அவர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிய பிறகுகூட, அவர்கள் குடிபெயர்ந்து சென்னைக்கு வந்தபிறகு, அந்த தாசில்தார் கொடுத்த சான்றிதழ்களை இங்கேயிருக்கின்ற தாசில்தார் அங்கீகாரம் செய்யாமல், வருடக் கணக்கிலே காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பழங்குடியினருக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தைக் கொடுத்து, அவர்களும், அவர்களுடைய குழந்தைகளும், பள்ளிப் படிப்பை, கல்லூரிப் படிப்பைத் தொடர்வதற்கான வாய்ப்பினை உருவாக்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிச் சான்றிதழ்களை எளிதாக, விரைவாகப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் மாவட்ட ஆதிதிராவிட நல



2000 ஏப்ரல் 6]

அலுவலரும் சாதிச் சான்றிதழ்களை வழங்கலாம் என்று இந்த அரசு புதிய உத்தரவை வழங்கி இருக்கிறது. சாதிச் சான்றிதழ்களை வழங்குவதற்காக மனு தாக்கல் செய்தால், அவர்களுக்கு 15 நாட்களுக்குள் வழங்க வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறது. பழங்குடியின மக்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லக்குமார் அவர்கள் சொல்வதைப்போல, ஒரு காலத்தில் காட்டுப் பகுதியில், மலைப் பகுதியில், வனப் பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். இப்போது நகருக்கு நகர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் நாகரீகம் பெற்றிருக்கிறார்கள். பழங்குடியின மக்களுக்கும், இப்போது நாட்டுப்புறத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் இடையே அடையாளம் காண்பதில் சற்றுச் சிரமமாக இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகின்ற நேரத்தில், அவர்கள் உரிய ஆவணங்களைச் செலுத்தினால், அவர்களுக்கு அந்தச் சான்றிதழ்களை வழங்குவதற்கு உரிய வாய்ப்பு ஏற்படுகின்றது. போலிச் சான்றிதழ்கள் கொடுத்து, அரசு நிறுவனங்களில் பலபேர் இருக்கின்ற காரணத்தினாலும், அவர்கள் நீதிமன்றத்தின் மூலமாகத் தடை பெற்று, அதற்குரிய விடிவுகாலத்தை ஏற்படுத்தாத சூழ்நிலை உருவாக்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலும், இதில் கவனமாக அரசு அலுவலர்களும், அரசு அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பதில் சற்றுத் தாமதம் ஏற்படுகின்றது. இருந்தாலும், 15 தினங்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசு அறிவுறுத்தி இருக்கின்றது; இந்த அரசால் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது. தக்க நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட இடத்தில் இந்தப் புகார் இருக்கிறது என்று சொன்னால், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 240, திரு. டி. மணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**240—**

**தூண்டில் வளைவு**

***31649—திரு. டி. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 6

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மார்த்தாண்டம் துறைக்கும் பூத்துறைக்கும் மத்தியில் தூண்டில் வளைவு கட்டும் நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்படும்?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மார்த்தாண்டம் துறைக்கும், பூத்துறைக்கும் மத்தியில் தூண்டில் வளைவு கட்டும் நடவடிக்கை தற்போது இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே அதிகக் கொந்தளிப்பு வருகிற காலங்களில், நம்முடைய மீனவர்கள், பெருவாரியாக பல மாதங்கள், மீன் பிடிக்கப் போக முடியாத ஒரு சூழ்நிலை உள்ளது. எனவேதான், கடலிலே தூண்டில் வளைவு என்று சொல்கிறபோது, அதிகப்படியான பணம் செலவானாலும்—சாதாரணமாக ஒரு வால்வ் என்று சொல்வார்கள்—வால்வை அமைத்துக் கொண்டால், எந்தக் கொந்தளிப்புக் காலத்திலும், அலை மோதாத அளவிற்கு மீன் பிடிக்கச் செல்ல முடியும். இதைக் கேரள மாநிலத்திலே இரண்டு பகுதிகளிலே அமைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே ஒரு முறையான நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமாக, நம்முடைய மீனவர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று துன்பப்படுவதையும், அண்டை மாநிலங்களுக்குச் சென்று துன்பப்படுவதையும் நிறுத்தவும், முறையாக எல்லா மாதங்களிலும் மீன் பிடிப்பதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் சாத்தியமாகும். அந்தவகையில், அதிகப்படியான பணம் செலவிட்டாலும், அதைச் செய்து, மீனவ மக்களின் நலனைப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ கிராமங்களில், கடலின் தன்மையை, அமைப்பைப் பொறுத்து, அங்கே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, உறுப்பினர் சொல்வதுபோல, தூண்டில் வளைவு அமைக்க, சாத்தியக்கூறுகள் இருந்தால், நிச்சயமாக அந்த ஆய்வு அறிக்கையைப் பெற்று, அரசு வருங்காலங்களில் உரிய நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கும்.



2000 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா உவரி கடற்கரையில், அடிக்கடி கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலையையும், வீடுகள் பாதிக்கின்ற சூழ்நிலையையும், நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரிலே பார்வையிட்டதும், மாண்புமிகு மீன வளத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டதும் தெரியும். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அதற்கு மதிப்பீடு தயாரிப்பதற்காக ஒரு குழுவை அனுப்பி, 197 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அது எந்த நிலையில் இருக்கிறது? அதோடு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், கூட்டப்புளி, பெருமணல், கூத்தங்குளி, இடிந்தகரை, கூடுதாளை, கூட்டப்பனை ஆகிய மீனவ கிராமங்களுக்கும் விரைவிலே மதிப்பீடு தயாரிக்கப்படும் என்று இந்தச் சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். அதுவும் எந்த நிலையிலே இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 196, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை, நாள் 22-11-1988-ல் வெளியிடப்பெற்று அந்தப் பணிகள், பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட பதிலை, பொதுப் பணித் துறையிடமிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பொதுவாக 6 மாதங்கள்தான் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடிகிறது. ஜூன் மாதம் வரைக்கும் மீன் பிடிக்க செல்ல முடியாத சூழ்நிலை. கடல் கொந்தளிப்பான காலகட்டங்கள்; ஏற்கெனவே, அரசு பல திட்டங்களை அறிவித்து, தடுப்புச் சுவர்கள் என்கிற அமைப்பில், பெரிய பாறைகளை, கற்களைக் கொண்டு கடற்கரை ஓரமாகப் போட்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதிகளிலே, மீனவர்கள் கட்டுமரங்களையோ, படகுகளையோ கொண்டு செல்ல முடியாத ஒரு சூழ்நிலை; போனாலும் கடல் அலை அடிக்கிற வேகத்திலே, அது கரையிலே மோதி, உயிர்ச் சேதங்கள்

[2000 ஏப்ரல் 6

ஏற்படுவதுடன் படகுகளும் சேதம் அடைகின்றன. ஏற்கெனவே, நான் மாண்புமிகு முதலமைச்சரிடம், அவர் 1996-லே முதலமைச்சராக வந்தவுடன் ஒரு மனுவைக் கொடுத்தேன். அவர்களும் ஆணையிட்டு, அதிகாரிகளும் வந்து இடத்தைப் பார்வையிட்டார்கள். அன்றைக்கு மீன் வளத் துறைச் செயலாளராக இருந்த மரியாதைக்குரிய திரு. இராமன் அவர்களும், மீன் வளத் துறை இயக்குநராக இருந்த மரியாதைக்குரிய திரு. மச்சேந்திரநாதன் அவர்களும், அந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டு, அதற்கான பரிந்துரைகளை ஆய்வு செய்து அனுப்புவதாகச் சொன்னார்கள். இது, இன்று இப்போதுள்ள இந்த அரசுக்கு வைக்கப்பட்ட கோரிக்கை அல்ல; வெகு காலமான கோரிக்கை. இதனாலே, மீனவர்கள் பல்வேறு இடங்களுக்கு மீன் பிடிக்கச் செல்கின்ற சூழ்நிலையில், அயல்நாடுகளிலே அவர்கள் போய் மாட்டிக்கொள்கிற சூழ்நிலையும் ஏற்படும். எனவே, இந்தத் தூண்டில் வளைவை நீங்கள் அமைத்துக் கொடுப்பதன் மூலம், கடல் கொந்தளிப்பிலேயிருந்து அந்தக் கிராமங்களைப் பாதுகாக்க முடியும். மீனவர்கள் ஆண்டு முழுவதும் வேலை செய்ய முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதாலே—ஒருவேளை 5 கோடி, 10 கோடி ரூபாய் செலவாகுமென்று மதிப்பீடு செய்து சொல்கிறார்கள். அது எவ்வளவு ஆனாலும்—கிட்டத்தட்ட பத்தாயிரம் மீனவர்களுக்கு வாழ்வளிக்கிற..(மணியடிக்கப்பெற்றது) நான் முடித்துவிடுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** முடித்துவிடுகிறேன், ஐயா. முடித்துவிடுகிறேன். முக்கியமாக, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதால்....

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

இது என்ன துணை வினாவா? எத்தனை வருடங்கள் M.L.A.-ஆக இருந்திருக்கிறீர்கள்? துணை வினாவை உரை மாதிரியே பேசிக்கொண்டிருக்கின்றீர்களே?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** என்னவென்றால், இது பெரிய விஷயம். அதனாலே மாண்புமிகு முதலமைச்சர்..



2000 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரிய விஷயத்தையும் சுருக்கமாகச் சொல்லத் தெரிந்தால்தான், M.L.A.-வாக வேலை பார்க்கலாம்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** முதலமைச்சருடைய கவனத்திற்கு வரவேண்டுமென்ற ஆவலின் அடிப்படையிலேதான், இவ்வளவு விளக்கமாகச் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. எனவே எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்ற விதத்திலே, இந்த மீனவர்களுடைய வாழ்வில், அக்கறை காட்டுகின்றமுகத்தான், அந்தத் தூண்டில் வளைவுகளை, அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற சூழ்நிலைகள், ஜூன் முதல் அக்டோபர் மாதங்களில் வருகின்றன. ஆகவே, ஒரு கிராமத்தில் இதுபோன்ற தடுப்புச் சுவர்களோ கடலுக்குள் நீங்கள் சொல்வது போல தூண்டில் வளைவுகளோ ஏற்படுத்தும்போது, பக்கத்து கிராமங்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படும் என்று இங்கே ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே, எந்தக் கிராமத்தில் இதுபோன்ற சூழ்நிலைகள் உள்ளன என்பதைப் பரிசீலித்து, வருங்காலங்களில் படிப்படியாக ஆய்வுகள் நடத்தப்பட்டு, அரசுக்கு வந்தபின்தான் இதுபோன்ற அமைப்புகள் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தமிழ்நாடு-கேரள மாநிலங்களுக்கிடையே முல்லைப் பெரியாறு நீர்த்தேக்கம் தொடர்பான பேச்சுவார்த்தை குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு-கேரள மாநிலங்களிடையே உள்ள நதி நீர்ப் பிரச்சினைகள் பற்றி பேசித் தீர்வு காண தமிழ்நாடு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, 13-8-1998 அன்று திருவனந்தபுரத்தில், அமைச்சர்கள் அளவிலான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. நிலுவையிலுள்ள அனைத்துப் பொருட்கள் குறித்தும், விவாதிக்க தமிழ்நாடு முன்வந்த போதிலும், கேரள அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, முல்லைப் பெரியாறு அணை விவகாரம் குறித்து மட்டுமே பேசலாமென்றும், இதர இனங்கள் குறித்து, இருசாரருக்கும் தோதாக உள்ள மற்றொரு நாளில் பேசலாமென்றும் முடிவு செய்யப்பட்டது.

மேற்கண்ட கூட்டத்தில், முல்லைப் பெரியாறு அணை விவகாரம் குறித்துப் பேசுகையில், இரு மாநிலங்களும் தத்தம் தொழில் நுட்பக் குழுக்களை அமைப்பதென்றும், அவை முல்லைப் பெரியாறு அணையைப் பார்வையிட்டு, விவாதித்து அறிக்கைகளைத் தத்தம் அரசுக்கு அளிப்பதென்றும், அவற்றின் அடிப்படையில், முதலமைச்சர்கள் அளவில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப் படலாமென்றும் முடிவு செய்யப்பட்டது.

இத்தகைய பேச்சுவார்தைக்கு முன்னதாக, இக்குழுக்களின் அறிக்கைகளைப் பரிமாறிக்கொண்டால், முதலமைச்சர்கள் பேச்சுவார்தையின்போது, அவற்றிலுள்ள விவரங்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக இருக்கும் என்று பின்னர் தமிழ்நாடு தெரிவித்த கருத்தை கேரளமும் ஏற்றுக்கொள்ள அவ்வாறே செய்வதென முடிவாயிற்று.

தமிழ்நாடு — கேரள தொழில்நுட்பக் குழுக்கள் *14-10-1998* அன்று பெரியாறு அணையைப் பார்வையிட்டன. தமிழ்நாடு தொழில் நுட்பக்குழு தன் அறிக்கையை நவம்பர் *1998*-ல் வழங்கியது. அதில் பின்வரும் முக்கிய பரிந்துரைகள் இடம் பெற்றிருந்தன:

"(அ) தற்போதுள்ள நவீன வடிவமைப்பு முறைகளுக்கு ஏற்ப, பெரியாறு அணை வலுப்படுத்தப்பட்டுள்ளதால், எஞ்சிய பணிகளும் முடிவடைந்தவுடன் அணையில் 152 அடி வரை நீரைத் தேக்கி வைக்கலாம்.

(ஆ) பிரதான அணையை வலுப்படுத்தும் பணியும், மிகை நீர்ப் போக்கிகளின் பணியும் முடிவடைந்து விட்டதால், மைய நீர்க் குழுமம்





ஏற்கெனவே பரிந்துரைத்திருந்தபடி, அணையின் நீர் மட்டத்தை முதலில் 145 அடிக்கு உடனடியாக உயர்த்திட கேரள அரசின் இசைவினைப் பெறலாம்."

ஆனால், கேரள அரசு தொழில்நுட்ப அறிக்கை தருவதில் பெரும் சுணக்கம் காட்டி வந்தது. தமிழக முதலமைச்சர் அவர்களிடமிருந்து, ஐந்து கடிதங்களும், பொதுப் பணித் துறை அமைச்சரிடமிருந்து எட்டு கடிதங்களும் தொடர்ந்து அனுப்பப்பட்டும், கேரளம் தன் தொழில் நுட்பக் குழு அறிக்கையைப் பரிமாறிக் கொள்வதிலும், முதலமைச்சர் அளவிலான பேச்சுவார்த்தை மேற்கொள்வதிலும் காலம் தாழ்த்தி வந்தது. பின்பு, ஜனவரியில், கேரள தொழில்நுட்ப அறிக்கை தயாராகிவிட்டதென்ற தகவல் கிடைத்ததும், 28-1-2000 அன்று தொழில் நுட்ப அறிக்கைகள் பரிமாற்றம் செய்யப்பட்டன.

கேரள தொழில்நுட்பக் குழு அறிக்கையின் முக்கிய பரிந்துரைகள் பின்வருமாறு:

"முல்லைப் பெரியாறு அணை கட்டி 104 ஆண்டுகள் ஆகின்றன. அணை தன் ஆயுட்காலத்தை ஏற்கெனவே கடந்துவிட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட அணை வலுவாக்கப் பணிகளினால், அணையின் பாதுகாப்புக்கு உடனடி அபாயம் இல்லை என்றபோதிலும், நீர் மட்டத்தைத் தற்போதைக்கு 136 அடி வரையில் வைத்துக்கொள்ளலாம்.

அணையின் வலு குறித்து தமிழ்நாடு கேரளப் பொறியாளர்கள் இணைந்து, தீவிரமாகக் கண்காணித்து வரலாம்.

அணையின் நிலை மோசமாகும் அறிகுறி தோன்றினால், நீர் மட்டத்தை 136 அடிக்கும் கீழாகக் குறைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்."

இம்மாறுபட்ட தொழில்நுட்பக் கருத்துக்களின் பின்னணியில்தான், இந்த விவகாரத்திற்கு ஓர் இணக்கமான முடிவு காண தமிழ்நாடு முதலமைச்சர் கேரள முதலமைச்சருடன் நிகழ்த்திய கடிதப் போக்குவரத்தின் விளைவாக, இரண்டு முதலமைச்சர்களும் 5-4-2000 அன்று திருவனந்தபுரத்தில் சந்தித்துப் பேச முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையில், பொது நலன் மனுக்களாக அணை நீர் மட்டத்தை 136 அடிக்கு மேல் அனுமதிக்கக் கூடாதென, கேரள உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று மனுக்களையும், அணை நீர் மட்டத்தை 152 அடிக்கு மீளக் கொண்டு வரவேண்டுமென்று, சென்னை

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு மனுக்களையும், உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றி, உச்ச நீதிமன்றம் விசாரித்து, ஆணை வழங்குமாறு 14-12-1998-ல் மாற்றல் மனு ஒன்றினையும், இரு உயர் நீதிமன்றங்களும் மேற்குறிப்பிட்ட பொது நல மனுக்களை மேற்கொண்டு விசாரிக்க தடை விதிக்கக் கோரி பல்வகை மனு ஒன்றினையும் உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றமும் 1-2-1999-ல் தடையாணையை வழங்கியது. மாற்றல் மனு 13-12-1999-ல் விசாரணைக்கு வந்தபொழுது, கேரள அரசு தரப்பில், இரு மாநிலங்களுக்கிடையே பேச்சு வார்த்தை நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து வழக்கை எட்டு வாரங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஏதேனும் ஒரு வகையில் இரு மாநிலங்களுக்குமிடையே ஓர் ஒருமித்த கருத்து உருவாகக் கூடும் என்று கருதி விசாரணையை உச்ச நீதிமன்றம் எட்டு வாரத்திற்கு ஒத்திவைத்தது.

`The Supreme Court in its order, dated 13-12-1999, ordered that 'the matters are therefore, adjourned by eight weeks and we hope by that time the parties shall be able to arrive at some consensus.'

முற்பகல் 10-35

5-4-2000 அன்று நடந்த பேச்சுவார்த்தையின்போது அணையை வலுப்படுத்த தமிழ்நாடு அரசு பல கட்டுமானப் பணிகளைச் செய்திருந்தபோதிலும் அணை முழுவதுமாக வலுப்படுத்தப்பட்டுவிட்டது என்றோ, யாதொரு அபாயமுமின்றி செயல்படும் என்றோ உத்தரவாதம் இல்லை என்று கேரள அரசு தரப்பிலே கூறப்பட்டதோடு, மேலும் அணையின் செயல்பாட்டைக் கண்காணிக்கப் பொருத்தப்பட்ட கருவிகள் சரியாகச் செயல்படுகின்றனவா என்பதை தமிழ்நாடு—கேரள பொறியாளர்களைக் கொண்ட ஒரு கூட்டுக் குழு நியமிக்கப்பட்டு கண்காணித்து வரலாமென்றும், தற்போது நீர் மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்துவதற்குத் தமக்கு சம்மதமில்லை என்றும் கேரள அரசு தரப்பில் சொல்லப்பட்டது.

தமிழகத்தின் சார்பில் மத்திய நீர்க் குழுமம் Central Water Commission ஏற்கெனவே கூறியபடி அணையில் நீரைத் தேக்கும் அளவினை 145 அடிக்கு உடனடியாக உயர்த்தலாம், அப்படி உயர்த்துவதால் அணைக்கு எந்தவித ஆபத்தும் ஏற்பட வாய்ப்பில்லை என்ற கருத்து தமிழ்நாடு





அரசு சார்பில் எடுத்துரைக்கப்பட்டது. கண்காணிக்கப் பொருத்தப்பட்டிருக்கும் கருவிகள் அணையைப் பராமரிப்பதற்கு ஒரு சாதனமே அன்றி அவற்றின் செயல்பாட்டுக்கும் அணையின் நீர் மட்டம் உயர்த்துவதற்கும் சம்பந்தமில்லை என்றும் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் பேபி அணையைத் தொடர்ந்து கட்டுவதற்கு கேரள அரசு தமிழக அரசுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. கேரள அரசு தனது பிடிவாதமான நிலையைத் தளர்த்திக்கொள்ளாததால், ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இந்தத் தகவல்களை தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தக்க பரிகாரம் காண நடவடிக்கை மேற்கொள்ளும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய பம்ப் செட் பற்றி...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-லே அறிக்கை வைக்கப்பட்டால் விவாதம் கிடையாது. நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றீர்கள். சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### பொதுப் பணித் துறை அமைச்சர் மீது 4-4-2000 அன்று தாம் குற்றஞ்சாட்டியதற்கு அளித்த ஆதாரத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் தீர்ப்புக் கோருதல்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையிலே என்னைக் கேட்டுக் கொண்டபடி ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் என்னிடம் கொடுத்துவிட்டீர்கள். அதைப்பற்றி இப்பொழுது நீங்கள் திரும்பப் பேச வேண்டியதில்லை. நியாயமாகப் பார்த்தால் நான் என்ன சொன்னேன் என்பதைச் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். உங்கள் கையிலே ஆதாரம் இருக்கிறது என்று சொன்னீர்கள். "என்னிடம் உடனே கொடுங்கள். இரண்டு நாளில் தீர்ப்புச் சொல்கிறேன்" என்றேன். இன்றைக்குக் காலையிலே வந்து இப்போது ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அது முறையில்லை என் கணக்குப்படி. இருந்தாலும் இந்த ஆதாரத்தை இப்பொழுது கொடுத்ததினாலே, அது என்ன என்று நான் பார்த்துச் சொல்கிறேன்.

[2000 ஏப்ரல் 6

**திரு. மு. அப்பாவு:** தலைவரே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தலைவரே என்றால் என்ன அர்த்தம்? உட்காருங்கள், அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன என்றால், அவர் மீதான குற்றச்சாட்டுகளை எல்லாம் நான் ஆதாரத்தோடு கொடுத்திருக்கிறேன். என்னுடைய கோரிக்கை என்னவென்றால் இதை விசாரிப்பதற்கு ஓர் உயர் நீதிமன்ற நீதிபதியை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இதெல்லாம் முறையில்லை. என்னுடைய அதிகாரத்தை எந்த நீதிபதிக்கும் கொடுக்க முடியாது. (குறுக்கீடு) நீங்கள் சும்மா இருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சும்மா இருங்கள் என்று சொன்னால், நாங்கள் இங்கு வர வேண்டாமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சும்மா இருப்பதற்கு இல்லை என்றால் (குறுக்கீடு) ஆமாம். நான் எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதில் சொல்கிறேன். நீங்கள் குறுக்கே வரவேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் முறையாக நடப்பது என்றால்தான் வர வேண்டும்.

(திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ச. அழகிரி, டாக்டர் தே. குமாரதாஸ், டாக்டர் அ. செல்லக்குமார், திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. மு. அப்பாவு ஆகியோர் ஒரே சமயத்தில் எழுந்து நின்றனர்)

என்ன முறைக்கிறீர்கள்? (குறுக்கீடு) என்ன முறைக்கிறீர்கள்?

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பேசப்பட்ட, அந்தப் பேச்சு தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட, அதன் காரணமாக அறிவிக்கப்பட்ட எந்த நடவடிக்கையும் அந்த முறையிலேதான் தொடர முடியுமே தவிர, வேறு முறை எதையும் இடையிலே புகுத்த முடியாது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவரவர்களே,



2000 ஏப்ரல் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன். கொஞ்சம் உட்காருங்கள். நான் சொல்லி முடிக்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். நான் சொல்லி முடித்த பிறகுதான், யாருக்கும் அனுமதி கொடுப்பேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். எனக்குத் தெரியும்.

**திரு. சி. ஞானசேகரன்:** Zero Hour-ல் எழுப்ப எங்களுக்கு அனுமதி உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கு மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் இப்பிரச்சினையை எழுப்பியபோது, "ஆதாரங்கள் இருந்தால் நான் அதைப் படித்துப் பார்த்துவிட்டுத் தீர்ப்புக் கூறுகிறேன்" என்று நான் சொன்னேன். அப்போது சொன்னதை, "பேரவைத் தலைவர் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன்" என்று திட்டவட்டமாக எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கின்றார். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில் ஆதாரம் இருக்கிறதா, இல்லையா என்பதிலே தீர்ப்பைக் கூறுவது என்னுடைய உரிமை. அதிலே யாரும் தலையிடமுடியாது. எந்த உச்ச நீதிமன்றத்திற்கோ, உயர் நீதிமன்றத்திற்கோ இதை அனுப்பமுடியாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதே மன்றத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் அப்போது அமைச்சராக இருந்த நண்பர் குழந்தைவேலு அவர்கள் தேனியிலே முத்துதேவன்பட்டியில் நான் நிலம் வாங்கியிருப்பதாக, என் பிள்ளைகளின் பெயரால் நிலம் வாங்கியிருப்பதாக ஒரு குற்றச்சாட்டை வெளியிலே சொன்னார், அதை அவையிலும் சொன்னார். அப்போது நானும் அன்றைய சக உறுப்பினராக இருந்த தம்பி துரைமுருகனும் "இதை நிரூபிக்க முடியுமா, ஆதாரம் இருக்கிறதா" என்று கேட்டபோது "இருக்கிறது" என்று சொன்னார். "அப்படியென்றால் நிரூபிக்க வேண்டும்" என்று நான் சொல்லிவிட்டு, "நீங்கள் நிரூபித்தால் நான் என்னுடைய பதவியை ராஜினாமா செய்கிறேன். நீங்கள் நிரூபிக்காவிட்டால் நீங்கள் உங்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்" என்று கேட்டேன். அந்த அறைகூவலை அவர் ஏற்றுக்கொண்டார். மறுநாள் ஆதாரம் தருவதாகச் சொன்னார். அப்போது சபாநாயகராக இருந்த அருமை நண்பர் மாண்புமிகு ராஜாராம் அவர்கள் அந்த ஆதாரத்தைத் தன்னிடம் மறுநாள் கொடுக்க வேண்டும் என்று கூறி "அதை நான்—மற்ற தலைவர்களிடத்திலே கலந்து பேசி—என்னுடைய முடிவைச் சொல்வேன்" என்று—நேற்று நீங்கள் சொன்னதைப் போல—அன்றைக்கு அவர் சொன்னார். ஆதாரம் கேட்டுக் கேட்டுப் பார்த்து—ஒவ்வொரு நாளும்

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 6

கேட்டுக் கேட்டுப் பார்த்து—ஆதாரம் வரவில்லை. கடைசியாக ஒருநாள் ஓர் ஆதாரத்தைக் கொடுத்தார். அந்த ஆதாரத்தைக்கூட நீதி விசாரணை வைத்து உயர் நீதிமன்ற நீதிபதியையோ, சுப்ரீம் கோர்ட் நீதிபதியையோ வைத்து விசாரிக்கவில்லை. எந்தச் சபாநாயகர் ஆதாரம் தர வேண்டுமென்று உத்தரவிட்டாரோ, அதே சபாநாயகர்தான் அந்த ஆதாரத்தைப் படித்துப் பார்த்துவிட்டு "இதிலே ஆதாரம் ஒன்றுமில்லை. ஆதாரம் தருவதாக நீங்கள்,"—முதலமைச்சராக இன்றைக்கு இருக்கின்ற, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த என்னுடைய மகன் பெயரால்—"ஒரு போலிக் கையெழுத்தை ஒரு forgery கையெழுத்தைப் போட்டு ஓர் ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்" என்று சொன்னார்கள். அதற்குப்பிறகு நானும் "போனால் போகிறது" என்று விட்டுவிட்டேன். இல்லாவிட்டால் அவர்களுடைய சத்தியப்படி அவர் ராஜினாமா செய்திருக்க வேண்டும். ராஜினாமா செய்யச் சொல்லி நான் வற்புறுத்தவில்லை. அத்துடன் அது முடிந்துவிட்டது. ஆனால் அன்றைக்கு—ஏன் சொல்கிறேன் என்றால்—"ஆதாரத்தை என்னிடத்திலே கொடுங்கள் நான் தீர்ப்புக் கூறுகிறேன்" என்று சொன்னது அன்றைய 'ஸ்பீக்கராக' இருந்த, சபாநாயகராக இருந்த ராஜாராம் அவர்கள். கொடுக்கப்பட்ட ஆதாரத்தை அவர் படித்துப் பார்த்துப் பார்த்துவிட்டு, "ஆதாரம் இல்லை" என்று அவர் இதே அவையிலே வெளிப்படையாகச் சொன்னார். அதுதான் அவையைப் பொறுத்தவரையில் முறை; முறையாக இருக்க வேண்டும். ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு, "உடனடியாக நீதி விசாரணை வையுங்கள்" என்று சொன்னால், அது பொருத்தமாக இருக்காது. எனவேதான் நடந்த ஒரு முன்மாதிரியை இந்த அவையில் சொல்லி, அதன்மூலமாக உங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் இந்த உண்மையைத் தெரிவிக்க, என்னுடைய கடமையை நிறைவேற்றியிருக்கின்றேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், என்னுடைய கோரிக்கை என்னவென்பதை நீங்கள் தயவுசெய்து கேட்க வேண்டும். பிறகு நீங்கள் எந்தத் தீர்ப்பு வேண்டுமானாலும் சொல்லுங்கள். அது ஒன்றும் இல்லை. இந்த அவையில் கொடுக்கப்பட்ட கோரிக்கை, அதனுடைய புகார்களை எல்லாம், எனக்கு வந்த தகவல்களின் அடிப்படையில், எனக்குத் தரப்பட்ட சில குறிப்புகளின் அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் மீது ஆதாரங்களோடு தங்கள் முன் கொடுத்திருக்கிறேன். இந்த ஆதாரங்களை நீங்கள்—அதாவது இது நம்முடைய சென்னை நகரத்தில், ஒரு சிறிய அலுவலகத்தில் எடுக்கப்பட்ட ஆதாரங்கள். எல்லாமே, நாமினேஷனில் சட்டவிரோதமாக நிறைய



2000 ஏப்ரல் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வேலைகளையெல்லாம் ஆய்வு செய்வதற்கு—அவற்றையெல்லாம் தமிழ்நாடு முழுவதும் எடுத்தால், மிகப் பெரிய ஊழல் வந்து சேரும் என்கின்ற முறையில், இதில் ஓர் உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரித்தால்தான் இதற்குச் சரியான முகாந்திரம் கிடைக்கும். அதுவரை, இந்த அமைச்சர், அந்தப் பொறுப்பிலே இருக்கக் கூடாது. அவர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னைப் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த காலத்தில் "சட்டமன்றத்தில் மரபுகள் காணாமல் போய்விட்டன; அவற்றை எப்படியாவது தேடிப் பார்த்துத் திருப்பிக் கொடுங்கள்" என்று நீங்கள் அனைவரும் சொன்னீர்கள். அந்த வகையிலே தெளிவாகச் சொல்கின்றேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மூத்த உறுப்பினர்; பல முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். அன்று அவர் பேசியதே முறையில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு தனி மரியாதை உண்டு என்ற காரணத்தினால்தான், "என்னிடம் ஆதாரத்தைக் காட்டாமல் பேரவையில் இருந்து குற்றச்சாட்டைச் சொல்வது முறையில்லை" என்று பல முறை அன்று எடுத்துச் சொன்னேன். அதற்குப் பிறகு ஆதாரம் என்னிடம் இருக்கிறது என்று சொன்னார். "உடனடியாக அந்த ஆதாரத்தை என்னிடம் கொடுக்க வேண்டும், நான் இரண்டு நாட்களிலே தீர்ப்புச் சொல்வேன்" என்று அன்று சொன்னேன். அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன வாசகம் "நம்முடைய சபாநாயகர் அவர்களுடைய தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்பது. ஆகவே, குற்றச்சாட்டுகள் சொல்ல அனுமதிப்பதற்கும் அதிலே உண்மை இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்ப்பதற்கும் எனக்குத்தான் உரிமை உண்டு. வேறு யாருக்கும் அந்த உரிமையை நான் கொடுக்க மாட்டேன். என்னுடைய நடுநிலை மீது உங்களுக்கு ஐயப்பாடு இருந்தால் என்னை இந்தப் பதவியிலிருந்து இறக்குவதற்கு உங்களுக்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன.

(உட்கார்ந்து கொண்டே டாக்டர் அ. செல்லக்குமார்: எங்களுக்கு எண்ணிக்கை இல்லை.) எண்ணிக்கை இருக்கிறது. நீங்கள் தீர்மானம் கொண்டுவாருங்கள். உங்களை மாதிரி தன்மானம் இல்லாதவன் இல்லை நான். நீங்கள் தீர்மானம் கொண்டு வந்தாலே நான் வெளியேறுவேன். (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டு "எண்ணிக்கை இல்லை" என்று சொன்னால் என்ன அர்த்தம்?

[2000 ஏப்ரல் 6

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எங்களுக்குத் தன்மானம் இல்லை என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்கார்ந்துகொண்டே பேசினால் என்ன அர்த்தம்? நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** நீங்கள், தன்மானம் இல்லை என்று எப்படிச் சொல்லலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான், உங்களுக்கு இருக்கிறது; இல்லை என்று சொல்லவில்லை. "எனக்கு இருக்கிறது" என்று சொன்னேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நீங்கள் தன்மானம் இல்லை என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் கிடையாது. எண்ணிக்கை இல்லை என்று சொன்னார்கள் "எனக்குத் தன்மானம் இருக்கிறது, நீங்கள் கொண்டு வந்தாலே நான் வெளியேறுவேன்" என்று சொன்னேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் வந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம்கூட நம்பிக்கை இல்லாமல் நடக்கிறீர்கள். இதை நான் அனுமதிக்க முடியாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** உங்கள் மேல் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் "தன்மானம் இல்லை" என்று சொன்னதை வாபஸ் வாங்க வேண்டும்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. நான் வாபஸ் வாங்க மாட்டேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தன்மானம் இல்லை என்ற வார்த்தையை நீங்கள் வாபஸ் வாங்க வேண்டும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தன்மானம் இல்லை என்று சொன்ன வார்த்தையை Speaker வாபஸ் வாங்க வேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** வாபஸ் வாங்க வேண்டும்.

(திரு. ச. அழகிரி, டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ரா. ஈஸ்வரன் ஆகியோர் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தனர்.)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் பேசிக்கொண்டே இருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் அப்படிப் பேசியதை வாபஸ் வாங்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் விளக்குகிறேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** அது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை. வாபஸ் வாங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முடியாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** வாபஸ் வாங்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். உட்கார வேண்டும். நான் வாபஸ் வாங்க மாட்டேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** என்ன பெரிய Speaker?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே........

**திரு. ரா. ஈஸ்வரன்:** என்ன வார்த்தை பேசுவது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் சொல்ல வேண்டாமா? சொல்வதற்கு முதலில் விடுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** (கையை நீட்டி) உங்கள் தகுதிக்கு இது முறையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையை நீட்டிப் பேசாதீர்கள். உட்காருங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** உங்கள் வார்த்தையை வாபஸ் வாங்குங்கள் முதலில். நான் உட்கார முடியாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தன்மானம் என்று பயன்படுத்தப்பட்ட சொல்லை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** வார்த்தையை வாபஸ் வாங்குங்கள் முதலிலே.

[2000 ஏப்ரல் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் கிடையாது. நான் சொல்கிறேன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** அந்த வார்த்தையை வாபஸ் வாங்குங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் பேசுகிறேன். (குறுக்கீடு) முடியாது. அதற்கு மேலே பேசினால் உங்களை அவையைவிட்டு வெளியேற்றுவேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** உங்களுக்குத் தகுதி இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். எனக்குத் தகுதி கிடையாது, உங்களோடு இப்படி நடந்துகொள்வதற்கு.

**திரு. ரா. ஈஸ்வரன்:** சபாநாயகர் எந்த வார்த்தையைச் சொல்வது? ரொம்ப சின்னப்பிள்ளைத்தனமான வார்த்தை. யாருக்குத் தன்மானம் இல்லை?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு இல்லை என்று யார் சொன்னது? அர்த்தம் இல்லாமல் பேசாதீர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். என்மீது நம்பிக்கை இல்லை என்றால் அதைக் காட்டுவதற்கு பல வகைகள் உள்ளன என்று நான் சொல்லும்போதே மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் உட்கார்ந்துகொண்டு "எண்ணிக்கை இல்லை" என்று சொன்னார்கள். அதற்கு நான் என்ன சொன்னேன் என்றால் என்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தாலே நான் இந்தப் பதவியைவிட்டு விலகுவேன், நான் தன்மானம் உள்ளவன் என்று சொன்னேன். எந்த உறுப்பினரையும் பார்த்து....

**டாக்டர் தே. குமாரதாஸ்:** "உங்களை மாதிரி தன்மானம் இல்லாதவன் இல்லை" நான் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் கிடையாது. அப்படிச் சொல்லவில்லை. நான் இப்போது திருப்பிச் சொல்கிறேன். அப்படி உங்களுக்குத் தெரிந்திருந்தால் நான் இன்னும் தெளிவாகச் சொல்கிறேன். நீங்கள் உட்கார்ந்துகொண்டு எண்ணிக்கை அடிப்படையிலே எங்களுக்கு இல்லை என்று சொன்னதனால்...



**டாக்டர் தே. குமாரதாஸ்:** நீங்கள் எது வேண்டுமானாலும் பேசுவதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், நான் பேசுவேன்.

முற்பகல் 10-50

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நீங்கள் எப்படி எங்களுக்குத் தன்மானம் இல்லையென்று சொல்ல முடியும்?

**திரு. ரா. ஈஸ்வரன்:** எங்களுக்குத் தன்மானம் இல்லையென்று நீங்கள் எப்படிப் பேசலாம்? சபாநாயகர் சபையிலே எதுவும் பேசலாம் என்று அர்த்தமா? எங்களுக்கு மரியாதை இல்லையா, கண்ணியம் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம். பேசுகிறேன். (கூச்சல் - குழப்பம்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர்...

*(உறுப்பினர்கள் டாக்டர் அ. செல்லக்குமார், திரு. ரா. ஈஸ்வரன், திரு. மு. அப்பாவு, திரு. ச. அழகிரி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தனர்).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாக விளக்கம் சொல்கிறேன். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் தன்மானம் என்ற சொல்லை, இந்த உரையாடலில் இடையிலே இடம் பெற்றதனாலே அதை எடுத்துவிடலாம் என்று கேட்டுக்கொண்டார்கள். முதலமைச்சர் அவர்கள் கூறியதன்படி அந்தத் தன்மானம் என்ற சொல்லே இடம் பெறாவிட்டால், யார் மீது யார் சொன்னார்கள் என்ற அந்தக் கருத்திற்கே இடம் இல்லை. ஆகவே, அந்த வகையில் அந்தச் சொல்லைத் தற்போது இந்தச் சூழ்நிலையில் எடுத்துவிட வேண்டுமென்று நானும் முன்னவர் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு வார்த்தையைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற குற்றச்சாட்டு, நம்முடைய சபாநாயகர் அவர்களாலே தீர்ப்புச் சொல்ல முடியாத, மிகப் பயங்கரமான குற்றச்சாட்டு. (குறுக்கீடுகள்) ஆகவே, இதற்கு ஒரு நீதிபதியை வைத்து....(கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் மீது ஒரு குற்றச்சாட்டை நேற்றைக்கு முன்தினம் உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். அதற்கும் நீங்கள் ஒரு நீதிபதியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** அது என்ன குற்றச்சாட்டு.... (கூச்சல்)

*(டாக்டர் அ. செல்லக்குமார், திரு. மு. அப்பாவு, திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. விசுவநாதன், திரு. ரா. ஈஸ்வரன், திரு. ச. அழகிரி, டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் எழுந்து நின்று பேசிக் கொண்டிருந்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதி காக்க வேண்டும். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதி காக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் எத்தனைபேர் நிற்கிறீர்கள் என்று பாருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** எத்தனை பேர் என்பது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாகப் பதில் சொல்கிறேன். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசுகிறேன். நீங்கள் எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** எதிர்க்கட்சித் தலைவர் மீது என்ன குற்றச்சாட்டு என்று சொல்லுங்கள். மேலும் அந்த வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய முறைகள் பலவற்றைக் காப்பாற்ற நாம் தவறிவிடுகிறோம். இந்த அவையில் குற்றச்சாட்டுச் சொல்ல எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமையுண்டு. குற்றச்சாட்டு, அதுவும் கடுமையான குற்றச்சாட்டுச் சொல்கிறபோது தகுந்த ஆதாரத்தை அவைத் தலைவரிடத்திலே கொடுத்து, அவர் அந்தக் குற்றச்சாட்டுக்கு





ஒரு prima facie இருப்பதாக உணர்ந்து, அதை அவையில் சொல்லலாம் என்று அனுமதி தந்தபின் இந்த அவையில் சொல்ல வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டிற்கான ஆதாரத்தைத் தங்களிடம், இப்போதுதான் கொடுத்திருக்கிறார்கள். இப்போது என்றால் இன்றைக்குக் காலையிலே. அது குறித்து அவைத் தலைவர் —Speaker— "இதிலே prima facie இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் சொல்லுங்கள்" என்று அனுமதி கொடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் பேசவேண்டும். ஆனால், அந்த அனுமதி இல்லாமலேயே, "புகார் கொடுத்திருக்கிறேன், ஆகவே, நீங்கள் அந்தப் புகாருக்கு விசாரணை வைக்க வேண்டும்" என்று சொல்வது இந்த அவையினுடைய உரிமையை மீறுவதாகும். இந்த அவைக்கு நீங்களே அளிக்கிற ஓர் உரிமை, இந்த அவையினுடைய பாதுகாப்பிற்காக, "ஓரளவிற்கு நியாயம் இருக்கிறது, இதை நீங்கள் சொல்லலாம்" என்று சபாநாயகர் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாமல் "உங்களிடத்திலே கடிதத்தைக் கொடுத்திருக்கிறேன், ஆகவே, இந்தக் குற்றச்சாட்டு பெரியது. இதற்கு நீதி விசாரணை வைக்க வேண்டும்" என்பது அத்தனையும் அவை மரபை மீறியதாகும். அதை எதிர்க்கட்சித் தலைவர் கருத வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** எதிர்க்கட்சித் தலைவர் மேலே என்ன குற்றச்சாட்டு இருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியிருக்கின்ற குற்றச்சாட்டுகள் ஓர் அவை மீறலாகவோ அல்லது வேறு மாதிரியான காரியங்களாகவோ இருந்தாலும் நம்முடைய சபாநாயகர் அவர்களே தீர்ப்புச் சொல்ல முடியும். ஆனால் இது ஒரு மிகப் பெரிய ஊழல் குற்றச்சாட்டு, பயங்கரமான குற்றச்சாட்டு. இதற்கு ஒரு நீதிபதியை வைத்துத்தான் விசாரிக்க முடியும் என்பதால் நான் இந்தக் கோரிக்கையை வைக்கிறேன். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள (குறுக்கீடுகள்) வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டை அவரே கொடுத்துவிட்டு அவரே தீர்ப்புச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நான் பேசுகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு)

[2000 ஏப்ரல் 6

முற்பகல் 10-55

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுகள் பொறுத்தவரை இந்த அவையினுடைய நிலையே என்னவென்றால், ஒருவர் மீது ஒரு குற்றச்சாட்டு சொன்னால், அப்போது என்ன சொல்வார்கள் என்றால் "இதை வந்து வெளியே சொல்லிப் பார்." (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாகக் கேட்க வேண்டும். "இந்தக் குற்றச்சாட்டை வெளியிலே சொல்லிப் பார், உன் மேலே Case போடுகிறேன்" என்று சொல்வார்கள். ஏனென்றால் இந்த அவைக்குள்ளே நடக்கின்ற விவகாரங்கள் இந்த அவைக்குள்ளேயே முடிய வேண்டியவை. தீர்ப்பு அளிப்பதாக இருந்தாலும் சரி, அல்லது அந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்வதாக அறைகூவல் விட்டு, அந்தத் தண்டனையை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் சரி, அவைக்குள்ளேயே முடிய வேண்டிய காரியங்கள். அதை விடுத்து, நீதி விசாரணை என்றெல்லாம் கூறும்போது குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால் அவர் சொல்வதுபோல பயங்கரமானதாக, பலமானதாக இருக்குமானால், அந்தக் குற்றச்சாட்டு இருந்தால், அந்தக் குற்றச்சாட்டை வைத்தே நாளையதினம் அமைச்சர் மீது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வழக்குப் போடலாம். வெளியிலே சென்று வழக்குப் போடலாம். அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லி, வழக்குப் போட வழி இருக்கும்போது, அவைக்குள்ளேயே இதை எப்படித் தீர்ப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், உங்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது; இந்தக் குற்றச்சாட்டுக்கான பட்டியல் இது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துத் தீர்ப்புச் சொல்ல வேண்டிய கடமை தங்களுக்குத்தான் இருக்கிறது. பொறுப்பு தங்களுக்குத்தான் இருக்கிறது. அந்தப் பொறுப்பைத் தங்களிடத்திலே ஒப்படைத்துவிட்டு—நான் நேற்றுக் கொடுத்திருக்கிற ஒரு குற்றச்சாட்டிலேகூட, 'நீங்கள் சொன்னால் போதும்' என்றுதான் உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். அதைக்கூட இங்கே நான் கிளப்பி இருக்கமாட்டேன். இந்த அளவிற்கு வந்தபிறகு, என்னவோ யாரோ அவர்கள்தான் பரிசுத்தவான்கள், ஆளும்கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் தவறானவர்கள் என்கின்ற ஒரு புதிய கோஷத்தை இன்றைக்கு எழுப்பியிருப்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது; வேதனையாகக்கூட இருக்கிறது. எனவே, நான் கொடுத்ததாக இருந்தாலும், அவர் கொடுத்ததாக இருந்தாலும், எல்லாவற்றிற்கும் இந்த அவைக்குள்ளேதான் தீர்ப்பு அளிக்கப்பட வேண்டும். அதிலே திருப்தியில்லை என்றால்,





வெளியிலே சென்று மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன்மீது வழக்குப் போட எல்லா உரிமையும் எதிர்க்கட்சித் தலைவருக்கு இருக்கிறது. அந்த வழக்கைப் போடலாம். கவர்னரிடத்திலே அதற்கான அனுமதியைப் பெறலாம். எல்லா வழியும் இருக்கும்போது, இந்த அவைக்குள்ளேயே அதைத் தீர்த்து வைப்பதில் வழிவகை இருக்கும்போது, அதை விட்டுவிட்டு, நீதிபதியை நியமியுங்கள் என்று சொல்கிறார்கள். நீதிபதியை நியமிக்கின்ற அதிகாரம் தங்களுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நீதி விசாரணை என்றால், அரசு ஒரு நீதி விசாரணை வைக்க வேண்டும். அந்த நீதி விசாரணை தேவைதானா, தங்களிடத்திலே குற்றச்சாட்டைக் கொடுத்துவிட்ட பிறகு, நீதி விசாரணை தேவைதானா என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். குற்றச்சாட்டு மாண்புமிகு சபாநாயகர் அவர்களால் படித்துப் பார்க்கப்பட்டு, நிரூபிக்கப்படுமேயானால், உண்மை இருக்கிறது என்று அவர்கள் சொல்வார்களேயானால், நம்மை எல்லாம் அழைத்து அவருடைய அறையிலே சொல்வாரேயானால் அடுத்த நிமிஷம் பொதுப் பணித் துறை அமைச்சரை இந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கு கருணாநிதி தயங்கமாட்டான் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நான் நேற்றைய முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப் படித்துக் காட்டினேன். "சபாநாயகர் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொன்னார். அந்தத் தீர்ப்பிலே "இரண்டு நாட்களுக்குள்ளே என்னுடைய முடிவைச் சொல்வேன், உங்களுடைய குற்றச்சாட்டை ஆதாரத்தோடு என்னிடம் கொடுக்க வேண்டும்" என்று நான் சொன்னேன். இன்று சற்று முன்னர் அவையிலே புத்தக வடிவில் ஒன்றைக் கொடுத்தார்கள், "நான் அதைப் படித்துப் பார்த்து, என்னுடைய முடிவைச் சொல்வேன்" என்றதற்கு முன்னால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து "உயர் நீதிமன்ற விசாரணை வைக்க வேண்டும்" என்றார்கள். முதலமைச்சர் சொல்வதைப் போல அந்த அதிகாரம் எனக்குக் கிடையாது. நான், என்னுடைய நடுநிலைத் தன்மையில் எந்த நேரத்திலே உங்களுக்கு ஐயப்பாடு வருகிறதோ அதற்குப் பிறகு இந்தப் பதவியிலே இருக்கக் கூடாது என்ற கருத்திலேதான் தெளிவாகச் சொன்னேன். நான் நடுநிலையாக எந்தத் தீர்ப்புச் சொல்வதற்கும் தகுதியற்றவன் என்று நீங்கள் ஒரு முடிவிற்கு வந்தால் அதை ஒரு தீர்மானம் வழியாக நீங்கள் கொண்டு வாருங்கள் என்றேன். அப்போது ஓர் உறுப்பினர்

உட்கார்ந்து கொண்டு "எண்ணிக்கையில்லை" என்றார். அதற்குப் பதில் சொல்லும் வகையிலேதான் நான் சொன்னேன். நீங்கள் தீர்மானம் கொண்டு வந்தாலே நான் பதவி விலகுவேன், நான் தன்மானம் உள்ளவன் என்று சொன்னேன். (குறுக்கீடு) இல்லை நான் அதை விளக்கமாகச் சொல்ல வேண்டும். தேவையில்லாமல், வேறு யாரையோ தன்மானம் இல்லாதவர் என்று நான் சொன்னதாக யாராவது சொன்னால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனாலே நான் தெளிவாகச் சொல்கிறேன். உங்களுக்கு என்னுடைய நடுநிலைத் தன்மையிலே சந்தேகமிருந்தால் ஒரு தீர்மானம் கொண்டு வாருங்கள். இந்தப் பதவியிலே, இந்த நாற்காலியிலே நான் உட்காரமாட்டேன். நான் நிச்சயமாக, நான் பேரவைத் தலைவராக இருந்தால், அந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறதா இல்லையா என்கிற தீர்ப்பை நான்தான் சொல்வேனே ஒழிய வேறு யாருக்கும் அந்த உரிமையைக் கொடுக்க மாட்டேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்மீது குற்றச்சாட்டு இருப்பதாக இங்கே சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டு என்ன என்பதை அவரை விளக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான், தாங்கள் எழுதிய ஒரு கடிதத்தை சபாநாயகரிடத்திலே கொடுத்திருக்கிறேன். இப்போது நான் அதை வெளியிட விரும்பவில்லை. அது நாகரிகம் ஆகாது. ஏனென்றால் சபாநாயகரிடத்திலே கொடுத்திருக்கிறேன்.

முற்பகல் 11-00

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சருக்கு ஒரு பினாமியாக சுப்பாராவ் என்பவர் பலவேலைகளை அதாவது 108 nomination வேலைகளில் 68 வேலைகளை அவரே செய்து முடித்திருக்கிறார், nomination என்ற முறையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போதுதானே எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குள்ளே நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? அதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் உங்களிடம் தெளிவாகச் சொல்கிறேன். உங்களுக்கு என்றைக்குச் சந்தேகம் வந்ததோ—(எதிர்க்கட்சித் தலைவர் வேறு பக்கம் திரும்பி தன்



அருகிலிருந்த உறுப்பினர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்) எதிர்க்கட்சித் தலைவருடைய கவனத்திற்கு நான் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரிடம்தான் நான் பேசுகிறேன். என்றைக்கு என்னுடைய நடுநிலைத் தன்மையிலே உங்களுக்கு ஐயப்பாடு வந்ததோ—அதைச் சொன்னாலே போதும். நான் இந்த நாற்காலியிலே உட்கார மாட்டேன். நீங்கள் அதை வைத்துக்கொண்டு கண்டதையெல்லாம் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. இப்போதுதான் என்னிடம் குற்றச்சாட்டைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறதா, இல்லையா என்பதை நான்தான் பார்க்க வேண்டும். நான் தெளிவாகச் சொல்கிறேன். நான் தன்மானம் உள்ளவன் என்றுதான் சொன்னேனேயொழிய, வேறு யாரையும் தன்மானம் இல்லாதவர் என்று சொல்ல வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. (குறுக்கீடுகள்) யார் என்ன சத்தம் போட்டாலும் பரவாயில்லை. உங்கள் பக்கத்திலேயிருந்து, இன்றைக்கு ரொம்ப தரக்குறைவாக நடந்துகொண்டார்கள். அதையும் நான் தாங்கிக்கொண்டுதான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மீது நம்பிக்கை இல்லையென்று நாங்கள் சொல்லவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி நீங்கள் நடந்துகொள்வதே நம்பிக்கை இல்லாததுதானே? என்னிடம் குற்றச்சாட்டைக் கொடுத்துவிட்டு உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து கமிஷன் போடுங்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அது, நம்முடைய அரசாங்கத்திற்கு நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படி நான் அதை சிபாரிசு செய்ய முடியும்? விதி தெரியாமல் நீங்கள் பேசக் கூடாது. நீங்கள் கொடுத்த குற்றச்சாட்டிலே ஆதாரம் இருந்தால் (எதிர்க்கட்சித் தலைவர் வேறு பக்கம் திரும்பி தன் அருகிலிருந்த உறுப்பினர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்) எதிர்க்கட்சித் தலைவர் இந்த இருக்கைக்கு ஒரு மரியாதையைக் கொடுங்கள். எனக்குக் கொடுக்க வேண்டாம் உங்களிடம் நான் பேசிக் கொண்டிருக்கும்போது வேறு எங்கேயோ நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** கவனிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குற்றச்சாட்டைக் கொடுத்தீர்கள். அதன்பேரிலே, அவரிடம் விளக்கம் கேட்பேன். விளக்கம் கேட்டுப் பெற்று ஆதாரம் இருக்கிறது என்ற முடிவிற்கு நான் வந்தேன் என்றால், ஆதாரம் இருக்கிறது என்று நான் சொன்னாலே நடவடிக்கை எடுக்கப்போகிறேன் என்று முதலமைச்சர் சொல்லிவிட்டார். நான் ஆதாரம் இருக்கிறதா, இல்லையா என்கிற தீர்ப்பைத்தான் சொல்லமுடியுமேயொழிய, இது உயர் நீதிமன்றத்திற்குப் போக வேண்டும், உச்ச நீதிமன்றத்திற்குப் போக வேண்டும், நீதிபதியைப் போட வேண்டும் என்று சொல்வதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. அந்த உரிமையும் எனக்குக் கிடையாது. விதிகளிலே எங்கேயும் இடம் கிடையாது. ஆதாரம் இருக்கிறதா, இல்லையா என்று சொல்வதற்குத்தான் எனக்கு உரிமை உண்டு. ஆதாரம் இருக்கிறது என்று நான் சொல்லிவிட்டால் உடனடியாக முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கிறார். இதுதான் நிலைமை. அதற்கு மேலே உங்களுடைய இஷ்டம். நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்துகொள்ளுங்கள்.

**திரு. ச. அழகிரி.** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்துவதும், உட்படுத்தாததும் நீங்களும், எதிர்க்கட்சித் தலைவரும் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எப்படிப் பேச முடியும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவைத் தலைவர் அவர்கள்தான் முழு இறையாண்மை படைத்த ஓர் அமைப்பினுடைய தலைவர். இது இறையாண்மை படைத்த, முழு உரிமை படைத்த ஓர் அமைப்பு; நாம் எல்லாம் உட்பட்ட ஓர் அமைப்பினுடைய தலைவர், எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் அவர்தான் அந்த முடிவை எடுப்பதாக இந்த அவை கருதும்படி அவர் நடந்துகொள்ளவேண்டுமே தவிர, இன்னொரு இடத்திற்கு "நீங்கள் தீர்ப்பு சொல்லுங்கள்" என்று கேட்கிற இடத்தில் அவர் என்றைக்கும் இருக்க முடியாது. ஆகவே, இந்த அவையினுடைய மதிப்பைக் காப்பாற்ற சபாநாயகர் சொல்கிற அந்த வாக்குறுதியை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது, சபாநாயகர் ஒரு தீர்ப்பைச் சொன்னதற்குப் பின்னர்தான் அது சரியா, தவறா, அது குறைபாடு உடையதா, முழுமை உடையதா என்ற கருத்தை யாரும் தெரிவிக்கலாமே தவிர,



அவர் தீர்ப்பே சொல்லாதபோது அதற்கு மேற்பட்டு உள்ள நடவடிக்கைகள் பற்றியும், இந்த அவையில் ஏதோ ஒரு பெரிய லட்சியத்தை அடையப் போவதைப் போலப் பேசுவதும், நீதிமன்ற நீதிபதியை நியமிக்க வேண்டும் என்று கேட்பதும், இந்த அவை நடைமுறைக்கும் மரபிற்கும் ஒத்ததும் அல்ல; உரிமையும் அல்ல.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் சொன்னதிலேயிருந்து நான் சற்று மாறுபடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது "ஒரு நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடுவதற்கு, பேரவைத் தலைவருக்கே அனுமதி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று சொன்னார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரை பேரவைத் தலைவர் அப்படியொரு முடிவு செய்தால், உயர் நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடுவதற்கான அதிகாரம் பேரவைத் தலைவருக்கு இருப்பதாக நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. விதிகளிலே இடம் இல்லை.

**திரு. ச. அழகிரி:** உங்களுக்கு அந்த உரிமைகள் இருப்பதாக நான் கருதுகிறேன். எனவே, அதுபற்றி நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் சொல்கிறேனே.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கொஞ்சம் இருங்கள். பேரவைத் தலைவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அழகிரிக்கு நன்றாகத் தெரியும். இந்த அவைக்குள்ளே நடப்பதற்கு நான்தான் final authority. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவந்திருக்கிறார். ஆரம்பத்திலேயே சொன்னேன். குற்றச்சாட்டை என்னிடத்தில் என் அறையில் வந்து கொடுத்துவிட்டு, ஆதாரம் இருப்பதாக நான் ஒத்துக்கொண்ட பிறகுதான் அவர் பேசியிருக்கவேண்டும். இது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிந்த ஒன்று. ஆனால் அதையும் மீறி என்னிடத்தில் காட்டாமல் அன்றையதினம் பேசினார்கள். "ஆதாரம் இருக்கிறதா" என்று கேட்டேன். "கையில் வைத்திருக்கிறேன்" என்று சொன்னார்கள்.

உடனடியாகக் கொடுங்கள், இரண்டு நாட்களில் நான் தீர்ப்புக் கூறுகிறேன் என்று சொன்னேன். பேரவைத் தலைவர் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்று சொன்னார்கள். இன்று என்னிடம் வந்து ஆதாரத்தை, இப்போது, கொடுத்திருக்கின்றார்கள். நான் உடனடியாக, பொதுப் பணித் துறை அமைச்சரை அழைத்து, "குற்றச்சாட்டுக்கான ஆதாரம் இதோ இருக்கிறது. உங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்" என்று சொன்னேன். அதைப் புரட்டிப் பார்ப்பதற்கு முன்னாலேயே, உயர்நீதிமன்ற நீதிபதி விசாரணை வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை வைத்தீர்கள். "நான் ஏற்கவில்லை என்றால், நீங்கள் இப்படிச் செய்யலாம்" என்று நான் சொன்னேன். "என்னுடைய நடுநிலைத் தன்மையிலே உங்களுக்கு ஐயப்பாடு வந்து விட்டது. இனிமேல் இந்த நாற்காலியில் நான் உட்காருவது முறையில்லை. ஆகவே அதற்குண்டான தீர்மானத்தைக் கொண்டுவாருங்கள், நான் வெளியேறுகிறேன்" என்று தெளிவாகச் சொன்னேன். நீங்களாவது எனக்கு வேண்டியவர், தயவுசெய்து அந்த வேலையைச் செய்யுங்கள்.

முற்பகல் 11-05

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடக்கும் இந்த விவாதத்தில்....

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களைப் பொறுத்தவரையில், சபாநாயகர் அவர்கள் மீது நம்பிக்கை இல்லையென்று நாங்கள் சொல்லவில்லை. சில குற்றச்சாட்டுகளை நாங்கள் சொல்லியிருக்கிறோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்படிச் சத்தம் போட்டுப் பேசுவதால் ஒன்றும் ஆகிவிடாது. என்னிடம் ஒரு குற்றச்சாட்டைக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) கொஞ்சம் உட்காருங்கள். என்னிடம் ஒரு குற்றச்சாட்டுப் பட்டியலைக் கொடுத்துவிட்டு, இப்போது அவை நடக்கிறபோது நான் அதைப் புரட்டிப் பார்ப்பதற்கு முன்னாலேகூட இதில் உயர் நீதிமன்ற நீதிபதி விசாரணைக்கு உத்தரவு போடுங்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? அப்படியானால் நான் அதைப் படித்துப் பார்க்கக் கூடாதா?

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு கருத்தைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் கருத்து எப்படி வரமுடியும்?

**திரு. சி. ஞானசேகரன்:** எதிர்க்கட்சிகள் ஆதாரத்தைக் காட்டாமலேயே பேசலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரத்தைக் காட்டாமலேயே பேசலாம் என்று யார் உங்களுக்குச் சொன்னார்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** அறிஞர் அண்ணாவே கூடச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்ற முன்மாதிரிகளை எல்லாம் காண்பிக்காதீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** எதிர்க்கட்சிகள், ஆதாரங்களைக் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்று அண்ணாவே சொல்லியிருக்கிறார். நாங்கள் பல கருத்துகளைச் சொல்வதற்கு `Zero Hour'-ல் எங்களை அனுமதிக்கவேண்டும். அதைத்தான் எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அப்போதுதான் நாங்கள் எங்கள் கடமையைச் செய்யமுடியும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபாநாயகர் அவர்கள், தன்னிடத்திலே கொடுக்கப்பட்ட அந்தப் புகாரைப் படித்துப் பார்த்து, "அது அவையில் பேசப்படுவதற்கு அனுமதிக்கப்படுகிறது" என்று சொன்னவுடன்தான் பேசலாம். அப்படிச் சொல்வதற்கு முன்னாலேயே, "நீங்கள் சொல்லித்தான் ஆகவேண்டும்" என்று பேசுவது முறையல்ல. அவையின் மரபுப்படி, அவர்கள் கொடுத்திருக்கின்ற குற்றச்சாட்டைப் பற்றி, அது பேசுவதற்குரியதா, அல்லவா என்று தீர்மானித்துச் சொல்லவேண்டிய பொறுப்பு, பேரவைத் தலைவர் அவர்களுடையது. அவர்கள் அந்தப் பொறுப்பை இன்னும் நிறைவேற்றவில்லை, அவர் முடிவு சொல்லவில்லை. ஒருவேளை அவர்கள் தவறாகவே முடிவு சொன்னார் என்று வைத்துக்கொள்ளுங்கள், அவர்கள் சொன்னதைப்போல, நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டுவரலாம். இன்னும் அதையும் கடந்து, முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்தில் நேரடியாகவே வழக்குப் போடலாம் ஆளுநர் அனுமதியைப் பெற்று. அந்த அனுமதியையும் நாங்கள் தடுக்கமாட்டோம் என்ற பொருளில், தலைவர் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். இவ்வளவு உரிமைகள் இருக்கின்றபோது, ஏதோ முறைகேடாக நடப்பதைப்போல ஒவ்வொருவரும் தங்களை சபாநாயகர் பேச அனுமதிக்காததைப் போல இங்கே பேசுவது அவையினுடைய மொத்த மரபைக் காப்பாற்றுவதில் நமக்கு அக்கறை இல்லை என்பதைத்தான் காட்டும். (குறுக்கீடு)

[பேராசிரியர் க. அன்பழகன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த அக்கறையைப் பற்றித்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் முதலில் என்னிடம் வந்து, "நான் உங்கள் அறையில் கொண்டுவந்து ஆதாரத்தைக் காட்டுகிறேன்" என்றார்கள். நான் "இரண்டு நாட்களுக்குள் தீர்ப்புச் சொல்கிறேன்" என்று சொல்லி, "அன்றைக்கே கையில் ஆதாரம் இருக்கிறது என்று சொன்னீர்களே, எங்கே காணோம்" என்று கேட்டேன். "இதோ கொண்டுவந்திருக்கிறேன்" என்று சொல்லி, இப்போதுதான் தந்திருக்கிறார். நான் இன்னும் அந்த அட்டையைக்கூடப் பிரித்துப் பார்க்கவில்லை. அதற்கு முன்னாலேயே, என்னைத் தீர்ப்புச் சொல்லச் சொல்வது முறையில்லை. ஆகவேதான் நான் சொன்னேன் மற்றவர்களைக் காட்டிலும், மாண்புமிகு உறுப்பினர் அழகிரி, சில சட்டப் பிரச்சினைகளை எழுப்பியதால், சுலபமாக ஒரு சட்டத் தீர்வை உங்களிடத்திலே நான் சொன்னேன் "ஒரு தீர்மானத்தைக் கொண்டுவாருங்கள், இதை முடித்துக்கொள்கிறேன் நான்" என்று. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் நான் சொன்னேன், "நான் தன்மானம் உள்ளவன் என்று. மற்றவர்களைப்பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. அது தேவையில்லாத பிரச்சினை.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்புக்காக நாங்கள் காத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை முன்பே சொல்லியிருந்தால் எப்பொழுதோ பிரச்சினை முடிந்துபோயிருக்கும்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, (பேரவைத் துணைத் தலைவர்):** Hon. Speaker, Sir, I am on a Point of Order. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, அமைச்சர் அவர்களுடைய பெயரைக் குறிப்பிட்டு, அவருடைய பினாமி என்று ஒருவர் பெயரையும் குறிப்பிட்டுப் பேசினார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன வார்த்தைகள் தற்போது அவைக் குறிப்பிலே இடம் பெறாது. நான் தீர்ப்பு சொன்ன பிறகு வேண்டுமானால் அந்த விவரத்தை அனுமதிக்கலாம்.



முற்பகல் 11-10

## 4. கவன ஈர்ப்பு

### குத்தாலம் தொகுதி கழனிவாசல்-பொரும்பூர் சாலைப் பணிகள், வனத் துறையின் தேக்கு மரங்கள் அப்புறப்படுத்தப்படாததால் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறார்கள்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட குத்தாலம் தொகுதி கழனிவாசல்-பொரும்பூர் சாலைப்பணிகள், அங்குள்ள தேக்குமரங்கள் வனத் துறையால் வெட்டப்படாததால், பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

கவன ஈர்ப்பு அறிவிப்பில் கூறப்பட்டுள்ள குத்தாலம் தொகுதி கழனிவாசல்-பொரும்பூர் சாலை வனச்சாலை அல்ல. இச்சாலை அமைந்துள்ள இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலம். இச்சாலை அமைந்துள்ள ஆற்றின் இடது கரையில் வனத் துறையால் தேக்குத் தோட்டம் எழுப்பப்பட்டுள்ளது. இச்சாலையினை அகலப்படுத்தும் சமயம் ஆற்றின் கரையில் வனத் துறையால் எழுப்பப்பட்டுள்ள தேக்குத் தோட்டத்தில் உள்ள சுமார் 8 தேக்கு மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். சாலை அமைந்துள்ள பகுதி பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் என்பதாலும் பொதுப் பணித் துறை வேலை செய்யும் இடங்களில் மரங்களை வெட்டுதல் மற்றும் அப்புறப்படுத்துதல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு அத்துறைக்கே அதிகாரம் உள்ளதாலும் வனத் துறை இப்பகுதியில் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. இந்நாள் வரை சாலையினை

அகலப்படுத்துவது குறித்தோ, தேக்கு மரங்களை அப்புறப்படுத்துவது குறித்தோ கோரிக்கை ஏதும் வனத் துறையில் பெறப்படவில்லை. கோரிக்கைகள் கிடைக்கப்பெறும்பட்சத்தில் பொதுப் பணித் துறையின் மூலம் அனுமதி பெற்று வனத் துறையால் எழுப்பப்பட்ட தேக்கு மரங்களை அப்புறப்படுத்த தக்க அனுமதி வழங்கப்படும்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். அதில் தேக்கு மரங்கள் வெட்டப்பட வேண்டும் அல்லது அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எதுவும் வரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்தெந்தக் காலகட்டங்களிலே முறையாகக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகக் கொடுத்திருக்கிறேன். இந்தச் சாலையைப் பொறுத்தவரையில், நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் என்னுடைய தொகுதியிலே போடப்படுவதாக முன்னுரிமை கொடுத்து அளிக்கப்பட்டிருக்கிற பட்டியலில் முதலிலே இருக்கிற சாலை. இதிலே இருக்கிற அந்தத் தேக்கு மரங்கள் அப்புறப்படுத்தப்படாத காரணத்தால், அடுத்தடுத்த சாலைகளை எடுத்துக்கொண்டு செப்பனிட்டுப் போடுகிறார்களே தவிர, இந்தச் சாலை தொடர்ந்து 1997 ஆம் ஆண்டிலிருந்து விடுபட்டு வருகிறது. நெடுஞ்சாலைத் துறை இந்தச் சாலையைப் போடப் போகிறோம் என்று நிர்வாக அனுமதியும், டெண்டரும் விட்டால்தான் நாங்கள் மரத்தை வெட்டுவோம் என்று பொதுப் பணித் துறையிலே சொல்கிறார்கள். ஆனால் நெடுஞ்சாலைத் துறையிலே என்ன சொல்கிறார்கள் என்றால், மரத்தை வெட்டி அப்புறப்படுத்திக் கொடுத்தால்தான் சாலை போட முடியும்; நாங்கள் டெண்டர் வைக்க முடியும் என்று சொல்கிறார்கள். இது எப்படி இருக்கிறதென்றால், 'கல்யாணம் ஆனால் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்த பிறகு கல்யாணம் நடக்கும்' என்பதைப் போல இருக்கிறது. நான்கைந்து ஆண்டுகால போராட்டத்திலே இருக்கிற சாலை இது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தீர்வு கிடைக்கக்கூடிய அளவுக்கு ஆவன செய்ய வேண்டும்; செய்வார்களா என்பதைக் கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பித்தம் தெளிய மருந்தொன்று கண்டுபிடிக்கப்படும். (சிரிப்பு)



# 5. அறிவிப்பு

### மானியக் கோரிக்கைகள், 2000-2001, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India. I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the demands for grants for the financial year 2000-2001."

# 6. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்

### (அ) கோரிக்கை எண் 20-வேளாண்மை

### (ஆ) கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 20-வேளாண்மை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20 வேளாண்மை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.877,26,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதுவரை சட்டமன்றத்தில் எழுப்பிய கருமபுக்கு

டன் ஒன்றுக்கு ரூ.1000 கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை; நம்முடைய விவசாயிகளுக்கு நெல் கொள்முதலில் குவிண்டாலுக்கு 100 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை; விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம், கடனை முழுமையாக இரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை எல்லாம் இந்த வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. இந்த அரசு இதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்பதற்காக, எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கின்றோம்.

(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அதே கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான்...(குறுக்கீடு) நான் என்ன பேசி விட்டேன்? எதற்காகச் சத்தம் போடுகிறீர்கள்? நான் இனிமேல்தான் பேசப்போகிறேன். அதற்குள் 'ஆ' 'ஊ' என்று சத்தம் போட்டால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். திரு. கருப்பசாமி, நீங்கள் உட்காருங்கள். திரு. பி.ஆர். சுந்தரம், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நேற்றைக்குக்கூட, முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின்மீது பதில் அளிக்கும்போது நான் குறுக்கிட்டு "5 ஆண்டுகள் ஆகின்றன, நீங்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கொடுக்கவில்லை" என்று கூறினேன். அவர்கள் அதற்கு எதுவுமே பதில் அளிக்காமல் தற்போது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றாகச் சொன்னார். "5 ஆண்டுகள் ஆள விடுங்கள், இப்போது என்னை, ஆளை விடுங்கள்" என்று சொன்னார். அதனால் பதில் சொல்லவில்லை என்று சொல்லாதீர்கள்.



முற்பகல் 11-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்தப் பதிலை நகைச்சுவையாகத்தான் தெரிவித்தார்களே தவிர, விவசாயிகளின்மீது ஓர் எண்ணம் இல்லாமல் விவசாயிகளை வஞ்சித்துவிட்டார்கள். ஆகவே, இந்த மக்கள் விரோத அரசு, விவசாயிகளுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்பதை எடுத்துக் கூறி, எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை, கட்டுப்படியான விலையைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்தவர்களுக்கு வேளாண்மைத் துறையின் மீதும், விவசாயிகள் மீதும், தமிழகத்தினுடைய விவசாயத் துறையின்மீதும் பொதுவாகவே, விவசாயத்தின் மீதும் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது, அவர்கள் இன்றைய விவாதத்திலே கலந்துகொள்ளாமல் வெளிநடப்புச் செய்திருப்பதிலிருந்து புரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வெளிநடப்பு என்றால், முன்பெல்லாம் இந்த அவைக்குத் திரும்ப வரமாட்டார்கள். இவர்கள் ஒருவேளை தற்போது வருவார்களோ என்னவோ தெரியவில்லை, நான் சொன்ன பிறகு. (சிரிப்பு) விவசாயிகள்மீது அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 104, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 114, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1120, திரு. நா. பெரியசாமி, இருக்கையில். இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 834, திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1486, திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 369, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 443, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 214, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 714, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 846, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 949, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1147, திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 690 திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.877,26,53,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 504, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 309, திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 355, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 423, திரு. வி. அய்யலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1075, திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1107, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,000/- என விலை நிர்ணயம் செய்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.877,26,53,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 209, திரு. டி. மணி இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 978, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 663, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 930, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'to discuss the need to supply pesticide free of cost to the coconut growers in Tamil Nadu', I move--

"That the sum of Rs.877,26,53,000/- allocated under Demand No.20-Agriculture be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1017, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 602, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 439, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 729, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 802, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 645, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 167, திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை.

**(ஆ) கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 52-வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,74,21,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 843, திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 125, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 1128, திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 370, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 442, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 251, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 726, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 856, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 948, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 529, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 290, திரு. ந. கருப்பண்ண உடையார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 354, திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1054, திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 968, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 616, திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 435, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 803, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 190, திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை.

ஏற்கெனவே வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்கள் அவையில் இல்லாததால், அவர்கள் வெட்டுத் தீர்மானத்தை முன்மொழியவில்லை என்று அர்த்தம். வெட்டுத் தீர்மானம் எண் 697, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,74,21,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2797, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,74,21,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 917, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,74,21,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கங்களை அளிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே ஒரு நீண்ட பட்டியல் பேசுவதற்காக இருக்கிறது. அதிலே பலபேர் இல்லை. ஆகவே, அவர்களெல்லாம் பேசவில்லை என்ற முடிவில் இருப்பதாகக் கருதி, திரு. செ. இராமலிங்கம் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளாவிய தமிழினத்தில் ஒப்பாரும், மிக்காரும், ஈடும் இணையும் இல்லாத தலைவராகவும், தமிழினத்தின் வழிகாட்டியாகவும், இந்திய அரசியல் வானில் என்றென்றும் இடம்பெயராத் துருவ நட்சத்திரமாகவும் திகழும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு, விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டமே தனது குறிக்கோள் எனக் கருதி சிறப்பாகப் பணிபுரியும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேளாண்மை மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துகளைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழக வரலாற்றில் காவிரிக்குக் கரை கண்டு, கல்லணை கட்டி தஞ்சைத் தரணியில் செந்நெல் பொன்னாக விளைந்திட வழிவகுத்த கரிகால் பெருவளத்தானுக்குப் பின்னர், பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டு காலமாகத் தொடர்ந்து ஆறுகளிலும், கால்வாய்களிலும் தூர் வாரும் பணிகளை

@ 171 முதல் 303 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மேற்கொண்டமைக்கு எங்கள் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தூர் வாரும் பணிக்கு இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து எஞ்சியிருந்த கால்வாய்களைத் தூர் வார பணித்தமைக்கு இந்த நேரத்தில் எனது பணிவான நன்றியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

இப்பேரவையில் எத்தனையோ நிதிநிலை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், முதன்முறையாக விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களின் கருத்தினைப் பெற்று முடிவுகளை அறிவித்திருப்பது, தமிழக வரலாற்றில் நமது முதல்வர் அவர்களுக்கு நிலைத்த புகழை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண் கொள்கையை உருவாக்க, உயர்நிலைக் குழுக்கள் அமைக்கிறபோது தஞ்சை மாவட்டத்தில் அனுபவம் மிக்க விவசாய வல்லுநர்களை அதில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்பது பழமொழி. இப்போது நமது முதல்வர் அவர்கள் உழுதவன் இலாபக் கணக்குப் பார்க்க பல்வேறு உதவிகளை, திட்டங்களை, மானியங்களை வழங்கியிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். 30-6-1999-க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு 30-6-2000-க்குள் வட்டியுடன் கடனைச் செலுத்தும் சிறிய, பெரிய அனைத்து விவசாயிகளுக்கும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தமைக்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பிச் செலுத்தப்படும் நடப்புக் கடன் தொகையில் வட்டியில் கடந்த ஆண்டு 6¼ சதவீதம் ஊக்குவிப்புத் தொகை, இந்த ஆண்டு 7 சதவீதம் ஊக்குவிப்புத் தொகை என வழங்குப்படுவது; இதனால் 10 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவது என்பது வரவேற்கக்கூடிய ஒன்று.

அதுமட்டுமல்ல, கிராமப்புறங்களில் இந்த ஆண்டு மட்டும் சிமெண்ட் களம் அமைப்பதற்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள்.



காய்கறிகளை, பழங்களைச் சேமித்து வைத்து, பின்னர் விற்க குளிர்ப்பதனக் கூடங்கள் அமைக்கப்படும் என்று கொள்கைக் குறிப்பேட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. வேளாண்மை விற்பனைக் குழு மூலம் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நபார்ட் நிறுவனத்தின் மூலம் 23 மாவட்டங்களில் 44 சிறு பாசன ஏரிகளைத் தூர் வார 19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் கடந்த 4 ஆண்டு காலத்திற்கு முன்பு கரும்பு விவசாயிகள் நிலை எப்படி இருந்தது என்பதை இந்த நேரத்தில் மனசாட்சியுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். 10 மாத காலத்தில் வெட்டப்பட வேண்டிய கரும்பு, 18 மாத காலம் ஆகியும் வெட்டப்படாமல் இருந்தது. 1995 ஆம் ஆண்டில் ஆலைகள் cutting order கொடுக்காததால், சில விவசாயிகள் தாங்கள் விளைவித்த கரும்பையே தீ வைத்து கொளுத்தியிருக்கிறார்கள். வெட்டிய கரும்புக்கு ஓராண்டு காலம் வரையில் ஆலையில் பணம் பட்டுவாடா செய்யாத நிலைமையெல்லாம் இருந்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஆலைகள் முன்பு ஆர்ப்பாட்டம், சாலை மறியல் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், 1996 ஆம் ஆண்டில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4-வது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட உடனேயே கரும்பு விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றி விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்தார்கள். டன் ஒன்றுக்கு 450 ரூபாய் தான் அன்றையதினம் வழங்கப்பட்டது. ஆனால், இப்போது, டன் ஒன்றுக்கு 745 ரூபாய் வழங்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு இப்போது விதை மானியம் என்ற பெயரால் ஏக்கருக்கு 1500 ரூபாய் வழங்குகிறார்கள். அந்த விதை மானியத் தொகையைச் சற்று கூடுதலாக உயர்த்தித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் கரும்பு ஆலை அதிபர்கள் எல்லாம் S.I.S.M.A. என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு, அதன்மூலம் இப்போது கரும்பு விலையை உயர்த்திக் கொடுத்ததற்கு நீதிமன்றத்திலே தடையாணை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தடையாணையில் கோரியிருப்பது, கரும்புக்கு விலை நிர்ணயிக்கிற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லையென்கிற ஒரு வாக்குமூலத்தையே நீதிமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்று எனக்குத்

தெரியவில்லை. அதை ஆய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது தமிழக முதல்வர் அவர்கள் வேளாண்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துப் பல திட்டங்களைத் தீட்டி அவற்றை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். இப்போது, தமிழகம், அகில இந்தியாவிலே முதன்மை பெற்று, நாடே வியக்கத்தக்க நிலையில் உள்ளது. உழவர் மேம்பாடு ஒன்றே தனது குறிக்கோள் எனக் கருதும் நமது முதல்வரும், வேளாண்மைத் துறை அமைச்சரும் பல திட்டங்களை இப்போது சிறப்பாகச் செயல்படுத்தி உள்ளனர்.

நெல் உற்பத்தியை அதிகரிக்க பல புதிய ரகங்களை வெளியிட ஆராய்ச்சியாளர்களைப் பணித்திருக்கிறார்கள். அனைத்து ஆராய்ச்சி நிலையங்களிலிருந்தும் பல உயர்விளைச்சல் ரகங்களுக்கு மேலாக, வீரிய ஒட்டு ரகங்களாகிய ADT, RH1, CORH1,CORH2 போன்றவற்றை விதைத்து தஞ்சையில் ஹெக்டேர் ஒன்றுக்கு 5½ மெட்ரிக் டன்னிலிருந்து 7 மெட்ரிக் டன்னாக இப்போது உற்பத்தியை அதிகரித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

தஞ்சையில் சம்பா பட்டத்திற்குக்கூட ADT 44 என்கிற புதிய ரகம் இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. அதேபோன்று குறுவையில் ADT 43, ADT, RH1 போன்ற வீரிய ஒட்டு ரகங்களை இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். அவை ஹெக்டேருக்கு 9 முதல் 11 மெட்ரிக் டன் வரை மகசூல் தரவல்லது என்று வல்லுநர்கள் எல்லாம் கூறுகிறார்கள். இவ்வளவு சிறப்பான வீரிய ஒட்டு ரகங்களை உற்பத்தி செய்யும் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் சுமார் 60-க்கு மேற்பட்ட வேளாண்மை விஞ்ஞானிகள் பணி புரிகிறார்கள். நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளை அந்த நெல் ஆராய்ச்சி மையம் இப்போது உருவாக்கி இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், வீரிய ஒட்டு ரகங்களாகிய ADT 8, ADT 27, ADT 43, ADT 44, ADT, RH1 போன்ற வீரிய ரகங்கள் அந்த ஆராய்ச்சி நிலையத்திலேதான் உருவாக்கப்பட்டவை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப் பெருமைவாய்ந்த நெல் ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டும் என்கிற என்னுடைய நீண்டநாள் கோரிக்கையை இன்று அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே



போதுமான அளவுக்கு நிலம் இருக்கிறது. நூலகம் இருக்கிறது. கட்டட வசதிகள் இருக்கின்றன. எனவே, அரசுக்கு எந்தப் பணச் சுமையும் இல்லாமல், அங்கே வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கைச் செல்வத்தைப் பாதுகாத்தல், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்தல் என்பது உலக அளவில் இப்போது மிகவும் முக்கியமாகப் பேசப்படுகிறது. வேளாண்மையில் பயன்படுத்தும் பூச்சி மருந்துகள் 60 சதவீதம் சுற்றுச்சூழலை இப்போது பாதிக்கிறது. இந்த நிலை நீடித்தால், உயிரினங்கள் அழிவதற்கு மிக முக்கிய காரணமாக அமைந்துவிடும் என்ற அளவில் திட்டமிட்டு, உழவர் வயல்வெளிப் பள்ளிகளை உருவாக்கி, அவை உலக அளவில் இப்போது சிறப்பாகப் பேசப்படுகின்ற அளவுக்கு செயல்படுத்தப்படுகின்றன.

இப்போது நெல், பயறு, பருத்தி, நிலக்கடலை, கரும்பு ஆகிய பயிர்களில் உழவர் வயல்வெளிப் பள்ளிகளை அமைத்து அதில் இயற்கை தந்த செல்வங்களைப் பாதுகாத்து விஷமற்ற வேளாண்மையை உருவாக்கியுள்ளார்கள். இந்தத் திட்டம், இப்போது உலக வேளாண்மைக் கழகம் மற்றும் இந்திய நாட்டின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரால் மிகச் சிறப்பாகப் பாராட்டப்பட்டுள்ளது.

1995-ஆம் ஆண்டில் காவிரியில் வறட்சி ஏற்பட்டபோது 1996-97-ல் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவிரி டெல்டா பகுதிக்கு மட்டும், ஐயாயிரம் மின்சார மோட்டார் இணைப்புகளைச் சிறப்பினமாக வழங்கி, அன்றையதினம் தஞ்சை மாவட்டத்தைக் காப்பாற்றினார்கள்.

அதுமட்டுமல்லாமல், இப்போது கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு, ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 50 சதவீதம், 30 சதவீதம், 25 சதவீதம் மானியத்தில் oil engine-கள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தினால், கிராமப்புற விரசாயிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர். ரூபாய் 4,000 முதல் 8,000 வரை இந்த மானியம் வழங்கப்படுவதை நான் இந்த நேரத்தில் வரவேற்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேநேரத்தில், கிராமப்புறத்திலே இருக்கின்ற வேளாண்மைக் கிடங்குகள் மூலமாக, டிராக்டர், புல்டோசர், கதிர் அடிக்கும் இயந்திரம் ஆகியவற்றையும் சிறு விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுத்து உதவவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இயற்கை வளத்தைப் பேணிக் காத்திட, இயற்கை சார்ந்த வேளாண்மை விவசாயிகள் கடைபிடிக்கும் வகையில் இயற்கை வேளாண்மைத் திட்டத்தை நமது அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக, இரசாயன உரங்களின் உபயோகத்தைக் குறைப்பதற்காக உயிர் உரங்களின் உபயோகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பல இலட்சம் ரூபாய் செலவில் உயிர் உரங்கள் உற்பத்தியை அதிகரிக்க Bio-fertilizer உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் Azospirillum, Phospo Bacteria, Rhizhobium, நீலப் பச்சைப் பாசி மற்றும் Azolla போன்ற உயிர் உரங்களை உற்பத்தி செய்து மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதை நான் வரவேற்கிறேன்.

அதேபோன்று, பசுந்தாள் உர விதைகளையும் 50 சதவீத மானிய விலையில் வழங்குவதை நான் மனதார வரவேற்கிறேன்.

அதேபோன்று, ஒருங்கிணைந்த தானிய உற்பத்தித் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலமாக வளர்ந்துவரும் மக்கள் பெருக்கத்தைக் கணக்கிட்டு, வளரும் சமுதாயத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய, பயிரின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இந்தத் திட்டத்தைச் சிறப்பாக நமது அரசு செயல்படுத்தி வருகிறது. நெல், விதை, உரங்கள், பயிர்க் கருவிகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் ஆகிய இனங்கள் இலவசமாகவும், மானியமாகவும் வழங்கப்படுகின்றன. இதில் பல கோடி ரூபாய் செலவிடப்படுவதை நான் மனதார வரவேற்கிறேன். புதிய உத்திகளைக் கடைப்பிடிக்க இந்தத் திட்டத்தில் விவசாய நிபுணர்களால் செயல் விளக்கங்கள் விவசாயிகளின் வயல்களில் அமைத்து, அவற்றைக்கொண்டு இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-30

அதேபோன்று கோடை காலப் பயிர்களாகிய பயறு, உளுந்து, பருத்தி போன்றவற்றை இப்போது பயிர் செய்வதற்கு பருத்தி தீவிர அபிவிருத்தித் திட்டம், எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம், பயறு வகைப் பயிர்களுக்கு டி.ஏ.பி. இலை வழி உரமிடுதல், பாமாயில் சாகுபடி போன்ற திட்டங்களினால் கிராமப்புற விவசாயிகள் தங்களது மகசூலை அதிகரிக்க இடுபொருட்களை இலவசமாகவும் மானியமாகவும் பெற முடிகிறது. எனவே, இந்தத் திட்டங்களை உளமார, மனதார நான் வரவேற்று எனது உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியத்தை வரவேற்றுப் பேசுவதுடன், "நீரின்றி அமையாது உலகம்" என்பதைத் தெளிவாக அறிந்த நம்முடைய அரசு 50 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை வந்து பஞ்சம் ஏற்படுமோ என்று கருதி, முன்னெச்சரிக்கையாக நெடு நோக்கோடு பலவிதமான திட்டங்களை அமல்படுத்தி வரக்கூடிய இந்த அரசுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய நீராதாரப் பிரச்சினை, தமிழகம் 50 ஆண்டுகளுக்குப் பிறகு அதைச் சந்திக்க வேண்டி வருமோ என்று இருக்கக்கூடிய பிரச்சினை, இப்போதே வந்துவிட்ட நிலை இருக்கின்றது என்பதை அரசுக்குச் சுட்டிக்காட்ட எண்ணுகின்றேன். கன்னியாகுமரி மாவட்டம் 3 புறமும் கடலால் சூழப்பட்ட மாவட்டம். நிலத்தடிநீர் சுமார் 10, 15 கிலோமீட்டர் வரை, மாவட்டத்தினுடைய பெரும் பகுதியை கடல் தண்ணீராகிய உப்புத் தண்ணீர் ஆக்கிரமித்து விவசாயம் பெரிதும் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கிறது. அதாவது கடலோரக் கிராமங்கள் என்று மட்டுமல்ல; கடலுக்கும் மலைக்கும் சுமார் 20 கிலோமீட்டர் தூரம்தான் இருக்கின்றது; அந்த மலையடிவாரத்தில் உள்ள ஒருசில கிராமங்களைத் தவிர, மீதி அத்தனை கிராமங்களுக்கும் கடல் தண்ணீர், உப்புத் தண்ணீர் நிலத்தடி நீராக வந்துவிட்ட காரணத்தால், விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுவிட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர், நெல், தென்னை போன்ற முக்கியமான 3 பயிர்கள்தான் பயிராகின்றன. வேறு எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை; பிழைப்புக்கு வேறு வழி எதுவும் இல்லாத ஒரு மாவட்டம். இந்த மாவட்டத்தில் நிலத்தடிநீர் பல ஆண்டுகளாகவே உள்ளே புகுந்து, கடலோரக் கிராமங்களில் பெரும்பாலும் இருக்கக்கூடிய தென்னந்தோப்புகள் அனைத்தும் அழியக்கூடிய நிலை இருக்கின்றது; அதாவது எந்தத் தென்னையைப் பார்த்தாலும், அதன் தலையில் எதுவுமே இல்லாத அளவுக்கு, சில ஓலைகளை மட்டும் வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கின்றது. ஆக தென்னந்தோப்புகள் முழுக்க முழுக்க அழியக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளன. ஆனால், பருவமழை மற்ற மாவட்டங்களைவிட ஓரளவுக்குத் தவறாமல் பெய்கின்றது. தென்மேற்குப் பருவக் காற்று, வடகிழக்குப் பருவக் காற்று இவற்றின் மூலம் ஓரளவுக்கு சாதாரணமாக மழை கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த மழைநீர் நிலத்திற்குள்ளே செல்லக்கூடிய

வாய்ப்புகள் இல்லை. அதேபோன்று தேக்கி வைக்கக்கூடிய வாய்ப்புகள் குறைந்த காரணத்தால்—அவ்வளவு நீரும் 20 கிலோமீட்டர்தான் மலைக்கும் கடலுக்கும் தூரம் இருக்கின்றது என்பது மட்டுமல்ல படிப்படியாக பள்ளமாக உள்ள மாவட்டம்; எனவே, மழை நின்று ஒருசில மணிகளில், ஒரு நாளிலேயே—அவ்வளவு தண்ணீரும் கடலுக்கு சென்றுவிடக்கூடிய அபாய நிலை ஏற்படுகின்றது. குழித்தலையாறு, தூவலாறு, வள்ளியாறு, பாலாறு மேலும் இதுபோன்ற பல சின்னச் சின்ன ஆறுகள் மூலம் அவ்வளவு தண்ணீரும் கடலுக்கு வந்து சேர்ந்துவிடுகிறது. எனவே, அப்படிக் கடலுக்குள் வந்து சேரக்கூடிய தண்ணீரை நிலத்திற்குள் சேமிக்கக்கூடிய வகையில் அல்லது கடல் தண்ணீர் பூமிக்குள் ஊடுருவாமல் இருப்பதற்காக வேலுத்தம்பி தளவாய் அவர்கள் 1886 ஆம் ஆண்டு முதல் 1901 ஆம் ஆண்டுக்குள் ஏ.வி.எம். கால்வாய், அனந்தன் விக்டோரியா மார்தாண்டவர்மா கால்வாய் என்று சொல்லக்கூடிய ஒரு கால்வாயை வெட்டுவதற்காக திட்டமிட்டு, அது பூவாறிலிருந்து ஆரம்பித்து, தேங்காய்ப்பட்டணம் வரையிலும், கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் தேங்காய்ப்பட்டணத்திலிருந்து மண்டைக்காடு வரையிலும் ஓரளவுக்கு நல்லபடியாக வெட்டப்பட்டது. மழைநீர் இந்த வாய்க்கால் வழியாக வரும்போது, கடலுக்குள் இருக்கக்கூடிய உப்புநீர் கரைக்கு வராமல் இருக்கவும், பூமிக்கு அடியில் உள்ள நிலத்தடிநீர் உயருவதற்கும் அது வாய்ப்பாக இருந்தது. ஆனால், சமீப காலமாக அங்கே சற்று ஆக்கிரமிக்கப்பட்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்குள் பல பகுதிகளில் இந்த ஏ.வி.எம். கால்வாய் ஒரு மேடாக மாறி, துர்நாற்றம் வீசக்கூடிய, கொசுக்கள் வாழக்கூடிய நிலையில் மக்களுக்கு நோய் ஏற்படக்கூடிய வகையில் அது மாறி இருக்கின்றது. எனவே இந்த ஏ.வி.எம். கால்வாய்க்கு அரசு சிறிது நிதியொதுக்கி பழையபடி அதை மண்டைக்காடு வரையில் கொண்டு வந்து அந்தப் பகுதிகளில் மட்டுமாவது நிலத்தடி நீரை நல்ல முறையில் பாதுகாக்க ஆவன செய்ய வேண்டும். இப்படி செய்தால் உப்புத் தண்ணீரும் உள்ளே வராமல் பார்த்துக்கொள்ள முடியும். உண்மையிலேயே இந்தத் திட்டம் கன்னியாகுமரி வரையில் கொண்டு வருவதாகத்தான் அமைந்திருந்தது. கன்னியாகுமரி வரை வந்துவிட்டால், கன்னியாகுமரி மாவட்டம் முழுக்க அதாவது கடல் தண்ணீர் பூமிக்குள் வராமல் இருக்கவும், மழைத் தண்ணீரை நிரந்தரமாக அங்கே பாதுகாக்கக்கூடிய காரணத்தால் நிலத்தடி நீர் உப்புத் தண்ணீர் என்ற நிலையிலிருந்து மாறி நல்ல தண்ணீராக வருவதற்குமான வாய்ப்பிருக்கும். இதற்கு பெரிய செலவானாலும்கூட அரசாங்கம் அதைப் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும்.



முற்பகல் 11-35

கூடங்குளத்தில் சுமார் 1400 கோடி ரூபாய் செலவில் அணு மின்நிலையம் அமைத்துத் தருவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து தருகிறது. அதற்குக்கூட, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணையிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லக்கூடாது, காரணம் இந்த இரண்டு அணைகளும் விவசாயத்திற்காக ஏற்படுத்தப்பட்டன என்ற ஒரு எதிர்ப்பு அங்கேயுள்ள விவசாயிகள் மத்தியில் இருக்கிறது. எனவே இந்த ஏ.வி.எம். கால்வாயை நீங்கள் கூடங்குளம் வரையில் கொண்டு சென்றால் இந்த மின் திட்டத்திற்கும் உபயோகமாக அமையும்; திருநெல்வேலி மாவட்டத்திற்கும்கூட பயன் உண்டாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்யக்கூடிய மழைத் தண்ணீர் இந்தக் கால்வாய் மூலம் கூடங்குளத்திற்குக் கொண்டு செல்லும்போது இந்த நிலத்தடி நீர் சராசரியாக கன்னியாகுமரி மாவட்டத்தைப் போன்று திருநெல்வேலி மாவட்டத்தின் ஒரு பகுதியிலும்கூட உயர்ந்து குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். இந்தத் திட்டத்தினை நிறைவேற்றும்போது வேளாண்மைத் துறைக்கு மட்டுமல்ல, சுற்றுலாத் துறைக்கும் பயன் ஏற்படும்; இந்தக் கால்வாயிலே படகுப் போக்குவரத்து போன்ற வசதிகளைச் செய்யலாம்; கன்னியாகுமரி மாவட்டத்தின் குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் நல்ல குடிநீர் கிடைக்க வாய்ப்பிருக்கும். எனவே அரசு இத்திட்டத்தினை வெகு விரைவில் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

கழிந்த நிதியாண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில், மாம்பழத்தணை திட்டத்திற்காக 10½ கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். அதை விரைவில் செயல்படுத்தினால் இந்த நிலத்தடி நீர் ஓரளவிற்கு உப்புத் தண்ணீரிலிருந்து மாறுவதற்கு வாய்ப்பாக அமையும். இதைப்போன்றுதான் சென்னையில்கூட, பக்கிங்காம் கால்வாயை கடலோரப் பகுதிகளில் அமைத்து, மழைக் காலங்களில் நல்ல தண்ணீரை இந்தக் கால்வாயில் செலுத்தும்போது, கடல் நீர் உள்ளே வராமல் இருக்க ஏதுவாக அமையும் என்று கருதி ..... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பக்கிங்காம் கால்வாய்.

**திரு. சி. வேலாயுதன்:** சென்னையிலே கடல் நீர் உள்ளே புகாமல் இருக்க பக்கிங்காம் கால்வாயில் இப்படி ஒரு ஏற்பாடு செய்வதாகச் சொல்கிறார்கள். இதையும்கூட அரசாங்கம் கவனத்தில் கொண்டு

பக்கிங்காம் கால்வாயைத் தூர் எடுத்து நல்ல தண்ணீர் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்தால் சென்னை நகரம்கூட உப்புத் தண்ணீரிலிருந்து மாறுவதற்கு உண்டான வாய்ப்புகள் ஏற்படும்.

அடுத்து வேளாண்மைப் பொறியியல் துறை. உண்மையிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தைப் போன்றுதான் மற்ற மாவட்டங்களிலேயும் இருக்கும் என்று கருதுகிறேன். மானாவாரிக் குளம் என்று சொல்கின்றார்கள். இந்த மானாவாரிக் குளம் என்பது பொதுப் பணித் துறை பராமரிப்பிற்குள் வராத குளம்; அணைத் தண்ணீர் பொதுப் பணித் துறை வாய்க்கால் மூலம் வராத குளம். மழைக் காலங்களில் மட்டும் இவற்றில் தண்ணீர் சேகரிக்கப்பட்டு அந்தப் பகுதியில் விவசாயிகளுக்கு மட்டுமல்லாது அந்தப் பகுதி மக்களுக்கு நிலத்தடி நீர் உயர்ந்து நிலத்தடி நீர் செழிப்பாக இருந்தது. இப்போது அந்த மானாவாரி குளங்களைப் பொதுப் பணித் துறையினர் எங்களுடைய குளங்கள் அல்ல என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகையினால் அவர்கள் அதைப் பராமரிக்கத் தயாராக இல்லை. வேளாண்மைத் துறையை அணுகினால் அவர்களும் எங்களுடைய குளங்கள் அல்ல என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் இவற்றைக் கவனிக்கச் சொன்னால் மிகப் பயனுள்ளதாக அமையும். இப்போது வேளாண்மைப் பொறியியல் துறை செய்யக்கூடிய பணி, குளத்திலிருந்து வாய்க்கால் மூலம் வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சக்கூடிய அந்த வாய்க்காலை அவர்கள் செப்பனிடுகிறார்கள். உண்மையிலே அனுபவரீதியாக விவசாயிகளுக்கு அது பயனுள்ளதாக அமையவில்லை. காரணம் ஒவ்வொரு வயலிற்கும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு பாமடை என்று சொல்வார்கள்; தண்ணீர் பாயக்கூடிய இடம் இதற்குத் தேவை. நிலம் விளைந்ததற்குப் பிறகு அல்லது நாற்றங்கால் அமைத்ததற்குப் பிறகு நிலத்திலுள்ள தண்ணீரை வடிய வைப்பதற்கு இன்னொரு இடத்தில் உடைக்க வேண்டியிருக்கிறது. ஆக அந்த கல்லுக்கட்டை விவசாயிகள் ஒருசில இடங்களில் தன்னுடைய அனுபவரீதியான தேவைக்காக உடைக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது என்பது மட்டுமல்ல, அவர்களுக்குத் தேவையான அளவிற்கு சில காலகட்டங்களில் விவசாயிகளே இந்தக் கால்வாய்களைச் செப்பனிட்டுவிடுகிறார்கள். ஆகவே விவசாயிகள் தங்களுடைய வயலிற்குத் தண்ணீர் பாயக்கூடிய வாய்க்காலைச் செப்பனிட வேண்டும் என்ற பழக்கங்கள்கூட மாறிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

இரண்டாவது, அவர்களுக்குத் தேவையான அளவிற்கு ஆங்காங்கே இருக்கக்கூடிய வாய்க்காலை முறிக்கக்கூடிய காரணத்தால் அந்த வேலை



அவ்வளவு பயனுள்ளதாக அமையவில்லை. எனவே வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் யாருக்கும் பயனில்லாமல் இருக்கக்கூடிய இந்த மானாவாரிக் குளங்களைச் செப்பனிட்டால் மீண்டும் நிலத்தடி நீர் பெருகுவதோடு மட்டுமல்லாமல் விவசாயிகளுக்குப் பயனுள்ளதாகவும் அமையும். இந்த மானாவாரிக் குளங்களை நாம் செப்பனிடாமல் போனால் பக்கத்தில் உள்ளவர்கள் ஆக்கிரமித்து விடுகிறார்கள். ஐந்தாறு ஆண்டுகள் ஆன பின்னால் அங்கு குளங்களே இல்லாமல் போய்விடுகின்ற நிலை ஏற்படுகிறது. எனவே 50 ஆண்டுகளுக்குப் பிறகு தொலைநோக்கோடு, குடிநீர் பாதிக்கப்படும், நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என்று நினைக்கும் இந்த அரசாங்கம் மானாவாரிக் குளங்களை வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செப்பனிட ஆரம்பித்தால் மழைக் காலங்களில் அந்தக் குளங்களிலே நீர் பெருகுவதோடு விவசாயத்திற்கு மட்டுமல்லாமல் நிலத்தடி நீரையும் பாதுகாக்க உதவும்.

முற்பகல் 11-40

இன்னொன்று, இந்த வேளாண்மைப் பொறியியல் துறை, குளத்திலிருந்து வரக்கூடிய தண்ணீரைக் கொண்டு செல்வதற்காக முயற்சிக்கிறது. அதேவேளையில் சேனலிலிருந்து குளத்திற்கு வரக்கூடிய வாய்க்கால்கள் இருக்கின்றன. அந்த வாய்க்கால்கள் P.W.D-க்குச் சொந்தமானதல்ல என்று சொல்கிறார்கள். அதனால் அவற்றை அவர்கள் செப்பனிடுவது இல்லை. அந்தத் துறையிடம் கேட்டால் அதை நாங்கள் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். குறைந்தபட்சம் இந்தச் சேனலிலிருந்து குளத்திற்கு வரக்கூடிய வாய்க்கால்களைச் செப்பனிட்டால்கூட அது பயனுள்ளதாக அமையும். அப்படிச் செய்தால், விவசாயிகள் அங்கு குறுக்கிட்டு அதை முறிப்பதற்குண்டான அந்த வேலையில் இறங்க மாட்டார்கள். எனவே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக P.W.D. சேனலிலிருந்து குளத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய வாய்க்கால்களைப் பராமரித்தால் பயன் உள்ளதாக அமையும். அதோடு மானாவாரிக் குளங்களைப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று விவசாயிகள் இடுபொருட்கள் குறித்து ஒருசிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு சிறு விவசாயி. என்னைப் பொறுத்தமட்டில், இரசாயன உரங்கள் - எல்லாம் போட்டு போட்டு நிலத்தினுடைய தன்மை ஓரளவுக்குக் கெட்டுவிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது விவசாயத் துறைகூட வேப்பம் புண்ணாக்கு போன்ற இயற்கை உரங்களை அதிகமாகப்

பயன்படுத்தினால் நல்லது என்று சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்கள். எனவே, இரசாயன உரங்களை எந்தளவுக்கு குறைத்துப் பயன்படுத்த முடியுமோ அந்தளவுக்கு குறைத்து பயன்படுத்த விவசாயிகளை அறிவுறுத்துவதோடு இயற்கை உரங்களை அதிகமாகப் பயன்படுத்த அறிவுறுத்தினால் மேலும் நிலத்தினுடைய நோய் எதிர்ப்புத் தன்மையைப் பாதுகாக்க வாய்ப்பாக அமையும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலே, தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி, அரசுக்குச் சொந்தமான கிட்டத்தட்ட 110 ஏக்கர் பரப்பில் உதயகிரி கோட்டை என்ற ஒரு கோட்டை இருக்கிறது. இதுபோன்று எங்குமே, தேசிய நெடுஞ்சாலையினுடைய பக்கத்தில் இவ்வளவு பெரிய இடம் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இருக்காது. அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்கத்தினுடைய கல்லூரி ஒன்றுகூட இதுவரையில் கிடையாது. எனவே இவ்வளவு வசதியான ஒரு இடம், தண்ணீர் செழிப்பு உள்ள ஒரு இடம் இருக்கிற இந்த உதயகிரி கோட்டையில் வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

அதோடு விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான அதாவது நட்டம் இல்லாமல் இலாபம் கிடைக்கக்கூடிய வகையிலே விலையை நிர்ணயிக்க அல்லது விலையை அதிகப்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு, வந்தே மாதரம், வந்தே மாதரம், பாரத் மாதா கி ஜே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காலையில் வெளிநடப்புச் செய்துவிட்ட உறுப்பினர்கள் எல்லாம் மீண்டும் வந்து பேசுவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களும் பெருந்தன்மையோடு அனுமதி அளித்திருக்கிறார்கள். ஆனால் எனக்குள்ள பிரச்சினை எல்லோருக்கும் நேரத்தை ஒதுக்கிக் கொடுப்பதுதான். எனவே, குறிப்பிட்ட நேரத்திற்குள் உறுப்பினர்கள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் 7 நிமிடங்கள் ஒதுக்கித் தருகிறேன். (குறுக்கீடுகள்)



**திரு. கே. சுப்பராயன்:** Point of Order. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்துவிட்டு உள்ளே வந்தால் பேச அனுமதியில்லை என்பது எந்த விதியில் உள்ளது. (குறுக்கீடு) பெருந்தன்மையோடு அனுமதிக்கப்பட்டார்கள் என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் குறிப்பிட்டது அப்படி அல்ல.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள்தான் இப்போது குறிப்பிட்டீர்கள். வெளிநடப்பு செய்தவர்களுக்கு பேச பெருந்தன்மையோடு Speaker அனுமதித்திருக்கிறார் என்று. இது விதிப்படி எங்கள் உரிமையே தவிர, பெருந்தன்மை சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில் நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்டுவிட்டு பிறகு பேசினால் பரவாயில்லை. முதலில் பெயர் கொடுத்தவர் திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், அவர்களைக் கூப்பிடும்போது அவர் இல்லை, இப்போது அவருக்கு வாய்ப்புத் தருகிறோம். அதனால்தான் நான் அப்படிச் சொன்னேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** வெளிநடப்புச் செய்தவர்கள் வரக்கூடாது என்று விதி இல்லை, வரலாம். நாங்கள் ஏதோ செய்யக் கூடாததைச் செய்துவிட்டதுபோல....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்தவர்களுக்குப் பேசுவதற்கு உரிமையில்லை என்று யாரும் இங்கே சொல்லவில்லை. எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. தாராளமாகப் பேசலாம். இருக்கின்ற பிரச்சினை வெளியே சென்றவர்கள் வரமாட்டார்களோ என்று எண்ணி, முதலில் பேசியவர்களுக்கு 10 நிமிடங்கள் ஒதுக்கிவிட்டார்கள். அடுத்து பேச வருகின்றவர்களுக்கு நேரம் இருக்காது. ஆகவே, 7 நிமிடங்களுக்குள் பேசுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார்கள். எனவே, தயவுசெய்து அவையோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட விவசாயிகள் குறித்த முக்கியமான பிரச்சினையில் அக்கறை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்ட வேண்டும் என்பதற்காக நேரத்தை அதிகமாகக் கொடுங்கள், நிச்சயமாக எதிர்க்கட்சிகள் அதிகமாகப் பேசுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உங்கள் அக்கறையை 7 நிமிடத்தில்கூடக் காட்டலாம். திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையிலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியோடு நன்றியைத் தெரிவித்து எனக்குத் தெரிந்த சில கருத்துகளை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன். குறிப்பாக வேளாண்மைத் துறையின் கொள்கைக் குறிப்பிலே

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்ற குறளைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 2000 ஆண்டுகளுக்கு முன்பு அய்யன் திருவள்ளுவர் அவர்கள் கூறிய கூற்று உண்மையாக இருந்தாலும்கூட இன்று இருக்கக்கூடிய கூற்றின்படி, அத்தனை அதிகாரிகள், அலுவலர்கள், அரசியல்வாதிகள் மத்தியில் உழவர்கள், விவசாயிகள் கூனிக்குறுகி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலகட்டத்தில் நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய வேளாண்மைத் துறைக்கு முழுமையாக அரசு பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலாக, உழவர்களுடைய வளர்ச்சிக்கு அடிகோலாக உதவ வேண்டுமென்ற எண்ணத்தில் ஒருசில கருத்துகளை இங்கே அவைமுன் வைக்க விரும்புகின்றேன். குறிப்பாக மாண்புமிகு முதல்வரவர்கள் நிதிநிலை அறிக்கையிலே பாதை வரியை நீக்கியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல ஈரோடு மாவட்டத்திலே ரூ. 30 கோடி அளவிலே மஞ்சள் வணிக வளாகம் பெருந்துறையிலே அமைத்துக் கொடுத்தல்; அரசினுடைய அனுமதி



இல்லாமல் ஜப்தி நடவடிக்கை இனி எதிர்காலத்தில் இருக்காது என்ற விவரம்; பவானியினுடைய ஜமக்காளத்திற்கு வணிகச் சின்னம் ஏற்படுவதற்கு உண்டான முயற்சி, இவையனைத்திற்கும் என் சார்பாக, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்ததாக, வேளாண்மைத் துறைக்கு என்று ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே கூறினார்கள். என்னைப் பொறுத்தவரையில், 60 ஆண்டுகளுக்கு மேலாக பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பொதுமக்களுடைய வாழ்க்கையிலே, வேளாண்மைத் துறையிலே என்னென்ன வேண்டும், விவசாயிகளுடைய கோரிக்கை என்னென்ன என்பது எல்லாம் தெள்ளத் தெளிவாகத் தெரியும். தெள்ளத் தெளிவாகத் தெரிந்த வகையிலே, எப்படியெல்லாம் பாதை வரியை நீக்ினார்களோ அதுபோல ஒருசில முக்கியமான கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டும். பயிர்வாரியாகத் தீர்வை விதிக்காமல் ஏக்கர் அடிப்படையில் தீர்வை விதிக்க வேண்டுமென்று நீண்டநாட்களாக அத்தனை விவசாயச் சங்கங்களும் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் இதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் என்று தெரியவில்லை; எனவே, இந்த விவாதத்தின் பதிலுரையிலே ஏக்கர் அடிப்படையிலேதான் தீர்வை வசூல் நடக்கும் என்ற நிலையைக் கண்டிப்பாக அறிவிக்க வேண்டும் என்று முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்யக்கூடிய தகுதியில்லாத சூழ்நிலை இருக்கிறது. குண்டூசி, பிளேடு உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையிலே அவர்களே விலை நிர்ணயம் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நாட்டினுடைய பொருளாதாரத்திலே அடித்தளமாக இருக்கக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயத் தொழிலை ஒரு தொழிலாக மத்திய, மாநில அரசுகள் எப்போது ஏற்றுக்கொள்கிறதோ, அப்போதுதான் விவசாயிகள் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். கண்டிப்பாக, விவசாயத்தைத் தொழிலாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை வரவேண்டும்.

மஞ்சளுக்கு அடிப்படையாக ரூ. 2,000, நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு குறைந்தபட்சம் ரூ. 650, அதேபோல பருத்திக்குக் குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ரூ. 4,000 இவற்றையெல்லாம் கண்டிப்பாகக் கொண்டு வந்தாக வேண்டும். உயர் மட்டக் குழு அமைத்தது என்பதே எப்படியாவது காலம் தாழ்த்துவதற்காக, கோரிக்கைகளை ஒத்திப் போடுவதற்காகச் செய்யக்கூடிய காரியம் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இந்த Commission அமைப்பது, குழு அமைப்பது என்பதெல்லாம் காலத்தைத் தாழ்த்தி, தாழ்த்தி ஒத்திப் போடுவதேயொழிய வேறு ஒன்றும் அல்ல. உடனடியாகச் செய்வதாக இருந்தால் இந்தக் கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளுடைய கோரிக்கைகளைக் கண்டிப்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் எல்லாம் கோவை மாவட்டத்திலே, ஈரோடு மாவட்டத்திலே, திருப்பூர், பல்லடம் போன்ற பகுதிகளிலே பருத்தி பூத்துக் குலுங்கும். சாலைகளில் செல்லுகின்ற நேரத்திலே அத்தனை பகுதிகளிலேயும் சிறப்பான முறையில் பருத்தி விளைந்து இருப்பதைப் பார்க்க முடியும். ஆனால் இன்று பார்க்கின்றபோது எங்கேயும் பருத்தி இல்லை. காரணம் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்காத காரணத்தாலே பருத்தியைப் பயிரிடுவது இல்லை. இந்தியாவில் இருக்கக்கூடிய நூற்பாலைகளில் 50 சதவீதத்திற்கும் மேலானவை தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே 12 சதவீதத்திற்கு மேலாக, நமது தமிழகத்தில் உற்பத்தியாகக்கூடிய பருத்தியை இங்கே இருக்கக்கூடிய நூற்பாலைகளுக்குக் கொடுக்க முடியாத சூழ்நிலையிலே, குஜராத்தில் இருந்தும், மகாராஷ்டிரத்தில் இருந்தும், ஆந்திராவில் இருந்தும் இறக்குமதி செய்யக்கூடிய ஒரு கேவலமான நிலையை நாம் பார்க்கின்றோம். விலையைக் கூடுதலாக நிர்ணயம் செய்தீர்களேயானால் — தமிழக விவசாயிகளைவிட யாரும் கடினமாக உழைக்கக்கூடிய விவசாயிகள் எங்கேயும் இருக்க முடியாது என்பதை உணர்ந்து — கண்டிப்பாக எதிர்காலத்திலே 50 சதவீதத்திற்கும் மேலாக நூற்பாலைகள் இருக்கக்கூடிய தமிழகத்தில் விவசாயிகள் பருத்தியை அதிகமான அளவிலே உற்பத்தி செய்வார்கள். என்வே பருத்தியின் விலையைக் குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ரூ.4,000 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அது மாத்திரமல்ல, தொழில்நுட்பங்களை ஆராய்வதற்காக மத்திய அரசின் மூலமாக ரூ. 40 கோடி ஒதுக்குவதாகச் சொல்லி இருக்கிறீர்கள். இன்று தினமணி பத்திரிகையிலேகூட தொழில்நுட்பத்திலே வேளாண்மைத் துறையிலே உலக நாடுகளிலே, இந்திய நாடுதான் முதன்மையாக இருக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்றும், அந்த நிலையில் இருந்தாலும்கூட அடித்தளத்து விவசாயிகளுக்கு முழுமையாக அவை சென்று அடைவதில்லை என்றும், மூன்றிலே ஒரு பங்குகூட அறிவியலும் தொழில்நுட்பமும் சென்று அடைவதில்லை , என்றும் இன்று தலையங்கத்திலே எழுதியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் கீழ் நிலையில் இருப்பதற்குக் காரணம், முழுமையாக அரசு பொறுப்பேற்று விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கக்கூடிய அந்தத் தொழில்நுட்பங்கள் அடித்தளத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்குச் சென்று அடையக்கூடிய சூழ்நிலையை உருவாக்காதது தான். அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

இங்கே இருக்கக்கூடிய தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தோழமைக் கட்சியாக இருக்கக்கூடிய மத்திய அரசு, வேளாண்மைக்காக, இங்கே இருக்கக்கூடிய அணைக்கட்டுகளுக்காக, பாசன வசதிகளுக்காக — திட்ட ஒதுக்கீட்டிலே 3 இலட்சத்து 34 ஆயிரத்து 786 கோடி ரூபாயை ஒதுக்கியதிலே — 11,988 கோடி ரூபாயைத்தான் ஒதுக்கியிருக்கிறது. இது மிக மிக குறைந்த ஒதுக்கீடு என்பதை உணர்ந்து — (மணியடிக்கப்பெற்றது) நான்கு நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன — இங்கே ஆளுகின்ற அரசு, மத்திய அரசிடம் வாதாட வேண்டும். உள்ளாட்சித் துறைக்குக்கூட அதேபோல 9761 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் தினமணியிலே தெள்ளத் தெளிவாகப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசிடம் வாதாடி, போராடி அதிகமான நிதியைப் பெற்று, வேளாண்மை வளர்ச்சியை, ஊரக வளர்ச்சியைச் செயற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, தென்னையினுடைய பிரச்சினை. தென்னையில் சிவப்பு சிலந்திப் பூச்சிகள் — Eriophyid — ஏற்படுத்தும் கடுமையான நோயினாலே தென்னை எல்லாம் அழிந்த பிறகு ஆராய்ச்சி செய்து, கண்டுபிடித்து மருந்து தெளிப்பதிலே எந்தவிதமான பயனும் இல்லாமல்

போய்விடும். தென்னையைப் பொறுத்தவரை 7 வருடம், 9 வருடம் ஆகின்றது பயனுக்கு வருவதற்கு. ஈரோடு மாவட்டத்திலே, கோவை மாவட்டத்திலே அதிகபட்சமாக நோய்வாய்ப்பட்டு தென்னை மரங்கள் எல்லாம் விழுந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பல்கலைக்கழகத்திலே ஆராய்ச்சி செய்கின்றார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் உரையில் சொல்லலாம். அதையெல்லாம் ஏற்றுக்கொள்வதற்கு விவசாயிகள் தயாராக இல்லை. எனவே, உடனடியாகக் கண்டுபிடித்து ஏற்பாடு செய்ய வேண்டும். Monocrotophas 1.5 மில்லியையும், தண்ணீரையும் ஒன்றாகக் கலந்து போடலாம், மாதா மாதம் போடலாம் என்றெல்லாம் கூறியிருக்கிறீர்கள். அது எந்த விவசாயிக்கும் கண்டிப்பாகக் கட்டுப்படியாகாது. செலவு ஒரு மரத்திற்கு 10 ரூபாய்க்கு மேல் ஆகும். ஆகவே, அரசு உடனடியாக மருந்தைக் கண்டுபிடித்து, தென்னை நோயை முழுமையாக நீக்குவதற்கு போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்ததாக, இங்கே எல்லோரும் பேசி கொண்டிருக்கின்ற கரும்பு பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. காரணம், கரும்புக்கு, டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக இங்கே அரசு அறிவித்த சூழ்நிலையிலே, ஏன் கொடுக்கவில்லை என்று எல்லோரும் கேட்கக்கூடிய இந்த காலகட்டத்தில் ஒரு சில கருத்துகளை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன். மற்ற மாநிலங்களிலே எல்லாம் 10 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரை purchase tax அதாவது கொள்முதல் வரி இருக்கிறது. ஆனால், இங்கே தமிழகத்தில் 75 ரூபாய், அந்தக் கொள்முதல் வரியிலே 25 ரூபாயை எடுத்துக்கொண்டு 50 ரூபாயை விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். அதுமாத்திரம் அல்ல, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூலமாக, பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் மூலமாக, அரவை செய்யக்கூடிய, சுமார் 60-லிருந்து 65 இலட்சம் டன் சர்க்கரைக்கு இங்கே இருக்கக்கூடிய மாநில அரசின் மூலமாக நூற்றுக்கணக்கான கோடி ரூபாயை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்திருக்கிறீர்கள். இன்று தனியார் துறையிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளில் நாங்கள் சென்று கேட்கின்றபோது "எங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை, எங்களால் செலுத்த முடியவில்லை; இலட்சக்கணக்கான மூடைகள் ஸ்டாக்கில் இருக்கின்றன, நிதி ஆதாரத்தைப் பொறுத்தவரையில், வங்கிகள் எல்லாம் எங்களுக்கு தேவையான அளவுக்கு நிதியைக் கொடுப்பதில்லை. ஆகவே, அரசே எங்களுக்கெல்லாம் குறைந்த வட்டியிலே கடனைக் கொடுப்பதற்கு



ஆவன செய்வார்களானால் கண்டிப்பாக நாங்களும் கொடுக்கிறோம்" என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அடுத்த வாரத்திலே ஆலை அதிபர்களை எல்லாம் சந்தித்துப் பேசுகின்றபோது, எப்படியெல்லாம், கூட்டுறவுத் துறையிலே, பொதுத் துறையிலே இருக்கக்கூடிய ஆலைகளைப் பொறுத்தவரை பணம் கொடுக்கின்றீர்களோ, அந்த அளவுக்கு தனியார் ஆலைகளுக்கும் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஆவன செய்ய வேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும். ஆலைகள் இருந்தால்தான் விவசாயிகள் சிறப்பாக இருக்க முடியும். கூட்டுறவு ஆலைகளாக இருந்தாலும், தனியார் ஆலைகளாக இருந்தாலும், அவற்றை ஒழுங்காக வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு அரசினுடைய பொறுப்பாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இவையெல்லாம் தெள்ளத் தெளிவாகத் தெரியும். எனவே, இதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலும் கண்டிப்பாக குளிர்சாதன வளாகத்தை அமைத்தாக வேண்டும். அப்போதுதான் பூக்களையும், பழங்களையும் நாம் சேமிக்க முடியும். எங்கள் ஊரிலிருந்து 5 மணிக்கு பூ சென்றால் ஒரு கிலோ 70 ரூபாய், அதுவே 8 மணிக்குச் சென்றால் ஒரு கிலோ 10 ரூபாய் என்பதெல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, குளிர்சாதன வளாகம் இருந்தால் பழங்களையும், பூக்களையும் ஒரே இடத்தில் வைக்க முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு தாம்பரத்திற்கு அருகில், பூ வளாகம் அமைத்து, விற்பனை வளாகத்தை ஏற்படுத்தி, குளிர்சாதன வளாகம் ஏற்படுத்திக் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால், இப்போதுதான் 30 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, பொதுப் பணித் துறையின் மூலம் வேலை நடப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

அதேபோல, இஸ்ரேல் நாட்டுக்கு வி.சி. குழந்தைசாமி போன்றவர்களை எல்லாம் அனுப்பினோம். சோமநாதன் போன்றவர்கள் எல்லாம் சென்றார்கள். அவர்கள் கொடுத்த அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை உடனடியாக அமல்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் இப்போதுதான், இராமநாதபுரத்திலே, சிவகங்கையிலே, செயல்படுத்த திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம் என்று கூறியிருக்கின்றார்கள். இந்த நிலையை எல்லாம் போக்குவதற்கு எதிர்காலத்திலே முழுமையாகச் செயல்பட வேண்டும்.

குறிப்பாக, ஈரோடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய அத்திக்கடவு-அவினாசி திட்டத்தைக் கண்டிப்பாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தையும்....

**மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

முற்பகல் 11-55

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வேளாண்மைத் துறைக்கான மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வேளாண்மைத் துறை தொடர்பாக மிக விரிவான கருத்துகளைத் தெரிவிக்க முடியும் என்றாலும், தாங்கள் வழங்கியிருக்கின்ற நேரம் என்பது மிக மிகக் குறைவானது. எனவே, சில பிரச்சினைகளை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். நான் பிரச்சினைகளைத் தொடங்குவதற்கு முன்பு, இந்த அரசு வேளாண்மைத் துறைக்கு ஒன்றுமே செய்யவில்லை என்ற அர்த்தத்தில் என்னுடைய கருத்துகளை முன்வைக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

பெருந்துறையிலே மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அமைக்கப்பட்டிருக்கிற அந்த மஞ்சள் வணிக வளாகத்தில், முழுமையான அளவிற்கு மஞ்சள் விற்பனை நடைபெறுவதற்கு, தனியார் ஆதிக்கத்திலே இருக்கின்ற அந்தச் சந்தையை முறைப்படுத்துவதற்கு, பெருந்துறை மஞ்சள் வணிக வளாகத்திலேயேதான் விற்பனை நடைபெற வேண்டுமென்ற ஒரு உறுதித் தன்மையை அரசு காட்ட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல, வேளாண்மைக் கொள்கை ஒன்றை உருவாக்கவும், அந்தக் கொள்கையின் செயலாக்கத்தைக் கண்காணிக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலேயே உயர் மட்டக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஆனால், அந்த உயர் மட்டக் குழுவிலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், அல்லது வருவாய்த் துறையையும் இணைக்க வேண்டிய அவசியம் இருப்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.



அதுபோல, இடைப்பட்ட காலத்திலே விற்பனைத் துறையினுடைய நடவடிக்கையை மேம்படுத்துவதற்காக, வணிகர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஆய்வு செய்வதற்காக ஓர் உயர்மட்டக் குழு அமைத்து, அதிலே வேளாண்மைத் துறைச் செயலாளரும், வேளாண் விற்பனைத் துறை ஆணையரும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு பல தீர்வுகளுக்கு வழிகண்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன். இது மட்டுமே போதுமானது அல்ல.

இரண்டு நாட்களுக்கு முன்பாக, கடந்த 3 ஆம் தேதி, இதே அவையிலே, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் கடுமையான குடிதண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்ட நிலைமையை ஒரு கவன ஈர்ப்பின் மூலமாக நாம் விவாதித்துக் கொண்டிருந்தோம். அப்படி, கடுமையான குடிதண்ணீர்ப் பஞ்சம் நிலவிய அந்த மாவட்டங்களில் சாகுபடி என்பது எப்படி நடந்திருக்கும் என்பதை இந்த அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால், அந்த மாவட்டத்தில், கடந்த 31-3-2000 அன்று இரண்டு சிறு விவசாயிகளுடைய வீட்டிலே ஜப்தி நடைபெற்றிருக்கிறது. அவர்கள் வாங்கியிருக்கிற கடனோ 5,500 ரூபாய்தான். வெள்ளியம்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஜப்தி நடவடிக்கையில் ஈடுபட்டு, எம். முருகேசன் என்கிற அந்த விவசாயி வீட்டிலிருந்து ஜப்திப் பொருட்களை எடுத்துவந்தபோது, டி.வி.எஸ்.50 என்கிற வாகனத்திற்கு வெறும் ரூபாய் 300 என விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஒரு டி.வி.க்கு — நெல்கோ டி.வி. — வெறும் ரூபாய் 200 நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இன்னொரு விவசாயியான இராமன் என்பவருடைய வீட்டிலே ஜப்தி செய்து, அவருடைய வீட்டிலேயிருந்த டி.வி. பெட்டியை எடுத்து வருகிறபோது, அதற்கு வெறும் ரூபாய் 50 மட்டுமே விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இந்த ஜப்தி நடவடிக்கை என்பது, அரசுக்கு வரவேண்டிய கடனைத் திருப்பி வசூல் செய்வதற்கான நடவடிக்கையாக மட்டும் தென்படவில்லை. விவசாயிகளைக் கேவலப்படுத்துவது இந்த நடவடிக்கையின் நோக்கமாக இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, இதே தமிழ்நாட்டில், இந்த அரசு அமைந்ததற்குப் பிறகு 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் அல்லது மற்ற சிறுதொழில் செய்யக்கூடியவர்கள் கடன் பெறுகிறார்கள். அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால், அதை வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தால், கேவலப்படுத்துவதாகக் கருதப்படுகிறது என்று சொல்வது எந்த வகையிலே நியாயம்? அப்படி ஜப்தி செய்யாமல், கடனை வசூல் செய்ய கடுமையான நடவடிக்கை எடுக்காவிட்டால், வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்தாவிட்டால், அதன்மீது அரசு என்ன செய்யமுடியும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிற ஒரே பதில், இந்த நிலைமையின் கடுமையை உணர்ந்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, இனிமேல் அரசாணை இல்லாமல் எங்கேயும் ஜப்தி நடைபெறக் கூடாது என்கிற தகவலை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நான் இங்கே அரசிடம் விண்ணப்பித்துக் கொள்ள விரும்புவது, இரண்டு நாட்களுக்கு முன்பாக நடைபெற்ற இந்த ஜப்தி நடவடிக்கையில் கைப்பற்றிய பொருட்களை அந்தச் சிறு விவசாயிகளுக்குத் திரும்ப வழங்கிட வேண்டுமென்ற வேண்டுகோளை மட்டும் இங்கே வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

அதுமட்டுமல்ல, கடன் பிரச்சினை குறித்து விவாதிக்கிறபோது, இந்த அரசின் சார்பாகத் திரும்பத் திரும்பக் கூறப்படுகிற ஒரு பதில், முந்தைய ஆட்சி, நபார்டோடு செய்துகொண்ட பரஸ்பர ஒப்பந்தமே காரணம் என்றும், Memorandum of Understanding என்றும், திரும்பத் திரும்பக் குறிப்பிடப்படுகிறது. இது தொடர்பாக கடந்த சில ஆண்டுகளில் நாடெங்கிலும் ஏற்பட்ட பயிர் விளைச்சல் பாதிப்பால் விவசாயிகளின் தற்கொலை நடவடிக்கை குறித்து நம்முடைய நாடாளுமன்றத்திலே விவாதம் வந்தபோது, கடந்த 1998, மே மாதம் 27 ஆம் தேதி மாண்புமிகு விவசாயத் துறை இணை அமைச்சர் சோம்பல் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நலிவடைந்த இந்த விவசாயப் பிரிவினருக்கு அளிக்கப்பட்டிருக்கிற கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டால், அதை நடைமுறைப்படுத்துமாறு மத்திய அரசு, ரிசர்வ் வங்கிக்கும், நபார்டுக்கும் உத்தரவிட்டிருப்பதாக,



நாடாளுமன்றத்தில் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். நான் இந்த மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நாடாளுமன்றத்திலே வழங்கப்பட்டிருக்கிற அந்த வாக்குறுதியின் அடிப்படையிலே, மத்திய அரசு, மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகம் விடுத்திருக்கிற உத்தரவின் அடிப்படையிலே, கடந்தகால ஆட்சியிலே செய்யப்பட்ட ஒப்பந்தத்தைக்கூட மறுபரிசீலனை செய்து, நபார்டு என்பது, யாராலும் அசைக்க முடியாத ஒன்று என்ற கருத்தை மாற்றுவதற்கு இந்த அரசு முயல வேண்டும். அதுமட்டுமல்ல; கிராமப்புற வளர்ச்சிக்கும், ஊரக வளர்ச்சிக்கும், வேளாண்மைத் துறை வளர்ச்சிக்குமாக உருவாக்கப்பட்ட அந்த நபார்டு என்பது, விவசாயிகளினுடைய கழுத்தை நெருக்குகிற வங்கியாக மாறுவதற்கு இந்த அரசு அனுமதிக்கக் கூடாது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைத் தாக்குதலின் காரணமாகவும், வேறுசில இடர்ப்பாடுகளின் காரணமாகவும், விவசாயிகளுக்கு 1996 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசுகூட ஏறத்தாழ ரூபாய் 206 கோடி அளவிற்குச் சலுகை காட்டியிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இந்தச் சலுகையும் காட்டப்படாமல் இருந்திருக்குமானால், நாடெங்கிலும் ஏற்பட்ட விவசாயிகளின் கோர மரணம், இந்த மாநிலத்திலும் ஏற்பட்டிருக்கும் என்பதை அரசு மறந்துவிடக் கூடாது. அதைத் தவிர்த்த பெருமை இந்த அரசுக்கு இருக்கிறது. மேலும், கடனிலிருந்து விடுவிப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கு, இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சமீபத்திலே, மத்திய அளவிலே, டெல்லியிலே நடைபெற்ற மாநில மின்வாரியப் பொறியாளர்களுடைய மாநாட்டிலே ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்கள். மின்சார மசோதா 2000 என்கிற அந்த மசோதா நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வரவிருக்கிறது. மின்சார மசோதா 2000 என்கிற கோரமான முறையிலே வரக்கூடியது; இந்திய நாட்டில் உணவுப் பஞ்சத்தைத் தோற்றுவிக்கவும், உணவுக் கலகத்தை உருவாக்கவும், மூலப்பொருள் உற்பத்திச் சாதனமாக இருக்கிற விவசாயத்தை முடக்கவுமான உள்நோக்கம் கொண்ட முறையிலே அந்த மின்சார மசோதா 2000 வரவிருக்கிறது. அதுகுறித்தும், வேளாண்மைத் துறை விரிவாக ஆய்வு செய்து, அரசுக்குக் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

நீர்வள ஆதாரத் துறை ஒரு ஆய்வு நடத்தி, தமிழ்நாட்டிலே பெரும்பான்மையான வட்டாரங்கள் மின் இணைப்பே பெற முடியாத அளவுக்கு நெருக்கடியிலே தள்ளிவிட்டது. ஈரோடு மாவட்டத்திலே இருக்கிற 20 ஒன்றியங்களிலே, 11 ஒன்றியங்களில் விவசாயிகள் விண்ணப்பம் செய்ய முடியாதபடி நெருக்கடி ஏற்படுத்தப்பட்டுவிட்டது. இது தொடர்பாக, தமிழ்நாட்டிலே வேளாண்மைத் துறை, மறு ஆய்வு செய்து. அந்த அடிப்படையிலே விவசாயிகளுக்கு எந்தப் பரிகாரத்தை ஏற்படுத்தினால். மின் இணைப்புக் கிடைக்குமோ அந்த வழிமுறைகளைக் கண்டறிந்து மின் இணைப்பை வழங்குவதற்கு, வேளாண்மைத் துறை முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நிலத்தையும், நீரையும், தாவரங்களினுடைய உயிர்ப்பையும் இணைக்கக்கூடிய நடவடிக்கை, இந்த வேளாண்மைத் துறையால்தான் முடியும் என்றால் அது மிகையாகாது. ஆனால், இந்த வேளாண்மைப் பகுதியிலே, ஒரு கிராம் அளவுக்கு மண்ணை எடுத்துக் கொண்டால், அதிலே ஏறத்தாழ ஒரு கோடியிலே இருந்து 100 கோடி வரைக்கும் நன்மை செய்யக்கூடிய பாக்டீரியாக்கள் இருக்குமென்று மதிப்பீடு செய்து இருக்கிறார்கள். ஆனால், இந்த நிலத்தினுடைய வளம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்து. இப்போது இந்தியாவிலே மட்டும் ஏறத்தாழ ரூபாய் 2240 கோடி அளவுக்குச் சேதாரத்தை ஏற்படுத்தியிருப்பதாக மதிப்பீடு செய்திருக்கிறார்கள். அந்த பின்னணியைக் கொண்டு, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கோரியிருக்கிற நிதி போதுமான அளவிற்கு இருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்பதே என்னுடைய கருத்தாகும். வேளாண்மை தொடர்புடைய பணிகள், சிறப்புப் பகுதித் திட்டம், பயிர் வளர்ப்புத் திட்டம், மண் வளப் பாதுகாப்பு மற்றும் ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் என்றெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் ரூபாய் 231 கோடியே 29 இலட்சத்து 56 ஆயிரம் என்று இருந்த மதிப்பீடு, 1999-2000 ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே செய்யப்பட்டிருந்த மதிப்பீடு, திருத்தப்பட்ட மதிப்பீட்டிலே ரூபாய் 321 கோடியே 20 இலட்சத்து 17 ஆயிரம் என்று உயர்ந்திருக்கிறது. அந்த உயர்ந்து வரும் மதிப்பீட்டின் அடிப்படையிலே் கணக்கிட்டால், இப்போது ரூபாய் 411 கோடியே 10 இலட்சத்து 78 ஆயிரம் ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும். ஆனால், இதிலே பெருமளவுக்குத் துண்டு விழுந்திருக்கிறது. ரூபாய் 71 கோடியே 5 இலட்சத்து 87 ஆயிரம் குறைவாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது மண் வளத்தைப் பாதுகாக்கவோ, வேளாண்மைத் துறையின்



நடவடிக்கைகளை மேம்படுத்தவோ எப்படி உதவும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக விளக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக ஒன்றே ஒன்று. பயிர்வாரித் தீர்வை என்பது, ஈரோடு மாவட்டத்திலே ஒரு கொடுமையான சுரண்டலாக விவசாய சமூகத்திற்கு இருக்கிறது. பயிர்வாரித் தீர்வை என்ற அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுவதிலே, ஊழல் ஒரு கட்டுக்கடங்காத நிலவரத்திலே இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கும், திறந்தவெளி நிர்வாகம் நடைபெறுவதற்கும், பயிர்வாரித் தீர்வை என்பதை மாற்றிவிட்டு, ஏக்கர் வாரித் தீர்வை என்று நிர்ணயித்தால், விவசாய சமூகம் கோரச் சுரண்டலிலேயிருந்து விடுவிக்கப்பட்டு இந்த அரசைப் பாராட்டுகிற நிலைமைக்கு வரும். வேறுபல விவரங்கள் இருக்கின்றன. நேரம் இல்லை என்கிற காரணத்தினாலே,....

பிற்பகல் 12-05

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்காகத்தான் கேட்க விரும்புகிறேன். பயிர்வாரித் தீர்வையிலே மோசடி நடைபெறுவதாகவும், அதனால் ஏக்கர் அடிப்படையிலே தீர்வை போட வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதிலே சில சங்கடங்கள் இருப்பதாக அதிகாரிகள் மட்டத்திலே சொல்கிறார்கள். அப்படிப் பயிர்வாரித் தீர்வை விதிப்பதிலே ஏதாவது முறைகேடு இருந்தால், அது கிராம நிர்வாக அலுவலர் மட்டத்திலேயிருந்துதான் தொடங்கியிருக்க வேண்டும். அப்படி ஏற்பட்டு இருந்தால், அந்த மாவட்ட வருவாய்த் துறை அலுவலருக்கு ஏதாவது புகார் செய்தால் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள். அப்படிச் செய்யப்பட்டு இருக்கிறதா? அப்படிப் புகார் செய்து நடவடிக்கை எடுக்கப்படவில்லையா?

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய வழிமுறையைப் பின்பற்றுகிற அளவிற்கு விவசாயிகளுடைய் வாழ்க்கை நிலைமை இப்போது இல்லை. அங்கே ஊழல் நடைபெறுவதற்கு பெரும் காரணம் கிராம நிர்வாக அலுவலர் மட்டத்திலேதான் தொடங்குகிறது என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. அங்கே தொடங்குகிற நிர்வாக ஊழல் எல்லா அதிகாரிகள் மட்டத்திலேயும், விவசாயிகளை மிரட்டிப் பணம் பறிப்பதற்கான வழிமுறையாக இது கடைபிடிக்கப்படுகிறதே தவிர

வேறு வழிமுறைகள் இல்லை. எனவேதான், இதை மாற்ற வேண்டுமென்று தொடர்ந்து நீண்டகாலமாக விவசாயிகள் வலியுறுத்தி வருகிறார்கள். எனவே, பயிர்வாரித் தீர்வை என்பதற்கு பதிலாக, நஞ்சைப் பயிருக்கும், புஞ்சைப் பயிருக்கும் ஏக்கர் வாரித் தீர்வை என்று நிர்ணயித்து விட்டால், விவசாயிகளுக்கும் சுலபமாக இருக்கும்; அதிகாரிகளுக்கும் சுலபமாக இருக்கும்; அரசுக்கும் நல்ல பெயர் இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு, ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டு உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.ல. தங்கவேல்.

**திரு. அ.ல. தங்கவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1947-லே சுதந்திரம் அடைந்தோம். 1967 வரை 20 ஆண்டுகாலம் காங்கிரஸ் ஆட்சி. 1967-ல் அண்ணா அவர்கள் தலைமையில் கழக ஆட்சி. 1969-ல் அண்ணா மறைவிற்குப் பிறகு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் கழக ஆட்சி அமைந்தது. அதில் பசுமைப் புரட்சித் திட்டம், 1 போகம், 2 போகம், 3 போகம் நெற் பயிர்; நல்ல விதை; புதிய கண்டுபிடிப்புகள்; பூச்சிக்கொல்லி மருந்துகள்; உர விநியோகம்; உற்பத்தி விநியோகம்; பசி, பட்டினி இல்லை. கழக அரசில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்றார்கள். அங்குள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகம் போல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971-ல் கோவையில் முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. வேளாண்மையில் ஆராய்ச்சி செய்து புதிய வீரிய விதைகள், நவீன தொழில்நுட்பங்கள், புதிய சாகுபடி முறைகள், தண்ணீரைச் சிக்கனமாக செலவு செய்ய சொட்டு நீர்ப் பாசனம் தெளிப்பது, நீர்ப் பாசன முறைகள் போன்றவற்றை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி அதிக உற்பத்தி அடைந்தோம். விவசாய pumpset-களுக்கு அதிக அளவில் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் 2.5 இலட்சம் மின் இணைப்புகள்தான் வழங்கப்பட்டன. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே 8.6 இலட்சம் மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன.



மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால், இந்தத் துறையின்மீது, விவசாயிகள் மீது தனிக்கவனம் கொண்டு, தனி அக்கறை கொண்டு செயலாற்றினார்கள். 1989-ல், 13 ஆண்டுகளுக்குப் பின்பு, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக ஆனவுடன், இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இலவச மின்சாரம் வழங்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் மட்டுமே முதல்வராக இருந்ததால், திட்டங்கள் முடிவு பெறவில்லை. 1996-ல் மாண்புமிகு கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வந்து, அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்தார்கள். தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற குழு பரிந்துரை செய்து அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. தமிழகத்தில் 35 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் உள்ளது. இதனை மேம்படுத்தி விவசாய நிலமாக மாற்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவ்வாறு பல்வேறு தொலைநோக்குத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. வீடுகள், தொழிற்சாலைகள் அதிகமாக வருவதால் விவசாய விளை நிலங்கள் குறைந்து சாகுபடிப் பரப்பு குறைகிறது. ஆனால் மக்கள் தொகை பெருகிக்கொண்டே வருகிறது. அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டும். அதனால் தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்ற நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

பிற்பகல் 12-10

உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்றன, மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்; கூட்டுறவுத் தேர்தல்கள் நடைபெற்றன; குழுக்களுக்கு தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். மாண்புமிகு தலைவர் கலைஞர் ஆட்சியிலே, மழை பெய்யாது என்ற தவறான செய்தியைக் கூறுவார்கள். ஆனால், தலைவர் கலைஞர் ஆட்சியிலே மழை பெய்து, சேதாரமடைந்த வகையிலே ரூ.200 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது. பொதுப் பணித் துறையின் மூலம் ஏரிகள், ஆறுகள், வாய்க்கால்கள், தூர்வாரி கடைமடைப் பகுதிகளுக்கு நீர் செல்லும் வகையிலே நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

காவிரித் தண்ணீர்ப் பிரச்சினையில், பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் மூலம் பேச்சுவார்த்தையினை நடத்தி முடித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் தலைமையிலே அவர்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் காலத்திலே, தமிழக சரித்திரத்திலேயே, மொத்த உணவு உற்பத்தி, 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவை எட்டியுள்ளது. அதேபோல, அரிசி உற்பத்தித் திறன்; பஞ்சாப் மாநிலம் இந்தியாவிலேயே முதலிடத்தில் இருந்தது. கடந்த ஆண்டு இந்தியாவிலேயே தமிழகம் அரிசி உற்பத்தியில் முதலிடம் வகித்துள்ளது. விவசாயிகள் விளைவிக்கின்ற காய்கறிகளை, உழவர்களே அங்கே கொண்டு வந்து, விவசாயிகளுடைய குழுக்களை அமைத்து, அந்த விற்பனைக் குழுவில் அவர்களாகவே விலை நிர்ணயம் செய்து காய்கறிகளை விற்பதன் மூலம் ஒரு முறையான விலை விவசாயிகளுக்குக் கிடைக்கின்ற வகையிலேயும், அந்த வாங்குகிற நுகர்வோர்களுக்கு முறையாக, குறைந்த விலையிலே, கிடைக்கின்ற வகையிலேயும் உழவர் சந்தைத் திட்டம் இருப்பதால் நாடு முழுவதும், மக்கள் பெருமளவிற்குப் பாராட்டுகின்ற வகையிலே, இப்போது இந்த உழவர் சந்தை நம்முடைய மக்களுக்குப் பயன்படுகிறது.

அதேபோல, கால்நடை மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகின்றன. சேலம் மாவட்டம் ஏத்தாபூருக்கு மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் வழங்கிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் சேலம் மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சேலம், தர்மபுரி மாவட்டங்களில் தோட்டக்கலைப் பயிர்களை அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். மாம்பழம், கொய்யா, சப்போட்டா பழங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே, இந்த மாவட்டத்தில், தோட்டக்கலைக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம்; திருச்சிராப்பள்ளியிலே வெல்ல வணிக வளாகம்; மதுரையிலே நெல் வணிக வளாகம்; வேளாண்மை விற்பனையின் மேம்பாட்டிற்காக, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு அமைத்ததற்காகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு, உலக வங்கி, வர்த்தக வங்கிகளிடமிருந்து நிதி உதவியைப் பெற்று, மும்பை வாஷியில் 300 ஏக்கரில் வணிக வளாகம் அமைக்கப்பட்டதைப் போல, மிகப்பெரிய அளவில் வணிக வளாகம் தமிழகத்திலும் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



உழவர் சந்தைகளை அமைத்ததுபோல, எல்லா வசதிகளையும் கொண்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை, ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் தேவையான இடங்களில் அமைக்க வேண்டும். அதற்கு முன்னோடியாக, சேலத்திலே வெல்லம், மஞ்சள், தானியங்கள், விற்பனை வணிக வளாகம்; ஆத்தூரில், மரவள்ளிக் கிழங்கு விற்பனை வணிக வளாகம்; அயோத்திபட்டணம், வாழப்பாடி, தலைவாசல் ஆகிய இடங்களில் காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்கள் விற்பனை வணிக வளாகம் அமைத்திட வேண்டுகிறேன். வணிக வளாகம் கட்டுவதற்காக நிலங்களைப் போர்க்கால அடிப்படையில் பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

எனது தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தினர் பெரியகொல்லப்பட்டி, சின்னகொல்லப்பட்டி, ஆகிய பகுதிகளிலே விவசாய நிலங்களைக் கையகப்படுத்தி உள்ளார்கள். இந்தப் பகுதிகளில் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் சிறு விவசாயிகள், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் இருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டம், இப்பகுதியில் செயல்படுத்தப்படுவதைக் கைவிட வேண்டுமென்றும், வேறு பகுதியில் செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டியிலே தோட்டக்கலை சார்பில், ரோஜா மலர்ப் பூங்கா — Rose Garden — இருப்பதைப்போல, எங்களது சேலம் மாவட்டம், ஏற்காடு மலைப்பகுதியில் ஏற்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்கினை மாற்றி, அரியற்கரிய காரியங்களை, சொல்லியபடி செய்வது, தமிழக முதலமைச்சர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டியார் அவர்களும்தான். இவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற காலம்தான், தமிழக விவசாயிகளுக்குப் பொற்காலம் ஆகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

பிற்பகல் 12-15

**திரு. இரா. விசுவநாதன்:** வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துகளை முன் வைப்பதற்கு வாய்ப்பினைக் கொடுத்த சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று வள்ளலார் சொன்னதுபோல, இன்று தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகள் அனைவரும் வாடிய முகத்தோடும், ஒட்டிய வயிற்றோடும், உலர்ந்த கண்களோடும், வாழ்க்கையின் ஓரத்திலே, விளிம்பிலே நின்றுகொண்டு, இப்போது வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் கண்கூடாகக் கண்டுகொண்டு இருக்கின்றோம். விவசாயிகளுடைய இந்த அவல நிலைக்கு, விவசாயிகளுக்கு இந்த அளவிற்கு இப்போது மிகக் கஷ்டமான சூழ்நிலை உருவாகியிருப்பதற்கு அடிப்படைக் காரணமே, மத்திய, மாநில அரசுகளுடைய நடவடிக்கையும், விவசாயிகளின்பால் அவர்களுக்கு இல்லாத அக்கறையும்தான் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துத் தொழில்களிலும் கட்டுப்படியில்லாத ஒரு தொழில் உண்டு என்று சொன்னால், அது விவசாயம்தான். அந்த அளவிற்கு விவசாயிகள் தங்களுடைய தொழிலை விட்டுவிட முடியாமலும், தொடர்ந்து செய்ய முடியாமலும், 'திரிசங்கு சொர்க்கத்திலே' என்று சொல்வார்களே, 'இருதலைக் கொள்ளி எறும்பு' என்று சொல்வார்களே அதைப்போல இப்போது துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன என்று சொன்னால், விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள், விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் அனைத்தும் விலை உயர்த்தப்பட்டிருப்பதுதான். உங்களுடைய தோழமைக் கட்சியான மத்திய அரசு இப்போது அவர்கள் பங்கிற்கு உர விலையையும், பூச்சி மருந்து விலைகளையும் கூட்டியிருக்கிறார்கள். அதேபோல, நமது மாநில அரசும் விவசாயிகளுக்காக எந்தச் சலுகைகளையும் அறிவிக்கவில்லை. குறிப்பாகச் சொல்வோம் என்று சொன்னால், 'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று கம்பன் காலத்திலே கடன்பட்டவர்களுடைய நெஞ்சங்களை வர்ணித்திருக்கின்ற சூழ்நிலையில், அவர்களுடைய கஷ்டங்களையெல்லாம் போக்குகின்ற வண்ணம் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று நாங்கள் சொன்னோம்.



கடன்களைக்கூட ரத்து செய்யாவிட்டாலும் பரவாயில்லை, வட்டியையாவது ரத்து செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். ஆனால் ஏதோ பசியால் அழுகின்ற குழந்தைக்குப் பாலூட்டி பசியைப் போக்காமல், கிலுகிலுப்பையும் சாக்லேட்டும் கொடுத்து, • அந்தக் குழந்தையை ஏமாற்றுவது போல ஏதோ அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்து, விவசாயிகள் மத்தியில் ஒரு கண்துடைப்பு நாடகத்தை நடத்தியிருக்கிறீர்கள். அவர்களுக்கு மீண்டும் நபார்டைக் காரணம் காட்டி, தங்களுடைய பொறுப்புகளிலிருந்து மாநில அரசு தட்டிக் கழிக்கக் கூடாது என்பதை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என்று சொல்வார்கள். அதேபோல், குறிப்பாக, மாநில அரசுக்கு விவசாயிகளின் அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று மனம் இருந்தால் அல்லது வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற மனமிருந்தால், நிச்சயமாக முடியும் என்று நான் கருதுகின்றேன். அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, கடனை வசூல் செய்வதற்காக ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கமாட்டோம் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இப்போது சற்று நேரத்திற்கு முன்பு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஜப்தி நடவடிக்கை செய்யவில்லை என்று சொன்னால், எப்படி வசூல் செய்வது என்று கேட்கிறார்கள். முதலமைச்சர் ஜப்தி நடவடிக்கை கூடாது என்று சொல்கிறார்கள்.•

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜப்தி நடவடிக்கை செய்யப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நான் சொல்லவில்லை. கடன் வாங்கியவர்கள் திருப்பித் தராவிட்டால் அதை வசூலிக்கின்ற முறை எப்படி என்று பெருந்துறை சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்களிடத்திலே ஒரு விளக்கத்தைத்தான் நான் கேட்டேன். முன்பெல்லாம் கூட்டுறவுத் தொடக்க வங்கியோ, மத்திய வங்கியோ, நிலவள வங்கியோ கடன் கொடுத்தால், குறிப்பிட்ட காலத்திலே கட்டவில்லை என்று சொன்னால், பிறகு ஜப்தி போன்ற நடவடிக்கைகளை அவர்களே தீர்மானம் இயற்றி, D.R. இடத்திலே அனுமதி பெற்று, பிறகு ஜப்தி நடவடிக்கை எடுப்பார்கள். இனி அதுபோல் கூடாது, அப்படி ஒரு நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், அரசிடத்திலே அனுமதி பெற்ற பிறகுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும், வங்கிகளே நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று தெளிவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கொள்கையிலே எங்களுக்கு ஒன்றும் மாறுபாடில்லை.

முற்பகல் 12-20

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது சபைக் குறிப்பேட்டிலே பதிவு செய்யப்பட்டு — அதிகாரிகள் ஐப்தி நடவடிக்கைக்குச் செல்லக்கூடும் என்பதற்காகத்தான் — மீண்டும் ஒரு விளக்கத்தைப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன்.

இப்போது குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் விவசாயிகளுக்குக் கட்டுப்படியான வருமானம் கிடைக்கவில்லை, கூலி கூடுதலாகக் கொடுப்பதால் விவசாயிகளுக்கே கட்டுப்படியாகவில்லை. கூலி குறைவாகக் கொடுத்தால் கூலித் தொழிலாளர்களுக்கு அது கட்டுப்படியாகாது. இதுதான் இன்றைய விவசாயிகளுடைய நிலைமை. இந்த நிலையிலே அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற அந்த விவசாயிகளுக்கு அரசுதான் இரு தரப்பினரையும் திருப்திபடுத்துகின்ற வகையில் — விவசாயம் செய்கின்றவர்களுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் பலனை அளிக்கும் வண்ணம் — சில சலுகைகளை, சிறப்புச் சலுகைகளையெல்லாம் செய்து—நட்டத்தால் இயங்கிக் கொண்டிருக்கிற தொழில்களுக்கெல்லாம் எப்படி உதவிபுரிகின்றார்களோ, அதைப்போல, நட்டம் அடைகின்ற தொழிலாக இருக்கின்ற விவசாயத் தொழிலுக்கும் சலுகைகளைச் செய்து—நீங்கள் விவசாயத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, எங்கள் நத்தம் பகுதியில் விவசாயத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கெல்லாம் விவசாயம் செய்து கட்டுப்படியாகவில்லை என்ற நிலை வந்ததற்குப் பின் இப்போது விவசாய மக்கள் அனைவரும் தண்ணீர் வசதி இருந்தால் தென்னை விவசாயம் செய்வதற்கும், தண்ணீர் வசதி இல்லையென்றால் மா, புளி போன்ற விவசாயம் செய்வதற்கும் வந்துவிட்டார்கள். தோப்பு விவசாயம்தான் நமக்குப் பலன் தரும் என்ற எண்ணத்திலே தோப்பு விவசாயத்திற்கு வந்து இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய துரதிருஷ்டம் அங்கும் அவர்களை விடவில்லை. தென்னை விவசாயிகள் இப்போது மிகப் பெரிய தென்னை மர நோயினால் பாதிக்கப்பட்டு, மகசூலும் குறைந்து, காய்களினுடைய தரமும் குறைந்து அதனால் விலையும் கிடைக்காமல் மிகக் கடுமையான வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 50 லட்சம் தென்னை மரங்களுக்கு மேல் இன்று இந்த நோயினால்



கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகத் திண்டுக்கல் மாவட்டத்தில், அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் தென்னை விவசாயம் மிக அதிக அளவில் செய்யப்படுகிறது. இப்போது தென்னை விவசாயிகள் அனைவரும் மிகவும் சிரமமான சூழ்நிலையில் இருப்பதால், அந்த நோயைப் போக்குவதற்குரிய நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கு நிவாரண உதவிகள் செய்வது பற்றியும் அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) 10 நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசில் நிதீஷ்குமார் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருக்கும்பொழுது அங்கே தென் மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை எல்லாம் அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார்கள். அந்தக் கூட்டத்திலே அவர்கள் ஒரு செய்திக் குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். A Brief on Coconut Milch என்ற தலைப்பிலே ஒரு தகவல் அறிக்கையினை அங்கே கொடுத்திருக்கிறார்கள். அதிலே கேரள அரசு, தங்களுடைய பகுதியிலேயுள்ள தென்னை விவசாயிகளுக்கு ரூ.100 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசு ரூ.100 கோடியை கேரள அரசுக்கு தென்னை விவசாயிகளுக்கு மானியமாக, நிவாரண உதவியாக வழங்க வேண்டும் என்று கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, அதற்கு முன்பாக மத்தியிலே இருக்கின்ற Coconut Board ரூ.213.03 லட்சத்தைக் கேரள அரசுக்கு வழங்கியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல, கேரள அரசுக்கு 1998-99 ஆம் ஆண்டில் ரூ.525 லட்சம் வழங்கியிருக்கிறது; அவர்கள் கேட்டதற்குப் பின்பாக 1999-2000-ல் மேற்கொண்டும் கூடுதலாக ரூ.96 லட்சம் வழங்கியிருக்கிறது; இறுதியாக ரூ.213 லட்சம் வழங்கியிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசு, தாங்கள் இந்த நிவாரணத் தொகையை கேட்டதாகவோ, தமிழ்நாடு அரசிலிருந்து மத்திய அரசுக்கு எந்த வேண்டுகோளும் வரவில்லை என்ற குறிப்பு......

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தகவலுக்காக நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நாமும் Eriophyid சிலந்தி நோயினால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்; மருந்துகள் வழங்கி அந்த நோயைக் கட்டுப்படுத்த

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக ரூ.2.50 கோடியை முதலில் கேட்டோம். ஆனால் அவர்கள் இன்னும் தரவில்லை. மேலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் "கேரளாவிலே நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மத்திய அமைச்சரைச் சந்தித்து, கட்சி வித்தியாசம் இல்லாமல், அந்த மாநிலத் தென்னை விவசாயிகளின் நலனைக் கருதி கேட்டார்கள்" என்று சொன்னார்கள். துரதிருஷ்டவசமாக தமிழகத்திலே அத்தகைய ஒற்றுமை இல்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தைச் சேர்ந்த திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள்தான் இந்தப் பிரச்சினையை அங்கே எழுப்பி, எழுத்துமூலமாக பதிலும் பெற்றிருக்கிறார்கள். தேவையானால் மாண்புமிகு அமைச்சரிடத்தில் அதைத் தர நான் தயாராக இருக்கிறேன். அவர்கள்தான்......

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அது தெரியும் எனக்கு. எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் சேர்ந்து மத்திய விவசாயத் துறை அமைச்சரையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளையும் சென்று கேட்கவில்லை என்பதுதான் என்னுடைய பதில். (குறுக்கீடு)

முற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசுகிறார். அமைச்சர் பதில் சொல்கிறார். நீங்கள் எல்லாவற்றிற்கும் எழுந்து நின்றால் எப்படி? நேரம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய M.P.-க்களிடம் துரதிஷ்டவசமாக அந்த ஒற்றுமை இல்லை என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சரே ஏதாவது ஒரு கூட்டத்திற்கு அந்த M.P.-க்களையும் மற்ற எல்லோரையும் கூட்டி இதற்கு ஏதாவது பரிகாரம் காணுவதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கலாம். அப்படி எடுத்தாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாநில அரசாங்கம் அந்தத் தென்னை மரங்களைப் பாதித்துள்ள Eriophyid என்ற சிலந்தி நோயைக் கட்டுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. அதனால் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.



**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தென் மாநிலங்களைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து அதில் ஆலோசனை செய்து இருக்கிறார்கள். அதிலே அவர் சொல்லியிருக்கின்ற கருத்து கேரள அரசு மட்டும்தான் எங்களிடம் நிவாரணம் கேட்டிருக்கிறது; தமிழ்நாடு அரசு கேட்கவில்லை என்று சொன்னார்கள். அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக மிக முக்கியமான பிரச்சினையைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது வேளாண்மைப் பொறியியல் துறையிலே இன்று மிகப் பெரிய ஊழல் நடந்திருக்கிறது. அதிலே உதாரணத்திற்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் எங்களுடைய மாவட்டத்திலே என்னுடைய தொகுதியான நத்தம் ஒன்றியத்திலே 40,54,000 ரூபாய்க்கு E.A.S.-ல் 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பணிகளில் ஏறத்தாழ 4 கண்மாய்களை மட்டும் ஓரளவிற்கு - மதிப்பீட்டுத் தொகை அளவிற்கு என்று சொல்லமாட்டேன். ஓரளவிற்கு - வேலை செய்துவிட்டு மீதியிருக்கின்ற **

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 40 இலட்சம் ரூபாய் செலவில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழே குளங்கள் வெட்டுவதற்கு அல்லது கட்டுவதற்கு செய்யப்பட்ட பணிகளிலே தவறு நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் எந்த எந்த இடத்திலே தவறு நடந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டி எழுதிக்கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுக்கும். ஆனால் ஏதோ ** என்று எந்த ஞாபகத்தை வைத்துச் சொல்கிறாரோ எனக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆக, இப்படி பொத்தாம் பொதுவில் பேரவையிலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டுப் போய்விடக்கூடாது. ஆதாரம் இருந்தால் இப்பொழுதே எழுதிக் கொடுத்தால், யாராக இருந்தாலும் சரி, கடுமையான நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஒருபோதும் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. இரா. விசுவநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் நான் சொல்லவில்லை. ஆதாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள். தினந்தோறும் பேரவைத் தலைவரும் சொல்கிறார்கள். நாங்களும் சொல்லியிருக்கிறோம். இந்த மாதிரி ஒரு குற்றச்சாட்டைச் சொல்கின்றபோது அதற்கான ஆதாரத்தை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காட்டவேண்டும். அப்படிக் காட்டினால்தான் நாங்களும் அமைச்சரிடம் அதைக்காட்டி அதற்கான பதிலை அவர்கள் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். நீங்கள் அதைவிட்டுவிட்டு இங்கே வந்து திடீரென்று சொல்லி, "இப்பொழுது என்னால் கொடுக்க முடியும், என்னால் கொடுக்க முடியும்" என்று சொன்னால் எப்படி? இது என்ன 'இன்று போய் நாளை வா' என்று சொல்வதற்கு இராமாயணமா?

**திரு. இரா. விசுவநாதன்:** அது சற்றுக் காலதாமதமாக எனக்குக் கிடைத்தது என்பதால், உடனே முன்கூட்டியே கொடுக்க இயலவில்லை. இப்பொழுது.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order. தொடர்ந்து இந்த அவையை முறையாக நடத்த வேண்டும் என்பதற்காக சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவை நடப்பதே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் அடிப்படையிலேதான். ஓர் உறுப்பினர் அல்லது அதிகாரி மீதான தனிப்பட்ட குற்றச்சாட்டு ஒருவர் சொல்ல வேண்டும் என்றால் அதுபற்றி 93-ஆவது விதியிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஓர் உறுப்பினர் எழுத்துமூலமாக முன்கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்குத் தெரிவித்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ குற்றம் சாட்டக்கூடாது என்பது விதி. ஆனால் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றால், ஒன்று, இந்த விதிகள் புத்தகத்தை தயவுசெய்து எடுத்துவிடுங்கள்; அவர்களை அனுமதியுங்கள். இல்லையென்றால் இந்தச் விதிகளின்படி பேசுவதற்கு தயவுசெய்து அனுமதியுங்கள்.



பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இந்த மன்றத்தைப் பொறுத்தவரையிலே அவர் புதிய உறுப்பினர். தயவுசெய்து இந்த விதிமுறைகளையெல்லாம் தெளிவாகப் படித்துவிட்டு வந்து இன்னொரு முறை பேசும்போது ஒழுங்காகப் பேச வேண்டும்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆதாரம் அடங்கிய Casette ஒன்று இருக்கிறது. அதிலே எந்தக் குளம், எந்த ஆண்டுத் திட்டம், E.A.S. என்பதையெல்லாம் பதிவு செய்திருக்கிறோம். அதிலே வேலை நடந்திருக்கிறதா என்பதைப் பார்த்து அதற்கு Bill எழுதப்பட்டு இருக்கிறதா என்பதைப் பார்த்து நீங்கள் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். "இப்படி, எனக்கு ஒரு புகார் வந்திருக்கிறது; அந்தப் புகாரைத் தங்களிடம் தந்து தங்கள் மூலமாக அமைச்சருக்குத் தருகிறேன்; விசாரித்துப் பார்த்து அந்தப் புகார் உண்மையானால் நடவடிக்கை எடுக்கலாம்" என்று சொல்வதிலேகூடத் தவறு இல்லை. ஆனால், ** குற்றச்சாட்டை பொத்தாம் பொதுவிலே சொல்கிறபோது அது யார் யாரைப் பாதிக்கும் என்ற ஒரு சந்தேகத்தைக் கிளப்பக்கூடிய வாதத்தை எடுத்து வைப்பதுதான் அவைக்கு மரபல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். பொதுவாக நான் உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. பொதுவாக நான் எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன். சட்டமன்றப் பேரவை விதிப் பிரகாரம் இனிமேல் யார் மீதாவது, அமைச்சர் மீதோ அல்லது அதிகாரி மீதோ குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால் முன்கூட்டிக் காட்டி அனுமதி பெற்றுச் சொன்னால்தான் அது அவைக் குறிப்பிலே ஏற்றப்படும். இல்லையென்றால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. விசுவநாதன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகிய உறுப்பினர்கள் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)

**திரு. சி. ஞானசேகரன்:** நீங்கள் பேரவை விதி......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது விதி 93-ஐ இந்த இடத்திலே மேற்கோள்காட்டி, எந்தவொரு அமைச்சர் மீதோ அல்லது ஓர் உறுப்பினர் மீதோ புகார் என்று சொல்கிறபோது முன்கூட்டியே நாம் அதைச் சொல்லியிருக்க வேண்டும் என்றார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் இங்கே பேசிக்கொண்டிருக்கிறபோது, ** அதிலே வந்து.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மாதிரிதான் முந்திரிக்கொட்டைத்தனமாகப் பேசக்கூடாது. அவர் என்ன சொன்னார்? என்னிடத்திலே எல்லா ஆதாரமும் இருக்கிறது.....

**திரு. சி. ஞானசேகரன்:** Only if he alleges the Minister, he can adduce that evidence.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. உறுப்பினர் ஞானசேகரன் சொல்வது சரியல்ல. தயவுசெய்து ஞானசேகரன்கிட்டே புத்தகம் இருக்கிறது. அதை நன்றாகப் படித்துப் பாருங்கள். தலைப்பே, ஓர் உறுப்பினர் அல்லது அதிகாரி மீதான தனிப்பட்ட குற்றச்சாட்டு என்பதுதான். நான் என்ன சொல்கிறேன் என்றால், தாராளமாக நீங்கள் சொல்லுங்கள், ஆனால் விதிமுறைப்படி சொல்லுங்கள். அதை அவைத் தலைவர் அவர்களிடம்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



கொடுத்து, அதைக் காண்பித்து சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி, அதற்குப் பிறகு நீங்கள் இங்கே சொல்வதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்; "யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயங்கவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, சொல்லுங்கள்; ஆனால், முறைப்படி, இந்த விதிமுறைப்படி நடந்துகொள்ளுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. இரா. விசுவநாதன் ஆகியோர் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன் தன்னுடைய பேச்சை முடிக்கட்டும். நேரம் ஆகிறது. மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரேயொரு வரியைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவருக்கு ஆதாரம் late ஆகக் கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அதை உங்களுக்கு அவர் கொடுத்தால் நீங்கள் அதை விசாரித்துப் பார்த்து, உரியவருக்கு அனுப்பி வைத்து அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்).

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் அவைத் தலைவர் அவர்களே பார்க்கவில்லை. --உங்கள் முகமே தெரியவில்லை. அப்படியிருக்கும்போது உங்களை எப்படிக் கூப்பிடுவது? --அவைத் தலைவரே இன்னும் அந்தப் புகாரைப் பார்க்கவில்லை. பார்த்ததற்குப் பிறகுதான் இந்த அவையிலே அந்தப் பிரச்சினையை எழுப்பும் உரிமையும் சட்டமன்ற உறுப்பினருக்கு உண்டு. ஏதோ அவர் சொல்லிவிட்டார். அவருடைய எண்ணத்தை வெளிப்படுத்துகிறார் என்பதை நான் மறுக்கவில்லை. இல்லையென்றால் இதுவரையில் பேசியவை எல்லாம் குறிப்பேட்டிலேயிருந்து நீக்கப்பட வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவர் அவர்களே, point of clarification.

**திரு. இரா. விசுவநாதன்:** துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான்தான் தெளிவாகச் சொல்கிறேன். ஏதாவது குற்றச்சாட்டுச் சொல்வதாக இருந்தால் முன்கூட்டியே அனுமதி வாங்கியபின் நீங்கள் சொன்னால்தான் அது அவைக் குறிப்பிலே பதியப்படும். இல்லை என்றால் அது அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கப்படும். நீங்கள் "இப்போதுதான் கிடைத்தது, இப்போதுதான் கிடைத்தது" என்று சொன்னால் அது சரியாக இருக்காது. இது ஏதோ 'இன்றுபோய் நாளை வா' என்று சொல்வது மாதிரி இருக்கிறது. அதனால் மாண்புமிகு உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டுகளெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. உட்காருங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** தயவு செய்து ** விசாரித்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் விளக்கம் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அவை முன்னவர் எழுந்து நிற்கும்போது உறுப்பினர்கள் உட்கார வேண்டும். நீங்களும் உட்கார வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் எப்போது வேண்டுமானாலும் சந்தேகப்படலாம். சந்தேகப்படுவதற்கு அறிவு இருந்தாலே போதும். ஆனால், பேசுவதற்கு ஆதாரம் காட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசியதிலே ஒரு வார்த்தை, ஒரு தொடர் மட்டும் இடையிலே ஒரு குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு முன்னால் சொல்லப்பட்டது தவறு. ஏனென்றால் ** ஆகவே, திரு. ஞானசேகரன் சொன்னதைப்போல அதிகாரிகள் மட்டத்தில் என்று சொல்லவில்லை. ** ஆகவே, அந்தத் தொடர் மட்டும் இந்த அவைக் குறிப்பிலே இடம்பெற முடியாது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 12-35

**திரு. இரா. விசுவநாதன்:** மற்றக் குற்றச்சாட்டுகளை அதாவது ஒட்டுமொத்தமாக இருக்கும் குற்றச்சாட்டுகளை இதிலிருந்து எடுத்துவிட வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, மறுபடியும் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். பொத்தாம் பொதுவாக எதையும் சொல்லக்கூடாது. ஆதாரத்தோடுதான் சொல்ல வேண்டும்.

**திரு. இரா. விசுவநாதன்:** நான் பொத்தாம் பொதுவாகச் சொல்லவே இல்லை. அடுத்தபடியாக.....

**திரு. இரா. தாமரைக்கனி:** Point of information. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது இந்திரா நகர் கொலை வழக்கில், பிரேமா கொலை வழக்கில் என்னிடம் ஆதாரம் இருக்கிறது என்று இதே தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு சபை முடிந்துபோன பிறகு அந்தச் சபையில் நடந்த பிரச்சினையை எல்லாம் அடுத்த சபையிலே எழுப்ப முடியாது. இது பதினோராவது சட்டமன்றப் பேரவை. (குறுக்கீடு) திரு. டி. மணி, பேசுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை மட்டும் இங்கே சொல்ல விரும்புகின்றேன். ஏனென்றால் கொள்கை சம்பந்தமான பிரச்சினைகளைச் சொல்வதற்குப் போதுமான, நேரமின்மை காரணத்தினால் சுருக்கமாகச் சில விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

*[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) தலைமை]*

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பிரச்சினைகளைக் கொண்டுவருவதற்குத்தான் இந்த நேரம் சரியாக இருக்கும் என்று கருதுகின்றேன். முதலில் இந்த வேளாண்மைத் துறையும், வருவாய்த் துறையும், நீராதாரத் துறையும் இன்று பின்னிப்பிணைந்திருக்கின்ற துறைகள். ஏனென்றால் இதற்கும் அதற்கும் என்று இந்த 3 துறைகளுக்கும் தொடர்பிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையிலே தலையிடுகிறபோது அந்தப் பிரச்சினை இதற்குள்ளே வந்து சேர்ந்துவிடுகிறது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுடைய பிரச்சினையில் நான்கு ஆண்டு காலமாக டன்னுக்கு 1000 ரூபாய் விலை கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினையை வலியுறுத்தி வந்தாலும் இன்னும் அதில் நாம் ஒரு முடிவுக்கு வராத நிலையில் இருக்கிறோம். வரக்கூடிய ஓராண்டு காலத்திற்குள்ளே அடுத்த கட்டத்தைச் சந்திக்கப் போகின்ற நாம் அதற்கு முன்னால் இந்தக் கரும்பு விவசாயிகளுடைய கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில் டன்னுக்கு 1000 ரூபாய் தருகிற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின் இறுதியிலாவது அரசு அப்படி ஒரு நல்ல அறிவிப்பைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் உற்பத்தி ஆகின்றது ரப்பர்; அந்த ரப்பருடைய விலை வீழ்ச்சிப் பிரச்சினையை இங்கே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தப் பேரவையில் நாங்கள் முன் வைத்திருக்கிறோம். ஆனால் கேரள மாநிலத்திலே இருக்கிற அரசாங்கம் அதைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்கிறபோது அதற்கு ஆதரவு விலை என்று ஒன்றைக் கொடுத்து விவசாயிகளைக் குறைந்தபட்ச அளவிலாவது பாதுகாக்கின்ற ஒரு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய மாநில அரசாங்கம் கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் ரப்பர் உற்பத்தி செய்து அதனால் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பதால் அந்த ரப்பருக்கு உரிய விலை கிடைக்கும் வகையில் ஓர் ஆதரவு விலையைத் தருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறக்குமதிக் கொள்கையிலே ஏற்பட்டிருக்கிற அந்த விவகாரத்திலே நம்முடைய அரசு தலையிட்டு மத்திய அரசாங்கத்திடம் ஒரு வேண்டுகோளை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவிலே உற்பத்தியாகின்ற ரப்பர் நம்முடைய இந்திய தேசத்திற்குப் போதுமான அளவுக்கு இருக்கின்ற காரணத்தினால் அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிற நடவடிக்கையை வாபஸ்



வாங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் இரண்டாவதாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் திருநாட்டிலே தேங்காய் உற்பத்தியிலே நாம் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கின்றோம். ஆனால் தேங்காய் உற்பத்தியில் இரண்டாவது இடத்தைப் பிடித்து, தமிழக மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கிற அளவுக்கு உற்பத்தி பெருகி வந்தும்கூட, இறக்குமதி கொள்கை என்பது சரியாக இல்லை. இப்போது பல நாடுகளிலேயிருந்தும் கொப்பரையை இறக்குமதி பண்ணுவதன் மூலமாக தேங்காய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு, அந்த விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத, சாமானிய மக்களுக்கு கட்டுப்படியாகாத ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த நிலையைப் போக்குவதற்கு, இந்த இறக்குமதியைத் தடை செய்வதன் மூலமாகவும், அல்லது இதற்கு இங்கே ஆதரவு விலை தருவதன் மூலமாகவும்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று கருதுகின்றேன். அந்த வகையிலே அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

பிற்பகல் 12-40

அடுத்து எங்களுடைய மாவட்டத்திலே இருக்கக்கூடிய பழங்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பழத்தோட்டம் இருக்கின்றது. அதிலே என்னதான் சிறப்பாகச் செயல்பட்டாலும்கூட, அதனுடைய பரப்பளவு என்பது போதுமானதாக இல்லை. எனவே, அதனை விஸ்தரித்துக்கொடுப்பதன் மூலமாக, அதிலே உற்பத்தியைப் பெருக்குவதற்கு, தரமான மா, பலா போன்ற பழ மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, தோட்டக்கலை என்று சொல்கின்றபோது, அது குறித்து 1980 ஆம் ஆண்டில் இந்தச் சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய காலத்திலேயே ஒரு கோரிக்கையை வைத்திருந்தேன். எங்களுடைய மாவட்டத்தில் அரசுத் துறை சார்பாக எந்த கல்லூரியும் இல்லை. எனவே, ஒரு வேளாண்மைக் கல்லூரியை உருவாக்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இடம் இல்லை என்று சொல்வதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஏனென்றால், முன்னால் பேசிய உறுப்பினர்

அவர்கள் ஒருபக்கத்திலே உதயகிரிக்கோட்டை இருக்கிறது என்று சொன்னார்கள்; அதை மத்திய அரசாங்கம் இன்றும் ஒரு நினைவுச் சின்னமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தாலே அதற்குச் சாத்தியம் இல்லையென்ற பதிலைச் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், நம்முடைய ரப்பர் கழகம் ஏற்கெனவே மத்திய அரசிடமிருந்து 99 வருடத்திற்கு பாட்டமாக எடுத்து, அந்த நிலத்திலேயெல்லாம் ரப்பர் மரங்களைப் பயிர் செய்கிறது அதே பகுதியிலேதான் பள்ளக்குளம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே அரசுக்குச் சொந்தமான வனத் துறைக்குச் சொந்தமான மரங்கள் இல்லை; காட்டுமரங்கள் இல்லை; அது தரிசு நிலம் போலக் காட்சியளிக்கின்றது. 100 ஏக்கருக்கு அதிகமான இடம் என்று சொன்னாலும் 900 ஏக்கர் அளவு நிலம் இருக்கின்றது. அங்கே ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதன் மூலமாக அந்த மாவட்ட மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கைக்கு நிறைவு செய்கின்ற ஒரு நல்ல தீர்ப்பைத் தர வேண்டும் என்ற கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சென்ற ஆண்டுகூட இந்தக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசினார்கள். "வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு நிலம் கிடைக்கவில்லை, ஆகவே, அதற்கு வாய்ப்பு இல்லை" என்று அரசு எப்போதும் சொல்லவில்லை. இப்போதே, தமிழகத்திலே பத்துக்கு மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன. படித்துவிட்டு வரக்கூடியவர்களின் கணக்கைப் பார்த்தால், 3 ஆயிரம் பேர், 4 ஆயிரம் பேர் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். மேலும், இப்போது ஒரு கல்லூரி தொடங்கப்பட வேண்டுமானால் சுமார் 40 கோடி ரூபாய் அளவிற்கு நிதி தேவைப்படுகிறது. அந்த நிதி வசதியை அரசாங்கம் கருத வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. மேலும், ஒரு கல்லூரி புதியதாகத் தொடங்கி, அந்தக் கல்லூரியை நடத்துகிறபோது செலவு ஏற்படுவது மட்டுமல்ல, படித்து வெளியே வரக்கூடிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரமுடியாத சூழ்நிலையும் இருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் இப்போது புதியதாகக் கல்லூரி தொடங்குவதற்கான அந்த வாய்ப்பு இல்லை என்று அரசு கருதுகிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். நிதிப் பற்றாக்குறை இருக்கிறது அல்லது படித்துவிட்டு வெளியே வருகின்ற மாணவர்களுக்கு இடம் கொடுப்பதிலே இருக்கின்ற சிக்கல் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இருந்தாலும்கூட, நம்முடைய வேளாண்மைத் துறை என்பது பல்வேறு பிரிவுகளாக விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. அது தன்னுடைய முன்னேற்றப் பாதையிலே வேகமாகச் செல்கின்றது. அது தன்னுடைய விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக அந்த அளவிற்குச் செல்கின்றது. இன்னும் தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு பெரிய திட்டத்தை இந்த மாநில அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இதற்கும் பயன்படுகின்ற வகையிலே ஒரு சிறிய கல்லூரியை அமைக்க வேண்டும். எங்களுடைய இந்தக் கோரிக்கை என்பது நீண்டகாலமாக இருக்கிறது. ஏதோ 1980-லே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலே பேசியது அல்ல; அதற்கும் முன்பிருந்தே இந்தக் கோரிக்கை இந்த மாமன்றத்திலே வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. அந்த வகையிலே இதை மறுபரிசீலனை செய்வதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** ஒரு நிமிடத்திலே உங்களுடைய உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12-45

**திரு. டி. மணி:** இன்னொன்று, தண்ணீர்ப் பிரச்சினை சம்பந்தமானது. வடிகால்கள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் ஆகியவற்றில் தூர்வாருவது பற்றியது. கடந்த ஆண்டிலே ஒன்றைச் சொன்னார்கள். வருடத்திற்கு ஒரு குளம் என்று நிர்ணயித்தார்கள் ஆனால் தூர் வாரப்படவில்லை. இப்போது அதைப்பற்றிக் கேட்டால், அதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இனி யார் செய்வது? பொதுப் பணித் துறையின் பொறுப்பில் அந்தக் குளம் இல்லை என்று சொல்கிறார்கள். ஒன்று, பொதுப் பணித் துறைக்கு அதிகப்படியான நிதியை வழங்கி, இந்தக் குளத்தைத் தூர் வாரும் பணியைச் செய்யவேண்டும். இல்லையென்று சொன்னால், இப்படி அரசினுடைய சிறப்புத் திட்டத்தின் மூலமாக இவற்றைச் செய்ய வேண்டும். மொத்தத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கால்வாய்கள், வடிகால்கள் முழுமையாகப் பழுதடைந்திருக்கின்ற ஒரு சூழ்நிலையில் உள்ளன. ஆகவே இந்தச் சூழ்நிலையை மாற்றும் வகையில் போதுமான நிதி ஆதாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.வி.எம். கால்வாய் பற்றி இங்கே உறுப்பினர் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். இது கேரள மாநிலத்திலிருந்து ஆரம்பித்து, இப்போது இது இரணியன் துறை என்று சொல்கின்ற தாமிரபரணி ஆறு வந்து சேருகின்ற பகுதி வரையிலும் இருக்கின்றது. ஆனால் இதனுடைய மணல் பூராவும் அந்தப் பகுதியிலே ஏறிவிடுகிறது. அங்கே பக்கத்தில் ஊர்கள் இல்லாத காரணத்தால், இதனை ஆக்கிரமிக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** இன்னொன்று, தோட்டக்கலைத் துறைக்குள்ளே வருகிறபோது, மிக உயர்ந்த விலையில் இருக்கின்ற நல்ல மிளகு, சிறு மிளகு அங்கே பல பகுதிகளில் விளைகின்றன. இது நம்முடைய நிர்வாகத்தில் இருக்கிற பேச்சிப்பாறையில் இருக்கிறது. அதுபோல இன்னும் பல பகுதிகளில் இருக்கின்றன. ஆனால் அதைக் கண்டுகொள்வதாக அந்தத் துறை இல்லை. எனவே, ஒரு கிலோவுக்கு இப்போது market-ல் 250 ரூபாய் விலை இருக்கிறது. அதுபோன்று கடுக்காய், ஜாதிக்காய், கிராம்பு ஆகியவை விளைகின்றன. இந்தச் சரக்குகள் எல்லாம் அதிக விலை போகாமல் இருப்பதற்கு காரணம் என்னவென்று சொன்னால், அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதுதான். இந்தச் சரக்குகளினுடைய விலைகள் இப்போது அடிமட்டத்திற்குப் போய்விட்டன. எனவே விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத விலையாக இப்போது இருக்கிறது. எனவே சிறு விவசாயிகளைப் பாதிக்காத அளவில் அவர்களுடைய வருவாயை அவர்கள் தேடிக் கொள்ளும் வகையில், வருவாயைப் பெருக்கும் வகையில், துறை உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், வேளாண்மை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார நன்றியைச் சொல்லி, இங்கே ஒருசில கருத்துகளை மட்டும் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வகுத்தளித்த இந்த நிதிநிலை அறிக்கை என்பது, சமூக நீதியை உள்ளடக்கி, விவசாயிகள் முதல் இந்த நாட்டிலே வாழக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுடைய முன்னேற்றத்தில், நலனில் அக்கறை கொண்டு உருவாக்கிய நிதிநிலை அறிக்கை என்பதால், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர்-தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் ஐயா அவர்கள்கூட இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிச் சொல்கின்ற நேரத்தில், வரவேற்றுப் பேசி, ஒரே வார்த்தையாக ஆங்கிலத்திலே சொல்லவேண்டுமானால், இது ஒரு Super Budget என்று அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்லி, பாராட்டியதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படிப் பாராட்டுகிற நேரத்திலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காக நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பே, விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளையெல்லாம் அழைத்துப் பேசி, விவசாயிகளுடைய குறைகளைப் போக்குவதற்கு நல்ல முன்னேற்பாடுகளைச் செய்ததற்காக மீண்டும் ஒரு முறை நான் அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். அப்படிப் பாராட்டுவதோடு மாத்திரமல்லாமல், புதிய வேளாண்மைக் கொள்கையை உருவாக்குவதற்காக உயர்நிலைக் குழு ஒன்றை அமைப்பதாகவும் இங்கே அறிவித்திருப்பது அதற்கு மேலும் வலு சேர்ப்பதற்காகவே அமைந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேநேரத்தில் இந்த நாட்டிலே தரிசு நிலங்கள் எங்கே பார்த்தாலும் வறண்டு கிடக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களை இந்த ஆண்டு 25 ஆயிரம் ஏக்கர், அடுத்த ஆண்டு 75 ஆயிரம் ஏக்கர், அடுத்து தொடர்ந்து 10 ஆண்டுகளுக்குள் ஒரு இலட்சம் ஏக்கர்கள் என்று சொல்லி, மேம்பாடு செய்வதற்காக, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை வகுத்தளித்திருப்பது மேலும் பெருமை சேர்க்கக்கூடியது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் உழவர்கள் பயிர் செய்யக்கூடிய பழங்கள், காய்கறிகள், பூக்கள் எல்லாம் அழுகிவிடாமல் பாதுகாப்பதற்காக, ஆங்காங்கு குளிர்பதனக்கூடம் அமைப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப்போலவே விவசாயிகள் தங்களுடைய கதிர்களை அடிப்பதற்காக களங்கள் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலும் நாங்கள் வரவேற்கிறோம். இன்னும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருப்பதை எல்லாம் சொல்லவேண்டுமேயானால், அதற்கு நேரம் இல்லாத காரணத்தினாலே, இப்படிச் சொல்லியிருக்கக்கூடிய கருத்துகள் எல்லாம், பாட்டாளி மக்கள் கட்சியால் வரவேற்கக்கூடிய கருத்துகள் என்று மீண்டும் ஒருமுறை சொல்லி, அதை வரவேற்கிறோம்.

சுழன்றும் ஏர்ப் பின்னது (உ)லகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

என்ற அய்யன் வள்ளுவருடைய கூற்றுக்கிணங்க, உழவுத் தொழில் தலைசிறந்ததும், முதன்மையானதும் என்று எடுத்துக்காட்டக்கூடிய வகையில்தான், இன்று இந்த மானியக் கோரிக்கையில்கூட, முதலாவது கோரிக்கையாக இந்த வேளாண்மை மானியக் கோரிக்கையை வைத்திருப்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஓர் அரசு சிறப்பான அரசாக இருக்க வேண்டுமென்று சொன்னால்,

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்

என்பதற்கேற்ப விவசாயத்தை வைத்துத்தான் ஓர் ஆட்சி சிறந்த ஆட்சியாக இருக்கும் என்பதை குடி உயர கோன் உயரும்' என்று சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வேளாண் துறை எப்படியெல்லாம் இருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் இந்த அரசு சிறப்பான அரசாக இருக்கும் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்த காரணத்தால்தான் நல்ல திட்டங்களையெல்லாம் இங்கே அறிவித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதைப்போலவே, உலக நீர் ஆதார மையம் ஒரு புள்ளிவிவரத்தை வகுத்து அளித்திருக்கிறது. அந்த மையம் சொன்ன கருத்துகளை எல்லாம் முன்வைத்துப் பார்த்தால் அதிலே இந்தியத் திருநாட்டிலே ஆறு



மாநிலங்கள் வறட்சிக்கு உள்ளாகும் என்று சொல்லி, தமிழகத்தை உள்ளடக்கியிருக்கிறார்கள். அதையெல்லாம் வைத்து, 50 ஆண்டுகள் தொலைநோக்குப் பார்வையோடு நீர்வள ஆதார மேம்பாட்டிற்காக நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்து இருக்கக்கூடிய முயற்சியை நான் பாராட்டுகிறேன். எங்களுடைய நிறுவனத் தலைவர், மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் தொடர்ந்து 3 ஆண்டுகளாகச் சொல்லி வருகிற ஒரு கருத்து, நிலத்தடி நீர் கீழே போய்க் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே மாசுபட்ட காரணத்தாலே நிலத்தடி நீர் கெட்டு இருக்கிறது, விவசாயத்திற்கும், குடிநீருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது, ஆகவே பாலாறு போன்ற ஆறுகளிலே மழைக் காலங்களிலே நீர் வீணாக ஓடுகிறது. அதைத் தேக்குவதற்கு ஆங்காங்கே Check Dam அமைக்க வேண்டும் என்பதாகும். முதல்வர் அவர்களுக்குக்கூட இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களிடத்திலே நேரிலேயும் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே இப்போது முதல்வர் அவர்களது அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். இப்போது பாலாறு போன்ற ஆறுகளிலே 5 கிலோ மீட்டருக்கு 10 அடி உயரத்திற்கு அணை கட்டித் தேக்குவோம் என்று சொன்னால், அது நிரந்தர நீர்வள ஆதாரத்தை நமக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்பாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் இப்போது விவசாயிகள் மீது அதிக பாசத்தை வைத்து, பற்றை வைத்து, விவசாயிகளுடைய வட்டி தள்ளுபடி என்று சொல்கிற நேரத்திலே, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதே நேரத்திலே விவசாயிகளுடைய எதிர்பார்ப்பு எல்லாம், வாங்கிய கடனைச் செலுத்தி விடுகிறோம், வட்டியை முழுவதுமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதுதான். அப்படித்தான் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். உங்களிடத்திலே நல்ல மனம் இருக்கிற காரணத்தால், பெரிதும் மனமுவந்து அந்த முழு வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைத் தொடங்குகிற நேரத்திலே, இப்போது உடனடியாக மின் இணைப்பு வழங்குகிறோம்; பல்வேறு சலுகைகளை வழங்குகிறோம். ஆனால், விவசாயிகள் pump set-க்காக மின் இணைப்பு வேண்டி 15 ஆண்டு காலம்கூடக் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை

இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் முன்னேறுவதற்கு, உணவுப்பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு விண்ணப்பித்த உடனேயே மின் இணைப்பு வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஏழை விவசாயிகள் வயிற்றிலே பால்வார்ப்பதைப் போல, நீங்கள் ஜீவன்தாரா கிணறுகள் வெட்டுவதற்கு, ஏழைகளுக்கு வாய்ப்பு அளித்திருக்கிறீர்கள். அப்படி வசதி இல்லாத, வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கக்கூடியவர்களுக்கு, கிணறு வெட்டுவதற்கு வாய்ப்பு அளித்திருக்கிறீர்கள்; உதவி செய்து இருக்கிறீர்கள். அவர்கள் oil engine வைத்து இறைப்பது போதாது. ஆகவே, அந்த ஜீவன்தாரா திட்டத்திலே கிணறு வெட்டியவர்களுக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு முன்னுரிமை அளிப்பதைப் போலவே, பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட விவசாயிகளுக்கும் அந்த முன்னுரிமையை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே ஒரு நல்ல அறிவிப்பை முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பணியாற்றுகிற செயலர்கள்— நான் யாரையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை—அவர்கள் குட்டி ராஜாக்களைப்போல அங்கே பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தாலே எல்லோரும் பயப்படுகிறார்கள். அந்தக் குட்டி ராஜாக்களுடைய சாம்ராஜ்யத்தை மாற்றக்கூடிய வகையிலே இப்போது மாறுதல் செய்ய வேண்டுமென்ற அறிவிப்பு, விவசாயிகள் மத்தியிலே, பொது மக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அப்படி அவர்களை மாறுதல் செய்தாலும்கூட, அவர்கள் செய்த ஊழல் என்பது சில இடங்களிலே நிறைய மலிந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஊழல் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நல்ல அதிகாரிகளை-- நான் மனம் திறந்து சொல்கிறேன். நல்ல அதிகாரிகளும் நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களை மனதாரப் பாராட்ட வேண்டும்-- ஆண்டுக்கு ஒருமுறையாவது ஒவ்வொரு துறையிலும் நேர்மையாக, இலஞ்ச லாவண்யம் இல்லாமல் பணியாற்றுகிற அதிகாரிகளைத் தேர்வு செய்து அந்த அதிகாரிகளைப் பாராட்டினால் மேலும் அவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய வகையிலே இருக்கும் என்ற காரணத்தாலே அவர்களை நான் பாராட்டவும் இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கறேன்.



அதைப்போலவே இப்போது கரும்பு விவசாயிகள் மிகுந்த எதிர்பார்ப்போடு இருந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம், கொஞ்சமாக மேல் நோக்கி உயர்த்தி, சிறுகச் சிறுக உயர்த்தி ஆயிரம் ரூபாயை எட்டிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கரும்பு கட்டுமானத்திலே கூட 8.5 சதவீதம் என்ற கட்டுமானம் இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகளுக்கு 920 ரூபாய், 930 ரூபாய் கிடைக்கக்கூடிய வகையில் உயர்த்தி இருக்கிறீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும்கூட, இது குறைந்த அளவு தொகையாக இருக்கின்ற காரணத்தால், டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்பதை நீங்கள் மனதார அறிவிக்க வேண்டுமென்பதுதான் விவசாயிகளுடைய கோரிக்கை என்று சொல்லி, அதை அறிவிக்க வேண்டுமென்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, வேறு எந்த மாநிலத்திலேயும் இலவச மின்சாரம் கிடையாது; ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள்; 900 ரூபாய் கொடுக்கிறார்கள். இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர் இலவச மின்சாரம் தேவையில்லை; ஆயிரம் ரூபாய் கரும்புக்குக் கொடுங்கள் என்று கேட்டால் அதைப் பற்றி அரசு ஆலோசிக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் இலவச மின்சாரத்தை வழங்கியிருக்கிறீர்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் யாருமே செய்யாத உயரிய காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். அதனால்தான் இந்தியாவில் உள்ள விவசாயிகள் எல்லாம் இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்குமே செய்யாத காரியம், இலவச மின்சாரம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து எக்காரணத்தைக் கொண்டும் அதைத் தடை செய்துவிடாதீர்கள் என்ற அந்த வேண்டுகோளை வைத்து, 920, 930-ரூபாய்க்கு இப்பொழுது வந்துவிட்டது. ஆகவே இன்னும் கொஞ்சம், நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மரவள்ளிக் கிழங்கு பற்றிய பிரச்சினை. சில நேரங்களில் மரவள்ளிக் கிழங்கை market-க்குக் கொண்டு போய் விற்பனை செய்ய முடியாத அளவுக்கு விவசாயிகளெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக்

குழுகூட பரிந்துரை செய்திருக்கிறது. ஆகவே நீங்கள் உடனடியாக மரவள்ளிக் கிழங்குக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையும், வருவாய்த் துறையும், வேளாண்மைத் துறையும் ஆகிய இந்த மூன்று துறைகளும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து இருக்கின்றன. இவை பிரிக்க முடியாதவை. விவசாயிகள் பயன்படக்கூடிய வகையில்-- என்னுடைய தொகுதியில் பாப்பாராப்பட்டி என்ற ஒரு நகரம் இருக்கிறது. அதைச் சுற்றியுள்ள ஏரிகளில் எவ்வளவு மழை பெய்தாலும்கூட, மழைக் காலத்தில் நீர்வரத்து இல்லை. அந்த ஏரிகளெல்லாம் வறண்டு கிடக்கின்றன. நீர்வரத்து வாய்க்கால் வேறு பக்கம் போய்விட்ட காரணத்தால், அதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய வகையில் பஞ்சப்பள்ளி வாய்க்காலில் அதை இணைத்து விட்டால் நல்லது. அந்தப் பகுதிகளில் எல்லாம் கரும்பு, பருத்தி நன்கு சாகுபடி செய்யக்கூடிய பகுதி. அந்த வாய்க்காலில் இணைக்க வேண்டுமென்று சொல்லி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இப்பொழுதுகூட நீர்வள ஆதாரத்தை மேம்படுத்துவது பற்றிச் சொன்னேன். உலக நீர்வள மேம்பாட்டு மையம் சொல்கிறது, இன்று நாட்டிலே நன்னீர் என்பது 2.25%. அதிலும் நாம் பயன்படுத்தக் கூடியது 0.25% தான். ஆகவே நீர் மிக முக்கியமானதாக இருக்கிற காரணத்தால்தான் இந்த நீர்வள ஆதாரத்தை மேம்படுத்துவதற்கு எல்லா வகையிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** நிலக்கடலை போன்ற பல்வேறு விவசாய உற்பத்திப் பொருட்கள் இருக்கின்றன. கரும்புக்கு விலை நிர்ணயம் செய்கிறோம். மற்ற பொருட்களுக்கும் நிர்ணயம் செய்கிறோம். காய்கறிகளுக்காக உழவர் சந்தை கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்திருக்கிறார்கள். அதைப்போல, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய எல்லாப் பொருட்களுக்கும் சரியான விலை கிடைக்க வேண்டும். அதுபோல வாங்கிப் பயனடையும் நுகர்வோருக்குக் கட்டுப்படியான விலை இருக்க வேண்டுமென்ற காரணத்தால் நான் ஏற்கெனவே தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறேன். இந்த ஆண்டு இந்தப் பொருளுக்கு இந்த விலைதான் என்று எல்லாப் பொருட்களுக்கும் நிர்ணயம் செய்யக்கூடியவகையில் நம்முடைய



முதலமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நாட்டிலே இருக்கிற அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுவார்கள். இந்த நாட்டு மக்கள் மனதிலே முதலமைச்சர் அவர்கள் மேலும் நிலைத்து இருப்பார்கள் என்ற அந்த நல்ல செய்தியைச் சொல்லி அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி)** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

*** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் என்று நினைக்கிறேன்; மதுரை சர்க்கரை ஆலை தனியாரிடத்தில் இருந்தது. அதைப்பற்றி நான் இந்த மன்றத்திலே பேசி, அந்தச் சர்க்கரை ஆலையை தனியாரிடமிருந்து அரசு எடுத்துக்கொண்டது. தனியாரிடத்தில் இருப்பது வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் கரும்பு விவசாயிகளுக்குச் சரியாகப் பணம் பட்டுவாடா செய்வதில்லை. சரியானபடி அவர்களுக்குக் காலாகாலத்தில் அந்தப் பணத்தைக் கொடுப்பதில்லை. ஆகையால் அன்றைக்கு அரசாங்கத்தில் எடுத்துக்கொண்டோம். இப்பொழுது நாங்கள் பரவலாகக் கேள்விப்படுவது, நம்முடைய அரசு அந்த மில்லைத் தனியாரிடத்தில் ஒப்படைக்க இருப்பதாக அறிகிறேன். அந்த மில்லை அப்படித் தனியாரிடத்தில் ஒப்படைத்தோமானால், அது உண்மையிலேயே விவசாயிகளுக்குச் செய்ய இருக்கும் மிகப் பெரிய கொடுமை என்றுதான் நான் கருதுகிறேன். எனவே அதைக் கைவிட வேண்டுமென்று விவசாயிகளின் சார்பில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

தென்னை விவசாயிகளைப் பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். தென்னைக்கு Eriophyid நோய் ஏற்பட்டு அந்தத் தென்னை முழுவதுமாக குறைந்த காய்ப்பு ஏற்பட்டு மகசூல் குறைந்துவிட்ட்து. பட்டிவீரன்பட்டி, வத்தலகுண்டு areaவில் எல்லாம் மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டது. அதையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லியும்கூட அதற்கு

உடனடியாக நிவாரணம் செய்யப்படவில்லை. கேரளாவிலே தென்னையில் அந்த வியாதி உண்டான உடனேயே அரசாங்கமே மருந்து தெளித்து, அந்த வியாதிகளையெல்லாம் கட்டுப்படுத்தி இருக்கிறது என்று நாம் அறிகின்றோம். அதேபோன்று, இந்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும். பல ஆண்டு காலம் தென்னை வளர்த்து, அந்தத் தென்னையிலேயிருந்து வருமானம் இல்லாமல் போய்விடுமேயானால், அந்த விவசாயிகளுடைய நிலைமை என்னவாகும்? இதுமாதிரி பலமுறை நான் சொல்லியிருக்கின்றேன். நெல்லிலே சீக்கு வருகின்றது. அந்த நெல்லிலே சீக்கு வரும்போது, யாராவது ஒருவர், இரண்டுபேர் சொன்னால், அதற்கு மட்டும் மருந்து அடிக்கப்படுகின்றது. ஆனால் எங்கெங்கெல்லாம் சீக்கு வருகின்றதோ அவற்றை முழுமையாக அரசாங்கமே எடுத்து, உரிய அதிகாரிகளே சென்று ஏகமாகப் பூச்சி மருந்து அடிக்க வேண்டும். அப்படிப் பூச்சி மருந்து அடித்துவிட்டு, அவர்களிடமிருந்து பணம் உடனடியாக வாங்க முடியாவிட்டாலும்கூட கிஸ்தி மூலமாக அந்தப் பணத்தை வசூல் செய்துகொள்ளலாம் என்பதையெல்லாம் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதையும் நீங்கள் அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கரும்பு விவசாயம் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு 9 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. பாண்டியராஜபுரத்தைப் பொறுத்தவரையிலே மத்திய அரசு 571 ரூபாய் கொடுக்கிறது; மாநில அரசு கொடுப்பதும் சேர்ந்து 800 ரூபாய் கிடைக்கிறது. அதைக்கூட குறைக்கக்கூடிய அளவிலே தனியாருக்குக் கொடுப்போமேயானால், அவர்கள் அந்தப் பணம் கொடுப்பதற்குத் தயங்குவார்கள்; விவசாயிகளுக்கு நியாயமான முறையிலே பணம் கிடைக்காது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, நான் மீண்டும் அந்த விவசாயிகள் சார்பிலே அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, எந்தக் காரணத்தை முன்னிட்டும் பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையை, மதுரை சர்க்கரை ஆலையைத் தனியாருக்கு ஒப்புவிக்கக்கூடாது என்பதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதனால், மிகப் பெரிய ஒரு கொடூரமான செயலுக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுவிடுவார்கள் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேமாதிரி, விவசாயிகளுக்கு அந்தப் பணத்தைக் கட்டாயமாகக் கொடுப்பதற்கான சூழ்நிலையை நாம் உருவாக்கியாக வேண்டும்.

உணவு பதப்படுத்துவதுபற்றி பலமுறை இங்கே பேசி இருக்கிறேன். அவர்களுக்குச் சரியான முறையிலே விலை கிடைப்பதில்லை.



எங்களுடைய area வைப் பொறுத்தவரையிலே பலவிதமான பழங்கள் உற்பத்தியாகின்றன. கொடைக்கானல் மலை, பன்னங்காடு மலை, தாண்டிக்குடி மலை ஆகிய மலைகளிலெல்லாம் ஆரஞ்சுப் பழம், சாத்துக்குடிப் பழம், அன்னாசிப்பழம், வாழைப்பழம் ஆகியவை உற்பத்தியாகின்றன. கீழ்ப் பகுதியிலே திராட்சைப் பழம் மற்றும் இந்த மாதிரி மற்ற பழங்கள் நிறைய உற்பத்தியாகின்றன. அப்படிப்பட்ட பழங்கள் நிறைய உற்பத்தியாவதால் ஒரு பழப்பக்குவத் தொழிற்சாலையை ஏற்படுத்துங்கள் என்று நான் பலமுறை இங்கே சொல்லியிருக்கிறேன். அப்போதுதான் விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று நான் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும்கூட, அரசாங்கம் சிலசமயங்களில் நாங்கள் சொல்லும்போது வேலைகளையெல்லாம் செய்து கொடுத்தது. இப்போது என்ன காரணமோ தெரியவில்லை, எந்த வேலையைச் சொன்னாலும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அவர்கள் என்ன சொல்வது, நாம் என்ன செய்வது என்ற நிலைமையை உருவாக்குவதாகத் தெரிகின்றது. இம்மாதிரி பாகுபாட்டை இவ்வளவு சீக்கிரத்தில் நீங்கள் பார்ப்பீர்களானால், அது நல்லதா என்பதைத் தயவுசெய்து, அமைச்சரவை சற்று சிந்தனை செய்து பார்க்க வேண்டும். நாம் யாருக்குச் செய்கிறோம்? என்னுடைய தொகுதி, ஏழைகள் வசிக்கக்கூடிய தொகுதி. சிறிய, சிறிய விவசாயிகள் பழம் உற்பத்தி செய்கிறார்கள். நான் ஏற்கெனவே சொல்லிக்கொண்டே இருக்கிறேன். அங்கே 413 ஏக்கர் எடுத்தோம், அது இன்னும் சும்மா கிடக்கிறது என்று. அதிலே இந்தத் தொழில்களெல்லாம் உண்டாகுமேயானால் பல ஏழைகளுக்கு உதவியாக இருக்கும். அங்கே கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். எனவே, இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, அங்கே பழப்பக்குவத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நிறைய காய்கறிகள் உற்பத்தியை நாங்கள்தான் செய்கிறோம். நாங்கள் உற்பத்தி செய்கிற காய்கறிகளுக்குப் போதுமான விலை கிடைக்கவில்லை. அவர்கள் அதையும் இங்கே ஒரு பக்கம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு நாம் செய்ய வேண்டிய வேலை என்ன? அதாவது விவசாயிகள் விவசாயத்திற்காக, கூட்டுறவு முறையிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். அதைக் கட்ட முடியவில்லை. நாங்கள் முழுமையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று

கேட்டுக்கொள்ளவில்லை. ஆனால், முதல்வர் அவர்கள் கூடுதல் வட்டிபற்றிச்சொல்லியுள்ளார்கள். எவ்வளவு கூடுதல் வட்டி வரும்? அந்தக் கூடுதல் வட்டியை எத்தனை பேர் கட்டாமல் இருப்பார்கள்? ஆகவே, வட்டி முழுமையையும் தள்ளுபடி செய்ய வேண்டும். முழுக் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று என்னைப் பொறுத்தவரையிலே, எங்கள் தலைவரைப் பொறுத்தவரையிலே நாங்கள் சொல்லவில்லை. வட்டி முழுமையையும் கூடுதல் வட்டியையும் தள்ளுபடி செய்யுங்கள். அவர்கள் கொடுக்கக்கூடிய பணத்திற்குண்டான வட்டியையும் தள்ளுபடி செய்யுங்கள். வட்டியைத் தள்ளுபடி செய்து, அசலுக்கு ஒரு கால நிர்ணயம் செய்யுங்கள். மூன்று ஆண்டு காலமோ, இரண்டு ஆண்டு காலமோ அல்லது ஐந்து ஆண்டு காலமோ, கால நிர்ணயம் செய்து, ஒவ்வோர் ஆண்டும் இவ்வளவு பணத்தைக் கட்டுங்கள் என்று சொன்னால்தான் அவர்கள் அதிலிருந்து மீளமுடியும். எவ்வளவோ பணம் போகிறது. கோடிக்கணக்கான பணத்தை இப்போது செலவழிக்கிறோம். அதில் சில திட்டங்கள் உருப்படாமல் போய்விடுகின்றன. ஆகையினாலே, இந்தக் கடனைப் பொறுத்தவரையில் இந்த அளவிற்காவது நீங்கள் செய்ய வேண்டுமென்று உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் அதிகமாகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** எங்கள் தொகுதியிலே தேங்காய் நிறைய உற்பத்தி ஆகிறது. நான் சென்றமுறை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சொன்னேன். ஒருவர், தேங்காயை அரைத்து, அதிலிருந்து தேங்காய்ப்பால் உற்பத்தி செய்து, அதை வெளிநாட்டுக்கு அனுப்புகிறார். அதற்கு permission கொடுங்கள் என்று கேட்டிருந்தேன். அதை உடனே ஏற்று, வரி விலக்குக் கொடுத்தார்கள். அப்படி உடனே கொடுத்தும் இப்போது தேங்காய்க்கு சரியான விலை கிடைக்கவில்லை. ஆகவே தேங்காயைப் பறித்து விற்க முடிவில்லை; அதை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆகையினாலே, விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பழம், தேங்காய் போன்றவற்றிற்கெல்லாம் தயவுசெய்து ஒரு விலையை நிர்ணயம் செய்யுங்கள். இப்போது உழவர் சந்தை என்று நாம் வைத்திருக்கிறோம். அந்த உழவர் சந்தை மூலமாகவாயினும், அங்கே இருக்கிற அதிகாரிகள் மூலமாகவாயினும், இவர்களுக்குப் போதுமான அளவிற்கு விலை கிடைப்பதற்கான ஓர் ஏற்பாடு செய்தால்



நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பிறகு நான் ..... (குறுக்கீடு)

பிற்பகல் 1-05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** கொஞ்சம் இருங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இந்த விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் சென்றமுறையே பேசினேன். அதை ஏனோ மாண்புமிகு முதல்வர் அவர்கள், காதிலே வாங்கக்கூட இல்லையென்று கருதுகிறேன். காரணம் வருஷநாட்டுப் பகுதியில் ஆண்டுதோறும் மழை பெய்கின்றது. அங்கே, கம்பம் பள்ளத்தாக்கிலே மழை பெய்தாலும் சரி, வருஷநாடு பகுதியிலே மழை பெய்தாலும் சரி, அங்கேயிருந்து வெள்ளம் கரை புரண்டு வந்து பாதிப்பு ஏற்படுகின்றது. நாங்கள்தான் பாதிக்கப்படுகின்றோம்; என் மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். அந்தக் கரை உடைந்து ஆயிரக்கணக்கான வீடுகள் அடித்துச் செல்லப்படுகின்றன. அவர்கள் வைத்திருக்கிற துணிமணிகளை எல்லாம் எடுக்கமுடியாமல் அடித்துச் செல்லப்படுகின்றன. பண்ட பாத்திரங்களும் அடித்துச் செல்லப்படுகின்றன. ஆகவே, அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டிருக்கின்றேன். அந்த உடைப்பை அடைக்க வேண்டும். இப்போது நீங்கள் எங்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதியாக 50 இலட்சம் என்பதை 60 இலட்ச ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றீர்கள். இந்தப் பணத்தைக் கொடுத்து அந்த உடைப்பை அடைக்க முடியாது. அதற்கு ரூபாய் ஆறு கோடியிலிருந்து ஏழுகோடி வரை செலவாகலாம். எப்படியோ பணம் ஒதுக்கி தடுப்புச் சுவர் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எத்தனையோ வேலைகள் செய்து கொடுத்தீர்கள். எனவே இந்த வேலையையும் செய்து கொடுத்தால் நன்றியோடு இருப்பேன் என்பதையும் கூறி, அதைக் கொடுத்தால் கூடப் போதாது. அதற்கு எப்படியும் குறைந்தது ரூபாய் ஆறு கோடியிலிருந்து ஏழு கோடியாவது ஆகும். முதல்வர் அவர்கள் அந்தப் பணத்தை ஒதுக்கி, அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று நினைத்தார்களேயானால், இந்தப் பணத்தையாவது ஒதுக்கி, தடுப்புச் சுவர் கட்டுவதற்கான ஒரு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே செய்த வேலைகளுக்கு நான் நன்றியோடு இருக்கிறேன்; செய்யாத வேலைகளைச்

சுட்டிக்காட்டுகிறேன்; செய்யாவிட்டால் கடுமையாக பாதிப்புக்கு ஆவோம். ஆகையினாலே, தயவு செய்து.... (மணியடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நேரம் ஆகிவிட்டது.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** இந்த வேலைகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்காக நன்றி சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று வேளாண்மை மானியக் கோரிக்கைகளான 20 மற்றும் 52 ஆகியவற்றின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்பது பேர் கலந்துகொண்டு பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் இங்கு பேசிய கருத்துகளுக்கு விளக்கமான பதிலைத் தருவதற்குப் போதிய நேரம் இல்லை என்பதை அவை அறியும். இந்த மானியக் கோரிக்கைகளின்மீது 31 சட்டப்பேரவை உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அதிலே கோரிக்கை எண் 20-ன்மீது 200 வெட்டுத் தீர்மானங்களும், கோரிக்கை எண் 52-ன் மீது 108 வெட்டுப் பிரேரணைகளும், மொத்தம் 308 வெட்டுப் பிரேரணைகள் வந்திருக்கின்றன. அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள், எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்பவை வருகின்றன. ஒருவேளை இதை எடுத்துக்கொள்ள இயலாது என்றால் துறையின் சார்பில் தகவல்களைப் பெற்று, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். பதில் தராவிட்டாலும் அரசின் நடவடிக்கைக்கு உட்பட்டதாக அவை இருக்கும் இந்த நிலைகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

தமிழகத்தினுடைய 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதலமைச்சர், எங்களுடைய தலைவர், அண்ணன் கலைஞர் அவர்கள் புதிய நூற்றாண்டின் பரிசாக விஞ்ஞான ரீதியாக, ஆக்கபூர்வமாக இந்தப் பேரவையிலே தாக்கல் செய்து, அதன்மீது பொது விவாதம் நடைபெற்று, அவர்களுடைய பதிலையும் இந்த அவை பெற்று இருக்கிறது. எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், "அமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொள் என்றாலும், சிறைச்சாலைக்குச் செல் என்றாலும், என் தம்பி கருணாநிதி ஒன்றாகக் கருதுபவன்" என்று சொன்னதற்கேற்ப, "இன்னும் ஆட்சியிலே எவ்வளவு காலம் இருக்கப் போகிறோம்" என்பதைப்பற்றிக் கவலைப்படாமல், "இருக்கின்ற காலத்தில் நம்மை நம்பிய மக்களுக்கு, நம்மிடத்திலே பொறுப்பை ஒப்படைத்த மக்களுக்கு எந்த அளவுக்குக் கடமையாற்றுகிறோம்" என்ற அந்தக் கொள்கையிலேயே இன்றைக்கும் நின்று, தமிழக மக்களுடைய பாராட்டுதலைப் பெற்று நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.



பிற்பகல் 1-10

பெருகிவரும் காவிரி நீரைத் தடுத்து நிறுத்தி, வேளாண்மைக்காக கரிகால் சோழன் கல்லணையை கி.பி. 2ஆம் நூற்றாண்டில் கட்டினான். பொறியியல் விஞ்ஞான வளர்ச்சி இல்லாத அந்தக் காலகட்டத்தில் கட்டப்பட்ட கல்லணை இன்றும் மிகவும் உறுதியாக உள்ளது. அதேபோல் காவிரி பெருக்கெடுத்து வரும்போது கொள்ளும் இடம் கொள்ளிடம்; அந்தக் கொள்ளிடக் கால்வாயை வெட்டியவர்கள் சோழ மன்னர்கள். இத்தகைய பெருமைக்குச் சொந்தக்காரர்கள் தஞ்சையை ஆண்ட சோழ மன்னர்கள். அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்தான் நமது தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேளாண் பெருமக்களின் பாதுகாவலராக, அவர்களுக்கு உதவிடும் பண்பாளராகத் திகழ்வது இரண்டாவது கரிகால் சோழன் எங்கள் தலைவர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உணவு உற்பத்தி; நமது அடிப்படைத் தேவைகளில் உணவே முக்கிய பங்கு வகிக்கின்றது. தமிழகத்தில் 65 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் 28.11 இலட்சம் எக்டேர் பாசன வசதி பெற்றுள்ளது. இதில் 13.69 இலட்சம் எக்டேர் கிணற்றுப் பாசனம் மூலமும், 8.19 இலட்சம் எக்டேர் ஆற்றுப் பாசனம் மூலமும், 6.23 இலட்சம் எக்டேர் ஏரிப் பாசனம் மூலமும் பாசன வசதி பெற்றுள்ளது. இவ்வாறு சாகுபடி செய்யும் நிலப் பரப்பு தொழிற்சாலைகளாகவும், குடியிருப்புகளாகவும் மாறிவரும் சூழ்நிலையில், இருக்கின்ற நிலத்தைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது காலத்தின் அவசியமாக இருக்கிறது. நம் நாட்டில் படித்தவர்கள் குறைவாகவும், அப்படிப் படித்தவர்களில் மிகக் குறைவானவர்களே உழவுத் தொழிலில்

ஈடுபட்டுள்ள காரணத்தாலும், விஞ்ஞான முறைகளைப் புகுத்தி விவசாயப் புரட்சியைத் தோற்றுவிப்பது குறித்து தொடர்ந்து மக்களுக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது.

1966-67 ஆம் ஆண்டு 50.29 இலட்சம் எக்டேர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட மொத்த உணவு உற்பத்தி 54.48 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். இதுவே, 1998-99-வது ஆண்டில் 36.76 இலட்சம் எக்டேர் சாகுபடி செய்யப்பட்டு, 94.12 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. இதுதான் நம்முடைய முதலமைச்சர் கலைஞருடைய ஆட்சியின் சாதனை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதுவே அகில இந்திய அளவில் உணவு உற்பத்தியில் உன்னத சாதனை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது 1998-99 ஆம் ஆண்டில் ஒரு எக்டேர் நிலத்தில் சராசரியாக 3,579 கிலோ அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் பஞ்சாப் 3,152-கிலோ உற்பத்தித் திறனும், ஆந்திரப் பிரதேசம் 2,781 கிலோ உற்பத்தித் திறனும், கர்நாடகம் 2,529 கிலோ உற்பத்தித் திறனும், மேற்கு வங்காளம் 2,255 கிலோ உற்பத்தித் திறனும், ஹரியானா 2,239 கிலோ உற்பத்தித் திறனும், ஒரு எக்டேருக்குக் கொண்டிருந்தன.

பிற்பகல் 1-15

1999-2000 ஆம் ஆண்டில் தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி 97.32 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவுக்குச் சாதனையை எட்டியுள்ளது. இது இந்தியாவின் உணவு உற்பத்தியில் தமிழகத்தின் சாதனை.

1997-98 ஆம் ஆண்டில் பஞ்சாப் 3,465 கிலோ அரிசி உற்பத்தி செய்தது ஒரு எக்டேருக்கு. மாண்புமிகு திரு. சுப்பராயன் அவர்கள்கூட நிதிநிலை அறிக்கையிலே பேசும்போது கேட்டார் நீங்கள் உற்பத்தித் திறனை அதிகரித்திருக்கிறீர்களா என்று. அதற்காகத்தான் இந்தப் பதில். தமிழ்நாடு 1997-98 ஆம் ஆண்டு 2,987 கிலோ. அதுவே 1998-99 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதலிடமாக தமிழகம் 3,579 கிலோ (மேசையைத் தட்டும் ஒலி) பஞ்சாப் 3,152 கிலோ, அதைப்போல ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், மேற்கு வங்காளம், ஹரியானா. ஆக இந்தியாவிலேயே முதலிடமாக அரிசி உற்பத்தியிலே இப்போது தமிழகம் நிமிர்ந்து நிற்கிறது. அப்படி நிற்பதற்கு என்ன காரணம்? அண்ணா அவர்கள் இந்த அவையிலே ஒரு முறை சொன்னார். சட்டப் பேரவை



எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த திரு. விநாயகம் அவர்கள்—காங்கிரஸ் கட்சி அப்போது எதிர்க்கட்சியாக இருந்தது—புளி விலை குறைந்துவிட்டது என்று சொல்கிறீர்களே, அது யாருடைய தயவால் என்று கேட்டார். அண்ணா யோசித்துப் பார்க்கவில்லை, நேரம் எடுத்துக்கொள்ளவில்லை, உடனே எழுந்தார். அது புளிய மரத்தினுடைய தயவால் என்றார். அதைப்போல எங்களுடைய தலைவரை நீங்கள் கேட்டால், அவர் யோசித்து அல்லது குறிப்பு வைத்துக்கொண்டு சொல்லக் கூடிய தலைவரல்ல. அதற்கு உரிய பதிலை உடனடியாகத் தருகிற ஆற்றல் படைத்தவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே அமர்ந்திருக்கிறார்.

இந்த 4 ஆண்டுகளிலே விவசாயத் துறையிலே தமிழகத்திலே இந்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் தொழில்நுட்ப ஆலோசனைதான். திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னார்கள், தொழில்நுட்பங்கள் அடித்தளத்து விவசாயிகளுக்கு முழுமையாயாகச் சென்று அடைவதில்லை என்று. அது உண்மையல்ல. தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள், நல்ல விதைகள் ஆகியவற்றை உரிய காலத்திலே கொடுத்த காரணத்தினாலேதான், இந்த 4 ஆண்டு காலத்திலே மகத்தான சாதனையை உணவு உற்பத்தியிலே தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல மற்ற எல்லா விவரங்களும் என்னுடைய கையிலே இருந்தாலும் அவற்றை இங்கே முழுமையாகச் சொல்லக்கூடிய வாய்ப்பு எனக்குக் குறைவு. கடந்த ஆட்சிக் காலத்தில் அரிசி உற்பத்தி 1994-95-இல் ஒரு எக்டேருக்கு 3,392 கிலோ. ஆனால் இப்போது 1998-99-இலே 3,579 கிலோ ஒரு எக்டேருக்கு. இந்த உற்பத்தித் திறன் அதிகரித்திருப்பதற்குக் காரணம் இந்த அரசு எடுத்த சீரிய முயற்சி என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 1995-96 ஆம் ஆண்டில் 19.51 இலட்சம் எக்டேர் பரப்பில் அரிசி உற்பத்தி செய்யப்பட்டு அடையப்பட்ட சாதனை 52.90 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். அதுவே 1998-99 ஆம் நிதியாண்டில் 22.75 இலட்சம் எக்டேர் பரப்பில் அரிசி உற்பத்தி செய்யப்பட்டு 81.41 இலட்சம் மெட்ரிக் டன் சாதனை அடையப்பட்டுள்ளது. தமிழக அரிசி உற்பத்தி திறன் ஏக்கருக்கு 3,599 கிலோவாக உயர்ந்து சாதனை அடையப்பட்டுள்ளது. 1999-2000 நிதியாண்டில் சாகுபடி பரப்பு குறைந்தாலும் இதே உற்பத்தித் திறனுடன் 77.92 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்து சாதனை அடையப்பட்டுள்ளது. எல்லாப் பயிர்கள் பற்றிய விவரங்களும் என்னிடத்தில் இருக்கின்றன.

உரத்தைப்பற்றி இங்கே சொன்னார்கள். இடுபொருட்கள் விலைகள் உயர்ந்துவிட்டன என்று சொன்னார்கள். 1996 ஆம் ஆண்டு தி.மு.க. உள்ளிட்ட ஐக்கிய முன்னணி அரசு மத்தியிலே பொறுப்பேற்ற பிறகு, உரங்களின் விலைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டன. 1-10-1995-லே 50 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை டி.ஏ.பி. ரூபாய் 530 ஆக இருந்தது. 1-10-1995-லே யார் ஆட்சியிலே இருந்தார்கள்? தமிழ் மாநில காங்கிரசுக்குத் தெரியாதா? இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா? அல்லது அ.தி.மு.க. நண்பர்களுக்குத் தெரியாதா? எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அந்த ஆட்சியில் 530 ரூபாயாக இருந்த 50 கிலோ எடை கொண்ட டி.ஏ.பி. பிறகு 1996-லே தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு 431 ரூபாயாகக் குறைக்கப்பட்டது. அதுபோல ரூ.397.35 காசுகளாக இருந்த 50 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை 1717 ரூ.374.14 காசுகளாகவும் அதுபோல ரூ.240.50 காசுகளாக இருந்த பொட்டாஷ் 192.00 ரூபாயாகவும் குறைக்கப்பட்டது.

பிற்பகல் 1-20

அதைப்போல அனைத்து உரங்களும், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையில் கிடைக்கின்ற அளவுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. அதுபோல யூரியா விலையைக் குறைத்து விவசாயிகளுக்கு அளிக்கும் வகையில் 5-3-1997 அன்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் யூரியா மீதான விற்பனை வரியை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்தார்கள். அப்படிக் குறைத்த காரணத்தால் தொடர்ந்து உரத்தினுடைய விலையைக் கட்டுப்பாட்டுக்குள்ளேயே நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிறோமே தவிர, ஒன்றும் உயரவில்லை. இப்போதும்கூட மத்திய அரசாங்கம் யூரியா விலையை உயர்த்தியிருக்கிறது. இருந்தாலும் 1995-லே டி.ஏ.பி. விலை ஒரு மூட்டை 530 ரூபாய் என்றால் 1997-லே 431 ரூபாய், இப்போது என்ன விலை இருக்கிறது என்றால் 29-2-2000 அன்று ரூ.462.20 காசுகள். ஆனால் 1995-லே இருந்த விலையைவிட இப்போது குறைவுதான். அதுபோல டி.ஏ.பி. 530 ரூபாய் ஒரு மூட்டை; 1997-லே 431 ரூபாய், இப்போது ரூ.462.20 காசுகள், 1995-லே இருந்ததைவிட இப்போதும் குறைவுதான். பொட்டாஷ் ரூ.240.50 காசுகள் 1995-லே ; ரூ.1997-லே ரூ.192.00; இதிலே மட்டும்தான் இப்போது 220.86 காசுகள், என்றாலும்கூட 1995-லே இருந்ததைவிடக் குறைவு. இப்படி ஒவ்வொன்றுக்கும் என்னிடத்திலே ஆதாரங்கள் இருக்கின்றன. ஆகவே, இந்த அரசு விவசாயிகளுடைய நலனைப் பாதுகாப்பதில் முனைப்போடு இருக்கிறது என்பதற்காக உங்களுக்கு எடுத்துத் தருகிற விளக்கங்கள் இவை.



தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வா.செ. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவைப் போட்டு அந்தக் குழு தமிழ்நாடெங்கும் ஆய்வு செய்து 37.84 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்கள் எனக் கண்டறியப்பட்டு, அவற்றை விளை நிலங்களாகக் கொண்டுவருவதற்காக எடுக்கப்பட வேண்டிய ஆலோசனை வழங்கப்பட்டு, அரசு அளவிலே பரிசீலிக்கப்பட்டு, இப்போது முதற்கட்டமாக 10 மாவட்டங்களிலே 10,000 எக்டேர் நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து 2000-2001 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய் செலவில் 24 மாவட்டங்களில் 30,000 எக்டேர் பரப்பளவினை விளை நிலங்களாகக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம்.

அதுபோல, எல்லோரும் வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான்; எந்த வகையிலே பார்த்தாலும் ஒரு தொடர்பு இருக்கும். ஆகவே, அவர்களுக்கு ஒரு தொழில் நுட்பக்கல்வியைத் தர வேண்டுமென்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அந்த அடிப்படையில் 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகளிலும், 100 மேல்நிலைப்பள்ளிகளிலும், இப்பாடத் திட்டம் தொடங்கப்பட பாடப் புத்தகங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு, உரிய வேளாண்மைப் பட்டதாரி ஆசிரியர்களெல்லாம் நியமிக்கப்பட சம்பந்தப்பட்ட அந்த வாரியத்திற்கு எழுதப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இங்கே தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

அதுபோலத் தென்னையைத் தாக்கும் Eriophyid, சிலந்தி நோயைப் பற்றி இங்கு எல்லோரும் கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நோய் முதலிலே கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், கரூர் போன்ற மாவட்டங்களைத் தாக்கியது. உடனடியாக வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பல்கலைக்கழகம், விவசாயிகளோடு தொடர்பு கொண்டு, ஏன் நானும் கூட அந்தப் பகுதிக்குச் சென்று, நிலைமைகளையெல்லாம் அறிந்து அதைக் கட்டுப் படுத்துவதற்கு உரிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒரு பரிந்துரை செய்தது. அந்த விவரம் எல்லோருக்கும் தெரியும். அந்த அடிப்படையிலே நாம் நடவடிக்கை எடுத்தோம். 60 சதவிகிதம் கட்டுப்படுவதற்குரிய

நிலை; 40 சதவிகிதம் கட்டுப்பட முடியாத நிலை. பிறகு மேலும் பரவலாகியது அந்த நோய் தமிழ்நாடு முழுவதும்; அது எந்த மாவட்டத்தையும் விட்டுவைக்கவில்லை. எல்லா மாவட்டங்களுக்கும் அந்த நோய் பரவியிருக்கிறது.

அந்த நோயைக் கட்டுப்படுத்த இப்போது கேரளாவிலே ஒரு முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அதுகுறித்து நான்கூடக் கேட்டேன், எந்த ஆதாரத்தின்பேரில் சொல்கிறீர்கள் என்று. நீங்கள் சொல்வதை வைத்து நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொன்னேன். பல்கலைக்கழகம் ஒரு ஆராய்ச்சி செய்து அந்த முடிவை அரசு ஏற்று நடைமுறைப்படுத்த முடியுமா என்பதைப் பார்த்துத்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, சொல்வதையெல்லாம் வைத்துக் கொண்டு ஒரு முறையைப் பின்பற்றிவிட முடியாது. ஏனென்றால் அது பின்னாலே pollution control-பிரச்சினையை எல்லாம் கொண்டு வரும்; பின்விளைவுகள் ஏற்படும். அப்படி ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய கடமையும் அரசுக்கு இருக்கிறது என்ற அடிப்படையிலே என்னுடைய பதிலில் கூட அன்றைக்கு நான் சொன்னேன். இப்போது அதுபற்றி நம்முடைய பல்கலைகழகத்தின்மூலமே பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், விஞ்ஞானப் பெருமக்களையெல்லாம் கொண்ட ஒரு குழுவைப் போட்டு, அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது கேரளா பல்கலைக்கழகமும் ஒரு முறையைக் கண்டுபிடித்து அந்த விவரமும் என்னிடம் இருக்கிறது. நான் படிப்பதற்கு நேரம் இல்லை. அவர்களிடத்திலேயிருந்து பெற்று நம்முடைய பல்கலைக்கழகத்திடம் கொடுத்து அதையும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து ஒரு முடிவைச் சொல்ல வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். விரைவிலேயே அந்த அறிக்கையை நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகம் தர இருக்கின்றது. தந்த பிறகு அந்த—Eriophyid நோயை—சிலந்தி நோயைக்—கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய பூச்சி மருந்துகள் குறித்து ஆலோசனை வழங்குவது அல்லது, முடிந்தால் அரசாங்கத்தினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப உதவிகள் செய்ய முடியுமானால், உதவிடுவது என்பதிலே நம்முடைய முதலமைச்சர் நிச்சயமாகத் தயாராக இருப்பார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் பேசுகிறபோது சொன்னார், அப்போது மத்திய வேளாண்மைத் துறை



அமைச்சரிடத்திலே எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கோரிக்கை வைத்தார்கள் என்று. நாமும் இந்த நோயை உடனடியாகக் கட்டுப்படுத்த கொச்சியிலே இருக்கக்கூடிய Coconut Development Board என்ற வாரியத்திடமிருந்து பண உதவி கேட்டோம். அவர்கள் முதலிலே 25 இலட்சம் ரூபாய் தந்தார்கள். அந்த 25 இலட்ச ரூபாயை வைத்துக் கொண்டு பாதிக்கப்பட்ட 8,33,333 மரங்களுக்குக் கொடுத்தோம். அதனைத் தொடர்ந்து நாம் மேலும் வலியுறுத்திக் கேட்டபோது, தென்னை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலே 82,50,000 ரூபாய் கொடுக்கப்பட்டது. அதையும் இந்த நோய் பாதிக்கப்பட்ட மரங்களுக்கு மருந்துகள் வழங்கி, நோயைக் குணப்படுத்துவதற்காக ஒரு மரத்திற்கு 8 ரூபாய் வீதத்திலே பாதிக்கப்பட்ட மரங்களுக்கு அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை போதாது, இன்னும் கூடுதலாகத் தர வேண்டும் என்றுகூட இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அப்போது நான் 2 கோடி ரூபாய் என்று சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து, மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதியிருக்கிறோம். எழுதாமல் இல்லை. 20 கோடியே, 33 இலட்சம் ரூபாய் கேட்டு மத்திய அரசாங்கத்திற்கு இந்த மாநில அரசாங்கத்தின் சார்பில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் பணம் கிடைக்கவில்லை. வலியுறுத்தவில்லையா என்று கேட்டால், வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் தலைமையில் இருக்கக்கூடிய இந்த ஆட்சியினர் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும்; அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அந்த இடையூறுகளிலிருந்து அவர்களை மீட்க வேண்டும் என்ற அந்த அக்கறை உடையவர்கள்தான். அதில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல, இந்த அரசினர். இன்னும் சொல்லப்போனால் எந்த மாநிலத்திலும் இருக்கக்கூடிய முதலமைச்சரையும்விட—நான் யாரையும் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம்—விவசாயக் குடும்பத்திலே பிறந்த நம்முடைய முதலமைச்சருக்கு இதிலே நிரம்ப அக்கறை உண்டு. எங்களை எல்லாம் அழைத்து அடிக்கடி பேசக் கூடியவர்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அந்த அடிப்படையிலே மத்திய அரசிடத்திலே நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதேபோல, நம்முடைய பாலசுப்பிரமணியன் அவர்கள் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பது பற்றியெல்லாம் இங்கே கேட்டார்கள். தமிழ்நாட்டிலே பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் மாநில பருத்திக் குழுவை இந்த அரசு அமைத்துள்ளது. மத்திய அரசு 9-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே பருத்தித் தொழில்நுட்பங்களுக்காக, தமிழ்நாடு உட்பட, பருத்தியை அதிகமாகப் பயிரிடும் 11 மாநிலங்களுக்கு மொத்தம் 566.50 கோடி ரூபாயை ஒதுக்கியது. இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டில் தமிழ்நாட்டுக்கு 533 இலட்சம் நிதியும் வழங்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் இங்கே பேசுகிறபோது, ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். அதைப்போலவே, எல்லா உறுப்பினர்களும், ஆங்காங்கே இருக்கின்ற தோட்டக்கலைத் துறை சம்பந்தப்பட்ட இடங்களில், வேளாண்மைத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற இடங்களில், கன்னியாகுமரியில் இருப்பவர்கள், இப்படி எல்லா உறுப்பினர்களும் வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நிலத்தைப் பற்றிப் பிரச்சினையே கிடையாது. எல்லா இடந்திலும் இருக்கிறது. நிலம் இருக்கின்ற இடத்தில் எல்லாம் கல்லூரியை ஆரம்பித்துவிடுவது என்று சொன்னால், இது என்ன தொடக்கப் பள்ளியா, ஆரம்பித்துவிடுவதற்கு? இது தொடக்கப் பள்ளியல்ல. ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமானால், பல்கலைக்கழகத்தினுடைய பரிந்துரையின்படி, அவர்கள் சொல்லுகின்ற செலவையும் கணக்கிட்டுப் பார்த்தால் 40 கோடி ரூபாய் செலவாகும். 40 கோடி ரூபாயைச் செலவு செய்து, மாணவர்கள் அதிலே படித்து முடித்துவிட்டு வெளியே வருகின்றபோது அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவேண்டிய ஒரு நிலையும் அரசுக்கு இருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, ஏற்கெனவே இருக்கக்கூடிய கல்லூரிகளிலே படித்துவிட்டு, வெளியே வந்து காத்திருக்கக் கூடியவர்களுடைய பட்டியலும் ஆண்டுக்காண்டு நீண்டுகொண்டே இருக்கிறது. இந்த நிலையிலே, அரசாங்கத்தில் நிதி நெருக்கடியும் இருக்கக்கூடிய காரணத்தாலே, இப்போது புதிதாகக் கல்லூரிகளைத் தொடங்கக்கூடிய வாய்ப்பு இல்லை. மேலும் ஆடுதுறையிலே நிலம் இருக்கின்ற காரணத்தினாலேயே அங்கே ஒரு கல்லூரியை அமைத்துவிட முடியாது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்ள



விரும்புகிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் எழுந்து உட்காருகிறார்கள், “இப்படியா சொல்வது” என்று. அவர்களுக்கும் தெரியும்.

நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர் மணி அவர்கள் நிலக்கடலைக்குக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்வது பற்றிக்கூடச் சொன்னார்கள். உணவுப் பொருட்களுக்கோ அல்லது இதுபோன்ற விவசாய உற்பத்திப் பொருட்களுக்கோ விலை நிர்ணயம் செய்வது மாநில அரசாங்கம் அல்ல. மாநில அரசாங்கம் பரிந்துரை விலையைத்தான் செய்கிறது. எல்லாப் பொருட்களுக்கும், கரும்பாக இருந்தாலும் சரி, நெல்லாக இருந்தாலும் சரி, நிலக்கடலையாக இருந்தாலும் சரி, எந்த உணவுப் பொருளாக இருந்தாலும், மத்திய அரசாங்கம்தான் எல்லா மாநிலங்களுடைய கருத்துகளையும் கேட்டு இறுதியிலே அவர்கள் ஒரு விலையை நிர்ணயம் செய்கிறார்கள். அதுதான் ஆதரவு விலை. அந்த விலையின் அடிப்படையிலே இப்போது நிலக்கடலைக்கு ஒரு குவிண்டாலுக்கு 1,155 ரூபாய் என்று மத்திய அரசாங்கம் விலை நிர்ணயம் செய்திருக்கிறது. நீங்கள் எவ்வளவு பரிந்துரை செய்தீர்கள்? என்று கேட்கலாம். நாம் அதிகமாகத்தான் பரிந்துரை செய்து அனுப்புகிறோம். நாம் சொல்வதை எல்லாம் மத்திய அரசாங்கம் அப்படியே ஏற்று விலை நிர்ணயம் செய்வதில்லை. அந்த அடிப்படையிலே இன்றைக்கு நம்முடைய மணி அவர்கள் கூட இங்கே தேங்காய்க்கு ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கும் அப்படித்தான். மத்திய அரசாங்கம் நாம் செய்கின்ற பரிந்துரை விலையை ஏற்றுக்கொள்ளாமல் அவர்கள் அகில இந்திய ரீதியிலே ஒரு முடிவெடுத்து நிர்ணயித்திருக்கின்ற விலை—1999-2000-க்கு மாநில அரசால் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டபோதிலும் மத்திய அரசு குறைந்தபட்ச விலையாக—அரவைக் கொப்பரைக்கு ரூ.3,100 என்றும், பந்துக் கொப்பரைக்கு ரூ.3,325 என்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

வேளாண்மைத் துறையில் பொறியியல் துறை, மண்வளப் பாதுகாப்பு, இவற்றுக்கு 1999-2000-ல் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி 5663.37 இலட்சம் ரூபாய். 1999-2000-ல் திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி 6481.51 இலட்சம் ரூபாய். 2000-2001-ல் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி 6669.33 இலட்சம் ரூபாய். எனவே, கடந்த ஆண்டைவிட இந்த அரசு கூடுதலாக 187.82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

கரும்பு விலையைப்பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இங்கே அவருடைய நிதிநிலை அறிக்கையின் விவாதத்தின் போதேகூட பதில் தந்திருக்கின்றார்கள். அந்தப் பதிலையொட்டி ஒன்றை மட்டும் இங்கு நான், நேரத்தின் அருமைகருதி, தெரிவிக்க விரும்புகின்றேன். இப்போது கரும்பிற்கு விலை நிர்ணயம் செய்திருப்பதில், மத்திய அசாங்கத்தின் பரிந்துரை விலையோடு நம்முடைய மாநில அரசாங்கம் ஒரு பரிந்துரை விலையை நிர்ணயம் செய்கிறது. இந்தப் பரிந்துரை விலையைத் தனியார் ஆலைகள் ஏற்காமல், அவர்கள் நீதிமன்றத்திலே தடை உத்தரவை வாங்கியிருக்கின்றார்கள். அப்படி வாங்கியிருக்கக்கூடிய காரணத்தினால், நம்முடைய கூட்டுறவுத் துறையின் 16 ஆலைகளுக்கும், பொதுத் துறை ஆலைகள் மூன்றிற்கும் நாம் விலையை நிர்ணயித்திருக்கிறோம். இதற்குத்தான் நாம் பரிந்துரை விலையைச் செய்ய முடிகிறது. அப்படிப் பரிந்துரை விலையைச் செய்கிறபோது ஆம்பூர் மில்லிற்கு 8.5 சதவீத கட்டுமானத்திற்கு நாம் 740 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறோம் என்றால், ஆம்பூர் கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.861.80 கிடைக்கிறது. அதைப்போல, அமராவதியில் ரூ.922.80 கிடைக்கும்; தர்மபுரியில் ரூ.905.40 கிடைக்கும்; திருப்பத்தூரில் ரூ.879.30 கிடைக்கும்; சுப்பிரமணிய சிவாவில் ரூ.896.70 கிடைக்கும் மதுராவில் ரூ.800.90 கிடைக்கும். மற்ற ஆலைகளிலெல்லாம் இதைவிடக் கொஞ்சம் குறைவாகக் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதெல்லாம் அந்தக் கட்டுமான அடிப்படையிலே கிடைக்கிறது. இப்போது விவசாயிகள் மத்தியிலேயிருந்து வரக்கூடிய கோரிக்கை என்னவென்றால், 8.5 சதவீத கட்டுமானத்திற்கு நீங்கள் 740 ரூபாய் என்று நிர்ணயம் செய்து கொடுக்கின்ற விலையையாவது தனியார் ஆலைகளும் கொடுக்க, நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான். தனியார் ஆலை உரிமையாளர்கள்தான், மாநில அரசாங்கம் பரிந்துரை விலையைச் செய்வதற்கு சட்டப்படி அதிகாரம் இல்லை என்று நீதிமன்றத்திலே தடையுத்தரவை வாங்கியிருக்கிறார்கள். அதனாலே, 1998-99, 1999-2000 ஆண்டிற்கு அவர்கள் மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றார்கள். இருந்தாலும் நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நீதிமன்றத்திலே வழக்கு இருந்தாலும், அந்தத் தனியார் ஆலை உரிமையாளர்களை நாங்கள் அழைத்துப் பேசி நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால், இதைப் பாராட்ட வேண்டாமா? இதற்காகவா வெளிநடப்பு? (குறுக்கீடு) உட்காருங்கள். இதிலே



ஒன்றும் தப்பாக நான் சொல்லவில்லை. நீங்கள் ஏன் அதற்குள்ளே அவசரப்படுகிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலே 8.5 சதவீத கட்டுமானத்திற்கு எவ்வளவு கொடுக்கிறார்கள்? 652 ரூபாய்தான். அதைப்போல, கர்நாடகத்திலே 10.5 சதவீத கட்டுமானத்திற்கு ரூ.700 முதல் 860 வரை, ஒட்டுமொத்தமாகக் கொடுக்கிறார்கள். (குறுக்கீடு) இருங்கள், ஒன்றை மட்டும் பிடித்துக்கொண்டால் எப்படி? மழைக்காலை மட்டும் பிடித்துக்கொண்டு தொங்காதீர்கள், கீழே விழுந்துவிடுவீர்கள். ஆலமரத்து விழுதையும் பிடியுங்கள். மராட்டியத்தில் 11.16 சதவீத கட்டுமானம், அதற்கு முதலில் 560 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அரவையெல்லாம் முடிந்தபிறகு இலாப, நட்டக் கணக்கைப் பார்த்துக் கொடுக்கிறார்கள், அந்தக் கட்டுமானம் இருந்தால். இப்போது நாம் 1,000 ரூபாய்க்கு மேல்—நீங்கள் அரியானாவை என்ன காட்டுவது—தமிழ்நாட்டை மற்ற மாநிலங்கள் பின்பற்ற, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மராட்டிய மாநிலத்தில் 11.16 சதவீத கட்டுமானத்திற்கு அவர்கள் ஒட்டுமொத்தமாக 560 ரூபாய் கொடுக்கிறார்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், உட்காருங்கள். அப்புறம் சொல்லுங்கள். உட்காருங்கள். அதைப்போல, அரியானாவிலே—நீங்கள் சொல்வது—அவர்கள்கூட, சாதாரண இரகம், நடுப்பட்டம், முன்பட்டம் என்று மூன்று கட்டமாகப் பிரித்துக் கொடுக்கிறார்கள். அதாவது, அரியானா மாநிலம் சிறியது என்பது உங்களுக்குத் தெரியும். என்னைவிட அதிகமாக உங்களுக்குத் தெரியும்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

பிற்பகல் 1-40

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** உட்காருங்கள். இரண்டாவது, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த விலையைக்கூட..... (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், கொஞ்சம் இருங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம்.

அரியானாவிலே மில்களும் குறைவு; ஆலைகளும் குறைவு. ஏனென்றால், அந்த மாநிலம், சின்ன மாநிலம். அவர்கள்கூட சாதாரண இரகம், நடுப்பட்டம், முன்பட்டம் என்று 3 விதங்களில் வைத்திருக்கிறார்கள். சாதாரண இரகத்திற்கு என்று ஒரு விலை; முதலிலே 910 ரூபாய் கொடுக்கிறார்கள்; பிறகு 930 ரூபாய், பிறகு 950 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இப்படிப் பிரித்து, பிரித்து அவர்கள் கொடுக்கிறார்கள். அது 8.5 சதவீதம் என்ற கட்டுமான அடிப்படையிலே அல்ல. ஆகையினால், அந்த விவரங்கள்...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரியானா மாநிலத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநாட்டிலே, தருவதாகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டிலே போட்ட தீர்மானம் எங்களுடைய நினைவிலே அப்படியே இருக்கிறது. அதை நாங்கள் ஒன்றும் மறந்துவிடவில்லை. இதைக்கூட ஏற்கெனவே, இந்த அவையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது கட்சி மாநாடு. கட்சி மாநாட்டிலே பல கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள். கட்சியிலே இருக்கக்கூடிய முன்னணித் தோழர்கள், கரும்புக்கு இந்த விலை கொடுத்தால், கட்டுப்படியாகும் என்ற கருத்தைச் சொல்லி, அந்தக் கருத்து தீர்மான வடிவில் ஏற்கப்பட்டு, கட்சி மாநாட்டிலே அவ்வாறு நாங்கள் தீர்மானம் போட்டோம். போட்டால், உடனே அரசாங்கம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அர்த்தமா? அப்படியென்றால், அரசாங்கத்தை, அப்போது இருந்த மாநில அரசாங்கத்தைப் பல முறை கண்டித்தோம்; ஊழல் நடைபெற்றது; அது ஊழல் சர்க்கார்; அது நீடிக்கக் கூடாது என்று கண்டித்தோம். உடனே செல்வி ஜெயலலிதா அவர்கள் பதவியை இராஜினாமா செய்தார்களா? (சிரிப்பு) (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன், திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சி. ஞானசேகரன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. மு. அப்பாவு, டாக்டர் அ. செல்லக்குமார் ஆகியோர் எழுந்து நின்றனர்)



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே. தீர்மானத்திற்கும், தேர்தல் அறிக்கைக்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்..... (குறுக்கீடு) உங்களுடைய மாநாட்டில் எத்தனையோ தீர்மானங்கள் போட்டிருக்கிறீர்கள். எவ்வளவு மாற்றியிருக்கிறீர்கள்; வரிசையாகப் பார்க்கலாமா? C.P.I., C.P.M. ஆகிய எந்தக் கட்சிகளினுடைய தீர்மானங்களும் எவ்வளவு மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை மறுபடியும் பார்க்கலாமா? நாங்கள் கூட திராவிட நாடு தீர்மானம் போட்டோம் ஒரு காலத்திலே; விட்டுவிடவில்லையா அதை ? என்ன செய்வது? (சிரிப்பு) நீங்கள்கூட வெள்ளைக்காரனை ஆதரித்து தீர்மானம் போட்டீர்கள், காங்கிரசிலே. கடைசிவரைக்கும் அதையே காப்பாற்றினீர்களா? வேல்ஸ் இளவரசருக்குப் பாராட்டுப் பத்திரம் எல்லாம் அடித்துக் கொடுத்தீர்கள்.? நான் சொல்கிறேன்: ஏ.ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருந்த மாநாட்டிலே போட்ட தீர்மானம், வெள்ளைக்காரனுடைய ஆட்சி நீடிக்க வேண்டும் என்ற தீர்மானம், அதுவே கடைசிவரைக்கும் இருந்ததா? மாநாட்டுத் தீர்மானம் வேறு, தேர்தல் அறிக்கை வேறு; தேர்தல் அறிக்கையிலே நாங்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். "கரும்பு விலையை உயர்த்துவதற்கான முறையிலே முத்தரப்பு மாநாட்டினைக்கூட்டி, எல்லோருடைய ஆலோசனைகளையும் பெற்று, நல்ல விலை கிடைக்கச் செய்வோம்." இதுதான் தேர்தல் அறிக்கை. எதிர்க்கட்சியாக இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாட்டிலே போட்ட தீர்மானம். "கரும்புக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்" என்பது. எதிர்க்கட்சிகள் எப்போதுமே இப்படி ஆளுங்கட்சியைச் சிக்கலிலே மாட்டும். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது சிக்கலிலே மாட்டினோம். இப்போது நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்து அதைச் சொல்கிறீர்கள்; அவ்வளவுதான். இல்லையென்று சொல்லவில்லை. உங்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. நாங்கள் இப்போது இதுவரையிலே வந்திருக்கிறோம். கிட்டத்தட்ட 900 ரூபாய் வரை வந்தாகிவிட்டது. அதிகபட்சம் கரும்பு விலை, 8.33 சதவீதத்திலேயிருந்து 11 சதவீதம் என்ற அந்தக் கரும்புக்கு எல்லாம், 900 ரூபாயிலிருந்து 950 ரூபாய் வரைக்கும் வந்தாகிவிட்டது. நான் சொல்லியிருக்கிறேன், பல முறை இதே அவையிலே. 5 வருடங்கள் எங்களை ஆள விடுங்கள், ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்று சொன்னேன். இன்னும் 5 வருடங்கள் முடியவில்லை ஐயா. முடியட்டும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, 5 வருடங்கள் ஆள விடுங்கள் என்று சொன்னார்கள். இதே அவையிலே சொல்கிறபோது, கொடுக்கிறோம் என்று சொல்லிவிட்டு, இப்போது தீர்மானத்தைப்பற்றிச் சொல்கிறார்கள். இப்போது முடியாது என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே உங்களுடைய மாநாட்டுத் தீர்மானம் இருக்கிறது; இந்த அவையிலே சொன்னதும் இருக்கிறது; நீங்கள் 5 வருடங்கள் பொறுத்துக் கொடுப்பதைவிட இப்போதே கொடுங்கள். இதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க் கட்சித் தலைவராக இருந்தபோது, கட்டுப்படியாகிற விலையைக் கொடுக்கவில்லை என்று சொன்னால், நீங்கள் பரிந்துரை விலையைக் கொடுங்கள் என்று--நீங்களே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது--பேசியிருக்கிறீர்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை. ஆகவே நீங்கள் 5 ஆண்டு முடிவிலே கொடுப்பதை, இப்போதே நீங்கள் கொடுத்தால்தான், அது விவசாயிகளைக் காப்பாற்றுகிற அரசாக இருக்க முடியும் என்கிற காரணத்தினால், இப்போதே முதலமைச்சர் அவர்கள் அதை அறிவிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....,

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உட்காருங்கள் பழனிசாமி... (குறுக்கீடு) சரி, திரு. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர் என்பது நாம் அறிந்த ஒன்று. எதிர்க்கட்சி வரிசையிலே இருந்துகொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அளித்தது மட்டுமல்லாமல், அறிவுபூர்வமாக நீங்கள் செயல்பட்டீர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அது உண்மை. ஆனால், எதிர்க்கட்சியாக இருக்கும்போது தீர்மானம் போடுவது; ஆளும் கட்சியாக வந்த பின்னர் அதை மறுப்பதற்கு என்ன காரணம்? இதுதான் நான் கேட்கிற கேள்வி.

பிற்பகல் 1-45

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மறுக்கவில்லை, மறுக்கவில்லை, மறுக்கவில்லை, இப்போதும் தீர்மானம் போட்டது உண்மையென்று சொல்கிறோம். ஆளும் கட்சியைப் பார்த்துக் கேட்டோம், எதிர்க் கட்சியாக இருக்கும்போது. ஆளும் கட்சியாக வந்து விட்டோம். ஆளுங்கட்சி நிறைவேற்ற வேண்டும். எல்லாவிதமான அறிவிப்புகளையும் ஆட்சிக்கு வந்தவுடனோ, அதாவது 2 வருடத்திலோ, 3 வருடத்திலோ நிறைவேற்றிவிட முடியாது. ஆட்சி முடியும் தருவாயில், ஆட்சி என்றால் ஆட்சியினுடைய இந்தக் காலகட்டம் முடியும் தருவாயில்--இந்த ஆட்சி இப்போது, சமீபத்தில், முடியப் போவதில்லை. (பலத்த சிரிப்பு)... தொடரப் போகிற ஆட்சிதான்; தொடரப்போகிற ஆட்சிதான். அந்தக் கவலை யாருக்கும் இருக்கத் தேவையில்லை. நீங்கள் சிலபேர் அப்படிக் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். "ஏதோ அந்த அம்மாவிற்கு நல்ல காலம் அவ்வளவுதான்; ஜெயிலுக்குப் போய் விடுவார்கள், அப்புறம் அந்தத் தலைவர்கள், தொண்டர்களையெல்லாம்" (குறுக்கீடு) கொஞ்சம் இரு ஐயா, அவர்கள் கருதுகிறார்கள்; தப்பா. (குறுக்கீடு) உங்களைச் சொல்லவில்லை. அவர்கள் கருதுகிறார்கள் அப்படி; "அந்த அம்மா ஜெயிலுக்குப் போய் விடுவார்கள், அப்புறம் அந்தத் தலைவர்கள், தொண்டர்களையெல்லாம் நாம் பார்த்துக்கொள்ளலாம். நாம் வந்து விடலாம் ஆட்சிக்கு, அந்த அம்மாகிட்ட இருக்கிற தொண்டர்களைப் பிடித்துக் கொள்ளலாம்" என்று கருதுகிறார்கள். ஆனால் அந்தத் தொண்டர்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல; அ.தி.மு.க. தொண்டர்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல என்பதையும், அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற தலைவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)



(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. சி. ஞானசேகரன், டாக்டர் அ. செல்லக்குமார், திரு. இரா. தாமரைக்கனி, திரு. சொ. கருப்பசாமி, திரு. இரா. விசுவநாதன், டாக்டர் தே. குமாரதாஸ் மற்றும் திரு. மு. அப்பாவு ஆகியோர் எழுந்து நின்றனர்).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.சி. டி. தண்டபாணி):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) தேவையான அளவிற்குப் பேசி ஆகிவிட்டது, இல்லை, இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடு)....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** I am not yielding. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, இல்லை, அதெல்லாம் பேசி ஆகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள், அதெல்லாம் பேசி ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) Please sit down. நான் அனுமதிக்க முடியாது. அனுமதிக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, தேவையான அளவிற்கு விவாதித்து ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, I am not yielding, Sir, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** தயவுசெய்து உட்காருங்கள், உட்காருங்கள், இல்லை, இல்லை, தேவையான அளவிற்குப் பேசிவிட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டில் நெல் விலை பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். 1996-97 ஆம் ஆண்டு சாதாரண இரகம் 380 ரூபாய்க்கு ஒரு குவிண்டால் (குறுக்கீடு) நீங்கள் கவனிக்கவில்லை என்றால் பரவாயில்லை, record ஆகும் அல்லவா? (குறுக்கீடு) I am not yielding...(குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** Point of order கிடையாது. தயவுசெய்து உட்காருங்கள். அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். அமைச்சர் yield ஆகவில்லை. நீங்கள் தயவுசெய்து உட்கார வேண்டும். நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பேட்டில் ஏறாது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நெல் விலையை உயர்த்தித் தர வேண்டுமென்று காலையிலே ஒரு கோரிக்கை இங்கே வைக்கப்பட்டது. சாதாரண இரகம் 1996-97-ல் ரூ.380/- ஒரு குவிண்டாலுக்கு......... (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் படிக்க விடமாட்டேன். நான் படிக்க விடமாட்டேன்.........

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நீங்கள் "படிக்க விடமாட்டேன்" என்று சொல்லக் கூடாது. (கூச்சல், குழப்பம்), நீங்கள் அதைச் சொல்லக் கூடாது, நீங்கள் அதையெல்லாம் பேசக் கூடாது, அதையெல்லாம் பேசக் கூடாது. (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் படிக்க விடமாட்டேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அமைச்சர் yield ஆகவில்லை. அமைச்சர் reply பண்ணிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) இல்லை, இல்லை, திரு. சுந்தரம் உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள்.





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நீங்கள் "படிக்க விடமாட்டேன்" என்று சொல்லக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** Point of order. I am on a point of order. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நீங்கள் என்ன "படிக்க விடமாட்டேன்" என்று சொல்லுவது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள், இது முறையல்ல. உட்காருங்கள், நீங்கள் உங்கள் இஷ்டப்படி எழுந்து நிற்கிறீர்கள்......

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே... (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சரைப் பார்த்து, "உங்களைப் பேச விட மாட்டேன்" என்று ஓர் உறுப்பினர் சொல்வது முறையா? "பேச விடமாட்டோம்" என்று சொல்வது முறையா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அ.தி.மு.க. (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள், தலைவர் அவர்களே, அ.தி.மு.க. தொண்டர்களைப் பாராட்டிப் பேசினேன். அதை அவர்கள் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். அ.தி.மு.க. தொண்டர்களைப் பாராட்டிப் பேசியிருக்கிறேன். (கூச்சல் குழப்பம்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சுந்தரம், இங்கே பாருங்கள், சுந்தரம் இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள்; இங்கே பார்த்துப் பேசுங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள், அதிகமாகப் பேசினால், முறை தவறிப் பேசினால், சபையை விட்டு வெளியேற்ற நேரிடும். முறை தவறிப் பேசாதீர்கள். இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள், அமைச்சரைப்பார்த்து நீங்கள் பேசக்கூடாது. இப்போது நீங்கள் உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள் (கூச்சல், குழப்பம்).

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of order...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** முறை தவறிப்பேசக்கூடாது. சுந்தரம் உட்காருங்கள், சுந்தரம் உட்காருங்கள்...(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டு, நெல்லினுடைய விலை சாதாரண இரகம் ரூ.380/- குவிண்டால் ஒன்றுக்கு (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** திரு. ஞானசேகரன் உட்காருங்கள்....

பிற்பகல் 1-50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. தொண்டர்களைப் பாராட்டி, அவர்களுடைய திறமையைப் பாராட்டிப் பேசினேன். அதற்கு அவர் கோபித்துக் கொண்டால் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அந்த வார்த்தையை நீக்க வேண்டும்.

(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் அ. செல்லக்குமார், திரு. மு. அப்பாவு திரு. இரா. தாமரைக்கனி, திரு. இரா. விசுவநாதன் மற்றும் செ.கருப்பசாமி ஆகியோர் தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தார்கள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அமைச்சர் பதில் சொல்கிறபோது, அமைச்சர் பதில் சொல்வதில் ஏதேனும் விளக்கம் கேட்பதாயின், அவர் yield-ஆனால்தான், அவர் ஒத்துக்கொண்டால்தான், கேட்கலாம். அமைச்சரைப் பதில் சொல்லவிடாமல், வேண்டுமென்று, வேறுவிதமான முறையில், அவையில் பல பேர் எழுந்து, தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும் நிலைமை இருக்குமானால், அது, அவை மரபையும் மீறுகிற ஒரு செயலாகத்தான் அவையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனவே, அதற்குத் தாங்கள் அனுமதிக்கக்கூடாது. அப்படி எழுந்துகொண்டிருப்பார்களேயானால், வெளியேற்றுவதன் மூலமாகவாவது, சட்டமன்றத்தில் அமைச்சர் பதில் சொல்ல அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் அ. செல்லக்குமார், திரு. மு. அப்பாவு திரு. இரா. தாமரைக்கனி, திரு. இரா. விசுவநாதன் மற்றும் திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் தொடர்ந்து நின்று கொண்டே இருந்தார்கள்)



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** எதிர்க்கட்சித் தலைவர், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நான் சொல்லிவிடுகிறேன், பதில் சொல்லிவிடுகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நான் பேசியதற்குப் பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் பேசுகிறேன், நீங்கள் உட்காருங்கள். நான் பேசிய பிறகு பேசுங்கள், நான் எழுந்துவிட்டேன், உட்காருங்கள்.

இப்படி, முறையில்லாமல் நீங்கள் ஒவ்வொருவரும், அடிக்கடி, எழுந்து பேசி, அமைச்சருடைய பதிலுரையில் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நீங்கள், வேண்டுமென்றே, எதிர்த்துப் பேசுவது, செயல்படுவது முறையல்ல, தொடர்ந்து, இந்த அவையினுடைய நடவடிக்கைகளைத் தடுப்பது என்றால், வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி கிடையாது.

(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் அ. செல்லக்குமார், திரு. மு. அப்பாவு திரு. இரா. தாமரைக்கனி, திரு. இரா. விசுவநாதன் மற்றும் திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தார்கள்).

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இப்படி மிரட்டக்கூடாது...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், ஒரு கட்சியைப் பற்றிப் பேசி, ஏதோ அந்தக் கட்சியினுடைய தொண்டர்களை நம்பித்தான் இவர்கள் எல்லாம் அரசியல் நடத்துகிறார்கள் என்பது போன்ற ஒரு கொச்சையான வார்த்தையை இங்கே பயன்படுத்துவதை நான் மிக (குறுக்கீடுகள்)......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** No, No, No, கொச்சையாக; கொச்சையான வார்த்தை என்று தாங்கள் சொன்னதைத் திரும்பப்பெற வேண்டும். கொச்சையான வார்த்தை நான் பேசவில்லை, எனக்குக் கொச்சை பிடிக்காது.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, என்னங்க..

**டாக்டர் அ. செல்லக்குமார்:** கொச்சை என்றால் என்ன அர்த்தம்?.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் ஜெயலுக்குப் போய் விடுவார்கள், அந்தக் கட்சித் தொண்டர்களை எல்லாம் நம்பி, கட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஏமாறப் போகிறார்கள் என்று சொன்னது, உண்மையிலேயே கண்டிக்கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(டாக்டர் தே. குமாரதாஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் அ. செல்லக்குமார், திரு. மு. அப்பாவு, திரு. இரா. தாமரைக்கனி, திரு. இரா. விசுவநாதன் மற்றும் திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் தொடர்ந்து குறுக்கிட்டுக் கொண்டேயிருந்தார்கள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயிலுக்குப் போய்விடுவார்கள் என்று நான் சொல்லவில்லை. அப்படி உறுதிப்படுத்திச் சொல்லவில்லை. போய்விடுவார்கள் என்று எதிர்பார்த்து, சில கட்சிக்காரர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அப்படிப் போனால் அந்தத் தொண்டர்களை வைத்துக்கொண்டு, தாங்கள் கட்சி நடத்தலாம் என்று எண்ணுகிறார்கள் என்று சொன்னேன். அந்த அ.தி.மு.க. தொண்டர்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல, அவர்கள் திறமைசாலிகள், அவர்கள் வேறு எந்தத் தலைமையையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று கூறியிருக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குங்கள்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசுங்கள். யாராவது ஒருவர் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** ஏதோ அ.தி.மு.க. என்று சொல்வது....

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உங்களுடைய leader நிற்கிறார். எல்லோருமே எழுந்து நின்றால் எப்படி? உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்லும்போது தெளிவாகச் சொன்னார்கள். ஒரு குறிப்பிட்ட கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியோ அல்லது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ அப்படி நினைக்கிறது என்று சொல்லவில்லை. சிலர் அப்படிக் கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். அதிலே என்ன தப்பு? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** யாரோ சில கொலைகாரர்கள் என்று சொன்னால், கொலைகாரர்களுக்குத்தான் கோபம் வரவேண்டும். நீங்கள் ஏன் இங்கே துடிக்கிறீர்கள்? நீங்கள் கொலைகாரர்களா? இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. சுந்தரம், தயவுசெய்து உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாற்றுத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சுந்தரம், நீங்கள் அடிக்கடி எழுந்தால், சபையை விட்டு வெளியேற்ற வேண்டி வரும். தயவுசெய்து உட்காருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இப்படியெல்லாம் மிரட்டக்கூடாது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நெல்லுக்குக் கூடுதல் விலை தர வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இங்கு எடுத்து வைக்கப்பட்டது...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே....

**திரு. சொ. கருப்பசாமி:** தலைவர் அவர்களே..

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி தண்டபாணி):** நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா? உட்காருங்கள்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, எங்களுடைய கட்சியின் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் அவர்களை, நீங்கள் ஒரு அனுமானத்தின்பேரில், அவர்கள் சிறைக்குச் சென்றுவிடுவார்கள் என்று நீங்களாகவே ஒரு கற்பனையாக நினைத்துக்கொண்டு, நீங்கள் ஒரு

கற்பனையை வைத்துக்கொண்டு, அவர்கள் சிறைக்குச் சென்றுவிடுவார்கள், சிறைக்குச் சென்றுவிடுவார்கள் என்று கூறிய வார்த்தையை நீங்கள் அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டும், நீங்கள்..

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நான் சொல்வதைக் கேளுங்கள். முதலமைச்சர் அப்படிச் சொல்லவில்லை, தவறாக நீங்கள் சொல்கிறீர்கள்.

பிற்பகல் 1-55

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் அப்படிக் கற்பனை செய்துகொள்கிறேன் என்று அவர் சொல்லி, அது கற்பனை அல்ல என்கிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** உட்காருங்கள், உட்காருங்கள், அவர் பேசியாகிவிட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள்,...

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நெல்லுக்குக் கூடுதல்..

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தத் தமிழ்நாட்டில் இருக்கின்ற எதிர்க்கட்சிகளைக் குறித்தெல்லாம் மிகத் தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துவதைக் கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

[தமிழ் மாநில காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய லீக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்டு) ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** நெல்லுக்குக் கூடுதல் விலை தர வேண்டும் என்று சொன்னார்கள். 1996-97-ல் கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சாதாரண இரகம் ரூபாய் 380 ஒரு குவிண்டாலுக்கு இருந்தது. சன்ன இரகத்திற்கு ரூபாய் 395 ஒரு குவிண்டாலுக்கு, மிகச் சின்ன இரகம் ரூபாய்........



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, செல்வி ஜெயலலிதா, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் ஜெயிலுக்குப் போய்விடுவார் என்று கருதிக் கொண்டு சில கட்சியிலே உள்ள தலைவர்கள், அப்படிப் போனால், அந்த கட்சியினுடைய தொண்டர்கள் எல்லாம் தங்கள் பக்கம் வந்துவிடுவார்கள் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அ.தி.மு.க. தொண்டர்கள் ஏமாளிகள் அல்ல என்று நான் குறிப்பிட்டேன். இது தங்களைத்தான் சொன்னது என்று சில பேர் கருதிக்கொண்டு வெளியேறி இருக்கிறார்கள். நான்கூட அவர்கள் யாரோ என்று கருதிக் கொண்டிருந்தேன். (சிரிப்பு) அவர்கள் தாங்கள் தான், அது தாங்கள்தான் என்பதை நிரூபிப்பதைப்போல வெளியேறிக்காட்டி, அந்தக் கற்பனையை உண்மையாக ஆக்கியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. (பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மிகச் சன்ன இரகம் ரூபாய் 415 ஒரு குவிண்டாலுக்கு என்று கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே நெல் விலை இருந்தது. பிறகு 1997-98-ல் படிப்படியாக உயர்ந்து, இப்போது நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய பரிந்துரைகளை எல்லாம் ஏற்று, மத்திய அரசாங்கம் 3 இரகமாக இருந்ததை 2 இரகமாக ஆக்கி, சாதாரண இரகத்திற்கு ரூபாய் 490 ஒரு குவிண்டாலுக்கு என்றும், சன்ன இரகத்திற்கு 520 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு என்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. அதை இந்த அளவிற்கு உயர்த்திக் கொடுத்திருக்கின்றது. இப்போது அரசாங்கம் இந்த நெல் விலையை 50 ரூபாய் என்று உயர்த்தி கொள்முதல் செய்த வகையிலே 1997-லிருந்து 1999-2000 ஆண்டு வரை விவசாயிகளுக்கு, நெல்லுக்குக் கூடுதலாக விலை கிடைத்திருப்பது 178.19 கோடி ரூபாய். இது விவசாயிகளுக்கு இந்த அரசு செய்த சாதனை என்பதை, உதவி என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அதைப்போல கூட்டுறவுக் கடன்களுக்கு அபராத வட்டியைத் தள்ளுபடி பண்ணியிருக்கின்றார்கள். 7 சதவீத ஊக்கத் தொகை என்று சொல்லியிருக்கின்றார்கள். அதன்மூலம் விவசாயிகளுக்கு 121 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிவாரணமாகக் கிடைக்கப் பெறுகிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இது விவசாயிகளுடைய அரசு என்பதற்கு இதைவிட வேறு ஒரு சான்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கடந்த 1991-லே இருந்து 1996-வது ஆண்டு வரை ஆட்சியிலே இருந்தவர்களால் இதுபோன்ற ஒரு பட்டியலைக் காட்ட முடிந்தால் மக்கள் மன்றத்திலே அதைச் சந்திக்க இந்த அரசு, இந்தக் கழகம்

(மேசையைத் தட்டும் ஒலி) தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, சில அறிவிப்புகளை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுமதித்ததை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் சுமார் 10 இலட்சம் எக்டேரில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. பயறு உற்பத்திப் பரப்பினை அதிகப்படுத்த சாத்தியம் இல்லாத நிலையில் அதன் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே மிகக் குறைந்த செலவில் அதிக பயனுடைய இலை மூலம் டை அம்மோனியம் பாஸ்பேட் கரைசலைத் தெளிக்கும் தொழில்நுட்பத்தினைக் கடைப்பிடிக்க விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டு சென்ற ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டது. இதன் பயனாக 1 எக்டேருக்கு 150 கிலோ வரை கூடுதல் மகசூல் அடையப்பட்டுள்ளது. இதற்காக 1 எக்டேருக்கும் மொத்த செலவினமான ரூ.250-ல் 25 விழுக்காடு விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டது. 2000-2001 ஆம் நிதி ஆண்டிலும் ரூ.31.25 இலட்சம் செலவில் 50,000 எக்டேர் பரப்பில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 2-00

தமிழ்நாட்டில் 3.52 இலட்சம் எக்டேர் பரப்பில் தென்னை பயிரிடப்படுகிறது. தென்னையைத் தாக்கும் பூச்சிகளில் காண்டாமிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டுகள் குறிப்பிடத்தக்க அளவு தென்னையை அழிக்கின்றன. இறக்குமதி செய்யப்படும் இரசாயனப் பொருள் அடங்கிய கவர்ச்சிப் பொறிகள் மூலம் இந்த வண்டுகளை அழிக்கலாம் என வேளாண் விஞ்ஞானிகளால் பரிந்துரைக்கப் பட்டுள்ளது. ஒரு கவர்ச்சிப் பொறியின் விலை ரூ.500. 2000-2001 ஆம் நிதி ஆண்டில் தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டு மற்றும் சிவப்பு கூன் வண்டினை அழிக்கும் திட்டம் 50 விழுக்காடு மானியத்தில் முதற் கட்டமாக ரூ.31.25 இலட்சம் செலவில் 25,000 எக்டேர் பரப்பில், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிப்பது அவசியமாகும். நமது உணவு முறையில் முக்கிய பங்கு வகிப்பது அரிசி ஆகும். எனவே, அரிசி உற்பத்தியை அதிகரிக்க



வேண்டியது நமது கடமையாகும். வேளாண் விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்ட வீரிய ஒட்டு இரக நெல் ஏ.டி.டி, ஆர்.எச்.1. மற்றும் கோ.ஆர்.எச் 2-ஐ விவசாயிகளிடையே பிரபலப்படுத்த வேண்டி 2000-2001 ஆம் நிதி ஆண்டில் 125 ஏக்கர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஒட்டு இரக விதை உற்பத்திக்கு ஏக்கருக்கு ஏற்படும் செலவினம் ரூ.10,000. இந்தச் செலவினத்தை நம் விவசாயிகளால் ஏற்க இயலாது என்பதை உணர்ந்த இவ்வரசு அவர்களுக்கு உதவும்பொருட்டு 1 ஏக்கர் ஒட்டு இரக விதை உற்பத்திக்கு மானியமாக ரூ.2,800 வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 2000-2001 ஆம் நிதி ஆண்டில் ரூ.3.50 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய இருப்பு வைக்கப்படும் விதைகள் மழை மற்றும் குளிர் காலங்களில் ஈரப்பதம் அடைவதால் முளைப்புத்திறன் பாதிக்கப்படுகிறது. விதைகளை விவசாயிகளுக்கு அளிக்கும் முன்பாக உலர்த்தி அளிக்க வேண்டியது அவசியமாகும். வேளாண்மைத் துறையில் மொத்தம் 880 வேளாண் விரிவாக்க மையங்கள் உள்ளன. சில விரிவாக்க மையங்களில் களம் அமைக்கப்பட்டும், அவை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன. எனவே, விதைகளை உலர்த்த ஒவ்வொரு மையத்திற்கும் தார்ப்பாய் இன்றியமையாதது. சென்ற நிதி ஆண்டில் 100 வேளாண் விரிவாக்க மையங்களுக்குத் தார்ப்பாய் வழங்கப்பட்டது போல 2000-2001 ஆம் நிதி ஆண்டிலும் ரூ.13 இலட்சம் செலவில் 100 வேளாண் விரிவாக்க மையங்களுக்குத் தலா ஒரு தார்ப்பாய் வீதம் வாங்கி வழங்கப்படும்.

தரமான விதைகளைப் பாதுகாக்கவும், தரையிலுள்ள ஈரப்பதத்தைத் தவிர்க்கவும், மர அட்டிகளின் மீது விதை மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், ஈரப்பதம் உள்ள விதைகளைக் கண்டறிந்து உலர்த்தும் பொருட்டு ஈரப்பதத்தைக் கண்டறிய மின்னணு ஈரமானிகளும், சுத்திகரிக்கப்பட்ட விதைகளுக்குச் சான்று அளிக்கத் தேவையான சான்று அட்டைகளைக் காலதாமதமின்றி அச்சடிக்க அச்சு இயந்திரமும் அவசியமாகும். எனவே, விதை சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்த 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 1.29 இலட்சம் செலவில் 150 மர அட்டிகளும், ரூ. 1.75 இலட்சம் செலவில் 7 மின்னணு ஈரமானிகளும், ரூ.2.25 இலட்சம் செலவில் 3 கையினால் இயக்கும் அச்சு இயந்திரங்களும் வாங்கப்படும்.

மணிலா மற்றும் பயறு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளில் சாகுபடி செலவினத்தை குறைக்கவும், உற்பத்தி உயர வழிவகை செய்யவும், வயல் வெளிப் பள்ளிகள் மூலம் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயிற்சியின்போது என்.பி.வி. டிரைகோடர்மா இனக் கவர்ச்சிப் பொறிகள் கொண்டு செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்படும்.

2000-2001 ஆம் ஆண்டில், மணிலாவைப் பொறுத்தவரை ஒரு வயல் வெளிப் பள்ளியில் 30 விவசாயிகள் வீதம் 150 உழவர் வயல் வெளிப் பள்ளிகள் மூலம் ரூ.10.5 இலட்சம் செலவில் 4,500 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

பயறு வகையைப் பொறுத்தவரை ஒரு வயல் வெளிப் பள்ளியில் 35 விவசாயிகள் வீதம் 100 உழவர் வயல் வெளிப் பள்ளிகள் மூலம் ரூ.6.5 இலட்சம் செலவில் 3,500 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

பிற்பகல் 2-05

உழவர் சந்தைகளில், சமவெளிப் பரப்பில் பயிரிடப்படும் காய்கறிகளில் கத்தரி, வெண்டை, தக்காளி, வெங்காயம், மிளகாய் போன்ற காய்கறிகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றன. குளிர்காலக் காய்கறிப் பயிர்களாக பூக்கோசு, முட்டைக்கோசு, நூல்கோல், பீட்ரூட், சிவப்பு முள்ளங்கி போன்ற பயிர்களும் உழவர் சந்தை விவசாயிகள் பயிரிடும் வகையில் அதற்கேற்ற இரகங்களை அறிமுகப்படுத்தி 500 எக்டேர் பரப்பில் பயிரிட ஊக்குவிக்கப்படும்.

2000-2001 ஆம் நிதி ஆண்டில் விவசாயிகளின் நலன் கருதி 1 ஏக்கருக்கு ஏற்படும் காய்கறி விதை செலவினத்தில் 50 விழுக்காடு அல்லது ரூ.2000-க்கு மிகாமல் ரூ. 10.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வெற்றிலைப் பயிர் பெரும்பாலும் சிறு விவசாயிகளாலும், குத்தகை அடிப்படையிலும் பயிர் செய்யப்படுகிறது. இப்பயிரினை வேர் அழுகல் நோய் மிகவும் கடுமையாகத் தாக்குவதால், 30 முதல் 100 சதவீதம் வரை சேதாரம் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இந்நோயை டிரைகோடெர்மா என்னும் உயிரியல் காரணிகள் மூலம்



கட்டுப்படுத்தலாம் என விஞ்ஞானிகள் பரிந்துரை செய்துள்ளனர். 2000-2001 ஆம் நிதி ஆண்டில் 50 விழுக்காடு மானியத்தில் 2,500 எக்டேர் பரப்பளவில் ரூ.6.25 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தோட்டக்கலைப் பயிர்களான காய்கறி மற்றும் பூக்களை ஒரு பருவத்தில் மட்டுமல்லாது எல்லாப் பருவங்களிலும், எல்லா இடங்களிலும் பயிரிடத்தக்க வகையில், அவற்றிற்கு உகந்த தட்ப வெப்ப நிலையினை அளித்திடும் வகையில் தொழில்நுட்பம் கொண்ட நைலான் நிழல்வலைக்குடில் கண்டிபிடிக்கப்பட்டுள்ளதால், அதனை நம் விவசாயிகளும் பயன்படுத்தி ஆண்டு முழுவதும் காய்கறி மற்றும் பூக்களைப் பயிரிட அவர்களை ஊக்குவிக்கலாம். 500 சதுர மீட்டர் பரப்பு கொண்ட ஒரு நைலான் நிழல்வலைக்குடில் அமைக்க ஏற்படும் செலவினம் ரூ.20,000. இதில் 25 விழுக்காடு அல்லது ரூ. 5,000 மானியமாக அளிக்கலாம் என அரசு முடிவு செய்துள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் 100 நிழல்வலைக்குடில்கள் ரூ. 20 இலட்சம் செலவில் அமைக்கப்படும். இதில் அரசு மானியமாக ரூ. 5 இலட்சம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் வளம் பெருகிவரும் இக்காலத்தில் விவசாயத்திற்குக் கூலியாட்கள் கிடைப்பது அரிதாகிறது. விஞ்ஞானத்தின் முதிர்ச்சியினால் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு நெல் நாற்று நடவும், அறுவடை செய்யவும் இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ரூ.14.00 இலட்சம் மதிப்புள்ள பெரிய அறுவடை இயந்திரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் இரண்டும், வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மூலம் நான்கும், ஆக ஆறு அறுவடை இயந்திரங்கள் வாங்கப்பட்டு குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. விவசாயக் கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக இந்த இயந்திரத்திற்கு விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது. தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொரிய நாட்டுத் தொழில் நுட்பத்துடன் இணைந்து நமது நாட்டில் தயாரிக்கப்பட்டு வரும் 18.50 குதிரைத் திறன் கொண்ட சிறிய அறுவடை இயந்திரங்கள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த

அறுவடை இயந்திரங்கள் குறுகிய பாதையிலும் செல்ல வல்லவை. மேலும் இதில் முக்கிய அம்சமாக அறுவடை செய்யப்படும் வைக்கோல் எவ்வித சேதாரமுமின்றி முழுமையாகக் கிடைப்பதால், பண்ணை மாடுகளுக்கும், கறவை மாடுகளுக்கும் உணவான வைக்கோல் கிடைப்பதால், இதற்கு விவசாயிகளிடம் பெரிதும் வரவேற்பு உள்ளது.

எனவே, 2000-2001 ஆம் நிதி ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ரூ.64 இலட்சம் செலவில் 5 கதிர் அறுவடை இயந்திரங்களும், ரூ.2.20 இலட்சம் செலவில் 2 நாற்று நடும் இயந்திரங்களும் வாங்கி விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொத்த செலவான ரூ.66.20 இலட்சத்தில் 25 சதவிகிதத் தொகையான ரூ.16.50 இலட்சம் விளிம்புத் தொகையாக அரசு மானியமாக வழங்கப்படும்.

தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் பணியை மேற்கொள்ள தற்போது டிராக்டரில் பயன்படுத்தப்படும் சாதாரண கலப்பைகளுக்குப் பதிலாக சட்டிக் கலப்பைகளைப் பொருத்தினால் உழவு ஆழமாக இருப்பதுடன், ஆழ் உழவு மூலம் மண் ஈர்க்கும் சக்தியைக் கூடுதலாகப் பெற வாய்ப்புள்ளது. எனவே, 2000-2001 ஆம் நிதி ஆண்டில் ஆழ் உழவுப் பணியை மேற்கொள்ள ரூ.15 இலட்சம் செலவில் 50 சட்டிக் கலப்பைகள் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்கள் அறுவடைக் காலங்களில் வீணாகாமல் இருந்தால் விவசாயிகள் பொருட்கள் இழப்பைத் தவிர்ப்பதுடன் தேசிய உணவு உற்பத்தியும் வீணாகாமல் இருக்கும் என்ற நோக்கோடு வேளாண்மை விற்பனைத் துறை மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.562.50 இலட்சம் செலவில் 330 உலர்களங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த உலர்களங்கள் விவசாயிகளின் வரவேற்பினைப் பெற்றதுடன் தங்கள் பகுதியில் இதுபோன்ற உலர்களங்கள் அமைத்துத் தர வேண்டி கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 350.00 இலட்சம் செலவில் மேலும் 200 உலர்களங்கள் அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 2-10

மூன்றாம் முறையாக கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு அறுவடை காலங்களில் உரிய விலை கிடைக்காமல் வியாபாரிகள் கேட்கும் விலைக்குக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்து அவர்களைக் காக்க வேண்டி, அவர்கள் விளைவித்த பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கும் வரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வைத்துப் பொருளீட்டுக் கடன் பெறும் வசதி ஏற்படுத்தித் தரப்பட்டது. அதன்படி ஒரு விவசாயி அதிகபட்சமாக ரூ.25,000 பொருளீட்டுக் கடனாகப் பெறலாம்.

விற்பனைக் கூடங்களில் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் பொருட்களுக்கு உரிய விலையை வியாபாரிகள் உடனே அளிக்க வேண்டி, அவர்கள் கொள்முதல் செய்த பொருட்களுக்கான மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் ரூபாய் 50,000 எனவும், இதன் காலக்கெடு 1 மாதம் எனவும் 1998-99 ஆம் ஆண்டு வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் தரும் வசதியை இவ்வரசு நீட்டித்தது. 1999-2000 ஆண்டில் இந்தப் பொருளீட்டுக் கடன் வசதி ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

இந்தப் பொருளீட்டுக் கடன் வசதி குறித்து விவசாயிகளிடமும், வியாபாரிகளிடமும் இருந்து வரப்பெற்ற கோரிக்கைகளைப் பரிசீலித்த இவ்வரசு இவ்வசதியை மேலும் உயர்த்தித்தர முடிவு செய்து 2000-2001 ஆம் நிதியாண்டு முதல் விவசாயிகளுக்கு அதிகபட்சமான பொருளீட்டுக் கடன் ரூ.25,000 என இருப்பதை, சொந்தக் கட்டடத்தில் இயங்கும் விற்பனைக் கூடங்களில் அதிகபட்சமாக ரூ.50,000 எனவும், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் விற்பனைக் கூடங்களில் ரூ.35,000 எனவும் விவசாயிகளுக்கு உயர்த்தி வழங்கப்படும். மேலும், வியாபாரிகளுக்கான பொருளீட்டுக் கடனின் காலக்கெடு 1 மாதம் என்றிருப்பது 3 மாதமாக உயர்த்தித் தரப்படும்.

கழகம் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக்குக் கொண்டு வரும் விவசாயிகள் நோய்வாய்ப்பட்டால் உடனடி மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டி 1996-97 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு,

தொகுப்பூதியத்தில் மருத்துவர்களும், உதவியாளர்களும் நியமனம் செய்யப்பட்டனர். இந்த மருத்துவ வசதிக்காக ஏற்படும் அனைத்துச் செலவினங்களையும் அந்தந்த விற்பனைக் கூடங்கள் ஏற்கின்றன. இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 21,000 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

இந்த இலவச மருத்துவ வசதி விவசாயிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதால் 2000-2001 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டம் மேலும் 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அறிமுகப்படுத்தப்படும். இதன்படி ஆண்டுதோறும் சுமார் 15,000 விவசாயிகள் பயன்பெறுவர்.

மேலும், இத்திட்டத்தில் நியமனம் செய்யப்பட்ட மருத்துவர்களுக்குத் தற்போது அளிக்கப்படும் தொகுப்பூதியம் மாதம் ரூ.2,500 என இருப்பது மாதம் ரூ.3,500 எனவும், உதவியாளர்களுக்கு தற்போது அளிக்கப்படும் தொகுப்பூதியம் மாதம் ரூ.750 என்று இருப்பது மாதம் ரூ.1,250 எனவும் உயர்த்தி வழங்கப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விளைபொருட்களைக் கொண்டு வரும் விவசாயிகள், குத்தகைதாரர்கள் உயிரிழக்க நேரிட்டால் அல்லது நிரந்தர ஊனமுற்றால் உதவித் தொகையாக ரூ.25,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மறு பரிசீலனை செய்த இவ்வரசு, 2000-2001 ஆம் ஆண்டு முதல் சில மாற்றங்களைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது. அதன்படி, விபத்தில் உயிர் இழக்கும் அல்லது முழு ஊனமுறும் விவசாயிகளுக்கு உதவித் தொகையாக ரூ.50,000 வழங்கப்படும். விபத்தில் இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது இரண்டு கண்களை இழக்க நேரிடும் விவசாயிகளுக்கு உதவித் தொகையாக ரூ.25,000 வழங்கப்படும். விபத்தில் ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண்களை இழக்க நேரிட்டால் அந்த விவசாயிகளுக்கு உதவித் தொகையாக ரூ.25,000 வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் மாநிலத்தில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கேற்ப, சில உணவுப் பொருட்கள் சில மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. அதற்கேற்ப விவசாயிகளுக்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்பது இந்த அரசினுடைய கடமையாக இருக்கிறது. அப்பகுதிகளில் உள்ள விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று இவ்வரசு



மதுரையில் நெல் வணிக வளாகமும், ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகமும் அமைக்கப்படும் என அறிவித்து, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதைப்போன்று தேங்காய் உற்பத்தி செய்யும் விவசாயிகளின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்த இவ்வரசு தேங்காய்க்கும் வணிக வளாகம் அமைக்க முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2000-2001 ஆம் நிதியாண்டில் 6 கோடி ரூபாய் செலவில் பட்டுக்கோட்டை மற்றும் பொள்ளாச்சியில் தேங்காய் வணிக வளாகம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-15

சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகள் விளைவிக்கும் காய்கறிகள், பூக்கள் மற்றும் பழங்களை இடைத்தரகரின்றி நல்ல விலைக்கு விற்கவும், நுகர்வோர் நியாயமான விலையில் காய்கறி மற்றும் பழங்களைப் பெற வேண்டும் எனவும் விவசாயிகள் மற்றும் நுகர்வோரின்மீது அக்கறை கொண்ட நம் முதல்வர் அவர்களால் உழவர் சந்தைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை 33 உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு விவசாயிகள் மற்றும் பொது மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதைப்போன்று, அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், பூக்கள் மற்றும் பழங்கள் விற்பனைக்கும் வழிவகை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்ற இவ்வரசு, முதற்கட்டமாக 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ.200 இலட்சம் செலவில் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் "உழவர் பெரும் சந்தை" அமைக்கப்படும் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண் விற்பனைக் குழுக்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு தரம் பிரிப்புப் பயிற்சி, புத்தூட்டப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் ஆகிய பயிற்சிகள் திருச்சியில் வாடகைக் கட்டடத்தில் அமைந்துள்ள பயிற்சி மையத்தில் அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மையத்தில் போதுமான தொழில்நுட்ப வசதி இல்லாததால், அனைத்து வசதிகளும் கொண்ட பயிற்சி மையம் ஒன்றினை அமைப்பது அவசியமாகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி செலவில் இப்பயிற்சி மையம் சேலத்தில் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகம் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தகவல் தொடர்பு சாதனத்தை நவீனப்படுத்த கணினிப் பொறிகளை அரசுத் துறைகளில் அறிமுகப்படுத்தியதுடன் அதனைப் பள்ளிக் கல்வியிலும் இவ்வரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தக் கணினிப் பொறி விற்பனைக் குழுக்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கணினிப் பொறிகள் தற்போது 16 விற்பனைக் குழுக்களிலும், 4 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. கணினிப் பொறிகள் மூலம் மற்ற விற்பனைக் குழுக்கள் மற்றும் விற்பனைக் கூடங்களில் நிலவும் விலை விவரங்களையும், விளைபொருட்களின் வரத்து போன்ற விவரங்களையும் உடனுக்குடன் அனைத்து விவசாயிகளுக்கும் தெரிவிப்பதால் அதிக பயன் கிடைக்கின்றது. எனவே, 2000-2001 ஆம் நிதியாண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மேலும் 20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.28.80 இலட்சம் செலவில் கணினிப் பொறிகள் அமைத்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனைத் துறை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறைகளின் செயல்பாடுகள் குறித்த அனைத்து விவரங்களையும் கணினியில் பதிவு செய்து, இந்தத் தகவல்களை அந்தந்தத் துறையில் உள்ள கணினி மூலமும் பெறலாம்.

2000-2001 ஆம் நிதியாண்டில் இந்த வசதியை வேளாண் மற்றும் அதன் சகோதரத் துறைகள் பெற வேண்டி ஒரு வலைத்தளம் ரூ.1.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனைக் கூடங்களில் பொருள்வரத்து பெருகவும், விற்பனையை அதிகரிக்கவும், விற்பனைக் குழுக்கள் மற்றும் விற்பனைக் கூடங்களை ஊக்குவிக்கும் நோக்கோடு மாநிலத்தில் சிறப்பாகப் பணியாற்றும் விற்பனைக் குழு மற்றும் விற்பனைக் கூடங்களுக்கு சிறப்புப் பரிசு அளிக்கலாம் என இவ்வரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி, சிறப்பாகப் பணியாற்றும் விற்பனைக் குழுக்களுக்குப் பரிசாக ஒரு ஈப்பு வழங்கப்படும். சிறப்பாகப் பணியாற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குப் பரிசாக ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அல்லது ஒரு மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



தமிழகத்தில் சுமார் 2,000 எக்டேர் பரப்பளவில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. இதில் ஏற்றுமதிக்கேற்ற விதையில்லா திராட்சை மட்டும் சுமார் 500 எக்டேரில் பயிரிடப்படுகிறது. தேனி மாவட்டத்தில் மட்டும் ஆண்டுக்கு 5,000 டன் விதையில்லா திராட்சை பயிரிடப்படுகிறது. இதனைப் பாதுகாத்து முறையாகத் தரம் பிரித்து, சிப்பமிட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய உதவிட ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தரவேண்டும் என்ற திராட்சை பயிரிடும் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்க இவ்வரசு முடிவு செய்து, 2000-2001 ஆம் நிதியாண்டில் வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் ரூ.1 கோடி செலவில் 30 டன் கொள்ளளவு உள்ள குளிர்பதனக் கிடங்கு தேனி மாவட்டம், ஓடைப்பட்டி கிராமத்தில் அமைத்துத் தரப்படும் என்பதை நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னும் ஒன்றே ஒன்று. தஞ்சை மாவட்டத்திற்கு விதைகள் வழங்குவதிலே ஏற்பட்ட தவறின் காரணமாக 61 விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். 162 ஏக்கர் பரப்பிலே பயிர் செய்து, அது பாதிப்பிற்கு உள்ளானது. அந்த அதிகாரிகள் மீது எல்லாம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை சட்டப் பேரவை உறுப்பினர்கள் திரு. துரை. சந்திரசேகரன் போன்றவர்களால் எடுத்து வைக்கப்பட்டதையொட்டி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு நிவாரணம் வழங்க 3 இலட்சத்து 25 ஆயிரத்து 620 ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையை தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

அதைப்போலவே, கடலூர் மாவட்டத்திலே வீராணம் ஏரியில் நெய்வேலி காட்டாமணி மண்டியிருப்பதை அழிக்க வேண்டும் என்பதற்கான நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அதை அழிப்பதற்காக, 2-4T கரைசலைத் தெளித்து முழுமையாக அழிப்பதற்காக, 5 இலட்சம் ரூபாய் அனுமதித்திருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து, வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்தவர்கள்—(குறுக்கீடுகள்) கொடுத்தவர்கள் இருக்கிறார்கள்—திரும்பப்பெற்றுக் கொண்டு, கோரிய

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [2000 ஏப்ரல் 6

மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது கலைஞர் அரசு. கலைஞர் பசுமை உள்ளம் கொண்டவர். நம்முடைய தமிழக மக்களுக்கு அவர் ஆற்றுகின்ற அந்தப் பணிக்கு ஒரு முத்தாரமாக அமைவதுதான் வேளாண்மைத் துறை. இது அவருடைய துறை என்று கூறி உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு

**(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மை பற்றிய 20 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.877,26,53,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்



2000 ஏப்ரல் 6] [மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி]

அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** மானியக் கோரிக்கை எண் 52—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மை குறித்த மூலதனச் செலவு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,74,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-23 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

135. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இருபத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1998-99) [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)] (தமிழ், ஆங்கிலம்).

135. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் (1998-99) [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

135. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1998-99) [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).



### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

50. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை ஆராய்ச்சியின் சீரிய படைப்புகள் (1999-2000) (தமிழ்).

51. மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்).

52. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2000-2001 (தமிழ், ஆங்கிலம்).

# இணைப்பு

(75ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 20–வேளாண்மை

கோரிக்கை எண். 52–வேளாண்மை குறித்த மூலதனச்செலவு

கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

## அத்தியாயம்-I

முன்னுரை

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

-அய்யன் திருவள்ளுவர்

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்.
ஏனென்றால் மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு
வாழ வேண்டியிருக்கிறது.

விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்தி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த பல ஆண்டுகளாக உணவு தானிய உற்பத்தி பன்மடங்கு பெருகிய போதிலும் பெருகிவரும் மக்கள் தொகையும், சுருங்கி வரும் சாகுபடிப் பரப்பும், பெருகிவரும் உணவு தேவையினை ஈடுசெய்யும் நமது முயற்சிக்குச் சவாலாகவே உள்ளன.

### "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்"

உலகம் உழவிற்கு பின்னர்தான் என்பதை அக்கால அரசர்கள் மட்டுமின்றி இக்கால அரசுகளும் உணர்ந்துள்ளன. எனவேதான், மத்திய மற்றும் மாநில அரசுகள் வேளாண் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றன. அதன் பயனாக பல்வேறு பயிர்களின் சாகுபடிச் செறிவினையும் உற்பத்தித் திறனையும் அதிகரித்து வேளாண் உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்படுகின்றன. குறுகிய காலத்தில் "உணவு உற்பத்தியை இரட்டிப்பாக்கும்" நோக்கத்தை அடைவதில் மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படுகின்றன.

[2000 ஏப்ரல் 6

முக்காலத்துக்கும் பொருந்தும் உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலகிற்கு அளித்த அய்யன் திருவள்ளுவர் வான் சிறப்பு உணர்ந்து மழையின் பயனையும் அது மிகுந்தாலும் குறைந்தாலும் ஏற்படும் விளைவுகளையும் விரிவாகக் கூறியுள்ளார். இந்த மழையின் பயனை நுகர்ந்து பெருமையுறுபவர்களும் உழவர்களே! இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் சேதங்களால் அதிகம் பாதிக்கப்படுபவர்களும் உழவர்களே! என்றாலும், உழவு இல்லாமல் உழவர்களின் ஒருங்கிணைந்த முயற்சி இல்லாமல் உலகம் இல்லை. முற்றும் துறந்த முனிவர்கள்கூட உணவைத் துறக்க முடியாது.

வள்ளுவருக்குக் கோட்டம் அமைத்த இந்த அரசு முக்கடலும் கூடும் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவருக்குச் சிலை அமைத்து உழவர்களுடைய சிறப்பினை உணர்ந்து அவர்களுக்கு எல்லா வகையிலும் ஏற்றம் வரும்படி அரிய திட்டங்களையும் தீட்டியுள்ளது. அந்தத் திட்டங்களைச் செயற்படுத்தும் வகையில் பணியாற்றி வருவதுதான் வேளாண்மைத் துறை.

நிலையான வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வருமான அதிகரிப்பை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுடன் தரமான வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்தல் ஆகியவையே இவ்வரசின் முக்கிய நோக்கங்களாகும் இதுவரை அடையப் பெறாமல் இருக்கும் உற்பத்தித் திறனை அடைதல், மானாவாரி நிலங்களுக்கு உகந்த தொழில்நுட்பங்களைப் பரப்புதல் மற்றும் தரிசு நிலங்களை விளைநிலங்களாக்குதல் ஆகியவையே இவ்வரசின் முயற்சிகளாகும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் **'எக்டருக்கு 7 மெ.டன்'** அளவுக்கு நெல் உற்பத்தி அடைதல், பயறு உற்பத்தியில் **'எக்டருக்கு 650 கிலோ'** அடைதல் ஆகியவையே இத்துறையின் குறிக்கோள்களாகும். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல் போன்ற திட்டங்களைப் பரவலாக்குதலின் மூலம் சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல், நுண்பாசனம், உயிர் உர உபயோகம் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்தல், தரிசு நில மேம்பாடு, பண்ணை வருமானத்தைப் பெருக்க **'பலமுனை விரிவாக்கம்'**, உற்பத்தி செய்த பொருளுக்கு உரிய விலை கிடைத்திட **'உழவர் சந்தைகள்'** மூலம் ஆவன செய்தல் ஆகியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்துவதன் மூலம் **'நிரந்தர பசுமைப் புரட்சியை'** இம்மாநிலத்தில் அடையச் செய்வதில் இவ்வரசு உறுதியாக உள்ளது.



2000 ஏப்ரல் 6]

**வேளாண்மைத் துறைக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு**

கோரிக்கை எண் 20 (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000 | திருந்திய திட்ட மதிப்பீடு 1999-2000 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001 |
|---|---|---|---|
| 2059 பொதுப்பணிகள் | 76,60 | 76,60 | 76,60 |
| 2216 வீட்டு வசதி | 10 | 10 | 10 |
| 2401 பயிர்வளர்ப்பு | 5,41,58,28 | 14,48,96,10 | 6,41,36,99 |
| 2402 மண்வள, நீர்வள பாதுகாப்பு | 56,63,37 | 64,81,51 | 66,69,33 |
| 2415 வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வி | 48,94,06 | 63,39,12 | 61,77,06 |
| 2435 ஏனைய வேளாண் திட்டங்கள் | 31,33,17 | 32,88,56 | 36,30,11 |
| 2501 ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 1,03,00 | 1,62,05 | 6,52,00 |
| 2551 மலைப்பகுதிகள் | 11,43,10 | 12,66,08 | 11,06,79 |
| 2702 சிறுபாசனம் | 12,58,72 | 10,47,29 | 11,49,50 |
| 2705 பாசனப்பகுதி மேம்பாடு | 43,88,66 | 44,25,80 | 33,28,07 |
| 3054 சாலைகளும் பாலங்களும் | 10,25,00 | 8,00,00 | 8,00,00 |
| 3435 உயிரின வாழ்க்கைச் சூழலும் சுற்றுச் சூழலும் | 1 | 1 | 1 |
| **துணை மொத்தம்** | **7,58,44,07** | **16,87,83,22** | **8,77,26,56** |

கோரிக்கை எண் 52 (ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1999-2000 | திருத்திய திட்ட மதிப்பீடு 1999-2000 | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 2000-2001 |
|---|---|---|---|
| 4401 பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 7,08,21 | 7,13,45 | 4,80,21 |
| 4402 மண்வள மற்றும் நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 75,02 | 67,90 | 75,00 |
| 4415 வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வி குறித்த மூலதனச் செலவு | 23,36 | 23,36 | 15,01 |
| 4435 ஏனைய வேளாண் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 7,01 | 7,00 | 4,00 |
| 4551 மலைப்பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 2 | | |
| 5054 சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 3,41,,00 | 3,41,00 | 5,00,00 |
| **துணை மொத்தம்** | **11,54,62** | **11,52,71** | **10,74,22** |
| **பெரு மொத்தம்** | **7,75,39,44** | **16,99,35,93** | **8,88,00,78** |



## 2000-2001-ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்கள்

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | 2000-2001-ல் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **வேளாண்மைத் துறை** | |
| 1. | பழைய வேளாண்மை விரிவாக்க மையங்களில் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் | 20.00 |
| 2. | வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு மூட்டை இடைச் செருகுப் பலகைகள் வழங்குதல் | 25.00 |
| 3. | அரசு விதைப் பண்ணைகள் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் கட்டுமானப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல் | 23.20 |
| | மொத்தம் | **68.20** |
| | **தோட்டக்கலைத் துறை** | |
| 4. | குன்னூர் அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் காவலர் தங்குமிடம் கட்டுதல் மற்றும் குழாய் இணைப்புடன் டீசல் எஞ்சின் ஒன்று வாங்குதல் | 1.35 |
| 5. | அணைக்கட்டி அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் பணியாளர் குடியிருப்பு கட்டுதல் மற்றும் துணைக் கருவிகளுடன் விசைக் கலப்பை வாங்குதலுக்கான திட்டம் | 5.50 |
| 6. | பெரியகுளம் அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் பசுமைக்குடில் அறையில் பழுதுபார்த்தல், பனிதூக்கி அமைத்தல் மற்றும் மூழ்கக்கூடிய மோட்டார் ஆகிய வசதிகளின் மூலம் பாசன வசதியை மேம்படுத்துதல் | 2.20 |

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | 2000-2001 ல் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 7. | ரெட்டியார் சத்திரம் அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் தொடர் சங்கிலி வேலி வாசலுடன் அமைத்தல் மற்றும் டிராக்டர் நிறுத்தும் இடம் கட்டுதலுக்கான திட்டம். | 5.50 |
| 8. | கன்னியாகுமரி அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல். | 4.00 |
| 9. | திம்மாபுரத்தில் திறந்தவெளி கிணற்றை ஆழப்படுத்தலும் சுவர் கட்டுதலும் | 2.00 |
| 10. | படசோலையில் அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் 10 குதிரைத் திறன்கொண்ட ஆயில் எஞ்சின் ஒன்று வாங்குதல், கொட்டகை கட்டுதல் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டுதலுக்கான திட்டம். | 2.50 |
| 11. | பூவாணியில் அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் விசைக் கலப்பை வாங்குதல். | 1.43 |
| 12. | நெய்வேலி அரசினர் தோட்டக் கலைப் பண்ணையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல். | 4.25 |
| 13. | தகரக்குப்பம் அரசினர் தோட்டக்கலைப் பண்ணைக்கு பாசன வசதிகளை மேம்படுத்துதல் | 1.04 |
| 14. | முதலைப்பட்டி அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் தண்ணீர்தொட்டி கட்டுதலும் மின் இணைப்பு மற்றும் கழிவு நீர் வடிகால் வசதிகள் செய்து கொடுப்பதற்கான திட்டம். | 2.65 |



| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | 2000-2001-ல் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 15. | கருமந்துறை அரசினர் தோட்டக்கலைப் பண்ணைக்கு ஒரு விசைக் கலப்பை, ஒரு இழுவை மற்றும் ஒரு களை எடுக்கும் கருவி வாங்குதல் மற்றும் திறந்தவெளி கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல். | 4.55 |
| 16. | மருங்குளம் அரசினர் தோட்டக்கலைப் பண்ணையில் முள்வேலி அமைத்தல் மற்றும் பம்பு அறை கட்டுதல் | 5.24 |
| 17. | முள்ளுவாடி அரசினர் தோட்டக்கலைப் பண்ணைக்கு இழுவையுடன் கூடியவிசைக் கலப்பை வாங்குதல், முள்வேலி அமைத்தல் மற்றும் மோட்டார் அறை அமைத்தல் ஆகியவற்றுக்கான திட்டம். | 4.50 |
| 18. | தேவகோட்டை அரசினர் தோட்டக்கலைப் பண்ணைக்கு நிழல் வலை அமைத்தல், ஜெனரேட்டர் வாங்குதல் மற்றும் நிலத்தடி நீர் தொட்டி கட்டுதல் ஆகிய பணிகளுக்கான திட்டம். | 5.50 |
| | மொத்தம் | **52.21** |
| | **வேளாண்மைப் பொறியியல்** | |
| 19. | நிலத்தை ஆழமாக உழுவதற்கு இரண்டு ரிப்பர்களை வாங்குதல் | 16.00 |
| 20. | குழிகளை சமன்படுத்தும் 100 கருவிகள் வாங்குதல். | 10.00 |
| | மொத்தம் | **26.00** |

[2000 ஏப்ரல் 6

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | 2000-2001 ல் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **விதைச் சான்றளிப்பு** | |
| 21. | கோயம்புத்தூர் விதைச் சான்றளிப்பு இயக்கக வளாகத்தில் விதைகள் சேமிப்பு கிடங்கு கட்டுதல் | 4.00 |
| 22. | கோயம்புத்தூர் விதைப் பரிசோதனை அலுவலகத்திற்கு பி.எச்.மீட்டர் வாங்குதல் | 0.08 |
| 23. | கோயம்புத்தூர் விதைச் சான்றளிப்பு இயக்கக அலுவலகத்தின் "வாக்-இன்-ஜெர்மினேட்டர்"-க்கு ஆவ்ரி அளவீட்டுக் கருவியை வாங்குதல் | 0.10 |
| | மொத்தம் | **4.18** |
| | **வேளாண்மை விற்பனை** | |
| 24. | வேலூர், கரூர், தேனி, நாகர்கோயில் மற்றும் காங்கேயம் ஆகிய இடங்களில் உள்ள அக்மார்க் தரம்பிரிக்கும் ஆய்வுக் கூடங்களை வலுப்படுத்துதல் | 15.00 |
| | மொத்தம் | **15.00** |
| | **தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்** | |
| 25. | தென்னை மரக் குருத்தைத் தாக்கும் சிறுபூச்சிகள் மற்றும் ஏனைய வகைப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஆராய்ச்சித் திட்டத்திற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி | 9.90 |
| | மொத்தம் | **9.90** |
| | பெருமொத்தம் | **175.49** |



# அத்தியாயம் 2

## வேளாண்மை

### பருவநிலை

1999-2000 ஆம் ஆண்டு ஒவ்வொரு பருவத்திலும் பெறப்பட்ட மழை விபரம், இயல்பான மழை மற்றும் சென்ற ஆண்டு இதே காலத்தில் பெறப்பட்ட மழை அளவு விபரம் பின்வருமாறு:

(மில்லி மீட்டரில்)

| வ. எண் | பருவம்/மாதம் | இயல்பான மழை | பெய்த மழை 1999-2000 | 1998-99 | வேறுபாடு இயல்பு மழையுடன் | விழுக்காடு கடந்த ஆண்டு மழையுடன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | கோடை 99 (மார்ச்-மே) | 136.5 | 116.4 | 77.9 | (-)14 | (+)49 |
| 2. | தென்மேற்கு பருவம் (ஜூன்-செப்) | 307.6 | 199.4 | 329.0 | (-)35 | (-)39 |
| 3. | வடகிழக்கு பருவம் (அக்-டிச) | 439.7 | 497.1 | 601.3 | (+)13 | (-)17 |
| 4. | குளிர்காலம் (பிப்ரவரி 2000) | 42.2 | 119.5 | 21.5 | (+)183 | (+)455 |
| | மொத்தம் | 925.0 | 932.4 | 1029.7 | (+)1 | (-)9 |

### 1999-2000 ஆம் ஆண்டில் பயிர் நிலைமை விவரம்

மார்ச் 1999 முதல் பிப்ரவரி 2000 வரை பெறப்பட்ட மொத்த மழையளவு சராசரியுடன் ஒப்பிடுகையில் 1 விழுக்காடு அதிகமாகவும், கடந்த ஆண்டு இதே காலத்தை ஒப்பிடுகையில் 9 விழுக்காடு குறைவாகவும் உள்ளது. தென்மேற்கு பருவ மழை குறைவினால் மானாவாரி சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியில் குறைவு ஏற்பட்டது.

மேட்டூர் அணை பாசனத்திற்காக ஜூலை 1-ம் நாள் மூன்று வார காலதாமதத்தில் திறந்துவிடப்பட்டதாலும், நீர் நிலைமை குறைவாக இருந்ததாலும் விவசாயிகளிடையே ஏற்பட்ட தயக்கத்தாலும் காவிரி நதிப்படுகை பகுதிகளில் குறுவை சாகுபடி குறைவாக 0.958 இலட்சம்

எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், இக்குறைபாடு சம்பா பருவத்தில் பெரிதும் ஈடு செய்யப்பட்டது. நவம்பர் 1999 இரண்டாம் வாரத்தில் பெய்த அதிக மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் நெல் மற்றும் இதர பயிர்கள் ஓரளவு சேதமடைந்தன. இவ்வாறு நிலவிய இடர்பாடான பருவநிலைகளினால் இவ்வாண்டின் சிறுதானியங்கள் மற்றும் பயறுவகைகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பாதித்ததாலும் கரீப் பருவத்தில் உற்பத்தியில் ஏற்பட்ட இழப்பு ரபி பருவத்தில் ஓரளவு சரி செய்யப்பட்டது. இவ்வாண்டில் எதிர்நோக்கும் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி விவரம் பின்வருமாறு:

| பயிர் | பரப்பு (இல.எக்டர்) | | | உற்பத்தி (இல. மெ.டன்) | |
|---|---|---|---|---|---|
| | இலக்கு | பிப்ரவரி 2000 வரை சாதனை | எதிர்நோக்கும் சாதனை | இலக்கு | எதிர்நோக்கும் சாதனை |
| அரிசி | 22.00 | 21.18 | 22.00 | 74.00 | 75.00 |
| சிறுதானியங்கள் | 15.00 | 11.14 | 12.00 | 19.00 | 14.00 |
| பயறுவகைகள் | 10.00 | 9.73 | 9.94 | 7.00 | 6.00 |
| மொத்த உணவு தானியங்கள் | 47.00 | 42.05 | 43.94 | 100.00 | 95.00 |
| எண்ணெய் வித்துக்கள் | 14.00 | 10.10 | 11.51 | 22.00 | 18.00 |
| பருத்தி (இல. பொதிகள்) | 2.50 | 1.65 | 2.50 | 6.50 | 6.00 |
| கரும்பு (வெல்லமாக) | 2.75 | 2.90 | 3.00 | 37.00 | 37.00 |

1998-99 ஆம் ஆண்டில் அதிக உற்பத்தித் திறனாக எக்டருக்கு 3,579 கிலோவும் அரிசி உற்பத்தி 81.41 இலட்சம் மெ.டன்களும் அடையப்பெற்றுள்ளது சாதனையாகும்.

## 2000-2001 ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கு

இயல்பான மழை மற்றும் பருவநிலை நிலவும் என எதிர்பார்த்து ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான்காம் ஆண்டு வரையறுக்கப்பட்ட உற்பத்தியைக் கணக்கில் கொண்டு கீழ்க்கண்டவாறு 2000-2001 ஆம் ஆண்டின் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



| பயிர் | பரப்பு (இல.எக்டர்) | உற்பத்தி (இல.மெ.டன்) |
|---|---|---|
| அரிசி | 22.00 | 80.50 |
| சிறுதானியங்கள் | 15.00 | 16.00 |
| பயறுவகைகள் | 10.00 | 6.50 |
| மொத்த உணவு தானியங்கள் | 47.00 | 103.00 |
| எண்ணெய் வித்துக்கள் | 14.00 | 22.00 |
| பருத்தி (இலட்சம் பொதிகள்) | 3.00 | 6.50 |
| கரும்பு (வெல்லமாக) | 2.75 | 37.00 |

## இடுபொருள் திட்டங்கள்

### அ. விதைகள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உற்பத்தி செய்யப்படும் வல்லுநர் விதைகள் 39 அரசு விதைப்பண்ணைகள் மூலம் ஆதார விதைகளாக பெருக்கம் செய்யப்பட்டு பின் இந்த ஆதார விதைகள் விவசாய நிலங்களில் சான்று விதைகளாக பெருக்கம் செய்யப்படுகின்றன. சான்று விதைகளின் தரத்திற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் மாநிலத்தில் இயங்கும் 16 பெரிய 3 நடுத்தர மற்றும் 51 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இச்சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் ஆண்டுதோறும் 28,500 மெ.டன் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றன. இவ்விதைகள் விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.

2000-2001 ஆம் ஆண்டு பல்வேறு பயிர்களின் விதை மாற்று விகிதம் பின்வருமாறு:

| வ.எண். | பயிர் | மத்திய அரசு பரிந்துரைக்கும் விதைமாற்று விகிதம் | மாநில அரசு பின்பற்றும் விதைமாற்று விகிதம். |
|---|---|---|---|
| 1. | அ. நெல் | 17 | 17 |
| | ஆ. சிறுதானியங்கள் | - | 7 |
| 2. | பயறு வகைகள் | 11 | 12.50 |
| 3. | பருத்தி-மானாவாரி | 15 | 10 |
| | பருத்தி-இறவை | 15 | 15 |
| 4. | நிலக்கடலை | 3 | 5 |
| 5. | எள் | 10 | 15 |
| 6. | சூரியகாந்தி | 50 | 50 |
| 7. | ஆமணக்கு | 20 | 30 |
| 8. | சோயாமொச்சை | - | 20 |

1999-2000 ஆம் ஆண்டின் விதை கொள்முதல், விநியோக இலக்கு, பிப்ரவரி 2000 வரையிலான சாதனை மற்றும் 2000-2001 ஆம் ஆண்டின் திட்டம் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

(அலகு மெ.டன்கள்)

| வ. எண் | பயிர் | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|---|
| (அ) | கொள்முதல் | | | |
| 1. | நெல் | 18000 | 15800 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 340 | 400 |
| 3. | பயறு வகைகள் | 2600 | 1720 | 2600 |
| 4. | எண்ணெய்வித்துக்கள் | 11912 | 4124 | 11912 |
| 5. | பருத்தி | 375 | 193 | 375 |



(அலகு. மெ. டன்கள்)

| வ. எண் | பயிர் | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|---|
| (ஆ) | விநியோகம் | | | |
| 1. | நெல் | 18000 | 17450 | 18000 |
| 2. | சிறுதானியங்கள் | 400 | 310 | 400 |
| 3. | பயறுவகைகள் | 2600 | 1450 | 2600 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 11912 | 4675 | 11912 |
| 5. | பருத்தி | 375 | 179 | 375 |

**ஆ. உரங்கள்**

**பயிர்களின் பல்வேறு நிலைகளில் சரியான விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்துகளைத் தரவல்ல இரசாயன உரங்களை இட்டால் அதிக மகசூல் பெறுவது உறுதி. 1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 வரை இரசாயன உர உபயோகமும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்டமும் வருமாறு:**

(இல.மெ.டன்கள்)

| சத்துக்கள் | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 ஆம் ஆண்டு திட்டம். |
|---|---|---|---|
| தழை | 5.20 | 4.86 | 5.15 |
| மணி | 2.10 | 1.94 | 2.10 |
| சாம்பல் | 2.00 | 2.05 | 2.05 |
| மொத்தம் | 9.30 | 8.85 | 9.30 |

**நுண்ணூட்ட உரக் கலவை-உற்பத்தி மற்றும் விநியோகம்**

**குடுமியான்மலையில் இயங்கிவரும் நுண்ணூட்ட உரக் கலவை தயாரிக்கும் மையம் ஆண்டுதோறும் 1250 மெட்ன் நுண்ணூட்ட உரக் கலவையினைத் தயாரித்து விநியோகித்து வருகிறது. 1999-2000 ஆண்டு**

பிப்ரவரி 2000 வரை 1112 மெ.டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டும் 1250 மெ.டன் நுண்ணூட்ட உரக் கலவை தயாரித்து வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**இயற்கைப் பண்ணையம்**

வேளாண் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இயற்கைப் பண்ணையம் பரிந்துரைக்கப்படுகிறது. தரமான மக்கு எரு, உயிர் உர உபயோகம், பசுந்தாள் உரம் மற்றும் ஊட்டமேற்றிய தொழுஉர உபயோகம் போன்றவை சாகுபடிச் செலவைக் குறைக்கவும், ஒருங்கிணைந்த பயிர்சத்து மேலாண்மைக்காகவும் பரிந்துரைக்கப்படுகின்றன. இதன்படி பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**உயிரின உர உற்பத்தி மற்றும் விநியோகம்**

நமது மாநிலத்தில் வேளாண் துறையால் உயிர் உர உபயோகம் குறித்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 இடங்களில் இயங்கும் உயிரின உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டுதோறும் 1400 மெ.டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. பிப்ரவரி 2000 வரை 1387 மெ.டன் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டும் 1400 மெ.டன் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் திருச்சிராப்பள்ளியில் ரூ. 17.50 இலட்சம் செலவில் உயிர் உர தரக்கட்டுப்பாட்டிற்கான ஆய்வகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**பசுந்தாள் உர விதை உற்பத்தி மற்றும் விநியோகம்**

மண்ணின் மக்கு அளவினை அதிகரிக்க பசுந்தாள் உரத்தினைப் பயிர்செய்து அந்நிலத்திலேயே உழுவதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டிற்கு 90 மெ.டன் பசுந்தாள் உர விதைகள் ரூ. 9.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து 25 விழுக்காடு மானியத்தில் இலாப/நட்டமற்ற நோக்கத்துடன் விநியோகிக்க ஆணை பெறப்பட்டு 49.103 மெ.டன் பசுந்தாளுர விதைகள் ரூ. 9.00 இலட்சம் செலவில் பிப்ரவரி 2000 வரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடரப்படவுள்ளது.



**நீலப்பச்சை பாசி**

1999-2000 ஆம் ஆண்டில் 390 மெ.டன் நீலப்பச்சை பாசி உற்பத்தி செய்து விநியோகிக்க திட்டமிடப்பட்டு இலக்கில் இதுவரை 406 மெ.டன்கள் விநியோக சாதனை அடையப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் 500 மெ.டன் நீலப்பச்சை பாசி உற்பத்தி மேற்கொள்ளவும் விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**சிங்க் சல்பேட் உரம் விநியோகித்தல்**

1999-2000 ஆம் ஆண்டில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகட்கு 5000 எக்டர் நிலத்தில் பயன்படுத்தப்படும் 625 மெ.டன் சிங்க் சல்பேட் உரத்திற்கு 25 விழுக்காடு மானியம் வழங்க ரூ. 31.25 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**கலவை உர உற்பத்தி போட்டி**

குப்பைகளைச் சேகரித்து சுற்றுப்புறச் சூழல், சுகாதாரக் கேட்டினை தவிர்க்கும் வகையில் கலவை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில் அதிக அளவிலான சிறந்த கலவை உரம் தயாரிக்கும் நகராட்சிகளுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் 4 நகராட்சிகளுக்கு அதாவது புதுக்கோட்டை, மேட்டூர், பட்டுக்கோட்டை மற்றும் எடப்பாடி நகராட்சிகளுக்குக் கலவை உரப் போட்டியில் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் 37 நகராட்சிகள் கலவை உரப் போட்டியில் பங்கேற்றுள்ளன. இதுபோன்று நகராட்சிகளிடையே கலவை உரப்போட்டி 2000-2001-லும் நடத்தப்பட உள்ளது.

**கழிவுநீர் பண்ணைகள்**

தற்போது 18 நகராட்சிகளில் கழிவுநீர் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நகராட்சி கழிவுநீரினால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதாரக் கேட்டினைத் தவிர்க்க இப்பண்ணைகளில் கழிவுநீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சிகளின் கழிவுநீர் பண்ணைகளில் தீவனப்புல், தென்னை, கரும்பு மற்றும் காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் திறம்பட செயல்பட தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

[2000 ஏப்ரல் 6

### உர அடையாள அட்டை விநியோகம்

விவசாயிகள் உரங்களை உரிய நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பெற உர அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு உர அடையாள அட்டைகள் வழங்கும் நோக்கோடு முதற்கட்டமாக தெரிவு செய்த 5 மாவட்டங்களான காஞ்சீபுரம், சேலம், திருச்சி, திருவாரூர் மற்றும் மதுரை ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்ட கோட்டங்களில் கோட்டத்திற்கு 30,000 உர அடையாள அட்டைகள் வீதம் 1,50,000 உர அடையாள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக, இதர மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்த கோட்டங்களுக்கு வழங்கப்படுவதற்காக 6,50,000 உர அடையாள அட்டைகள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் 72 இலட்சம் உர அடையாள அட்டைகளை படிப்படியாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### இ. பயிர்ப் பாதுகாப்பு

மாநிலத்தில் முறையான பூச்சிநோய் கணிப்புப் பணி செயல்படுத்தப்பட்டு, பூச்சி மற்றும் நோய்களின் நிலை கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் 7356 இடங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவற்றை ஆய்வு செய்து பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் குறித்து ஒவ்வொரு வாரமும் விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 வரை உணவுப் பயிர்களில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் 54 இலட்சம் எக்டர் பரப்பிலும், உணவு அல்லாத பயிர்களில் 22 இலட்சம் எக்டர் பரப்பிலும் மற்றும் விதை நேர்த்தி 21 இலட்சம் எக்டர் பரப்பிலும் மேற்கொள்ளப்பட்டது.

### ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, உழவர் வயல்வெளிப் பள்ளிகள் திட்டம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குறைந்த செலவில் அதிக உற்பத்தி செய்வதும் அதே நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகளால் ஏற்படும் தீமைகளான சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு, நச்சுப்படிவு, பூச்சிகளின் மறு உற்பத்தி, பூச்சி மருந்துகளின் விலை உயர்வால் சாகுபடி செலவு



2000 ஏப்ரல் 6]

அதிகரித்தல் போன்றவற்றைத் தடுப்பதாகும். 1999-2000 ஆம் ஆண்டில் மத்திய சார்பு திட்டங்களான ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம், மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம், எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டம், தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் பின்வருமாறு செயல்படுத்தப்படுகிறது:

| வ. எண். | திட்டம். | பொருள் குறியீடு. | பிப்ரவரி 2000 வரை சாதனை. |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி திட்டத்தின்கீழ் உழவர் வயல் வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 1400 | 1380 |
| 2. | தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 1500 | 1441 |
| 3. | தேசிய பயறு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்டர்) | 666 | 613 |
| 4. | எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்டரில்) | 3000 | 3000 |

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஓர் இனமாக பூச்சிநோய் கண்காணிப்பு முறைப்படி மேற்கொள்ளப்படுகிறது. விவசாயிகளையும் வேளாண் துறையின் அலுவலர்களையும் பூச்சிநோய் கணக்கெடுப்புப் பணிகளில் பயிற்றுவிக்க மதுரையிலும் மற்றும் காஞ்சிபுரத்திலும் மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையங்கள் செயல்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில் ஒரு மத்திய அரசு மையம் செயல்படுகிறது. இம்மையங்கள் உயிரினக் கட்டுப்பாட்டு ஒட்டுண்ணிகளையும் வளர்த்து விவசாயிகளுக்கு வழங்கும்.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையின் உபயோகத்தை அதிகப்படுத்த திருச்சிராப்பள்ளி, சேலம், தர்மபுரி, ஈரோடு, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் எட்டு உயிரின கட்டுப்பாட்டு ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு, சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு உயிரியல் கொல்லிகள் நியாயமான விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 6

**உயிரியல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்**

பல்வேறு பயிர்களில் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் விடுதல் மூலம் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும் பரப்பு விவரம் வருமாறு:

(பரப்பு எக்டர்)

| பயிர்/பூச்சிகள் | மையங்களின் எண்ணிக்கை | பரப்பு (எக்டர்) குறியீடு | பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001க்கான குறியீடு |
|---|---|---|---|---|
| ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள் | | | | |
| 1. கரும்பு இடைக்கணுப்புழு (டிரைக்கோகிராமா) | 21 | 10500 | 10000 | 10500 |
| 2. தென்னை கருந்தலைப்புழு (பெத்திலிட்ஸ், பிரேகோனிட்ஸ், யூலோபிட்ஸ்) | 19 | 10250 | 8506 | 10250 |
| 3. பருத்தி காய்ப்புழு (என்பிவி) | 3 | 1500 | 1200 | 1500 |
| 4. மணிலா சிகப்பு கம்பளிப்புழு மற்றும் புரோடீனியா (என்பிவி) | 4 | 480 | 420 | 480 |
| 5. தென்னை காண்டாமிருக வண்டு (குப்பிகள்) (பச்சை மஸ்கார்டின் பூஞ்சாணம்) | 2 | 10000 | 9515 | 10000 |
| உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையம் | | | | |
| 6. பருத்தி, நெல், பயறுவகை மற்றும் மணிலா டிரைக்கோகிராமா, டிரைக்கோடெர்மா, என்பி. வைரஸ் | 10 | 50000 | 40500 | 50000 |

இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

**இலை மூலம் டை அமோனியம் பாஸ்பேட் தெளித்து பயறு வகைகள் உற்பத்தியை அதிகரித்தல்**

பயறு வகைகள் உற்பத்தியை உயர்த்த குறிப்பாக நஞ்சை தரிசில் இலை மூலம் 2 விழுக்காடு டை அமோனியம் பாஸ்பேட் கரைசல்



2000 ஏப்ரல் 6]

தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. இதற்காக 25 விழுக்காடு மானியமாக எக்டருக்கு ரூ. 62.50 வீதம் வழங்கப்பட்டு 1999-2000 ஆம் ஆண்டில் 50000 எக்டர் பரப்பில் ரூ. 31.25 இலட்சம் செலவினத்தில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 2000 வரை 49600 எக்டர் பரப்பில் தெளிப்புப்பணி நிறைவடைந்துள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டம்**

மாண்புமிகு முதலமைச்சரின் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் 27 மாவட்டங்களில் உள்ள 81 ஊராட்சி ஒன்றியங்களில் மரக் கன்றுகள் நடப்பட்டு, நடப்பட்ட இம்மரங்களின் பராமரிப்புப் பணி ஊராட்சி ஒன்றியங்களிடம் 1-4-1999 முதல் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்த வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**மாநில வேளாண்மை மன்றம்**

வேளாண்மைத் துறையில் கொள்கை உள்ளிட்ட ஆலோசனைகளை வழங்க மாநில வேளாண்மை மன்றம் அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகளை மேற்கொள்ளவும் அரசுக்கு இப்பொருள் சம்பந்தமாக தேவையான பரிந்துரைகளைச் செய்யவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ஜி. ரங்கசாமி அவர்கள் தலைமையில் திறமை வாய்ந்த வேளாண் பட்டதாரிகளைக் கொண்டு மாநில அரசால் அமைக்கப்பட்ட அடிப்படைக் குழு தனது அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**துறைகளின் செயல்பாடுகளை ஒரு குடையின்கீழ் கொண்டுவருதல்**

வேளாண்மை மற்றும் அதன் சகோதரத் துறைகளின் செயல்பாடுகள் தனித்தனியே வெவ்வேறு அலுவலகங்களில் உள்ளதால் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளையும் பெற சிரமமான சூழ்நிலை இருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு மாவட்டங்களில் விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து இடுபொருட்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் ஆகியவைகள் ஒரே இடத்தில் கிடைக்கச்செய்ய வேளாண் துறையின்

[2000 ஏப்ரல் 6

சகோதரத் துறைகள் அனைத்தும் இணைந்து செயல்படுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

**50 எக்டர் நிருபணம்**

விவசாயிகளிடையே பல்வேறு தொழில் நுட்பங்களைப் பரப்புவதற்காக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 50 எக்டர் பரப்பில் பல்துறை செயல்விளக்கப் பண்ணையினை இந்த அரசு அமைத்துள்ளது. வேளாண்துறை மற்றும் அதன் சகோதரத் துறைகளும், பொதுத் துறை நிறுவனங்களும் இந்த செயல்விளக்கப் பண்ணையில் இணைந்து பங்கேற்று தொழில்நுட்பங்களைப் பரப்பும் பணியைச் செய்யும். 384 ஊராட்சி ஒன்றியங்களில், 461 இடங்களில், 50 எக்டர் நிருபணங்களை சகோதர மற்றும் பிற துறைகளின் பங்கேற்போடு அமைக்கப்பட்டுள்ளன. இத்துறைகளிடையே சீரிய ஒருங்கிணைப்புக்கும், இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கும், வேளாண்துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு ஒரு மாநிலக் குழுவையும், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களைத் தலைவர்களாகக் கொண்டு மாவட்டக் குழுக்களையும் நியமித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**இஸ்ரேல் நாட்டு "தஹல்" நிறுவன ஆலோசனை ஆய்வு**

தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தர்மபுரி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அதிக வருவாய் தரவல்ல பயிர்கள் சாகுபடி மற்றும் அதிக வருவாய் தரவல்ல உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உகந்த திட்டமிடுதலுக்கான ஆய்வை இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த 'தஹல்' பொறியாளர்கள் ஆலோசனை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையை ஆராய்ந்து செயல்படுத்துவதற்கு ஒரு தொழில்நுட்பக் குழுவை அரசு அமைத்தது. அக்குழு அறிக்கையினை விரிவாக ஆராய்ந்து பரிந்துரை அறிக்கையினை அரசுக்குச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாநிலத் திட்டங்கள்**

தென்னை மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாட்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான தென்னங்கன்றுகளை வழங்க பல்வேறு தென்னை அபிவிருத்தித்



2000 ஏப்ரல் 6]

திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. நெட்டை மற்றும் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்வதற்கென 27 தென்னை நாற்றங்கால்களும், நெட்டை இரக நெற்றுகள் உற்பத்திச் செய்வதற்கென இரண்டு தாய்மரத் தோட்டங்களும் பராமரிக்கப்படுகின்றன. இவ்வாறு உற்பத்திச் செய்யப்படும் நெட்டைக் கன்றுகள் கன்று ஒன்றுக்கு ரூ. 12 எனவும், நெட்டை x குட்டைக் கன்றுகள் ரூ. 20 எனவும் விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

1999-2000 ஆம் ஆண்டு தென்னை நெற்றுகள் கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகத்தில் ஆண்டு இலக்கு, பிப்ரவரி 2000 வரை சாதனை மற்றும் 2000-2001-க்கான இலக்கு ஆகியவை பின்வருமாறு:

(அலகு இலட்சம் எண்கள்)

| வ. எண். | இரகங்கள் | 1999-2000 இலக்கு | பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | நெற்றுகள் கொள்முதல் | | | |
| | அ. நெட்டை | 15.50 | 12.92 | 15.50 |
| | ஆ. நெட்டை/குட்டை | 8.65 | 6.48 | 8.65 |
| | மொத்தம் | 24.15 | 19.40 | 24.15 |
| 2. | தென்னங்கன்றுகள் விநியோகம் | | | |
| | அ. நெட்டை | 12.00 | 11.34 | 12.00 |
| | ஆ. நெட்டை/குட்டை | 7.00 | 5.56 | 7.00 |
| | மொத்தம் | 19.00 | 16.90 | 19.00 |

**தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம்**

தென்னை நெற்றுகள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம் கொச்சியில் உள்ள தென்னை அபிவிருத்தி வாரியம் வழங்கும் 100 விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தென்னை நடவு செய்ய முதலாண்டு ரூ. 3,000/-மும் இரண்டு மற்றும் மூன்றாம்

[2000 ஏப்ரல் 6

ஆண்டுகளில் ஆண்டுக்கு ரூ. 1,500 வீதமும் மொத்தம் எக்டர் ஒன்றுக்கு ரூ. 6,000/- மானியம் அளிக்கப்படுகிறது. முதல் ஆண்டில் வழங்கப்படும் மானியத் தொகை தென்னை நடுவோர்க்குத் தேவையான கன்றுகள், குழிகள் எடுத்தல், நடவு மற்றும் இதர செலவினங்களுக்கும் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளில் பராமரிப்புச் செலவுகளுக்கும் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 65.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

**ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம்**

நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் ஒரு மாநில அரசு திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தியின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே ஆகும். 1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்கு பிப்ரவரி 2000 வரை சாதனை மற்றும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான குறியீடு விவரங்கள் வருமாறு:

| வ. எண். | இனங்கள்/அலகு | 1999-2000 இலக்கு | பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | சாகுபடி பரப்பு (இல.எக்.) | 2.50 | 1.65 | 3.00 |
| 2. | உற்பத்தி (இல.பொதி) | 6.50 | 3.99 | 6.50 |
| 3. | சான்று பெற்ற விதை உற்பத்தி (குவி) | 3750 | 1930 | 3750 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி) | 3750 | 1790 | 3750 |
| 5. | விதைகொள்முதல் (நிதி ரூ.இலட்சம்) | 78.62 | 49.34 | 78.62 |
| 6. | என்.பி.வி. நச்சுயிரி விநியோகம் (எக்) | 1500 | 1200 | 1500 |
| 7. | என்.பி.வி. நச்சுயிரி விநியோகம் (ரூ.இலட்சம்) | 0.45 | 0.39 | 0.90 |

**மாநில பருத்திக் குழு**

தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்க மாநில பருத்திக் குழுவினை வேளாண் அரசு செயலரைத் தலைவராகவும், வேளாண்மை இயக்குநரை உறுப்பினர் செயலாளராகவும் நியமித்து அரசு அமைத்துள்ளது.



2000 ஏப்ரல் 6]

பருத்தி பயிரிடப்படும் பரப்பளவை அதிகரித்து, உற்பத்தித் திறனை உயர்த்தி, உற்பத்தியை அதிகப்படுத்தி தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகளுக்குத் தேவையான பருத்தித் தேவையைப் பூர்த்தி செய்வது இக்குழுவின் பிரதான நோக்கமாகும். இக்குழுவின் கூட்டம் இருமுறை கூட்டப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு உதவுவதற்கு வேளாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்ட ஒரு அடிப்படைக் குழுவினையும் அரசு அமைத்துள்ளது. இக்குழுவும் இருமுறை கூட்டப்பட்டுள்ளது.

**கரும்பு அபிவிருத்தித் திட்டம்**

பல்வேறு தொழில் நுட்பங்களைக் கையாண்டு, கரும்பு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் தூத்துக்குடி, நீலகிரி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

| வ. எண். | இனங்கள்/அலகு | 1999-2000 இலக்கு | பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | பரப்பு (இல.எக்.) | 2.75 | 2.90 | 2.75 |
| 2. | உற்பத்தி (இல.மெடன்) (வெல்லமாக) | 37.00 | 37.00 | 37.00 |
| 3. | ஒட்டுண்ணி விடுதல் (எக்) | 10500 | 10000 | 10500 |
| 4. | ஒட்டுண்ணி விடுதல் (நிதி ரூ.இலட்சத்தில்) | 3.13 | 3.50 | 3.75 |
| 5. | செயல்விளக்கப் பாத்தி அமைத்தல் (எண்) | 575 | 575 | 575 |

**கரும்பு கொள்முதல் விலை**

1999-2000 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 விழுக்காடு கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 561/- என சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலையை நிர்ணயித்து மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்திலுள்ள கரும்பு விவசாயிகள், கரும்பு பயிரிடுவதற்கு ஆகும் செலவினங்கள் அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசு அறிவித்துள்ள விலைக்கும் கூடுதலாக

கட்டுப்படியாகக் கூடிய ஒரு விலையை மாநில அரசு நிர்ணயிக்க வேண்டுமென கோரி வருகிறார்கள். எனினும், தமிழகத்திலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் கடந்த 1998-99 ஆம் ஆண்டில் மாநில அரசு கரும்புக்குப் பரிந்துரை விலை நிர்ணயம் செய்ய சட்டத்தில் இடமில்லை எனத் தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இவ்வழக்கின் பேரில் தடை உத்தரவு பெற்றிருந்தன. இந்த வழக்கினை எதிர்த்து மாநில அரசு உயர்நீதிமன்றத்தால் வழங்கிய தடை உத்திரவை நீக்க நடவடிக்கை எடுத்ததன்பேரில், கடந்த 31-1-2000 அன்று இடைக்காலத் தீர்ப்பு அளித்தது. அத்தீர்ப்பில் உயர்நீதிமன்றம் மாநில அரசு முத்தரப்புக் கூட்டத்திற்குத் தனியார் ஆலைகளைக் கலந்து கொள்ள நிர்ப்பந்திக்க இயலாது என இடைக்காலத் தீர்ப்பு அளித்துள்ளது. உயர்நீதிமன்ற ஆணை பெறப்பட்டபின், மாநில அரசு கரும்புக்கு, டன் ஒன்றுக்கு 1999-2000 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 விழுக்காடு கட்டுமானத்திற்கு ரூ.740 வழங்க வேண்டுமென்று கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

### கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்

கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் இடையே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக 'கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்' உருவாக்கப்பட்டது. கரும்பு போக்குவரத்தை எளிதாக்குவதே இச்சாலை அமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளின்கீழ் இம்மாநிலத்தில் கொள்முதல் செய்யப்படும் கரும்புக்கு, டன் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து என்ற விகிதத்தில் வசூலிக்கப்படும் கரும்பு மேல்வரி நிதியிலிருந்து கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசால் நிதி ஒதுக்கப்படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளிலிருந்து வசூலிக்கப்பட்ட கரும்பு மேல்வரி விவரம் கீழ்வருமாறு:—

| வருடம் | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1995-96 | 836.19 |
| 1996-97 | 630.20 |
| 1997-98 | 393.98 |
| 1998-99 | 522.22 |
| 1999-2000 (பிப்ரவரி 2000 முடிய) | 563.50 |



கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் சாலைப் பராமரிப்புப் பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை பற்றிய விவரம் வருமாறு:—

| ஆண்டு | புதிய சாலைகள் அமைத்த செலவு (ரூ. இலட்சத்தில்) | புதியதாக சாலைகள் அமைத்த தூரம் (கி.மீ.) | பராமரிப்புச் செலவு (ரூ. இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1995-96 | 273.65 | 46.870 | 225.86 | 499.51 |
| 1996-97 | 436.89 | 35.650 | 425.00 | 861.89 |
| 1997-98 | 411.30 | 34.900 | 475.12 | 886.42 |
| 1998-99 | 258.80 | 25.050 | 324.58 | 583.38 |
| 1999-2000 | 228.77 | 31.170 | 239.35 | 468.12 |

(பிப்ரவரி 2000 முடிய சாதனை)

### உழவர் பயிற்சி நிலையங்கள்

விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் பயிற்சியளித்து அதன்மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள், பண்ணை மகளிர் மற்றும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு கிராம அளவிலான அடிப்படைப் பயிற்சியும், களப்பயிற்சி செயல்விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. மேலும் பண்ணைச் செய்திகள் வானொலி மற்றும் தினசரிகள் மூலம் உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. வருடந்தோறும் உழவர் தினவிழா நடத்தப்பட்டு, விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள இதர வல்லுநர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் பயனடைய வழி வகுக்கிறது. மற்றும் விவசாயிகள் ஆண்டுதோறும் சுற்றுலாவாக ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் வயல்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டு நவீன தொழில் நுட்பங்களின் வளர்ச்சியை நேரில் கண்டறிந்து அனுபவம் பெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது. காஞ்சீபுரம், திண்டிவனம், நவ்லாக், சேலம், தர்மபுரி, பவானி, இலால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை

மற்றும் திருப்பதிசாரம் ஆகிய இடங்களில் இயங்கும் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் சுமார் 40000 விவசாயிகள் பயனடைகின்றனர்.

**1999-2000 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 2000 வரை சாதனை மற்றும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன பின்வருமாறு:—**

| வ. எண். | இனம்/அலகு. | 1999-2000 ஆண்டு இலக்கு. | பிப்ரவரி 2000 வரை சாதனை. | 2000-2001 இலக்கு. |
|---|---|---|---|---|
| 1. | ஆண்/பெண் விவசாயிகளுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 264 | 264 | 264 |
| 2. | உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 120 | 120 | 120 |
| 3. | களப்பயிற்சி மற்றும் இரண்டாம் நிலை செயல்விளக்கம் (எண்) | 1320 | 1320 | 1320 |
| 4. | வயல்வெளிச் செயல் விளக்கம் (எண்) | 528 | 528 | 528 |
| 5. | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | 23.19 | 20.15 | 22.40 |

**மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்**

குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையத்தில் வேளாண் துறையின்கீழ் பணியாற்றிவரும் விரிவாக்க அலுவலர்கள் மேன்மேலும் சிறந்த முறையில் பணியாற்றிட, நவீன வேளாண் தொழில் நுட்பங்கள், விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பு மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, மாநில அளவிலான இப்பயிற்சி நிலையத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள், இதர அரசுத் துறை மற்றும் இதர நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்களுக்கும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையத்தில் இப்பயிற்சிகளை 1999-2000 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு ரூ. 13.704 இலட்சம் செலவினத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



**2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்டம் பின்வருமாறு:—**

| 'வ.எண் | பயிற்சி விபரம் | இலக்கு |
|---|---|---|
| 1. | வயல்விளக்க அலுவலர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி | 150 |
| 2. | இடுபொருள் மேலாண்மை மற்றும் நிலைத்த பண்ணையம் பற்றிய சிறப்புப் பயிற்சி (வே.அ/வே.உ.அ.) | 800 |
| 3. | முன்பருவப் பயிற்சி (கரீப்/ரபி) | 220 |
| 4. | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | 13.704 |

**மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு**

மண்ணின் தன்மை, அதன் பெளதீக மற்றும் இரசாயன குணங்கள் ஆகியவற்றைக் கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக் கூட ஆய்வுகள் மூலம் கண்டறிந்து சர்வதேச நிலைக்கு ஏற்ப மண்ணை வகைப்படுத்தி நில அமைப்பியலின்படி வரைபடம் வரைந்து பயன்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுகிறது. கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கும் இம்மண் அளவை அமைப்புகளில் ஆண்டு இலக்கான 1.50 இல. எக்டரில், பிப்ரவரி 2000 வரையில் 0.93 இல. எக்டர் பரப்பில் விரிவான அளவை மேற்கொள்ளப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டு இவ்வளவை தொடர்ந்து 1.30 இலட்சம் எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்படும்.

**மாவட்ட மண்வளத் தொகுப்பேடு**

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட தொடக்க மண்வகையீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு ஏட்டளவில் இருந்து மண்வளத் தொகுப்பேடுகள் உலக வங்கி நிதி உதவியுடன் அச்சிடப்பட்டு தகவல் களஞ்சியமாக வெளியிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 7.13 இலட்சம் செலவில் 7 மாவட்டங்களுக்கும் இரண்டாம் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சம் செலவில் 16 மாவட்டங்களுக்கும் மண்வளத் தொகுப்பேடுகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் மாவட்டத்தின் பொதுவான தகவல்கள்,

மண்ணின் வகை மற்றும் குணாதிசயங்கள், மண்ணின் திறன், உற்பத்தித் திறன், பாசனத்திறன். ஏற்புடைய பயிர்கள் போன்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன. நிலப்படத் தொகுப்பு அச்சிடாமல் உள்ள கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களின் நிலப்படத் தொகுப்பு தயாரிக்கத் தேவையான தகவல்கள் ஒருங்கிணைப்பு பணி தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

**களர் உவர் நிலச்சீர்த்திருத்தம்**

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சீபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் ஆண்டிற்கு 1600 எக்டர் வீதம் மூன்று ஆண்டுகளில் (1998-99, 1999-2000 மற்றும் 2000-2001) 4,800 எக்டர் பரப்பில் களர் உவர் நிலச்சீர்திருத்தம் ரூ. 404.68 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் 1600 எக்டர் பரப்பில், களர் உவர் நிலங்களை சீர்திருத்துவதற்காக ரூ. 164.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பிப்ரவரி 2000 முடிய 831 எக்டர் பரப்பில் களர் உவர் நிலங்கள் ரூ. 90.21 இலட்சம் செலவில் சீர்திருத்தப்பட்டுள்ளன.

**மண் பரிசோதனை நிலையங்கள்**

தமிழ்நாட்டில் தற்போது இயங்கிவரும் 19 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு மண் மாதிரிகள் ஆய்வு செய்து குறிப்பான உரப் பரிந்துரைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இலக்கிடப்பட்ட 8.42 இலட்சம் மண் மாதிரிகளில் பிப்ரவரி 2000 முடிய 5.86 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 5.54 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் மூலம் 2.88 இலட்சம் மண் மாதிரிகளும் ஆய்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆய்வகங்கள் களர், உவர் மண் பகுதிகளுக்குச் சீர்திருத்த ஆலோசனை வழங்குதல், கிராம அளவிலான மண் வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர் தன்மையை அறிதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. கிராம ஏற்புத் திட்டம் மண் பரிசோதனை முகாம், கருத்துக்காட்சிகள் மூலம் மண், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட உரத்தொழில் நுட்பங்களைப் பரப்புவதில் இயங்கும் மண் ஆய்வுக் கூடங்கள் உறுதுணை புரிகின்றன.



**உரப் பரிசோதனை நிலையங்கள்**

விவசாயிகளுக்குத் தரமான இரசாயன உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை நிர்ணயிக்கப்பட்ட தரத்தின்படி வழங்கும் நோக்கத்துடன் உரக் கட்டுப்பாடு ஆணையின்கீழ், உர ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள வேளாண்மை அலுவலர்கள், சில்லரை மற்றும் மொத்த உர விற்பனை மையங்கள், உர உற்பத்திக் கூடங்கள் மற்றும் கலப்பு உரம் தயாரிக்கும் நிலையங்களிலிருந்து உர மாதிரிகளை எடுக்கின்றனர். ஆண்டொன்றுக்கு 17,220 உர மாதிரிகள் 14 உரப் பரிசோதனைக் கூடங்கள் மூலம் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. இவ்விலக்கில் 1999-2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 2000 வரை 15,938 உர மாதிரிகள் எடுக்கப்பட்டு 15,352 எண்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதில் 662 உர மாதிரிகள் தரக்குறைவானது என கண்டறியப்பட்டது. அவற்றில் 384 இனங்களுக்குத் துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 278 இனங்கள் பல்வேறு நிலைகளில் துறையின் பரிசீலனையில் உள்ளது. இத்துறையின் தரக்கட்டுப்பாட்டு பிரிவால் அமலாக்கப்படும் 1985 ஆம் ஆண்டு உரக்கட்டுப்பாட்டு ஆணை கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனையாளர்கள் தரமான இரசாயன உரங்களை விநியோகிக்க வழி வகுக்கிறது.

**பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்**

வேளாண்மைத் துறையில் ஆண்டு ஒன்றுக்கு 16,236 பூச்சி மருந்து மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்ட ஒன்பது பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 2000 வரை, 13,989 எண்கள் மாதிரிகள் எடுக்கப்பட்டு கடந்த ஆண்டு நிலுவையும் சேர்த்து 14,786 எண்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதில் 175 மாதிரிகள் தரமற்றது என கண்டறியப்பட்டுள்ளது. 47 தரமற்ற மாதிரிகள் தயாரித்த தயாரிப்பாளர், விநியோகஸ்தர் மற்றும் விற்பனையாளர்கள் மீது பூச்சி மருந்து சட்டம், 1968-ன்படி நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தரமற்ற பூச்சி மருந்து மாதிரிகள் 128 எண்கள் மீது துறை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தரமற்ற மாதிரிகள் 1.18 சதவிகிதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை நீதிமன்றத் தீர்ப்பின்படி 13 தரமற்ற மாதிரிகள் மீது தீர்ப்பு வழங்கப்பட்டு ரூ. 52,000 அபராதம் செலுத்தப்பட்டுள்ளது. 34 தரமற்ற மாதிரிகளின் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது.

**பயிர் விளைச்சல் போட்டி**

உயர் வேளாண் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து உற்பத்தியை உயர்த்த பயிர் விளைச்சல் போட்டி மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல் அவசியமாகிறது. இந்நோக்கத்தை அடைய பயிர் விளைச்சல் போட்டி திட்டம், மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது. நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களுக்கு இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

வழங்கப்படும் பரிசுத் தொகை பின்வருமாறு:

(அலகு ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் | | மாவட்ட அளவில் | |
|---|---|---|---|---|
| | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 8000 | 4000 |
| இதர பயிர்கள் | 8000 | 4000 | 4000 | 2000 |

1999-2000 ஆம் ஆண்டில் இந்தப் போட்டிகள் ரூ. 16.87 இலட்சம் ஒதுக்கீட்டுடன் நடத்தப்படுகின்றன. மாநில அளவு போட்டிக்கு நுழைவுக் கட்டணமாக நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ. 100 ஆகவும் மற்றும் இதர பயிர்களுக்கு ரூ. 50 ஆகவும் மாவட்ட அளவில் நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ. 50 ஆகவும் இதர பயிர்களுக்கு ரூ. 25 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 வரை மாநில அளவில் 460 விவசாயிகளும், மாவட்ட அளவில் 1789 விவசாயிகளும் பதிவு செய்துள்ளனர். 2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டம்**

மத்திய அரசு தற்போது மாநிலம் முழுவதும் அமலில் உள்ள விரிவான பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்குப் பதில் 'தேசிய வேளாண்மை காப்பீடு' எனும் புதிய திட்டத்தை 1-10-1999 முதல் செயல்படுத்த அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்குப் பயிர் காப்பீடு வழங்கப்படும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குக் காப்பீட்டுக் கட்டணத்தில் 50 விழுக்காடு



மானியமாக வழங்கப்படும். இத்தொகையினை மத்திய மாநில அரசுகள் சரிசமமாக ஏற்கும். இத்திட்டத்தின்கீழ் நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள மற்றும் வணிக பயிர்களான கரும்பு, பருத்தி, உருளைக்கிழங்கு ஆகிய பயிர்களுக்கு வழங்கப்படும். கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு இம்மாநில அரசு இசைவு தெரிவித்து வாழை, மிளகாய், திராட்சை ஆகிய பயிர்களையும் இத்திட்டத்தில் உள்ளடக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. இத்திட்டம் வரும் கரீப் 2000 முதல் செயல்படுத்தப்படும்.

**பள்ளிக் கல்வியில் வேளாண்மையைப் பாடமாக அமைப்பது**

1997-98ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ஆற்றியபோது, வேளாண்மைக் கல்லூரிகளில் சேரமுனையும் மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக பள்ளிக் கல்வியில் வேளாண்மையை ஒரு பாடமாக அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று அறிவித்தார்கள். 100 மேல்நிலைப் பள்ளிகளிலும், 100 உயர்நிலைப் பள்ளிகளிலும் வேளாண்மைப் பாடத்தை அறிமுகப்படுத்தி அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. 113 ஆசிரியர் பணியிடங்களையும் தோற்றுவித்துள்ளது. இதற்காக ஏற்படுத்தப்பட்ட நால்வர் குழுவினரால் தயாரிக்கப்பட்ட வேளாண்மைப் பாடத் திட்டம் மற்றும் புத்தகங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வரும் 2000-2001 ஆம் கல்வியாண்டிலிருந்து பள்ளிகளில் வேளாண்மை அறிவியல் பாடமாகக் கற்பிக்கப்படும்.

**மத்திய அரசு சார்புத் திட்டங்கள்**

ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் (அரிசி)

தமிழ்நாட்டில் நெற்பயிர் மிகுதியாக பயிரிடப்படும் மாவட்டங்களில் அரிசி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது. நெல் சாகுபடியில் மேலும் அதிக கவனம் செலுத்தும் வகையில் தொழில் நுட்பங்களைப் பரவலாக்குவது மற்றும் அவசிய இடு பொருட்களை மானிய விலையில் விநியோகித்தல் போன்ற இனங்களைக் கொண்ட இத்திட்டம் ஒரு மத்திய அரசு சார்புத் திட்டமாக, மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித் திறனைவிட உற்பத்தித் திறன் குறைவாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 140 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

[2000 ஏப்ரல் 6

இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

இனவாரியாக **1999-2000** ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி **2000** வரை சாதனை பின்வருமாறு:

| வ. எண். | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை |
| 1. | சான்றுபெற்ற விதை விநியோகம் (மெ.டன்) நெல் மற்றும் சிறுதானியங்கள் | 11449.5 | 10095 | 228.99 | 206.57 |
| 2. | உற்பத்தித் தொழில்நுட்ப நிரூபணம் (ஏக்கர்) | 1400 | 1978 | 28.00 | 27.79 |
| 3. | உழவர் பயிற்சி (எண்) | 280 | 280 | 14.00 | 14.00 |
| 4. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பம் (எண்) | 1400 | 1380 | 84.00 | 79.93 |
| 5. | வீரிய ஒட்டு நெல் உற்பத்தி தொழில் நுட்பம் (ஏக்கர்) | 1921 | 1906 | 19.21 | 18.93 |
| 6. | பண்ணைக் கருவிகள் விநியோகம் (எண்) | 17900 | .. | 89.50 | 89.50 |
| 7. | விசை உழுவைகள் விநியோகம் (எண்) | 1100 | 255 | 330.00 | 330.00 |
| 8. | சில்லரைச் செலவினம் | .. | .. | 6.30 | 5.55 |
| | மொத்தம் | .. | .. | 800.00 | 772.27 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்**

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மக்காச்சோள உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் விதை சிறுதளை இனம் (100 விழுக்காடு மத்திய அரசு செலவினம்) தவிர மீதமுள்ள இன செலவினங்களை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டம்



2000 ஏப்ரல் 6]

கோவை, திண்டுக்கல், ஈரோடு மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

1999-2000 ஆம் ஆண்டு இலக்கு மற்றும் பிப்ரவரி 2000 வரை சாதனை விவரம் வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை |
| 1. | வயல்விளக்கம் (எண்) | 461 | 461 | 4.61 | 4.61 |
| 2. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் (எண்) | 31 | 31 | 1.86 | 1.85 |
| 3. | விவசாயிகள் பயிற்சி (எண்) | 31 | 31 | 1.55 | 1.55 |
| 4. | சான்று/வீரிய ஒட்டு இரக உபயோக மானியம் (மெ.டன்) | 62 | 3.88 | 2.48 | 0.28 |
| 5. | மேம்படுத்தப்பட்ட கருவிகள் விநியோக மானியம் (2 மாவட்டங்கள்) | .. | .. | 1.54 | 1.54 |
| 6. | விளம்பரம் (2 மாவட்டங்கள்) | .. | .. | 0.92 | 0.86 |
| 7. | சில்லரைச் செலவினம் (2 மாவட்டங்கள்) | .. | .. | 0.84 | 0.72 |
| 8. | விதை சிறுதளை செயல் விளக்கம் வீரிய ஒட்டு இரகம் | 640 | 600 | 0.47 | 0.47 |
| | மொத்தம் | .. | .. | 14.27 | 11.88 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம்**

மாநிலத்தின் பருப்பு வகைகள் தேவைக்கும், கிடைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும், வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டிய சுமையை குறைக்கவும், தேவையான உற்பத்தி உயர்வை அடைய மாநில அரசு தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பெருவிளக்கப் பண்ணை மூலம் புதிய இரகங்களை அறிமுகப்படுத்துதல், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு,

[2000 ஏப்ரல் 6

விவசாயப் பயிற்சி மற்றும் நீர் மேலாண்மை போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்துகிறது. இவ்வாறான நடவடிக்கைகளில் மத்திய அரசு மானியம் என்ற வகையான நிதி உதவி இத்திட்டத்தின்மூலம் அளிக்கிறது. அதற்கான மொத்தச் செலவில் 75:25 என்ற விகிதத்தில் மத்திய அரசும் மாநில அரசும் பங்கேற்கின்றன.

இனவாரியாக 1999-2000 ஆம் ஆண்டில் பொருள் மற்றும் நிதி இலக்குகள் மற்றும் பிப்ரவரி 2000 வரையிலான சாதனை பின்வருமாறு:—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை |
| 1. | கருவிதை கொள்முதல் (குவி) | 100 | 104 | 4.00 | 5.83 |
| 2. | ஆதார விதை உற்பத்தி (குவி) | 2500 | 2090 | 10.00 | 8.36 |
| 3. | விதை கிராமம் (குவி) | 20000 | 15070 | 40.00 | 30.14 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் (குவி) | 20000 | 12000 | 60.00 | 36.09 |
| 5. | பெருவிளக்க பண்ணை (எக்) | 2777 | 2777 | 25.00 | 25.00 |
| 6. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்) | 666 | 613 | 10.00 | 9.21 |
| 7. | பயிற்சிகள் (எண்) | 20 | 20 | 2.00 | 2.00 |
| 8. | நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகம் (எக்) | 20000 | 23938 | 5.00 | 5.00 |
| 9. | நுண்ணூட்டச் சத்துக்கள் விநியோகம் (எக்) | 2000 | 2000 | 2.00 | 2.00 |
| 10. | பயிர் பாதுகாப்பு கருவிகள் | 1250 | 1150 | 10.00 | 9.20 |
| 11. | விதை நேர்த்தி 50% மானியம் (எக்) | 50000 | 46666 | 1.50 | 1.40 |
| 12. | தெளிப்பு நீர் பாசன கருவிகள் (எண்) | 169 | 150 | 22.00 | 19.87 |
| 13. | பணியாளர் சம்பளம் | .. | .. | 8.50 | 6.99 |
| | மொத்தம் | .. | .. | 200.00 | 161.09 |

2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்படும்.



2000 ஏப்ரல் 6]

**தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்**

அதிகரித்து வரும் பருத்தி தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் பருத்தி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் குறைவாக உள்ளதால் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதே மாற்று வழியாகும். இந்த நோக்கத்துடன் இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. அதன் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

1999-2000 ஆம் ஆண்டின் பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் பிப்ரவரி 2000 வரையிலான இனவாரியான சாதனை விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை |
| 1. | கருவிதை உற்பத்தி (குவி) | 6.00 | .. | 0.15 | .. |
| 2. | சான்றுவிதை விநியோகம் (குவி) | 4156 | 137 | 13.30 | 0.37 |
| 3. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிருபணம் மற்றும் பயிற்சி (எண்) | 1500 | 1441 | 120.00 | 104.76 |
| 4. | உழவர் பயிற்சி (எண்) | 125 | 123 | 6.25 | 6.10 |
| 5. | என்.பி.வி. நச்சுயிரி நிருபணம் (எண்) | 2500 | 1935 | 18.75 | 16.15 |
| 6. | இனக்கவர்ச்சிப் பொறி நிருபணம் (எக்) | 1562 | 909 | 3.90 | 2.21 |
| 7. | பயிர் உற்பத்தித் தொழில்நுட்பம் (எக்) | 7500 | 7160 | 112.50 | 107.88 |
| 8. | சில்லரைச் செலவினம் | .. | .. | 0.75 | 0.65 |
| | மொத்தம் | .. | - | 275.62 | 238.12 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

[2000 ஏப்ரல் 6

**பருத்தி தொழில்நுட்பவியல் குழுத் திட்டம்**

மத்திய அரசு, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்துவதற்கு, பருத்தி தொழில்நுட்பக் குழுத் திட்டம் என்கிற புதிய திட்டத்தினை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பருத்தி உற்பத்தி அதிகரிப்பு, பருத்திப் பயிர் பாதுகாப்பு, அறுவடைத் தொழில்நுட்பங்கள் மேம்பாடு மற்றும் அங்காடி வசதி செய்தல். இதற்கென மொத்தம் ரூ. 566.50 கோடி ஒதுக்கி, அதனை தமிழ்நாடு உட்பட 11 பருத்தி அதிகமாக பயிரிடும் மாநிலங்களில் கீழ்வரும் 4 சிறுதொழில் நுட்பக் குழுத் திட்டங்களாக செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சிறிய தொழில்நுட்பக் குழுத் திட்டம் I**

இத்திட்டத்தின்கீழ் உயர் இரக கலப்பின பருத்தி உற்பத்தி ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் செய்யப்படும். நிலையான பருத்தி உற்பத்திக்கென நில மற்றும் நீர் மேலாண்மை செய்தல் அடங்கும். இதனை 100 விழுக்காடு மத்திய உதவியுடன் செயல்படுத்த ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கென ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறிய தொழில்நுட்பக் குழுத் திட்டம் II**

இத்திட்டத்தின்கீழ், தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் மத்திய அரசின் திட்டமான ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்திற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த செலவுத் தொகை ரூ. 465 கோடியாகும். 75:25 விகிதப்படியான இத்திட்டத்தில் மத்திய அரசின் பங்கு ரூ. 350 கோடியாகும். மாநில அரசின் பங்கு ரூ. 115 கோடியாகும். தரமான விதை உற்பத்தி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, தெளிப்பு நீர் கருவிகள் மற்றும் சொட்டுநீர்ப் பாசன கருவிகள் உபயோகத்தினைப் பரவலாக்குதல் ஆகிய வளர்ச்சித் திட்டங்கள் இதன்கீழ் செயல்படுத்தப்படவுள்ளன.

தற்போது, மத்திய அரசுத் திட்டமான ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 275 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ. 206 இலட்சமாகும். மாநில அரசின் பங்கு ரூ. 69 இலட்சமாகும். தற்போது மத்திய அரசு, சிறிய தொழில்நுட்பக் குழுத் திட்டம் 2-ன்கீழ், இத்திட்டச் செலவினை ரூ. 533 இலட்சமாக



2000 ஏப்ரல் 6]

உயர்த்தி 1999-2000ஆம் ஆண்டிலேயே செயல்படுத்த அனுமதி அளித்துள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ. 400 இலட்சமாகும். மாநில அரசின் பங்கு ரூ. 133 இலட்சமாகும். இதனை ரூ. 526 இலட்சம் செலவில் செயல்படுத்த திருந்திய பொருள் மற்றும் நிதி இலக்குகள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக 11-2-2000 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறிய தொழில்நுட்பக் குழுத் திட்டம் III**

இத்திட்டம், பருத்தி அங்காடி வசதி செய்தல் தொடர்புடையது ஆகும். இதன்படி, பருத்திக்கென, ஏலமையங்கள் கட்டுதல், தரநிர்ணய வசதிகள், பரிசோதனைச் சாலைகள் மற்றும் புதிய ஒழுங்குமுறை அங்காடிகளை ஏற்படுத்துதல் ஆகியவை செய்யப்படும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதற்கென ரூ. 42.75 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சிறிய தொழில்நுட்பக் குழுத் திட்டம் IV**

இத்திட்டத்தின்கீழ், பருத்தி பதனிடும் மற்றும் நூற்பாலைகள் நவீனமயமாக்கப்பட ஆவன செய்யப்படும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கென ரூ. 18.75 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**கரும்பு ஆதாரமுள்ள பயிர் செய்யும் முறைக்கான நிலையான வளர்ச்சித் திட்டம்**

மாநில மற்றும் தேசிய சராசரி உற்பத்தித் திறனைவிடக் குறைவான உற்பத்தித் திறன் உள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கோயம்புத்தூர், மதுரை, தேனி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகின்றது. நடவு மற்றும் மறுதாம்பு பயிர்களில் தரமான விதைக் கரணைகள் விநியோகம் மற்றும் விதை மூலம் பரவக்கூடிய நோய்களைத் தடுக்கக்கூடிய கரணைநேர்த்தி, நுண்பாசனம், பண்ணைகளை இயந்திரமயமாக்குதல் ஆகிய நவீன தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்வதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டச் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

[2000 ஏப்ரல் 6

1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 வரை இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை பின்வருமாறு:—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 1999-2000 | பொருள் பிப்ரவரி 2000 வரை சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 1999-2000 | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 2000 வரை சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | களசெயல் விளக்கம் (எண்) | 400 | 380 | 20.00 | 19.50 |
| 2. | மாநில பயிற்சி (எண்) | 4 | 4 | 0.50 | 0.50 |
| 3. | உழவர் பயிற்சி (எண்) | 152 | 152 | 7.60 | 7.60 |
| 4. | எருது இழுக்கும் கருவிகள் (எண்) | 2000 | .. | 30.00 | 30.00 |
| 5. | டிராக்டர் இழுக்கும் கருவிகள் (எண்) | 300 | .. | 30.00 | 30.00 |
| 6. | விதைப் பெருக்கம் (எக்.) | 600 | .. | 12.00 | 12.00 |
| 7. | சொட்டுநீர் பாசன உள்ளமைப்பு (எக்.) | 182 | .. | 45.50 | .. |
| 8. | வெப்ப நேர்த்தி நிலையம் (எண்) | 10 | .. | 20.00 | 20.00 |
| 9. | சில்லறைச் செலவினம் | .. | .. | 2.40 | 1.87 |
| | மொத்தம் | .. | .. | 168.00 | 121.47 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம்**

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஆர்வத்துடன் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாகவும், முக்கியமான இடுபொருட்களை மானிய விலையில் வழங்குவதன் மூலமும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடனும் இம்மாநிலத்தில் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் வகையில் இத்திட்டம் மத்திய அரசு சார்புத் திட்டமாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினை மத்திய மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.



2000 ஏப்ரல் 6]

1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 வரை இனவாரியாக பொருள் மற்றும் நிதி இலக்கு மற்றும் சாதனை கீழ்வருமாறு:—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 1999-2000 | பொருள் பிப்ரவரி 2000 வரை சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 1999-2000 | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 2000 வரை சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | வல்லுநர் விதை உற்பத்தி (குவி) | 1333 | 570 | 20.00 | 8.75 |
| 2. | ஆதார விதை உற்பத்தி (குவி) | 15000 | 4847 | 45.00 | 11.16 |
| 3. | விதைக் கிராமம் (குவி) | 62500 | 23724 | 125.00 | 89.43 |
| 4. | சான்று விதை விநியோகம் (குவி) | 30000 | 34951 | 90.00 | 97.58 |
| 5. | விதை சிறுதளை விநியோகம் (எண்) | .. | 22080 | .. | 24.98 |
| 6. | பெருவிளக்கப்பண்ணை அமைத்தல் (எக்.) | 1212 | 1214 | 20.00 | 19.82 |
| 7. | விதை நேர்த்தி (எக்.) | 138889 | 65073 | 25.00 | 25.00 |
| 8. | வேர்ப் புழுவைக் கட்டுப்படுத்துதல் (எக்.) | 1300 | 1212 | 6.50 | 6.50 |
| 9. | நுண்ணுயிர் விநியோகம் (எக்.) | 80000 | 86380 | 20.00 | 21.82 |
| 10. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நிரூபணம் (எக்.) | 3000 | 3000 | 45.00 | 45.00 |
| 11. | இனக்கவர்ச்சிப் பொறி நிரூபணம் (எண்) | 4000 | 3498 | 20.00 | 13.75 |
| 12. | ஜிப்சம் விநியோகம் (எக்.) | 99400 | 87826 | 198.80 | 198.80 |
| 13. | வேளாண் கருவிகள் விநியோகம் (எண்) | 1333 | .. | 20.00 | 20.00 |
| 14. | பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்) | 800 | 987 | 8.00 | 8.00 |
| 15. | நுண்ணூட்டச்சத்து விநியோகம் (எக்) | 35000 | 35000 | 35.00 | 35.00 |
| 16. | உழவர் பயிற்சி (எண்) | 300 | 300 | 30.00 | 30.00 |
| 17. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் (எண்) | 333 | 219 | 50.00 | 32.35 |
| 18. | சம்பளம் மற்றும் இதரச் செலவினம் | .. | .. | 75.00 | 50.04 |
| | மொத்தம் | .. | .. | 833.30 | 737.98 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

[2000 ஏப்ரல் 6

**எண்ணெய்ப்பனை சாகுபடி திட்டம்**

சமையல் எண்ணெய் தேவையை மாநிலத்திலேயே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மத்திய அரசு சார்புத் திட்டமாக மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் நிதி உதவி செய்து செயல்படுத்தப்படுகிறது. சாகுபடிப் பரப்பு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயிக்கும் 6 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யும் வகையில் 900 கன்றுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் எண்ணெய் பிழிந்தெடுத்து சுத்திகரிப்பு செய்யும் ஆலைகளை ஒழுங்குபடுத்த வகை செய்யும் எண்ணெய்ப்பனை சட்டமொன்றும் இயற்றப்பட்டுள்ளது. எண்ணெய்ப்பனை சாகுபடி திட்டத்தின்கீழ் பிப்ரவரி 2000 வரை 9,251 எக்டர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தவிர, ரூ. 400 இலட்சம் செலவில் ஓர் எண்ணெய் பிழியும் மாதிரி அலகு நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவில் ரூ. 240 இலட்சத்தை மத்திய அரசு வழங்கும். மீதமுள்ள தொகை மூன்று தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண் வளர்ச்சிக் கழகத்தால் சமமாக ஏற்கப்படும்.

1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பிப்ரவரி 2000 வரையிலான சாதனை பின்வருமாறு:

| வ. எண். | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை |
| 1. | திட்டத்திற்கு முந்திய நடவடிக்கைகள் (எக்) | 2400 | 1082 | 68.64 | 33.29 |
| 2. | பரப்பு விரிவாக்கம் (எக்) | 1700 | 402 | 51.24 | 11.52 |
| 3. | அலுவலர், விரிவாக்க பணியாளர் மற்றும் எண்ணெய்ப்பனை உற்பத்தியாளர் பயிற்சி | 500 | 475 | 4.79 | 4.27 |
| 4. | விளம்பரம் மற்றும் விரிவாக்கம் | .. | .. | 4.00 | 3.92 |
| 5. | இரண்டாம் ஆண்டு முதல் பராமரிப்புச் செலவு (எக்) | 2212 | 1514 | 61.42 | 41.83 |
| 6. | சொட்டுநீர்ப் பாசனம் (எக்) | 196 | 136 | 49.00 | 33.00 |
| 7. | சம்பளம் | .. | .. | 8.00 | .. |
| | மொத்தம் | .. | .. | 247.09 | 127.85 |





2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**விவசாயிகள் பரிவர்த்தனைத் திட்டம்**

வெளி மாநிலங்களில் வேளாண் திட்டங்களையும் கடைப்பிடிக்கப்படும் தொழில்நுட்பங்களையும் நேரில் கண்டு சாகுபடி முறைகளை அறிந்துகொள்ள 20 பேர் அடங்கிய குழுக்களாக நம் மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்று பார்வையிட போக்குவரத்து செலவினமாக ஒரு குழுவிற்கு ரூ. 50,000/- வீதம் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் 20 பேர் அடங்கிய இரண்டு குழுக்கள் பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு நெல், சிறுதானியப் பயிர்களின் சாகுபடி முறை அறிய சென்று வர உள்ளனர்.

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**மத்திய அரசு முழு நிதியுதவி பெறும் திட்டங்கள்**

*நெல் மற்றும் சிறு தானிய சிறுதளைகள் திட்டம்*

புதிதாக வெளியிடப்பட்ட இரகங்கள் விரைவாக விவசாயிகளிடேயே பரவச் செய்யவும் வெளியிடப்படவுள்ள இரகங்களின் ஏற்புத் தன்மையை தெரிந்து கொள்ளவும் மற்றும் புதிய இரகங்களின் விதைகள் விவசாயிகளிடம் போதிய அளவு இருப்பில் இருக்கச் செய்யவும் சிறுதளைப்பைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. மத்திய அரசின் திட்டமான இத்திட்டத்தின் முழுச் செலவினையும் மத்திய அரசே

[2000 ஏப்ரல் 6

ஏற்கிறது. இத்திட்டத்தின்கீழ் சிறுதளைப்பைகள் விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மற்றும் பிப்ரவரி 2000 வரையிலான சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை |
| 1. | நெல் | 69150 | 69150 | 20.80 | 20.80 |
| 2. | சிறுதானியங்கள் | 16000 | 14000 | 3.93 | 3.50 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியில் சிறுதானிய தீவிர சாகுபடி நிருபணம் அமைக்கும் திட்டம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகளை ஊக்குவித்து புதிய தொழில் நுட்பங்களை கடைப்பிடிப்பதன் மூலம் சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு போன்ற சிறுதானிய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் நிருபணங்கள் அமைக்கப்படுகின்றன. கன்னியாகுமரி, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் அரை முதல் ஓர் எக்டர் பரப்பில் நிருபண தளைகள் அமைக்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 வரை இலக்கிடப்பட்ட 60 எக்டர் நிருபணங்கள் அனைத்தும் அமைக்கப்பட்டுவிட்டன.

இத்திட்டம் 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**பண்ணை இயந்திரமாக்கும் திட்டம்**

சிறு விவசாயிகள், காலத்தே பண்ணை வேலைகளை ஆற்ற உதவும் வகையில், விவசாய வேலைகள் முழு வீச்சில் உள்ள ஆட்பற்றாக்குறை தோன்றும் முக்கிய பருவ காலங்களில் பயன்படுத்தும் நோக்கில் 30 குதிரைத் திறன் வரையுள்ள சிறு இழுவைகளை (டிராக்டர்) மானியத்தில் (தேவையான இணைப்புக் கருவிகளுடன் பெறக்கூடியது)



2000 ஏப்ரல் 6]

வழங்கும் திட்டம் மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் 1999-2000-ல் செயல்படுத்தப்பட்டது. ரூ.113.40 இலட்சத்தில் 378 சிறு டிராக்டர்கள் வழங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ரூ.30,000 மானியம் போக மீதமுள்ள தொகை செலுத்தி இழுவைகளைப் பெறத் தகுதியுள்ள சிறு விவசாயிகள் மனு சேகரித்துத் "தமிழ்நாடு வேளாண் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்" மூலம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2000-2001 லும் தொடரப்படும்.

**தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணை முறை**

தென்னை நெற்றுகள் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் முதிர்ந்த மற்றும் நோயுற்ற தென்னை மரங்களை அகற்றி புதிய தென்னங்கன்றுகளை நடுதல், உரமிடுதல் பயிர் பாதுகாப்பு மற்றும் பல இரக தென்னங்கன்றுகளைப் பயிரிடுதல் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். 10 விழுக்காடு ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுமையான மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டத்திற்கான நிதியுதவி, தென்னை அபிவிருத்தி வாரியம் மூலமாக வழங்கப்படுகின்றது.

இனவாரியாக 1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் பிப்ரவரி 2000 வரையிலான சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை | இலக்கு 1999-2000 | பிப்ரவரி 2000 வரை சாதனை |
| 1. | முதிர்ந்த, நோயுற்ற மரங்களை வெட்டி அகற்றுதல் (எண்) | 1500 | 1310 | 3.00 | 2.62 |
| 2. | புதிய தென்னங்கன்றுகள் நடவு செய்தல் (எண்) | 1500 | 1310 | 0.075 | 0.06 |
| 3. | உரமிடுதல் மற்றும் பயிர்பாதுகாப்பு (எண்) | 992813 | 933003 | 79.425 | 73.76 |
| | மொத்தம் | .. | .. | 82.50 | 76.44 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.

[2000 ஏப்ரல் 6

**தென்னை வளர்ச்சி வாரியம் கொச்சி உதவியுடன் நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி**

கொச்சியிலுள்ள தென்னை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் வேலூர் மாவட்டம், நவ்லாக்கில் நெட்டை X குட்டை கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 50:50 நிதி பங்கீட்டுடன் செயல்பட்டு வருகின்றது. 1999-2000 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடும் செலவினமும் பின்வருமாறு—

| பொருள் (இலட்சம் எண்கள்) | | நிதி (இலட்சம் ரூபாய்) | |
|---|---|---|---|
| 1999-2000 ஆம் ஆண்டு இலக்கு | பிப்ரவரி 2000 முடிய சாதனை | ஒதுக்கீடு 1999-2000 | பிப்ரவரி 2000 முடிய செலவினம் |
| 1.00 | 0.72 | 22.70 | 19.27 |

2000-2001 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரும்.

**தென்னையில் சிவப்பு சிலந்திப்பூச்சியின் (ஈரியோபைட்) தாக்குதல்**

ஆகஸ்ட் 1998-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டைப் பகுதிகளில் தென்னையில் ஈரியோபைட் சிலந்திப்பூச்சி தாக்கியுள்ளது கண்டறியப்பட்டது. இச்சிலந்திப்பூச்சித் தாக்குதல் மற்ற மாவட்டங்களுக்கும் படிப்படியாக பரவியுள்ளது. தற்போது தென்னை உற்பத்தியின் மொத்த பரப்பில் சுமார் 20 சதவிகிதத்திற்கும் மேலாக 24 மாவட்டங்களில் இச்சிலந்திப்பூச்சி 141 இலட்சத்திற்கும் மேலான தென்னை மரங்களைத் தாக்கியுள்ளது. இந்தப் பூச்சி தாக்குதலால் தென்னை சாகுபடியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கோவை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பல்வேறு இடங்களில் களப்பரிசோதனைகள் மேற்கொண்டு ஈரியோபைட் சிலந்திப்பூச்சியைப் கட்டுப்படுத்த கீழ்க்காணும் பரிந்துரைகளைச் செய்துள்ளது:—



2000 ஏப்ரல் 6]

i. 30 நாட்களுக்கு ஒரு முறை கீழ்க்காணும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெளித்தல்:—

| | |
|---|---|
| 1. மிதைல் டெமட்டான் 25 இசி | 4 மில்லி லிட்டர்/ஒரு லிட்டர் தண்ணீர் |
| 2. ட்ரை அஸோபாஸ் 40 இசி | 5 மில்லி லிட்டர்/ஒரு லிட்டர் தண்ணீர் |
| 3. மோனோகுரோட்டோபாஸ் | 1.5 மில்லி லிட்டர்/ஒரு லிட்டர் தண்ணீர் |
| 36 டபுள்யு.எஸ்.சி | |

ii. 15 மி.லி. மோனோகுரோட்டோபாஸ் 15 மி.லி. தண்ணீரில் கலந்து 45 நாட்களுக்கு ஒரு முறை இரு தடவைகள் வேர் மூலம் செலுத்துதல்.

மேற்காணும் பயிர்பாதுகாப்பு முறைகளைத் தென்னை விவசாயிகள் அறியும் வகையில் போர்க்கால அடிப்படையில் விரிவாக்க சாதனங்கள் துண்டு பிரசுரங்கள் மற்றும் அகில இந்திய வானொலி மூலம் விரிவான விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

இச்சிலந்திப்பூச்சியைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு பயிர்பாதுகாப்பு நடவடிக்கைக்காக தென்னை வளர்ச்சி வாரியம் 1998-99 ஆம் ஆண்டு ரூ.25 இலட்சமும், 1999-2000 ஆம் ஆண்டு ரூ.79.43 இலட்சமும் மானியமாக வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட அனைத்து மரங்களுக்கும் இத்தொகை போதுமானதாக இல்லை என்பதால் "இயற்கைச் சீற்ற துயர்துடைப்பு நிதியிலிருந்து" ரூ.20.33 கோடி சிறப்பு நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

**அக்ரோபெஸ்ட் '99**

தமிழக அரசின் வேளாண்மைத் துறை முதன் முறையாக சென்னையில் 1999 ஆம் ஆண்டு டிசம்பர் 8 முதல் 12 வரை அக்ரோபெஸ்ட் எனும் வேளாண் கருத்துக் கண்காட்சியினை உலகளாவிய தரத்தில் தமிழகத்தில் நடத்தியது. வேளாண் பெருமக்கள், தொழில் முனைவோர்கள், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் உலகெங்கிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வரும் நவீன வேளாண் தொழில் நுட்ப செயல்முறைகளை அறிந்துகொள்ள உதவிடும் வகையில் இக்கருத்துக் கண்காட்சி நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில் மொத்தம்

62 நிறுவனங்கள் கலந்துகொண்டன. இவற்றில் தெளிப்பு நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப் பாசனம் போன்றவைகள் தயாரிக்கும் நிறுவனங்கள், விதை மற்றும் நடவுச் செடிகள் மற்றும் அலங்கார மலர்கள் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தமிழக வேளாண் துறையின் கீழ் செயல்படும் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், மைய அரசு சார்புடைய நிறுவனங்களான வேளாண் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி வாரியம் (அபீடா) தேசிய தோட்டக்கலை வாரியம், காப்பி, தேயிலை, நறுமணப்பயிர்கள், தென்னை மற்றும் கயிறு வாரியங்கள், டிராக்டர் நிறுவனங்கள் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழக நிறுவனங்கள் பங்கு பெற்றன. இஸ்ரேல் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து நிறுவனங்கள் கலந்துகொண்டு பாசன மேம்பாடுகள் உயர் ரக காய்கறி மற்றும் மலர்கள் விதை உற்பத்தி நிறுவனங்கள் பங்கேற்று உயர் தொழில் நுட்பங்களை பரிமாற்றம் செய்தன.

இக்கருத்துக் கண்காட்சியையொட்டி பருத்தி சாகுபடி, அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம் மற்றும் தொடர் குளிர்விப்பு அமைப்புகள், கட்டுப்படுத்தப்பட்ட சீதோஷ்ண நிலையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, நீடித்த நிலையான வேளாண்மை, வேளாண் விளைபொருட்கள் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புமிக்க பொருட்களாக மாற்றுதல் மற்றும் வேளாண் விற்பனை ஆகிய தலைப்புகளில் கருத்தரங்குகள் நடைபெற்றன. பருத்தி சாகுபடி கருத்தரங்கில் இஸ்ரேல் நாட்டு வல்லுநர்களும் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் தொடர் குளிர்விப்பு அமைப்புகள் கருத்தரங்கில் இங்கிலாந்து நாட்டு வல்லுநர்களும் கலந்துகொண்டது முக்கிய அம்சமாகும். இக்கருத்துக் கண்காட்சிக்காக ரூ.50.42 இலட்சம் செலவிடப்பட்டு கண்காட்சியில் அரங்கம் அமைத்தல் போன்றவைகள் மூலமாக ரூ.51.00 இலட்சம் வரவினமாக பெறப்பட்டது. இக்கருத்துக் கண்காட்சியினை சுமார் 50,000 பேர் பார்த்து பயன்பெற்றனர்.



## அத்தியாயம் 3

### தோட்டக்கலை

தமிழகத்தில் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலைப்பயிர்கள் மற்றும் மலர்கள் ஆகியவற்றைச் சாகுபடி செய்வதற்கேற்ற மாறுபட்ட தட்பவெப்பநிலை நிலவுவதால், இவற்றை அதிக அளவில் பயிரிட வாய்ப்புள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் மொத்த சாகுபடி பரப்பில், பழங்கள் 2.15 இலட்சம் எக்டராகவும், காய்கறிகள் 1.98 இலட்சம் எக்டராகவும், நறுமணப் பயிர்கள் 1.63 இலட்சம் எக்டராகவும், மலைப்பயிர்கள் 1.90 இலட்சம் எக்டராகவும், மலர்கள் 0.17 இலட்சம் எக்டராகவும் இருந்தது. மொத்த உற்பத்தியில் பழங்கள் 53.89 இலட்சம் மெட்ரிக் டன்களும், காய்கறிகள் 54.65 இலட்சம் மெட்ரிக் டன்களும், நறுமணப் பயிர்கள் 2.95 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலைப்பயிர்கள் 6.94 இலட்சம் மெட்ரிக் டன்களும், பூக்கள் 1.30 இலட்சம் மெட்ரிக் டன்களும் ஆக இருந்தது.

1999-2000 ஆம் ஆண்டில் இவற்றின் மொத்த உற்பத்தியில் பழங்கள் 55.30 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், காய்கறிகள் 57.50 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், நறுமணப் பயிர்கள் 3.00 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், மலைப்பயிர்கள் 7.03 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும், மலர்கள் 1.49 இலட்சம் மெட்ரிக் டன்களாகவும் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டிற்கான உற்பத்திக் குறியீடு, பழங்கள் 56.85 இலட்சம் மெட்ரிக் டன்களும், காய்கறிகள் 56.80 இலட்சம் மெட்ரிக் டன்களும், நறுமணப் பயிர்கள் 3.50 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலைப்பயிர்கள் 7.43 இலட்சம் மெட்ரிக் டன்களும், மலர்கள் 1.56 இலட்சம் மெட்ரிக் டன்களும் ஆகும்.

**2000-2001 ஆம் ஆண்டிற்கான முக்கிய கொள்கைகள்**

1. தரிசு நிலங்களை மேம்படுத்துவதற்காக அந்தந்தப் பகுதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்திட முக்கியத்துவம் அளித்து தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கச் செய்தல்.

2. சிறந்த உர மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாளுவதன் மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்.

3. உழவர் சந்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் காய்கறி உற்பத்தி செய்து உழவர் சந்தைக்குத் தொடர்ந்து காய்கறி வழங்குதலை உறுதி செய்தல்.

4. உயர்நுட்ப தோட்டக்கலை தொழில்நுட்பங்களைத் (கட்டுப்படுத்தப்பட்டச் சூழ்நிலையில் உற்பத்தி செய்தல்) தேர்ந்தெடுக்கப்பட்டப் பகுதிகளில் பிரபலப்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

5. உழவர்களுக்கும், களப்பணியாளர்களுக்கும் நவீன சாகுபடி நுட்பங்களில் பயிற்சி அளித்தல்.

6. நடவிற்குத் தேவையான தரமான செடிகளின் உற்பத்தியை அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் அதிகரிக்கச் செய்தல்.

கீழ்க்கண்ட மாநில மற்றும் மத்திய அரசுத் திட்டங்கள் 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**1. மாநில திட்டங்கள்**

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

*அ. பரப்பு விரிவாக்கம்*

இத்திட்டமானது பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், மலர்கள் மற்றும் ஏற்றுமதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரித்திடவும், புதிய விஞ்ஞான தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்கச் செய்து உற்பத்தித் திறனை அதிகரித்திடவும் உதவுகிறது. மேலும் சுற்றுச் சூழல் பாதிக்கப்படாமல் பராமரிப்பது குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் தரமான நடவுச் செடி, விதைகள், உயிர் உரங்கள், தாவரப் பூச்சிகொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக பழங்கள், நறுமணப்பயிர்களில் ஒரு எக்டர்வரையிலும், காய்கறி மற்றும் மலர்ச் சாகுபடியில் 0.5 எக்டர் வரையிலும் மானியம் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.207.00 இலட்சம் மதிப்பீட்டில் 16,600 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 2000 முடிய 16,801 எக்டர் பரப்பு சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டு ரூ.196.08 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001-லும் இத்திட்டம் ரூ.397.24 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



*ஆ. ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு ஒதுக்கீட்டுத் திட்டம்*

தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்திட ஊக்குவித்தல் மூலம் ஆதிதிராவிடர் பிரிவினைச் சார்ந்த விவசாயிகளின் சமூக பொருளாதார நிலையை உயர்த்திடச் செய்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆதி திராவிட விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் 50 விழுக்காடு மானிய விலையில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள், உயிர் உரங்கள் மற்றும் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.9.30 இலட்சம் மதிப்பீட்டில் 1460 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 2000 முடிய 1460 எக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டு ரூ.9.21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

*இ. அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள்*

2598 எக்டர் பரப்பில் அமைந்துள்ள 54 அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் தரமான காய்கறிச் செடிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பண்ணைகள் மாதிரி செயல்விளக்கமாகத் திகழ்வதுடன் நிலமற்ற உள்ளூர் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பனவாகவும் அமைகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில், 96.77 இலட்சம் நடவுச் செடிகள் உற்பத்தி செய்வதற்காகவும், பண்ணை பராமரிப்பதற்காகவும் ரூ.398.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 முடிய 90.28 இலட்சம் செடிகளும் 112.76 டன் காய்கறி விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.377.58 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.535.28 இலட்சம் மதிப்பீட்டில் இப்பண்ணைகள் மூலம் 100 இலட்சம் செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

*ஈ. தோட்டக்கலைப் பயிற்சி மையம், மாதவரம் மற்றும் குடுமியான்மலை*

குடுமியான்மலையில் உள்ள தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஒவ்வோர் ஆண்டும் இத்துறையில் உள்ள களப்பணியாளர்களான உதவி வேளாண்மை அலுவலர்/வயல் விளக்க அலுவலர் ஆகியோருக்கு தோட்டக்கலைப்பயிர் உற்பத்தியில் உயரிய தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் களப்பணியாளர்களின் தொழில்நுட்பங்கள் பற்றிய தரம் மேம்பாடு அடைகிறது. ஒவ்வோர்

ஆண்டும் 40 மாணவர்களுக்கு ஈராண்டுப் பட்டப்படிப்பு மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் 500 துறை அலுவலர்களுக்கும், 80 மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க ரூ.0.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 வரை ரூ.0.77 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிலும் ரூ.3.70 இலட்சம் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2. ஒருங்கிணைந்த பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடி மக்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்தில் அப்பகுதியிலுள்ள வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலை, கல்ராயன் மலை, அரநூற்றுமலை மற்றும் பச்சைமலை, நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை, திருச்சி மாவட்டத்தில் பச்சைமலை. தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை, வேலூர் மாவட்டத்தில் ஐவ்வாது மலை, விழுப்புரம் மாவட்டத்தில் கல்ராயன் மலை ஆகிய பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஓர் ஏக்கர் பரப்பளவில் பழத்தோட்டம் அமைப்பதற்கு ரூ.1750 மதிப்புள்ள தரம் வாய்ந்த பழச்செடிகள் மற்றும் இடுபொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகள் பழங்குடி விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் 2750 ஏக்கர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு இதற்காக ரூ.17.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 வரை ரூ.17.00 இலட்சம் செலவிடப்பட்டு 2750 ஏக்கர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.102.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**3. மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்**

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் மண் அரிமானத்தை தடுத்து, இயற்கைச்சூழலைப் பாதுகாப்பது இத்திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும். மேற்கு தொடர்ச்சிமலைப் பகுதிகள் அடங்கிய கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்காக இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு தரமான நடவுச்செடிகள், காய்கறி விதைகள், வேளாண்



கருவிகள் மற்றும் இதர இடுபொருட்கள் 50 சத மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.82.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1800 எக்டர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யத் திட்டம் தீட்டப்பட்டு, பிப்ரவரி 2000 முடிய ரூ.81.49 இலட்சம் செலவிடப்பட்டு 1750 எக்டர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.94.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடுத்து இயற்கை சூழலை பாதுகாத்திட ஏதுவாக ஆண்டுபயிர்கள் சாகுபடியிலிருந்து நிரந்தரப் பயிர்களான தேயிலை, காபி, பழப்பயிர்கள், நறுமணப்பயிர்கள் மற்றும் இதர பொருளாதார பயிர்களுக்கு மாற்றும் நோக்கத்துடன் செயலாக்கப்படுகின்றது. 10 விழுக்காட்டிற்கும் குறைவான மலைச்சரிவுப் பகுதிகளில் காய்கறி உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் விவசாயிகளுக்கு மானிய விலையில் அவை வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.272.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 முடிய ரூ.219.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.214.55 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**5. மாவில் உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்புக்கென செயல் விளக்கப்பாத்திகள் அமைத்தல்**

மா சாகுபடியில் 'மா' உற்பத்தித் திறனை அதிகரிக்க உரமிடுதலும், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளுதலும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விவசாயிகளுக்குக் கற்பிக்கும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உரமிடுதலும், உரிய தருணத்தில் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வதிலும் உள்ள நன்மைகளை விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கும் நோக்கத்தில் செயல் விளக்கப் பாத்திகள் விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக மொத்தம் ரூ.60.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் செயல்

[2000 ஏப்ரல் 6

விளக்கப் பாத்திகள் அமைப்பதற்கு பாத்தி ஒன்றிற்கு ரூ.2,000 மதிப்புள்ள உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. தர்மபுரி, வேலூர், சேலம், மதுரை, திருவள்ளூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 முடிய ரூ.20.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**6. திண்டுக்கல் மாவட்டத்தில் மலைவாழை சாகுபடியினைப் புத்துயிர்ப்பு செய்யும் திட்டம்**

கீழ்பழனி மலைப் பகுதியில், 'முடிக்கொத்து' நச்சுயிரி நோயினால் அழிந்த பாரம்பரியம் மிக்க மலைவாழைச் சாகுபடியினை மீண்டும் சாகுபடிக்குக் கொணருவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டமானது 1997-98 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதலாமாண்டில் நோயற்ற மலை வாழைக் கன்றுகளைத் தேர்வு செய்து அவற்றை நடவிற்காக அதிக அளவில் உற்பத்தி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நச்சுயிரி நோய் தாக்காத தாய்க் கிழங்குகள் தேர்வு செய்யப்பட்டு அவை மேலும் உயரிய தொழில்நுட்பங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டுப் பின்னர் திசு வளர்ப்பு முறையில் இனவிருத்தி செய்யப்படுகிறது. இவ்விதம் உற்பத்தி செய்யப்பட்ட திசுக்கன்றுத் துணுக்குகள் பூச்சி நோய் தாக்காதவாறு கடும் கண்காணிப்புடன் வளர்க்கப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

**7. நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கும் திட்டம்**

தோட்டக்கலை பயிர் சாகுபடியில் நீர் மற்றும் பாசன மேலாண்மை திறனைப் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் காய்கறிகள் மற்றும் இதர தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் ஒரு எக்டருக்கு ரூ.30,000-க்கு மிகாமல் தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் 100 எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.9.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 6]

**8. கல்வி நிலையங்களில் மரக்கன்றுகள் நடவுசெய்தல்**

கல்வி நிலையங்களில் பூக்கும், அழகுடன் நிழல் தரும் மற்றும் பொருளாதார பயன் ஈட்டும் மரக்கன்றுகள் நடவு செய்யப்படுகின்றன. மாணவர்களுக்கு மரம் நடுதலால் ஏற்படும் நன்மைகளையும் அதன் வாயிலாகச் சுற்றுச்சூழலில் விளையும் நன்மைகளையும் கற்பிக்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.3.625 இலட்சம் செலவில் 725 கல்வி நிலையங்களில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.3.56 இலட்சம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்வி நிலையத்திற்கும் ரூ.500 மதிப்புள்ள மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

**9. பசுமைக் குடில்களில் மலர்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி செய்யும் திட்டம்**

மலர்கள் மற்றும் காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், சந்தை தேவைக்கேற்ப உற்பத்தியை சீராக்குவதற்கும் இத்திட்டம் தமிழக அரசால் 1999-2000 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.

இதன்படி 1999-2000 ஆம் ஆண்டில் 25 பசுமைக் குடில்கள், ஒவ்வொன்றும் 500 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. பசுமைக் குடில் ஒவ்வொன்றிற்கும் 33.33 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.1.00 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

**10. தமிழ்நாடு தோட்டக்கலை அபிவிருத்தி முகமை (டான்ஹோடா)**

தோட்டக்கலைப் பணிகள் பெரும்பாலும் பருவ காலத்தைச் சார்ந்தவை. பருவ மழையையும், பாசன வசதியையும் சார்ந்தே உள்ளவை. தேவையான பணிகளைப் பருவத்தே செயல்படுத்துவதைப் பொறுத்தே தோட்டக்கலைத் துறையின் வெற்றி அமைகின்றது. இக்குறிக்கோள்களை அடையவே "டான்ஹோடா" அமைக்கப்பட உள்ளது.

1. உத்தேசிக்கப்பட்டுள்ள 'டான்ஹோடா' வானது, தோட்டக்கலைத் துறைக்கு திட்டமிடுவதற்கும், திட்டங்களை காலத்தே செயல்படுத்துவதற்கும் தேவையான நிதி வழங்குவதில் நெகிழ்வுத் தன்மையுடையதாக விளங்கும்.

[2000 ஏப்ரல் 6

2. தேவையான ஆதாரங்களைக் கணக்கின் ஓர் உட்பிரிவில் இருந்து மற்றோர் உட்பிரிவிற்கோ, ஒரு தலைப்பிலிருந்து மற்றொரு தலைப்பிற்கோ, ஒரு பண்ணையிலிருந்து மற்றொரு பண்ணைக்கோ தோட்டக்கலைத் துறைத் தலைவர் மாற்றிப் பயன்படுத்துவதற்கு இம்முகமை வழி வகுக்கும்.

3. கூடுதல் நிதி ஆதாரங்களையும், வட்டி வரவுகளையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் குறிப்பாக அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகளில் மேம்படுத்துவதற்கு இம்முகமை உதவும்.

4. வளர்ச்சித் திட்டங்களை உரிய காலத்தே செயல்படுத்துவதையும் அதனால் திட்டங்கள் முழு வெற்றி அடைவதையும் டான்ஹோடா அமைப்பதன் மூலம் உறுதி செய்யலாம்.

## 2. மத்திய அரசு திட்டங்கள்

### 1. ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டம் மூன்று முக்கிய பிரிவுகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது முந்திரி பயிரின் பரப்பினை அதிகப்படுத்துதல், நலிவடைந்துள்ள தோட்டங்களில் மறுநடவு செய்து புத்துயிர் ஊட்டுதல் மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல், முந்திரி உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்திட இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முந்திரி பயிரிடும் விவசாயிகளின் நலன் கருதி உற்பத்தியை அதிகரிக்கும் உயர்தொழில் நுட்பங்களில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றது. முந்திரி பரப்பு அதிகரித்தல் மற்றும் நலிவடைந்த தோட்டங்களுக்குப் புத்துயிர் ஊட்டல் ஆகிய திட்டங்களில் உயர் விளைச்சல் தரும் விருத்தாசலம்-1,2 மற்றும் 3 ஆகிய உயர்விளைச்சல் முந்திரி ஒட்டுக்கன்றுகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.133.90 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.127.38 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.184.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 2. ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

தமிழகத்தில் நறுமணப் பயிர்களின் பரப்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு இத்திட்டத்தின்மூலம், மிளகு, மஞ்சள்



2000 ஏப்ரல் 6]

மற்றும் மிளகாய் போன்ற நறுமணப் பயிர்களின் விதைகள் மற்றும் நடவுச்செடிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. உயர் சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டு, செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.234.76 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.203.31 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.235.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 3. ஒருங்கிணைந்த வெப்ப, குளிர் மற்றும் வறட்சி மண்டல பழ அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பழப்பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதாகும். இத்திட்டத்தில் தரமான உயர் விளைச்சல் இரக நடவுச் செடிகள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. பழ உற்பத்தியை அதிகரிப்பதற்காக கூடுதல் பரப்பு ஒவ்வோர் ஆண்டும் பல்வேறு பழப்பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்படுகின்றன. விவசாயிகளுக்கு உயர்தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.148.03 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.114.53 இலட்சம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.148.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### 4. வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்

மலர் சாகுபடியை வணிக நோக்குடன் அதிகப் பரப்பில் கொண்டு வரும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளின் நிலங்களில் 0.10 எக்டர் பரப்பில் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்க ரூ.6,000 மதிப்புள்ள இடுபொருட்கள் விநியோக்கிக்கப்படுகின்றன. இதன்மூலம் மலர்களின் சாகுபடிப் பரப்பு அதிகரிக்கப்படுகிறது. 'மாதிரி மலர் மையம்' ஒன்று உதகையில் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் திசு வளர்ப்புச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.21.80 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.18.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம்

ஆண்டில் இத்திட்டம் ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

5. கோகோ அபிவிருத்தித் திட்டம்

மாநிலத்தின் கோகோ உற்பத்தி மற்றும் அதன் உற்பத்தித் திறனை அதிகரித்திட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் உயர் விளைச்சல் இரக கோகோ நடவுச் செடிகளைக் கொண்டு செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டு சாகுபடி நுணுக்கங்கள் கற்பிக்கப்படுகின்றன. சாகுபடிப் பரப்பை அதிகரிப்பதற்காக மானிய விலையில் நடவுச் செடிகள் விநியோகிக்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.3.25 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.3.25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

6. வேர் மற்றும் கிழங்குப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

மாநிலத்தின் வேர் மற்றும் கிழங்குப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். புதிய இரகங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு இத்திட்டத்தில் நடவுப் பொருட்கள், உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்து போன்றவைகள் ரூ.200 மதிப்பிற்குச் சிறுதளைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ரூ.10 மட்டும் அடையாளத் தொகையாக பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. விவசாயிகளின் வயல்களில் செயலாக்கப் பாத்திகள் அமைப்பதற்கு ரூ.500 மதிப்புள்ள இடுபொருட்கள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.1.55 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

7. காளான் வளர்ப்புத் திட்டம்

தமிழகத்தில் காளான் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும், தரத்தை உயர்த்தும் நோக்குடனும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் காளான் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில்



செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிப்ரவரி 2000 முடிய ரூ.4.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

8. ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

தமிழகத்தில் முக்கிய மூலிகை பயிர்கள் சாகுபடியை அறிமுகப்படுத்தி அதன் மூலம் இப்பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், செயல் விளக்க மற்றும் விதை உற்பத்தி திடல் 0.05 எக்டர் பரப்பில் விவசாயிகளின் வயல்களில் அமைக்க பாத்தி ஒன்றுக்கு ரூ.1,500 மதிப்புள்ள இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் 600 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்க ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. பிப்ரவரி 2000 முடிய ரூ.9.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

9. காய்கறி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டம் தமிழகத்தில் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு இரக காய்கறிகளை பிரபலப்படுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் 12,000 சிறுதளைகள் விநியோகம் செய்ய ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 முடிய இத்திட்டத்தில் ரூ.10.84 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

10. தோட்டக்கலையில் பிளாஸ்டிக்கின் உபயோகம்

பசுமைக் குடில்கள் அமைத்தல்

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் பிளாஸ்டிக் பொருட்களின் உபயோகத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் குறைந்த மதிப்பீட்டு பசுமைக் குடில் அமைப்பதற்கு ஒரு அலகிற்கு 50 விழுக்காடு மானியமாக ரூ.31,250 அதிகபட்சத் தொகையாகவும், நடுத்தர மதிப்பீட்டு பசுமைக் குடில் அமைப்பதற்கு 40 விழுக்காடு மானியமாக உயர்ந்தபட்சமாக

ரூ.1.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் பிற இனங்களான நறுமணப்பயிர்களின் விளைபொருட்களை உலர்த்த பாலித்தீன் விரிப்புகள் வழங்குதல் மற்றும் செடிகள் உற்பத்திக்காக தாழ்வான பசுமைக் குடில்கள் அமைத்தல் ஆகியனவும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. பிப்ரவரி 2000 முடிய ரூ.13.36 இலட்சம் இத்திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது.

**பிற திட்டங்கள்**

**(1) ஊரகப் பகுதியில் ஊட்டமிகு பழத்தோட்டம் அமைக்கும் திட்டம்**

தேசிய தோட்டக்கலை வாரியத்தின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ரூ.50 மதிப்புள்ள 10 பழக்கன்றுகள் ஒவ்வொரு விவசாயிக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றது. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.7.00 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் தேசிய தோட்டக்கலை வாரியத்தின் நிர்வாக ஒப்புதலுடன் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

**(2) பயிற்சி வழி தொடர்பு மூலம் தோட்டக்கலை விவசாயிகளுக்குத் தொழில்நுட்பத்தைப் பரவலாக்கும் திட்டம்**

பிற மாநிலங்களுக்கு விவசாயிகளை சுற்றுலாவாக அழைத்துச் செல்லுவதன் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிற மாநிலங்களில் உள்ள தோட்டக்கலை நிறுவனங்கள், பதப்படுத்தும் தொழிலகங்கள் ஆகியவற்றிற்கு முற்போக்கு விவசாயிகளை அழைத்துச் செல்வதன் மூலம் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் அவர்களது அறிவாற்றல் மேம்படுத்தப்படுகிறது. ரூ.1.50 இலட்சம் இதற்காக செலவிடப்படுகிறது.



## அட்டவணை-1

### தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

*பரப்பு-எக்டரில்*
*உற்பத்தி-டன்களில்*
*உற்பத்தித் திறன்-டன்/எக்டர்.*

| வ.எண். | விவரம். | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| 1 | பழங்கள் | | | | | |
| | பரப்பு | 185687 | 194709 | 194987 | 210660 | 214500 |
| | உற்பத்தி | 4818576 | 4912945 | 3855807 | 5033080 | 5389830 |
| | உற்பத்தித் திறன் | 25.96 | 25.23 | 19.78 | 23.89 | 25.13 |
| 2 | காய்கறிகள் | | | | | |
| | பரப்பு | 174818 | 157665 | 169380 | 193130 | 197815 |
| | உற்பத்தி | 4397932 | 3956661 | 4001733 | 5079505 | 5465200 |
| | உற்பத்தித் திறன் | 25.16 | 25.09 | 23.67 | 26.3 | 27.63 |
| 3. | நறுமணப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 165522 | 142750 | 160001 | 157022 | 162830 |
| | உற்பத்தி | 272888 | 190958 | 223718 | 249078 | 295335 |
| | உற்பத்தித் திறன் | 1.65 | 1.34 | 1.40 | 1.58 | 1.81 |
| 4. | மலைப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 177108 | 178511 | 182707 | 186527 | 187810 |
| | உற்பத்தி | 582328 | 585155 | 602793 | 649192 | 694652 |
| | உற்பத்தித் திறன் | 3.28 | 3.28 | 3.3 | 3.48 | 3.70 |
| 5. | மலர்கள் | | | | | |
| | பரப்பு | 14194 | 14843 | 15856 | 16788 | 17750 |
| | உற்பத்தி | 70970 | 81642 | 95136 | 117516 | 133125 |
| | உற்பத்தித் திறன் | 5.00 | 5.50 | 6.00 | 7.00 | 7.50 |

## மாநிலத் தோட்டக்கலைப் பண்ணைகள்

| வ.எண்/மாவட்டம் | | பண்ணை பெயர் | இடம் |
|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | அ.தோ.ப. | மாதவரம் |
| 2 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | ஆத்தூர் |
| 3 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | விச்சந்தாங்கல் |
| 4 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | மேல்கதிர்பூர் |
| 5 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | மேல்ஒட்டிவாக்கம் |
| 6 | காஞ்சிபுரம் | அ.தோ.ப | பிச்சிவாக்கம் |
| 7 | கடலூர் | அ.தோ.ப | நெய்வேலி |
| 8 | கடலூர் | அ.தோ.ப | விருத்தாசலம் |
| 9 | திருவண்ணாமலை | அ.தோ.ப | தகரக்குப்பம் |
| 10 | வேலூர் | அ.தோ.ப | கூடப்பட்டு |
| 11 | வேலூர் | அ.தோ.ப | நவ்லாக் |
| 12 | சேலம் | அ.தோ.ப | ஏற்காடு |
| 13 | சேலம் | மா.ப.ப. | கருமந்துறை |
| 14 | சேலம் | அ.தோ.ப | மணியார்குண்டம் |
| 15 | சேலம் | கா.வி.உ.மை. | கருமந்துறை |
| 16 | சேலம் | அ.தோ.ப | கருமந்துறை |
| 17 | சேலம் | அ.தோ.ப | முள்ளுவாடி |
| 18 | சேலம் | அ.தோ.ப | சிறுமலை (அருனூத்துமலை) |
| 19 | நாமக்கல் | அ.தோ.ப | செம்மேடு |
| 20 | நாமக்கல் | அ.தோ.ப | படசோலை |
| 21 | தர்மபுரி | அ.தோ.ப | திம்மாபுரம் |
| 22 | தர்மபுரி | அ.தோ.ப | ஜீனூர் |
| 23 | கோயம்புத்தூர் | அ.தோ.ப | ஆனைக்கட்டி |
| 24 | கோயம்புத்தூர் | அ.தோ.ப | கல்லார் |
| 25 | கரூர் | அ.தோ.ப | முதலைப்பட்டி |
| 26 | புதுக்கோட்டை | அ.தோ.ப | குடுமியான்மலை |
| 27 | புதுக்கோட்டை | அ.தோ.ப | வல்லத்திராக்கோட்டை |
| 28 | புதுக்கோட்டை | அ.தோ.ப | நாட்டுமங்கலம் |
| 29 | தஞ்சாவூர் | அ.தோ.ப | ஆடுதுறை |
| 30 | தஞ்சாவூர் | அ.தோ.ப | மருங்குளம் |
| 31 | தேனி | அ.தோ.ப | பெரியகுளம் |
| 32 | திண்டுக்கல் | அ.தோ.ப | கொடைக்கானல் |
| 33 | திண்டுக்கல் | பிரையன்ட் பூங்கா | கொடைக்கானல் |
| 34 | திண்டுக்கல் | அ.தோ.ப | தாண்டிக்குடி |
| 35 | திண்டுக்கல் | அ.தோ.ப | ரெட்டியார்சத்திரம் |
| 36 | திண்டுக்கல் | அ.தோ.ப | சிறுமலை |
| 37 | விருதுநகர் | அ.தோ.ப | பூவாணி |
| 38 | விருதுநகர் | அ.தோ.ப | திருவில்லிபுத்தூர் |
| 39 | சிவகங்கை | அ.தோ.ப | தேவகோட்டை |
| 40 | சிவகங்கை | அ.தோ.ப | நேமம் |
| 41 | நீலகிரி | அ.தோ.ப | பர்லியார் |
| 42 | நீலகிரி | அ.தோ.ப | காட்டேரி |
| 43 | நீலகிரி | அ.தோ.ப | குன்னூர் |
| 44 | நீலகிரி | பழவியல் நிலையம் | குன்னூர் |
| 45 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா | குன்னூர் |
| 46 | நீலகிரி | அ.தோ.ப | தொட்டபெட்டா |
| 47 | நீலகிரி | அ.தோ.ப | தும்மனட்டி |
| 48 | நீலகிரி | அ.தோ.ப | விஜயநகரம் |

| வ.எண்/மாவட்டம் | | பண்ணை பெயர் | இடம் |
|---|---|---|---|
| 49 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா | உதகை |
| 50 | நீலகிரி | அ.தோ.ப | நஞ்சநாடு |
| 51 | நீலகிரி | அ.தோ.ப | தேவாலா |
| 52 | திருநெல்வேலி | அ.தோ.ப | குற்றாலம் |
| 53 | கன்னியாகுமரி | அ.தோ.ப | கன்னியாகுமரி |
| 54 | கன்னியாகுமரி | அ.தோ.ப. | பேச்சிப்பாறை |

அ.தோ.ப. — அரசுத் தோட்டக்கலைப் பண்ணை

மா.ப.ப. — மாபெரும் பழப் பண்ணை

கா.வி.உ.மை — காய்கறி விதை உற்பத்தி மையம்



# அத்தியாயம் 4

## வேளாண்மைப் பொறியியல்

### முன்னுரை

தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு இந்திய நாட்டின் மொத்தப் பரப்பில் நான்கு விழுக்காடு மட்டுமேயாகும். ஆனால் தமிழ்நாட்டின் மொத்த மக்கதொகை இந்தியாவின் மக்கட்தொகையில் ஏழு விழுக்காடாகும். தனிநபரின் நில இருப்பு தேசிய அளவில் 1.69 எக்டராகவும் தமிழ்நாட்டில் 1.01 எக்டராகவும் உள்ளது. தனிநபரின் நீர் ஆதாரம் தேசிய அளவில் 0.09 மில்லியன் கன அடிக்குத் தமிழ்நாட்டில் 0.03 மில்லியன் கன அடியாக உள்ளது. தமிழ்நாடு குறைவான வளங்களைக் கொண்டு வளர்ந்து வரும் ஜனத்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே தமிழக அரசு எதிர்காலத் தேவைகளைக் கருத்தில்கொண்டு உரிய தொழில் நுட்பத்துடன் நிலநீர் மேம்பாட்டிற்குப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை, மாநிலத்தின் மண் மற்றும் நீர்வளத்தைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு செயல்படுத்தி அதனால் குறைந்த அளவில் நீர் உபயோகித்து கூடுதல் உற்பத்தி கிடைத்திட வழி வகுக்கிறது.

### 1. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

*1.1 மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு*

தமிழ்நாட்டில் 32.50 இலட்சம் எக்டர் மானாவாரி நிலமாக உள்ளது. இந்தப் பகுதி பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி போன்ற பயிர்களின் உற்பத்தியிடமாகும். குறிப்பாக மானாவாரி நிலங்களில் மண் அரிமானத்தைத் தடுத்து மண்ணில் ஈரப்பதத்தைக் காத்து நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர் சேமிப்பிற்கு வழிவகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் தவிர, இதர மாவட்டங்களின் சமவெளிப் பகுதிகளிலும், நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. சிறிய நீர்வடிப் பகுதி அடிப்படையில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

நிலத்தின் தன்மைக்கேற்ப காடு வளர்த்தல், பண்ணைக்காடு வளர்த்தல் போன்ற மாறுபட்ட நில உபயோகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1,616.03 இலட்சம் செலவில் 80,000 எக்டர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. மண்வளப்பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டில் அரசு மாநிலத்தின் பத்து மாவட்டங்களில், தரிசுநில மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்திட உத்திரவிட்டதன்பேரில் ரூ.1,213.48 இலட்சத்தில் 60,000 எக்டர் நிலத்தில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்திட திட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. பிப்ரவரி 2000 முடிய 66.,213 எக்டர் நிலத்தில் ரூ.1,117.55 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. பணிச் செலவினத்தில் சமவெளிப் பகுதிகளுக்கு 25 விழுக்காடு மானியமும், மலைப் பகுதிகளுக்கு 40 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது. பணிச் செலவினம் முன்னதாக அரசினால் ஏற்கப்பட்டு பிறகு இத்தொகை உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து பணி முடிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டு சம தவணைகளில் மீள வசூலிக்கப்படுகிறது. 2000-2001 ஆம் ஆண்டில் 80,000 எக்டர் நிலத்தில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது.

### 1.2 தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் 10,000 எக்டர் நிலத்தில் தரிசு நில மேம்பாட்டுப் பணி தொடங்கப்பட்டது. விழுப்புரம், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, தர்மபுரி, ஈரோடு, மதுரை, விருதுநகர், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் 10,000 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. நில மேம்பாடு, மண்ணில் ஈரப்பதம் காத்தல், நீர்சேமிப்பு தொடர்பான பணிகளும் 549 குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணிகளும் வேளாண்மைப் பொறியியல் துறையால் ரூ.402.55 இலட்சம் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன.

### 1.3 பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மாநிலத் திட்டம்)

பழங்குடி மக்களின் பொருளாதார நிலையை வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்தி அவர்களை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நிலத்தின் மண்ணைப் பாதுகாப்பதாலும், நிலங்களின்



நீர்ப்பிடிப்புத் தன்மையை மேம்படுத்துவதாலும், நில உபயோகத்தை மேம்படுத்துவதாலும், உற்பத்தி பெருக்கப்பட வேண்டும். பல துறைகள் இணைந்து பழங்குடியினர் வாழும் பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்கின்றன. இத்திட்டம் ஜவ்வாது மலை (வேலூர் மாவட்டம்), கல்ராயன் மலை (திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டம்), ஏற்காடு மலை (சேலம் மாவட்டம்), சித்தேரி மலை (தர்மபுரி மாவட்டம்) கொல்லிமலை (நாமக்கல் மாவட்டம்) மற்றும் பச்சைமலை (திருச்சி மாவட்டம்) ஆகியவற்றில் செயல்படுத்தப்படுகிறது. நிலம் சமன் செய்தல், சம உயரக் கற்சுவர் அமைத்தல் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுதல் போன்ற மண்வளப் பாதுகாப்புப் பணிகள் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 100 சதவீத மானியத்துடன் செயல்படுத்தப் படுகின்றன. இத்திட்டம், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களது நிலங்களைப் பண்படுத்தி விளைச்சல் நிலமாக மாற்றவும் வழி வகுக்கிறது. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.92.00 இலட்சம் செலவில் 635 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன. பிப்ரவரி 2000 முடிய 563 எக்டர் நிலத்தில் ரூ.69.81 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் 650 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.4 மலைப் பகுதிகளில் சிறப்பு மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள்

மலைப் பகுதிகளில் மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துதல், நிலப் பயன்பாட்டை முறைப்படுத்துதல், இயற்கை வனப்பைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக மலைப் பகுதிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

அ. நதிப் பள்ளதாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு (மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்)

நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதால் அவற்றின் கொள்ளளவு குறைந்து பாசனப் பரப்பு, மின் உற்பத்தி போன்றவற்றைப் பாதித்து நீர்த் தேக்கங்களின் ஆயுட்காலத்தைப் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நீரப்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானம் மற்றும் முறையற்ற நில உபயோகம் ஆகியவற்றால், நீர்த்தேக்கங்களில் வண்டல் சேர்கிறது. நீர்த்தேக்கங்களில் வண்டல் சேர்வதைக் குறைத்திட கீழ்பவானி மற்றும் வைகை ஆகியவற்றின் நீர்பிடிப்புப் பகுதிகளில் பல மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய மண் மற்றும் நீர் உபயோக அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமை

படுத்திய நீர்வடிப் பகுதிகளில் பணிகள் நீர்வடிப் பகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. மழை அளவு, மண்ணரிப்பு நிலை, மண்ணின் கட்டமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப் படுகின்றன. பிப்ரவரி 2000 வரை ரூ.451.28 இலட்சம் செலவில் 4,347 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. பணிச் செலவில் 50 விழுக்காடு மானியம் வழங்கப்பட்டு மீதம் கடனாக கணக்கிடப்படுகிறது. கடன் தொகை விவசாயிகளிடமிருந்து பணிகள் முடிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்குப்பின் உரிய வட்டியுடன் பத்து ஆண்டு சம தவணைகளில் மீள வசூலிக்கப்படுகின்றது. அகில இந்திய மண் மற்றும் நில உபயோக அளவை நிறுவனம், 2000-2001 ஆம் ஆண்டு வருடாந்திரத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்திடும் வகையில் வைகை நீர்பிடிப்புப் பகுதிகளில் முன்னுரிமை நீர்வடிப் பகுதிகளை கண்டறியும் பணியில் ஈடுபட்டுள்ளது.

ஆ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

பல துறைகளால் இணைந்து செயல்படுத்தப்படும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் இத்திட்டத்தின்கீழ் பணிகள் செயலாக்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு பணிச் செலவில் 50 விழுக்காடு மானியம் வழங்கப்பட்டு மீதம் 50 விழுக்காடு கடனாகக் கருதப்பட்டு, மேற்படி கடன் தொகை பணி முடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டு சம தவணைகளில் உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து மீள வசூலிக்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.406.00 இலட்சம் செலவில் 6,865 எக்டர் நிலத்தில் இத்திட்டத்தின்கீழ் செயலாக்கப்பட்டு வருகின்றன. பிப்ரவரி 2000 வரை 6,740 எக்டர் நிலத்தில் ரூ.361.73 இலட்சம் செலவில் பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

இ. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மாநிலத் திட்டம்)

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். மத்திய அரசினால் வெளியிடப்பட்டுள்ள நீர்வடிப் பகுதி வரைபடத் தொகுப்பின் அடிப்படையில் நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்த நீர்வடிப் பகுதிகளில் மிகவும் வளம் குன்றிய நீர்வடிப் பகுதிகள் சீராக்க எடுத்துக்கொள்ளப்படுகின்றன.



இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப் படுகின்றன. இப்பணிகளுக்கு பணிச் செலவினத்தில் விவசாயிகளுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்கப்படுகிறது. மீதம் கடனாகக் கணக்கிடப்பட்டு மேற்படி கடன் தொகை பணிகள் முடிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டு சமதவணைகளில் உரிய வட்டியுடன் விவசாயிகளிடமிருந்து மீள வசூலிக்கப்படுகிறது. நிலச் சரிவுகளைத் தடுப்பது மிக முக்கிய பணியாக இத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் வடிகால் சீரமைப்பு அடங்கிய படிமட்டம் அமைக்கும் பணிகள் ரூ.400.00 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.469.00 இலட்சம் செலவில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2. தொலை உணர்வுப் பிரிவு**

அ. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் தகுதி நிலை அறிக்கை

தொலை உணர்வுப் பிரிவு தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தகுதி நிலை அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தகுதிநிலை அறிக்கைகள் வருடத்திற்கு 1,500 சதுர கிலோ மீட்டருக்கு தயாரிக்கப் பட்டு வருகின்றன. விண்வெளிக் கலம் மூலம் பெறப்பட்ட விவரங்கள் மற்றும் ஆகாய விமானம் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவற்றின் துணை கொண்டு மண் அரிமானம், நில உபயோகம், புவியியல் மற்றும் வடிகால் வசதி போன்ற தகவல்கள் அடிப்படையில் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. தகுதி நிலை அறிக்கைகளின் அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள முன்னுரிமை நீர்வடிப் பகுதிகள் தேர்வு செய்யப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பகுதியின் பரப்பளவான 26,000 சதுர கிலோ மீட்டரில் மார்ச் 1999 வரை 21,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு நிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலுவையில் உள்ள 5,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்குத் தகுதி நிலை அறிக்கைகள் தயாரிக்கப்படும். மேலும் 750 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு அடிப்படைப் புள்ளி விவரங்கள் தயாரிக்கப்படவுள்ளது.

ஆ. நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு

மாநில நில உபயோக வாரியம், மாநிலத் திட்டக் குழு மற்றும் தமிழக அரசு நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும்

பணியை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கியுள்ளது. இதுவரை 24 மாவட்டங்களுக்கு நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களுக்கான வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணி 2000-2001 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிடும்.

இ. மண்ணின் வரைப்படத் தொகுப்பு

மண்ணின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணியை மாநில நில உபயோக வாரியம், வேளாண்மைப் பொறியியல் துறையிடம் ஒப்படைத்துள்ளது. இந்த வரைப்படத் தொகுப்பில் நீர்வடிப் பகுதிவாரியாக மண்வள விவரம் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. திருச்சி, தேனி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு நீர்வடிப் பகுதி மண்ணின் வரைப்படத் தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. மீதியுள்ள மாவட்டங்களுக்கு வரைபடத் தொகுப்புகள் தயாரிக்கும் பணி 2000-2001 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

**3. தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் தென்னைக்கு சொட்டு நீர்ப்பாசனம் (மத்திய அரசு நிதியுடன் செயல்படுத்தும் திட்டம்)**

மாநிலத்தின் மொத்த பாசனப் பரப்பில் 45 விழுக்காடு கிணறுகள் மூலம் பாசனம் பெறுகின்றன. தமிழ்நாட்டில் 17.89 இலட்சம் கிணறுகள் (1996-97 கணக்கின்படி) பாசனத்திற்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. இவற்றில் திறந்த வெளிக்கிணறுகள் 16.46 இலட்சம், 1.43 இலட்சம் குழாய்க் கிணறுகளுமாகும். கிணற்று நீர் மிக அரிதானதாகும். எனவே அதை சீரிய முறையில் உபயோகித்திட வேண்டும். நீர்ப் பாய்ச்சுவதில் உள்ள இழப்புகளை நீக்கி தேவையான நீரை பாய்ச்சுவதைக் கருத்தில் கொள்ள வேண்டும். தேவையான நீரை, தேவையான இடத்தில் அதாவது வேர் பகுதியில் அளிப்பதற்கு சொட்டு நீர்ப்பாசனம் சிறந்த ஒன்றாகும். இந்த முறையில் பாசனம் செய்வதால் நீர் சேமிப்பு, சீரிய பயிர் வளர்ச்சி, கூடுதல் உற்பத்தி கிடைக்கிறது. அதனால் வேளாண்மைக்குத் தேவையான, கூலியாட்கள், உர உபயோகம் மற்றும் களை எடுத்தல் ஆகியவற்றில் சேமிப்பு ஏற்படுகிறது. சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க கூடுதல் செலவினம் ஆவதால் போதிய வருவாய் கிடைத்திட, அதிக வருமானம் தரும் பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த அரசு சில மற்றும் மிகச்சிறு விவசாயிகள், ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மகளிர் விவசாயிகள்



ஆகியோருக்கு இத்திட்ட அமைப்புச் செலவில் 90 விழுக்காடு அல்லது எக்டருக்கு ரூ.25,000.00 இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு இத்திட்ட அமைப்புச் செலவில் 70 விழுக்காடு அல்லது எக்டருக்கு ரூ.25,000.00 இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் பணிக்கு ரூ.1,125.00 இலட்சமும், சொட்டு நீர்ப்பாசன செய்முறை விளக்கத்திற்கு ரூ.30.00 இலட்சமும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 முடிய 6914 எக்டர் நிலத்தில் ரூ.892.77 இலட்சம் செலவில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**4. டிராக்டர், புல்டோசர் மற்றும் ஒருங்கிணைந்த நவீன அறுவடை இயந்திரம் வாடகைத் திட்டம்**

பயிரிடப்படாத நிலங்களைச் சீரமைத்து உழவு செய்தல், கட்டிகளை உடைத்தல், சேடைஉழவு மற்றும் அறுவடை செய்தல் போன்ற சாகுபடி பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை விவசாயிகளுக்கு உதவி வருகிறது. பயிரிடப்படாத நிலங்களைச் சீரமைத்து விளைநிலங்களாக மாற்றிட இத்துறையில் எல்லா மாவட்டங்களிலும் 113 புல்டோசர்களும் மேலும் உழவு செய்தல் மற்றும் அது தொடர்பான பணிகளை செய்திட 110 டிராக்டர்களும் இரண்டு நவீன அறுவடை இயந்திரங்களும் உள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 வரை புல்டோசர்கள் 1,61,612 மணி நேரம் பணி செய்துள்ளன. இதேபோல் பிப்ரவரி 2000 வரை டிராக்டர்கள் 67,757 மணி நேரம் பணி செய்துள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் புல்டோசர்கள் 1,70,000 மணி நேரம், டிராக்டர்கள் 49,600 மணி நேரம் பணி செய்ய உள்ளன. புல்டோசர்கள் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் காவிரி, வெண்ணார், கல்லணைக் கால்வாய் ஆகியவற்றின் வாய்க்கால்களில் தூர் எடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் இப்பணியில் 66 புல்டோசர்கள் ஈடுபடுத்தப்பட்டு 47,198 மணிநேரம் பணி செய்துள்ளன.

**5. நீர் வள நிர்வாகம்**

குழாய்க் கிணறு திட்டம் (மாநிலத் திட்டம்)

நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், தற்போதுள்ள பாசனப் பரப்பை நிலைப் படுத்துதல் போன்றவை சிறுபாசனத் திட்டத்தின்

நோக்கமாகும். தமிழ்நாட்டின் பாசன நீர் ஆதாரங்கள் முழுவதும் உபயோகப்படுத்தப்பட்ட நிலையில் விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க பாசனத்திற்கு நிலத்தடி நீரையே சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தல், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டு போன கிணறுகளில் பக்கவாட்டில் துளையிடுதல், ஆழப்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறைக்குச் சொந்தமான ரெஸிஸ்டிவிடி மீட்டர் மற்றும் மின்சார லாக்கிங் கருவி ஆகியவற்றை உழவர்களுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகிறது. இவற்றைக் கொண்டு நீர் ஆதாரம், அமைக்கப்படும் கிணறு விவரம், போன்றவை விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இத்துறையில் இப்பணிக்காக 3 மின்சார லாக்கிங் கருவிகளும், 22 ரெஸிஸ்டிவிடி மீட்டர்களும் உள்ளன. விசைத்துளைக் கருவி, சிறுவிசைத் துளைக் கருவி, கைத்துளைக் கருவி, பாறை வெடிக் கருவி, நீள்துளைக் கருவி மற்றும் காற்றழுத்தக் கருவி போன்ற இயந்திரங்கள், குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டுபோன கிணறுகளைப் புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்காக விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக இத்துறை வசம் பலதரப்பட்ட 500 சிறுபாசன இயந்திரங்கள் பராமரிக்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் 5,650 குழாய்க் கிணறுகள்/ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு பிப்ரவரி 2000 முடிய 5,255 குழாய்க் கிணறுகள்/ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் 5,000 குழாய் கிணறுகள்/ஆழ் துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட உள்ளன.

**6. பாசனப் பகுதியில் நீர் மேலாண்மை (மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டம்)**

**6.1.** பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்

முதன் முதலாக நீர் மேலாண்மைப் பணிகள் காவிரி பாசனப் பரப்பிலும் (1967) மற்றும் சாத்தனூர் பாசனப் பரப்பிலும் (1969) மண் மற்றும் நீர் மேலாண்மையின் ஒரு பகுதியாக முதன் முதலாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து பாசனப் பகுதி மேன்மைத் திட்ட செயல்பாட்டில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. மத்திய அரசு முதன் முதலாக காவிரி, பெரியார், வைகை, கீழ்பவானி பாசனப் பகுதிகளில் பணி செயலாக்கத் திட்டத்தை அங்கீகரித்தது. ஏழாவது, எட்டாவது மற்றும்



ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் சாத்தனூர், பரம்பிக் குளம், ஆழியாறு, அமராவதி, கம்பம் பள்ளத்தாக்கு, கோதையார் சித்தார் பட்டணங்கால் மற்றும் தாமிரபரணி பாசனப் பகுதிகளில் பாசன மேன்மைக்குத் திட்டங்கள் சேர்க்கப்பட்டன. மத்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பாசனப் பகுதிகளில் மதகிற்கு கீழே பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் கீழ்க்கண்ட குறிக்கோள்களை அடைய செயல்படுத்தப்படுகிறது :

1. பாசனதாரர்களிடையே கூட்டுச் செயல்பாட்டிற்கு வழி வகுக்கிறது. அடிப்படைத் திட்டம் தயாரித்தல், திட்டச் செயல்பாட்டினை நிர்வகித்தல் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகளை, மதகு பங்கீட்டுப் பகுதி மற்றும் திட்டப் பகுதி அளவில் செயல்படுத்துதலே கூட்டு ஏற்பாடாகும்.

2. பண்ணை மேலாண்மைக்கு பாசன நீரை எடுத்துச் செல்லுதல் மற்றும் உரிய நீர்ப்பங்கீடு அளித்தல் போன்ற பணிகளுக்கு உரிய உள் அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

3. விவசாயிகளிடையே கருத்து வேறுபாடில்லாமல் சமநீர்ப் பங்கீட்டிற்கு வழிவகுக்கப்படுகிறது.

பண்ணை மேன்மைப் பணிகள் என்பது நீரை எடுத்துச் செல்லுதல், பங்கிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு தேவைப்படும் கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகும். புதிய மண் வாய்க்கால் அமைத்தல், இருக்கும் மண் வாய்க்காலுக்குக் காரை இடுதல், பங்கீடு அல்லது நீர்ப்பிரிப்புத் தொட்டிகள் கட்டுதல் போன்றவை இப்பண்ணை மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். வாரபந்தி (சுழற்சி முறை நீர்ப்பாசனம்) திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வயலுக்கும் தேவையான நீர் சரியான அளவு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, விவசாயிகளின் பங்கேற்புடன் சம விகித அளவில் பாசன நீர்ப்பங்கீடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் 50,930 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும் 73,180 எக்டர் நிலத்தில் சுழற்சி முறைப் பாசனப் பணிகளும் செயலாக்கத் திட்டமிடப்பட்டதில் பிப்ரவரி 2000 வரை 49,578 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும் 63,281 எக்டர் நிலத்தில் சுழற்சி முறை பாசனப் பணிகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் காவிரி, பரம்பிக்குளம் ஆழியாறு, அமராவதி,

கோதையார் சித்தார் பட்டணங்கால் மற்றும் தாமிரபரணி பாசனப் பகுதிகளில் 56,000 எக்டர் நிலத்தில் பண்ணை மேன்மைப் பணிகளும், 67,150 எக்டர் நிலத்தில் சுழற்சி முறை பாசனப் பணிகளும் செயல்படுத்தப்பட உள்ளன.

### 6.2. விவசாயிகளின் பங்கேற்பு அணுகுமுறை

அ. விவசாயிகளின் சங்கங்கள்

பாசனப் பகுதி மேன்மைத் திட்டப் பணிகளின் வெற்றி என்பது பயனாளிகளான விவசாயிகளின் பங்கேற்பைச் சார்ந்தே உள்ளது. விவசாயிகள் தாங்களாகவே தங்கள் பண்ணைகளில் நீர் மேலாண்மையை அமல்படுத்தவும், அதனை நீண்ட காலத்துக்கு செவ்வனே நிறைவேற்றும்வண்ணமாக ஒரு முகமாகச் செயல்படவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த விவசாய சங்கங்கள் 'சமுதாய ஈடுபாட்டுக் கோட்பாட்டை' அடிப்படையாகக் கொண்டு மூன்றடுக்கு முறையில் ஒவ்வொரு திட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. அவை,

| | |
|---|---|
| 1. விவசாயிகள் சங்கம் | மதகளவில் |
| 2. விவசாய சபைகள் | கிளை வாய்க்கால் அளவில் (1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டது.) |
| 3. விவசாயிகள் பாசன இணையம்/ உச்சநிலைக் குழு | பாசனப் பகுதி முழுமைக்கும் |

பிப்ரவரி 2000 வரை 501 விவசாய சபைகளும் 8,216 விவசாய சங்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆ. விவசாய சபைகளுக்ககான மேலாண்மை மானியம்/ விவசாயக் குழுக்களுக்கு நிதியுதவி

அமைக்கப்பட்ட விவசாயச் சங்கங்கள், சபைகள் நீண்ட காலம் நிலைபெற்றிருப்பதற்காகவும், சமமான நீர்பங்கீட்டிற்கான சுழற்சி முறை பாசனத் திட்டத்தைத் தொடர்வதற்காகவும் பதிவு செய்யப்பட்ட விவசாய சபைகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ. 450.00 என்ற அளவில் செயல்பாட்டு நிதி உதவி அளித்து வருகிறது. இச்செலவினம் மத்திய மற்றும் மாநில அரசால் சமமாகப் பங்கிட்டுக்கொள்ளப்படுகிறது. விவசாயிகளும் எக்டருக்கு ரூ. 50 வீதம் தங்கள் பங்காகக் கொடுக்க வேண்டும். 1999-2000 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விவசாய சபைகளுக்கு ரூ. 170.00 இலட்சம் மேலாண்மை மானியமாக வழங்கப்பட்டுள்ளது.



## அத்தியாயம் 5

### நீர்வடிப் பகுதி மேம்பாடு

பாசன வசதிபெறும் நிலங்களுக்குச் செலுத்தப்படும் கவனம் சாகுபடிக்குரிய நிலங்களில் பெரும்பங்கு வகிக்கும் மானாவாரி நிலங்களுக்கு இதுகாறும் செலுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேளாண் விளைச்சலை கிராமங்களில் பெருக்கவும், மானாவாரி நிலங்களை நம்பியிருக்கும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை விருத்தி செய்வதற்காகவும் மானாவாரி நிலங்களின் உற்பத்தித் திறன் உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும், மாநிலத்தில் மேற்பரப்பு நீரில் 95 விழுக்காடும், நிலத்தடி நீரில் 75 விழுக்காடும் பயன்படுத்திய நிலையில், மானாவாரி நிலங்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவது முக்கியத்துவம் பெறுகிறது. நீர்வடிப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் மூலம், மண் அரிப்பைத் தடுத்தல், மழை நீரைப் பெருமளவிற்கு பயன்படுத்துதல், நிலத்தின் பலன்களைப் பரவலாக்குதல், பயிர் வகைகள் மற்றும் உழவியல் பயிற்சி முறைகளைக் கடைப்பிடித்து, நீர்வடிப் பகுதியிலிருக்கும் அனைத்து வகையான நிலங்களை ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தி, அத்தகைய நிலங்களின் விளைச்சல் திறனை அதிகரித்தலாகும். டானிடா நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி வளர்ச்சித் திட்டங்கள் அல்லாது மத்திய அரசின் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (வ.இ.ப.தி), தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (தே.மா.நீ.மே.தி) மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் (ஒ.த.நி.மே.தி.) ஆகியவை நீர்வடிப் பகுதி அணுகுமுறையை ஒட்டியே செயல்படுத்தப்படுகின்றன.

### 1. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் ஒருங்கிணைந்த பகுதி வளர்ச்சித் திட்டமாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், நீர்வடிப் பகுதி மக்களின் பொருளாதாரத்தை ஒட்டுமொத்தத்தில் உயர்த்துவதற்காக, வறட்சியின் கொடுமையைத் தணிப்பதற்காக, சுற்றுச் சூழல் மேலும் பாதிக்கப்படாமல் காப்பதற்காக, வேளாண்மை சாராத திட்டப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்காக, நீர்வடிப் பகுதியிலிருக்கும் நிலம், நீர் போன்ற இயற்கை வளங்களை முழு அளவில் பயன்படுத்திக்கொள்ளுதல் ஆகும். 1995-96 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு இத்திட்டத்திற்கான புதிய

வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்கியுள்ளது. அதன் முக்கிய குறிக்கோள் நீர்வடிப் பகுதி வளர்ச்சித் திட்ட அணுகுமுறையை அனுசரித்து மக்களின் ஈடுபாட்டுடன் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டும் என்பதே. இத்திட்டம் தருமபுரி, தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், புதுக்கோட்டை, திருநெல்வேலி, சேலம், நாமக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், வேலூர் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர் ஆகிய 16 மாவட்டங்களிலுள்ள 80 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான செலவினம் மத்திய அரசு மாநில அரசால் 31-3-1999 வரை 50:50 என்ற விகிதத்தில் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டு வந்தது. 1-4-1999 முதல் புதியதாக ஒப்புதலளிக்கப்படும் நீர்வடிப் பகுதி திட்டங்களுக்கானச் செலவினத்தை மத்திய அரசும் மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டம் 4 ஆண்டுத் திட்டமாகும். முதல் தொகுதி நீர்வடிப் பகுதித் திட்டம் 1995-96 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 297 நீர்வடிப் பகுதிகளில் 30 திட்டச் செயலாக்க முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. நான்காவது தொகுதித் திட்டங்கள் 1997-98 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு 103 கூடுதலான நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் மத்திய அரசு புதியதாக 299 நீர்வடிப் பகுதித் திட்டங்களை ஏற்கெனவே உள்ள மாவட்டங்களில் அங்கீகரித்துள்ளது. முதல் தொகுதித் திட்டம் 31-3-1999-ல் முடிவடைந்திருக்க வேண்டியது. மத்திய அரசின் இறுதித் தவணை ஒதுக்கீட்டை எதிர் நோக்கி நடப்பு ஆண்டில் இத்தொகுதித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இரண்டாவது தொகுதியில் அங்கீகரித்த 103 கூடுதல் நீர்வடிப் பகுதிகளில் தற்போது திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. புதியதாக அங்கீகரிக்கப்பட்ட 299 நீர்வடிப் பகுதிகளில் நிறுவன அமைப்புகள் மற்றும் ஆதாரப் பணிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இம்மூன்று தொகுதித் திட்டத்திற்காக 1995-96 முதல் பிப்ரவரி 2000 வரை நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தொகுதி எண் மற்றும் காலம் | மூலதனம் | விடுவித்த தொகை | செலவு |
|---|---|---|---|---|
| 1. | முதல் தொகுதி நீர்வடிப் பகுதி 1995-96 முதல் 1999-2000 வரை | 5940.00 | 5594.00 | 5266.04 |
| 2. | கூடுதல் நீர்வடிப் பகுதி (4வது தொகுதி) 1997-98 முதல் 2000-2001 வரை | 2060.00 | 313.00 | 207.78 |
| 3. | புதிய நீர்வடிப்பகுதித் திட்டம் 1999-2000 முதல் 2002-2003 வரை | 5980.00 | 598.00 | 31.14 |

இத்திட்டத்திற்கு ரூ. 2040 இலட்ச திட்ட ஒதுக்கீட்டில் 102 புதிய நீர்வடிப் பகுதிகளில் விரிவுபடுத்த உரிய கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2. தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (NWDPRA) மத்திய அரசின் உதவியோடு 1990-91 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் இரு முக்கிய நோக்கங்களாக உற்பத்தியை நீடித்து நிலை நிறுத்துதலும், சுற்றுச்சூழல் பாதிப்பை சமன்படுத்துவதுமாக கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் 84 நீர்வடிப் பகுதிகளில், கடலூர், விழுப்புரம், வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 19 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு மொத்த திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு மானியமாகவும் 25 விழுக்காடு கடனாகவும் அளிக்கிறது. நடப்பாண்டு 1999-2000க்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 1700 இலட்சத்துடன் கடந்த ஆண்டு செலவாகாமல் நிலுவையில் இருந்த தொகை ரூ.67.469 இலட்சத்தைச் சேர்த்து ரூ.1767.469 இலட்சம் திட்டச் செயலாக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,62,526 எக்டர் நிலப்பரப்பில் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயலாக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டிற்கான இலக்கு, பிப்ரவரி 2000 வரையிலான சாதனை மற்றும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பணிகள் விவரம் | 1999-2000 ஆம் ஆண்டு இலக்கு | செலவினம் | 2000-2001 ஆண்டு இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | அடிப்படைச் செயல்பாடுகள் | 628.29 | 400.34 | 652.16 |
| 2. | சாகுபடிக்குகந்த நிலம் செயல்பாடுகள் | 312.17 | 247.59 | 335.39 |
| 3. | வீட்டுத் தோட்டங்கள் | 16.68 | 13.94 | 18.63 |
| 4. | வீடுகளில் உற்பத்தித் திறனை அதிகரித்தல் | 137.83 | 87.84 | 149.06 |
| 5. | சாகுபடிக்கு ஒவ்வாத நிலச் செயல்பாடுகள் | 176.75 | 142.68 | 186.33 |
| 6. | வடிகால்களில் மேம்பாடு | 389.70 | 203.79 | 409.83 |
| 7. | கால்நடை பராமரிப்புப் பணி | 106.05 | 85.73 | 111.80 |
| | மொத்தம் | 1767.47 | 1181.91 | 1863.30 |

### 3. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

நிலைப்படுத்துதல், சமபங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாத்தல் போன்ற பரந்த குறிக்கோள்களைக் கடைப்பிடிக்கும் வாயிலாக, கிராமப் பகுதியில் வாழும் மக்களில் குறிப்பாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சமுதாயத்தில் இதர நலிந்தோர்களின் தேவைக்கேற்றவாறு, விறகு, தீவனப் பயிர், மரத்தேவை மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தினை தமிழ்நாட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்துவதற்கு 1994-95 முதல் 1998-99 வரை மத்திய அரசு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்துள்ளது :



(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரம்/ நீர்வடிப் பகுதிகளின் பெயர் | மொத்த பரப்பு (எக்டேரில்) | மூலதனம் | 29.2.2000 வரை மத்திய அரசு விடுவித்த தொகை | பிப்ரவரி 2000 வரை செலவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஈரோடு | குதியாலத்தூர் | 4000 | 343.93 | 309.54 | 237.00 |
| 2. | சிவகங்கை | காளையார்கோயில் | 3072 | 284.73 | 255.39 | 199.06 |
| 3. | வேலூர் | பொன்னையார் | 5000 | 236.04 | 259.97 | 192.05 |
| 4. | திருவண்ணாமலை | செங்கம் | 3900 | 255.94 | 232.43 | 147.97 |
| 5. | திண்டுக்கல் | சானார்பட்டி | 5507 | 200.00 | 129.48 | 104.97 |
| 6. | கோயம்புத்தூர் | வட்டமலைக்கரை | 9058 | 362.32 | 54.34 | 30.63 |
| | மொத்தம் | | 30537 | 1742.96 | 1241.15 | 911.48 |

1999-2000 ஆம் ஆண்டில் மத்திய அரசு மேலும் 7 புதியத் திட்டங்களை அங்கீகரித்து அதற்கான முதல் தவணை நிதியையும் விடுவித்துள்ளது. அவைகளின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | வட்டாரம்/ நீர்வடிப் பகுதிகளின் பெயர் | மொத்த பரப்பு (எக்டேரில்) | மூலதனம் | 29.2.2000 வரை மத்திய அரசு விடுவித்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | சேலம் | ஆலத்தூர் | 5000 | 200.00 | 30.00 |
| 2. | நாமக்கல் | சேந்தமங்கலம் | 5105 | 204.20 | 30.63 |
| 3. | தேனி | வைகை, மஞ்சளார் மற்றும் சுருளியார் | 5151 | 206.04 | 30.94 |
| 4. | இராமநாதபுரம் | நைனார்கோவில் | 5060 | 202.40 | 30.36 |
| 5. | விருதுநகர் | வெம்பக்கோட்டை | 5300 | 212.00 | 31.80 |
| 6. | கரூர் | கடவூர் | 11606 | 464.24 | 69.64 |
| 7. | கடலூர் | கெடிலம் | 5580 | 223.80 | 33.48 |
| | மொத்தம் | | 42802 | 1719.68 | 256.85 |

## 4. முதலீடு முன்னேற்றத் திட்டம்

நிதி நிறுவனங்கள், வங்கிகள், கூட்டுறவு அமைப்புகள், பயனாளித் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைவோர்களின் மூலதனங்களைக் கவர்ந்து அதனைக் கொண்டு தரிசு நிலங்களை வளப்படுத்துவதே முதலீடு முன்னேற்றத் திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும். மத்திய அரசின் இத்திட்டம் தமிழ்நாட்டில் காடுகள் அல்லாத தரிசு நிலங்களில் 1998-99 ஆம் ஆண்டு முதல் புதிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி செயல்படுத்தப்படுகின்றது. அதன்படி, பண்ணை வளர்ச்சிப் பணிகளுக்காக 25 விழுக்காடுகள் முதல் 50 விழுக்காடுகளோ அல்லது ரூ. 25 இலட்சத்திற்கு மிகைப்படாத அளவில் மானியம் வழங்க வழிவகைச் செய்யப்பட்டுள்ளது. மேலும், பலதரப்பட்ட தொழில் முனைவோரின் பங்களிப்புத் தொகை 10 முதல் 25 விழுக்காடு வரை பொதுவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்குப் பொருந்தாது. மத்திய, மாநில அரசுகளைச் சார்ந்த நிறுவனங்கள், கூட்டுறவுத் துறை நிறுவனங்கள், பொது டிரஸ்டுகள் மற்றும் சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், கூட்டுறவு அமைப்புகள், தொழில் முனைவோர், தனிப்பட்டோர், விவசாயிகளின் குழுக்கள் போன்றோரது கருத்துருக்கள் இந்தத் திட்டத்தின்கீழ் மானியம் பெறும். தமிழ்நாட்டிலிருந்து இதுவரை எட்டு திட்ட செயற்குறிப்புகள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நில மற்றும் நீர்வள பாதுகாப்புப் பணிகளான நிலத்தைச் சமன்படுத்துதல், பாசனத்திற்கு உகந்த கிணறுகள் மற்றும் நீர் இறைக்கும் பம்பு செட்டுகள், வரப்புகள், தோட்டங்கள் மற்றும் ஊடுபயிர் நடவு செய்தல் போன்ற பண்ணை வளர்ச்சிப் பணிகள் மானியத் தொகை பெறும் தகுதியடைகிறது.

## 5. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 68 செயற்குறிப்புகளை இவ்வரசு மத்திய அரசின் ஒப்பதலுக்காக இதுவரை அனுப்பிவைத்துள்ளது. அவற்றில் மத்திய அரசு கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு மட்டும் ஒப்புதல் அளித்துள்ளது :



(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | தன்னார்வத் தொண்டு நிறுவன பெயர் | மைய அரசு ஒப்புதல் அளித்துள்ள மொத்த தொகை | இதுவரை வழங்கிய தொகை | சாகுபடிக்கான மொத்த பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1. | பிளிஸ் நிறுவனம், மதுரை மாவட்டம் | 6.69 | 1.33 | 150 |
| 2. | தமிழ்நாடு ஏழை உழவர் சங்கம், சேலம் மாவட்டம் | 6.69 | 1.33 | 150 |
| 3. | சமூக சேவை விஞ்ஞானம் மற்றும் கிராம முன்னேற்றத்திற்கான சங்கம், திண்டுக்கல் மாவட்டம் | 6.97 | 1.39 | 150 |

## 6. தொழில்நுட்ப வளர்ச்சி விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் அனுப்பிவைக்கப்பட்ட கருத்துருவுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| மாவட்டத்தின் பெயர் | திட்ட அமலாக்க முகமை | திட்டப பரப்பு (எக்) | திட்ட மூலதனம் | இதுவரை விடுவித்த தொகை | செலவினம் |
|---|---|---|---|---|---|
| மருத்துவாழ் மலை, கன்னியாகுமரி | ஊரக வளர்ச்சி முகமை கன்னியாகுமரி | 75 | 25.44 | 16.67 | 6.59 |

## 7. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், பண்ணை வருமானத்தை அதிகரிக்கவும் 'தரிசு நில மேம்பாட்டு ஆணையம்' அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு சட்டசபையில் அறிவித்தார்கள். அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தரிசு நில மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்பட்டது. தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்டு செயற்குழு ஒன்றை அரசு அமைத்தது. அதன்படி தருமபுரி,

[2000 ஏப்ரல் 6

திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், ஈரோடு, புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா 1,000 எக்டர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை ஆகிய மூன்று துறைகளும் ஒருங்கிணைந்து மேற்கூறிய 10 மாவட்டங்களில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறை மண்வளப் பாதுகாப்புப் பணிகளான புதர் அகற்றுதல், ஆழ உழவு செய்தல், குழாய் கிணறுகள் அமைத்தல் போன்ற பணிகள் 10,000 எக்டர் பரப்பில் ரூ. 402.55 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் முடிக்கப்பட்டன. வேளாண்மைத் துறை ரூ. 114.79 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 6,021 எக்டர் பரப்பில் வேம்பு, தைலம், சவுக்கு போன்ற மரக்கன்றுகள் நடவுப் பணியை முடித்துள்ளது. தோட்டக்கலைத் துறை ரூ. 39.30 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மா, சப்போட்டா, நெல்லி, எலுமிச்சை, முந்திரி, புளி ஆகிய மரக்கன்றுகள் மற்றும் தர்பூசணி ஆகியவற்றின் நடவுப் பணியை 3,979 எக்டர் பரப்பில் முடித்துள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் 24 மாவட்டங்களில் 30,000 எக்டர் நிலப்பரப்பில் ரூ. 12 கோடி செலவில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.



2000 ஏப்ரல் 6]

## அத்தியாயம் 6

### வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல், தட்பவெட்ப நிலைக்கேற்ப திருந்திய உயர் விளைச்சல் பயிர் இரகங்களை உருவாக்குதல், மண் மற்றும் பயிர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு மற்றும் சீரிய தொழில் நுணுக்கங்களைக் கண்டறிதல் ஆகியவற்றில் அரும்பாடுபட்டு வருகிறது.

**கல்வி**

இப்பல்கலைக்கழகத்தின்கீழ் கோயமுத்தூர், மதுரை, கிள்ளிகுளம், திருச்சிராப்பள்ளி, பெரியகுளம், குமுளூர் மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய ஏழு நகரங்களில் உள்ள பத்து கல்லூரிகளிலும் இளமறிவியல் மற்றும் மூதறிவியல் பட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகின்றன. வேளாண்மை, தோட்டக்கலை, வனவியல், வேளாண்மைப் பொறியியல், மனையியல் மற்றும் உணவுப் பொருள் பதஞ்செய்தல் நுட்பம் ஆகியவற்றில் இளமறிவியல் பட்டப்படிப்பும், மேலும் 26 துறைகளில் மூதறிவியல் பட்டப்படிப்பும், 20 துறைகளில் முனைவர் ஆராய்ச்சிப் படிப்பும் இப்பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. இளமறிவியல் பட்டப்படிப்பில் 400 மாணவர்களும், மூதறிவியல் பட்டப்படிப்பில் 276 மாணவர்களும், முனைவர் பட்டப்படிப்பில் 118 மாணவர்களும் 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். மொத்த மாணவர்களில் 49 விழுக்காடு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர் சேர்க்கையில் அனைத்து இந்திய போட்டித் தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு இளமறிவியல் பட்டப்படிப்பில் 10 விழுக்காடு இடமும் மூதறிவியல் பட்டப்படிப்பில் 15 விழுக்காடும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் 1999-2000 ஆண்டுக்கான இளநிலை கல்வி உதவித் தொகையை 122 மூதறிவியல் பட்டப்படிப்பை பல்வேறு துறைகளில் பயிலும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவ மாணவியர்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

**ஆராய்ச்சி**

தமிழ்நாடு அரசு ஏழு புதிய பகுதி இரண்டு திட்டப் பணிக்காக நடப்பாண்டான 1999-2000-ல் ரூ. 36.96 இலட்சங்கள் மதிப்பீட்டில் தோட்டக்கலைத் துறை, பூச்சி பூஞ்சாணங்களைத் தாவரம் சார்ந்த

பொருட்களின் மூலம் மேலாண்மை செய்தல் மற்றும் புதியதாக துவக்கப்பட்ட மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் ஏத்தாப்பூரில் அடிப்படை கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதி அளித்தது.

இந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் சிறந்த ஆராய்சிக்காக தலைசிறந்த பல்கலைக்கழகமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1998 ஆம் ஆண்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆராய்ச்சியை மேலும் வலுப்படுத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவியுடன் ஆராய்ச்சித் திட்டங்கள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படுகின்றன:—

| நிதி உதவி வழங்குவோர் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| இந்திய அரசு | 69 | 754.35 |
| இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் | 152 | 1138.95 |
| அரசுக் கழகங்கள் | 61 | 2155.16 |
| தனியார் நிறுவனங்கள் | 90 | 285.45 |
| வெளிநாட்டு நிறுவனங்கள் | 44 | 244.74 |
| அரசு திட்டங்கள் | 155 | 1033.16 |

தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், நார்ப் பயிர்கள், கரும்பு, எண்ணைப் பனை, நெல் மற்றும் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி, தழை உரம், பாசன முதலீடுகள் மாதிரி, தொழில்நுட்ப பரிமாற்றம், கழிவு பயன்படுத்துதல், விதை உற்பத்தி, பூச்சிமருந்துகள், உயிரியல் உரங்கள், உயிரியல் பூச்சிக்கொல்லிகள், பண்ணை அமைப்பு, பூச்சி மற்றும் நோய்த் தடுப்பு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டக மேலாண்மை, மூலிகைப் பயிர்கள், மஞ்சள், மிளகாய் அலங்கார மலர்கள் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் போன்றவற்றிற்கு ஆராய்ச்சியில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு கல்லூரி வளாகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் பணியாற்றும் விஞ்ஞானிகளின் சீரிய முயற்சிகளினால் 9 புதிய வேளாண் பயிர் இரகங்களும், 5 தோட்டக்கலை பயிர்களும், ஒரு வேளாண் உயிர் பொருளும் (காளான்) மற்றும் ஒரு மரப்பயிரும் உருவாக்கப்பட்டன. நெல் (ஏடிடி 44), தீவன மற்றும் தானியச் சோளம் (கே 11), சாமை (பையூர்2), உளுந்து (வம்பன் 3) வீரிய ஒட்டு சூரியகாந்தி (டிசிஎஸ்எச் 1), விரிய ஒட்டு தென்னை (விஎச்சி 3), பருத்தி (எஸ்விபிஆர் 3), வீரிய ஒட்டு சப்போட்டா (கோ 3), முந்திரி செடி, முருங்கை (பிகேஎம்2), பட்டாணி (ஊட்டி 1), காய்கறி மிளகாய் (கோ 4), (வீஆர்ஐ 4), சிப்பிக்காளான் (எம்டியூ 2), சைமரூபா எண்ணெய் மரம் (அறிமுகம்) மற்றும் இரண்டு புல் வகைகளும் அதாவது கினியாபுல் (கோ 2), மற்றும் கம்பு நேப்பியர் வீரிய ஒட்டுப்புல் (கேகேஎம்1) உருவாக்கப்பட்டன. மேலும் வேளாண் மக்களின் வேலைப் பளுவைக் குறைத்து பணியை எளிதில் செய்ய ஒன்பது புதிய வேளாண் கருவிகளான தக்காளி விதை பிரித்தெடுக்கும் கருவி, காப்பி பழத்தை தோல் நீக்கி கழுவும் கருவி, வாழைக்காயைப் பாலித்தீன் பைகளில் அடைக்கும் முறை, கத்தரி விதை பிரித்தெடுக்கும் கருவி, சாண எரிவாயு மற்றும் சூரிய ஆற்றல் கவர்ச்சிப்பொறி, நன்செய் நிலங்களில் நேரடி நெல் மற்றும் தக்கைப்பூண்டு விதைக்கும் கருவி, பவர் டில்லரால் இயக்கப்படும் குழி தோண்டும் கருவி—மாதிரி ஐஐ, பவர் டில்லரால் மஞ்சள் அறுவடை செய்யும் கருவி, மற்றும் குழிப்படுகை/அகலப்பாத்தி அமைத்து விதை விதைக்கும் கருவி ஆகியவை உருவாக்கப்பட்டன. இப்பயிர் இரகங்களும் வேளாண் கருவிகளும் பொங்கல் பரிசாக சனவரி 7, 2000 அன்று வேளாண் மக்களின் நலனுக்காக வெளியிடப்பட்டன.

**வல்லுநர் விதைக் குறியீடும் விநியோகமும்**

வேளாண் மக்கள் நல்ல விதைகளைப் பெற்று பயன் பெற உதவும் நோக்கத்துடன் மாநில மற்றும் விதை உற்பத்தியாளர்களின் விரிவாக்கத் துறையினருக்கு வல்லுநர் விதையை பெருக்க மொத்த குறியீட்டு விதை அளவான 1,26,364 கிலோவில் பிப்ரவரி 2000 முடிய 1,62,688 கிலோ விநியோகிக்கப்பட்டுள்ளது. இது பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

[2000 ஏப்ரல் 6

| பயிர் (முடிய) | உற்பத்தி குறியீடு | | | விநியோகம்(பிப்ரவரி 2000 | | |
|---|---|---|---|---|---|---|
| | துறை | தனியார் | மொத்தம் | துறை | தனியார் | மொத்தம் |
| நெல் | 18,967 | 20,450 | 39,417 | 21,634.00 | 35,535.00 | 57,219.00 |
| சிறுதானியம் | 411 | 60 | 471 | 559.20 | 83.00 | 642.20 |
| பயறு வகைகள் | 14,832 | .. | 14,832 | 13,176.00 | 49.00 | 13,225.00 |
| எண்ணெய்வித்துக்கள் | 71,134 | .. | 71,134 | 64,054.00 | 26,212.00 | 90,266.00 |
| பருத்தி | 174 | 70 | 244 | 352.00 | 392.50 | 744.50 |
| தீவனப்பயிர்கள் | 136 | .. | 136 | 151.00 | 133.00 | 284.00 |
| காய்கறி வகைகள் | 20 | 110 | 130 | 84.15 | 223.15 | 307.30 |
| மொத்தம் | 1,05,674 | 20,690 | 1,26,364 | 1,00,010.35 | 62,627.65 | 1,62,688.00 |

**விரிவாக்கம்**

பல்கலைக்கழகத்தின் பல்வேறு விரிவாக்க மையங்களின் வாயிலாக ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்படும் தொழில் நுட்பங்களை உழவர்களிடம் பரப்பும் பணியில் விரிவாக்கக் கல்வி இயக்ககம் ஈடுபட்டுள்ளது. தகவல் தொடர்பு நிலையத்தின் வாயிலாக வீடியோ நிகழ்ச்சிகள் (54) வானொலி வேளாண்மைப் பள்ளி (6) மற்றும் அஞ்சல் வழிப் பாடத் திட்டம் (17) முதலான முக்கிய பணிகள் வாயிலாக வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பிரிவுகளின் தொழில் நுட்பங்கள் உழவர்களிடம் பரப்பப்பட்டு வருகின்றன. இது தவிர வளர்ச்சித் துறைகளுக்காகவும் வீடியோ நிகழ்ச்சிகளையும் தயாரித்து வருகின்றது. 1999-2000 ஆம் ஆண்டில் 9 வீடியோ நிகழ்ச்சிகள் வளர்ச்சித் துறைகளுக்காக இப்பிரிவின் மூலமாக தயாரிக்கப்பட்டன.

**வேளாண்மை அறிவியல் மையங்கள் மற்றும் பயிர் மருத்துவ மையங்கள்**

பல்கலைக்கழகத்தின் வாயிலாக செயல்படும் 5 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் 5 பயிர் மருத்துவ மையங்கள் வேளாண்மை மற்றும் இதர வளர்ச்சித் துறைகள் ஈடுபாட்டுடன் பல்வேறு விரிவாக்கப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றன.



2000 ஏப்ரல் 6]

ஒவ்வொரு ஆண்டும் வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மட்டுமல்லாமல் சுமார் 12,000 உழவர்கள் இந்த விரிவாக்கப் பணிகள் வாயிலாகப் பயன்பெறுகின்றனர். இது தவிர பல்வேறு தட்பவெட்ப மண்டலங்களில் செயல்படும் மண்டல ஆராய்ச்சி நிலையங்கள் வாயிலாகவும் விரிவாக்கப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. அறிக்கை காலத்தில் 2,236 பயிற்சிகள், 1,188 செயல் விளக்கங்கள், 219 கிராமக் கூட்டங்கள், 1,480 பண்ணை ஆலோசனைப் பணிகள், 75 கருத்துக் காட்சிகள் மற்றும் 78 முகாம்களையும் இம்மையங்கள் செயல்படுத்தின. இது தவிர பத்திரிக்கை மற்றும் சஞ்சிகைகள் வாயிலாக 237 கட்டுரைகள் வெளியிடப்பட்டன. வானொலி/தொலைக்காட்சியின் மூலம் 175 நிகழ்ச்சிகளும், 207 சிறு புத்தகங்கள் முதலான நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டன.

**வேளாண்மைத் தகவல் பணி**

பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பங்களைப் பரப்பும் பணியை வேளாண்மைத் தகவல் பணி மையம் செவ்வனே செய்து வருகின்றது. தொழில்நுட்ப செய்திகள் அவ்வப்பொழுது தயாரிக்கப்பட்டு உழவர்கள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. 1999-2000 ஆம் ஆண்டில் 210 தொழில்நுட்பச் செய்திகள் பரப்பப்பட்டன.

**பயிற்சி**

வேளாண்மை மற்றும் இதர பிரிவுகளின் வளர்ச்சித் துறைகளில் விரிவாக்கப் பணியாளர்கள், இடுபொருள் நிறுவனத்தினர், அரசு சாரா நிறுவனங்கள், தேசிய வங்கிகள் போன்ற பிரிவினருக்குப் பல்கலைக்கழகம் பயிற்சிப் பிரிவின் வாயிலாக தொழில்நுட்பப் பயிற்சிகளை அளித்து வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் 19 பயிற்சிகளை 331 நபர்கள் பயன்பெறும் வண்ணம் பயிற்சிப் பிரிவு நடத்தியது.

**வெளியீடுகள்**

விரிவாக்க கல்வி இயக்ககத்தினால் மாதாந்திர செய்திமடல் தமிழ் மொழியில் ஒன்றும் ஆங்கில மொழியில் ஒன்றுமாக வெளியிடப்படுகின்றன. வளர்ச்சித் துறைகளின் விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் உழவர்களுக்கு அந்தந்த இடங்களுக்கு ஏற்ற தொழில்நுட்பங்கள் செய்தி மடல்கள் வாயிலாக தெரிவிக்கப்படுகின்றன.

ஆராயச்சித் திட்டங்களின் முடிவுகளும் அவ்வப்பொழுது விரிவாக்கப் பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. காளான் சாகுபடியில் ஈடுபட்டுள்ள உழவர்கள் பயன்பெறும் வண்ணம் காலாண்டு செய்தி மடல் ஒன்று தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றது. இது தவிர 10,500 சந்தாதாரர்களைக் கொண்ட மாதாந்திர தமிழ் வெளியீடான வளரும் வேளாண்மை என்ற சிறு புத்தகமும் தொழில்நுட்பங்களைப் பரப்பிட வெளியிடப்படுகின்றது.

**உழவர் தின விழா**

ஆடுதுறை, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் உழவர் தின விழா மற்றும் நெல் சார்ந்த பண்ணையம் என்ற கருத்தரங்கம் பல்கலைக்கழகத்தில் 1999 டிசம்பர் மாதம் 4-ம் நாள் நடைபெற்றது. தமிழில் தயாரிக்கப்பட்ட புத்தகங்களான உயிர் உரங்கள், வேளாண்மைக் கருவிகள், எண்ணெய்ப்பனை மர சாகுபடி, ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் முதலான தலைப்புகளில் உழவர்களுக்காக வெளியிடப்பட்டன. தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய கருத்துக்காட்சியும் உழவர் நன்மைக்காக அமைக்கப்பட்டிருந்தது. இவ்விழாவில் 4,000-க்கும் மேற்பட்ட உழவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். மாநில அளவிலான உழவர் தினவிழா மற்றும் வேளாண்மைக் கருத்தரங்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சனவரி மாதம் 7-ம் நாள் முதல் 9-ம் நாள் வரை நடைபெற்றது. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, இயற்கை வழி வேளாண்மை மற்றும் காய்கறி சாகுபடி, வேளாண்மைக் கருவிகள் பயன்பாடு, தோட்டக்கலை மற்றும் வேளாண் விளைபொருட்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் முதலான தலைப்புகளில் கருத்தரங்குகள் 8-1-2000 அன்று நடத்தப்பட்டன. 9-1-2000 அன்று ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் என்ற தலைப்பில் கருத்தரங்கும் நடத்தப்பட்டது. மாலையில் நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் நடத்தப்பட்டன. கருத்துக்காட்சியின் வாயிலாக 120-க்கும் மேற்பட்ட தொழில்நுட்பக் கருத்துக்கள் சொல்லப்பட்டன. நடைபெற்ற உழவர் தின விழாவில் சுமார் 10,000-க்கும் மேற்பட்ட உழவர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.



# அத்தியாயம் 7

## விதைச் சான்றளிப்பு

விவசாயிகள் நல்ல தரமான விதைகள் பெறும் பொருட்டு விதைச்சான்றுத் துறை கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தி வருகிறது:—

1. விதைச் சான்று திட்டம்
2. விதை ஆய்வுத் திட்டம்
3. விதைப் பரிசோதனை மற்றும்
4. விதைச் சான்று பயிற்சி

**1. விதைச் சான்றளிப்பு :**

விதைச் சான்று துறை விதைச் சட்டம், 1966 மற்றும் விதைகள் விதிகள், 1968-ல் தெரிவித்துள்ள விதைச் சான்று நடைமுறைகளைப் பின்பற்றி மாநிலத்தில் உற்பத்திச் செய்யப்படும் தரமான விதைகளுக்குச் சான்று வழங்கி வருகிறது. விதைச் சான்று என்பது உயர் ரக பயிர் ரகங்களின் விதைகளில் வரையறுக்கப்பட்ட முளைப்புத்திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை, விதை ஆரோக்கியம் ஆகியவற்றை பேண நடைமுறைகளை வகுத்து, பின்பற்றி சான்று வழங்குவதாகும். வருடாந்திர சராசரி சான்று விதை உற்பத்தி 25,000 மெட்ரிக் டன்களாக இருந்தது. 1998-99-ல் 36,535 மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டு இச்சாதனையை மிஞ்சும் வகையில் சாதனை அடைய திட்டமிடப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் 37,600 மெட்ரிக் டன் சான்று விதை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**2. விதை ஆய்வு :**

விதை ஆய்வுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதே ஆகும். இத்துறையின் விதை ஆய்வுப் பிரிவு விதைகள் சட்ட அமலாக்கப் பணியை விதைகள் சட்டம், 1966, விதைகள் விதி 1968 மற்றும் விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983 ஆகியவற்றின் அடிப்படையில் செயல்படுத்தி வருகிறது. தரமான விதைகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய விதை ஆய்வுப் பிரிவின்

விதை ஆய்வாளர்களால் விதை விற்பனை நிலையங்கள் நிர்ணயிக்கப்பட்ட கால இடைவெளியில் ஆய்விடப்பட்டு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்விற்கு அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு முறையாக அனுப்பப்படுகின்றன. விதைப் பரிசோதனை முடிவுகளின்படி, தரக்குறைவான விதை விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது தவிர விதைகள் கட்டுப்பாடு ஆணை, 1983-ன்படி விதை விற்பனை உரிமம் வழங்கப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் 27,259 விதை விற்பனை நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 20,720 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 முடிய விதை விற்பனை நிலையங்களில் 24,385 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 18,313 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. தரக்குறைவான விதைக் குவியல்களின் அளவு 20 விழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் விதை விற்பனை நிலையங்களில் 27,500 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 20,800 விதை மாதிரிகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**3. விதைப் பரிசோதனை :**

விதைகளின் இனத் தூய்மை, புறத் தூய்மை, முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றை சோதனை செய்வதும், அவ்வகையில் சோதனை செய்யப்பட்டு விதைகள் எப்பகுதியில் சோதனை செய்தாலும் ஒரேமாதிரியான முடிவுகளைப் பெறக் கூடிய வகையில் இருப்பதும் இதன் நோக்கமாகும். விதைச் சான்று மற்றும் விதை ஆய்வுத் திட்டங்கள் செவ்வனே நடைபெற விதைப் பரிசோதனை திட்டம் முக்கிய அங்கம் வகிக்கிறது. ஆண்டுதோறும் 42,000 விதை மாதிரிகளை பகுப்பாய்வு செய்யும் திறனுக்கு, 1998-99ல் 57,900 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இப்பரிசோதனை நிலையங்களில் சான்று விதை, ஆய்வு விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுவதுடன் விதை உற்பத்தியாளர்களிடம் இருந்தும் விதை விற்பனையாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 1999-2000 ஆண்டில் பிப்ரவரி 2000 முடிய 52,303 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன. 2000-2001 ஆம் ஆண்டில் 58,000 விதை மாதிரிகள் பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இனத்தூய்மைப் பரிசோதனைகள் கண்ணம்பாளையம் பண்ணையிலும், இவ்வியக்ககத்திலும் நடத்தப்படுகின்றன. விதைச்சான்றுப் பிரிவில் வீரிய



பருத்தி மற்றும் ஆதார நிலை பருத்தி விதை மாதிரிகள் இனத்தூய்மைப் பரிசோதனை செய்யப்படுவதுடன் விதை ஆய்வுப் பிரிவில் ஐயத்திற்குரிய விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனை செய்யப்படுகின்றன.

**4. விதைச் சான்றுப் பயிற்சி :**

சான்று விதை உற்பத்தி முறைகள் குறித்தும், விதைத்தரம் பேணுதல் குறித்தும், விதை உற்பத்தியாளர்கள், சாகுபடியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் அறியும் பொருட்டு விதைச் சான்றுப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நடப்பு ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை 24,224 நபர்களுக்கு வெவ்வேறு வகையான பயிற்சி அளிக்கப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டு 23,000 நபர்களுக்குப் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சான்று விதை உற்பத்தி முறைகள் குறித்து தனியார் விதை உற்பத்தியாளர்களுக்குச் சிறப்பான முறையில் பயிற்சி அளிக்க விதைச் சான்று இயக்ககத்தில் பயிற்சி மையம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

**விதைச் சான்றுத் துறையில் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :**

அ. ஆற்றுப்படுத்தும் பயிற்சி:—விதைச் சான்றுத் துறையில் புதிதாக பணியில் அமர்த்தப்படும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு விதை சான்றளிப்பு நடைமுறைகள், வயல் ஆய்வு பணிகள், விதை சுத்திகரிப்புப் பணிகள், விதை மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல் மற்றும் பயிர்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆ. புத்தூட்டப் பயிற்சி:— இத்துறையில் பணிபுரியும் விதைச்சான்று அலுவலர், விதை ஆய்வாளர்கள் மற்றும் விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ஆகியவர்களுக்கு விதைச் சான்று நடைமுறைகள், விதை உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட ரகங்களின் குணாதிசயங்கள் பற்றியும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இ. விதை உற்பத்தியாளர் மற்றும் சாகுபடியாளர்கள் பயிற்சி:— துணை விதைச் சான்று இயக்குநர் மற்றும் உதவி விதைச் சான்று இயக்குநர்களால் அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் உற்பத்தியாளர் மற்றும் சாகுபடியாளர்களுக்கு சான்று விதை உற்பத்தி பற்றிய

தொழில்நுட்பங்கள் மற்றும் சாகுபடி முறைகளைத் தெளிவாக விளக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஈ. விதை விற்பனையாளர் தரக்கட்டுப்பாடு பயிற்சி:— விதை விற்பனையாளர்களுக்கு விதைகள் சேமித்தல், விதைத்தரம் பேணுதல், சேமிப்பில் விதைகளை தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுடன் விதைகள் சட்டம் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.

**நிதி :**

நடப்பு ஆண்டுக்கு ரூபாய் 678.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பிப்ரவரி 2000 முடிய ரூபாய் 670.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் வயல் ஆய்வுக் கட்டணம், விதைப் பரிசோதனைக் கட்டணம் மற்றும் சான்றட்டைக் கட்டணமாக பிப்ரவரி 2000 முடிய ரூ. 97.58 இலட்சம் துறைக்கு வருவாயாக பெறப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 100.00 இலட்சத்துக்கு மேல் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 1**

**சான்று செய்த விதை அளவு மெ. டன்**

| வ. எண் | பயிர் | 1998-99 சாதனை | இலக்கு | 1999-2000 பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 திட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | நெல் | 29478 | 26000 | 18843 | 27000 |
| 2. | இரக சிறுதானியம் | 396 | 400 | 410 | 400 |
| 3. | வீரிய சிறுதானியம் | 62 | 50 | 58 | 50 |
| 4. | இரக பருத்தி | 881 | 2700 | 2220 | 2800 |
| 5. | வீரிய பருத்தி | 100 | 250 | 71 | 250 |
| 6. | பயறு வகை | 1767 | 2500 | 1414 | 2600 |
| 7. | எண்ணெய் வித்து | 3777 | 4000 | 3083 | 4400 |
| 8. | காய்கறிகள் | 74 | 100 | 81 | 100 |
| | மொத்தம் | 36535 | 36000 | 26180 | 37600 |



**அட்டவணை 2**

## விதை ஆய்வு

| வ. எண் | விபரம் | 1998-99 சாதனை | இலக்கு | 1999-2000 பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 திட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | விற்பனை நிலைய ஆய்வுகள் | 27259 | 24000 | 24385 | 27500 |
| 2. | விதை மாதிரிகள் எடுத்தது | 20720 | 18000 | 18313 | 20800 |

**அட்டவணை 3**

## விதைப் பரிசோதனை

| வ. எண் | விவரம் | 1998-99 சாதனை | இலக்கு | 1999-2000 பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 திட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | விதைப் பகுப்பாய்வு பரிசோதனை செய்தது | 57900 | 46000 | 52303 | 58000 |

**அட்டவணை 4**

## விதைச்சான்று பயிற்சி

| வ. எண் | விவரம் | 1998-99 சாதனை | இலக்கு | 1999-2000 பிப்ரவரி 2000 வரை சாதனை | 2000-2001 திட்டம் |
|---|---|---|---|---|---|
| 1. | பயனாளிகள் | 25585 | 22000 | 24224 | 23000 |

## அத்தியாயம் 8

### வேளாண் விளைபொருள் விற்பனை

கிராமங்களின் வளர்ச்சியிலும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதிலும், அங்காடி அடிப்படை வளர்ச்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் செயல் திறன் மேம்படுவதற்கு சாகுபடி எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு விற்பனையும் முக்கியமாகத் திகழ்கிறது. பன்னிரண்டாவது தேசிய வேளாண் குழுவின் பரிந்துரைப்படி, வேளாண்மை விற்பனை என்பது ஒரு விவசாய விளைபொருளை விற்பனைக்காக உற்பத்தி செய்திட முடிவெடுத்தவுடனேயே தொடங்குகிறது. மேலும், வேளாண்மை விற்பனை என்பது அங்காடி முறையில் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது என்பதோடு அறுவடைக்கு முன்னும் பின்னும் செய்கின்ற செய்நேர்த்திகள், விளைபொருளை ஓரிடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பது, தரம் பிரிப்பது, சேமிப்பது மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது மற்றும் விநியோகிப்பது ஆகியவையும் அதனுள் அடங்கும்.

### வேளாண்மை விற்பனைத் துறை

இத் துறையானது விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்வதில் உதவி புரிவதுடன், உரிமம் பெற்ற வியாபாரிகளின் மூலம் நியாயமான விலை, சரியான எடைக்கு உத்திரவாதம் மற்றும் உடனடி பணம் போன்ற சேவைகளை வழங்குகின்றது.

### வேளாண் விற்பனைத் துறையின் முக்கிய செயல்பாடுகள்

1. விவசாயிகள் நலன் கருதி, வேளாண் விளைபொருள் வாங்குவது, விற்பது ஆகிய செயல்களை ஒழுங்குபடுத்துதல், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி நிர்வகித்தல்.

2. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவில் தரம் பிரித்து நல்ல விலை கிடைத்திட உதவுதல்.

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் வரத்தினை அதிகரிக்கவும், அவ்விற்பனைக் கூடத்தில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள், வாய்ப்புகள் ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்திக்



கொள்ளவும் விளம்பரப் பணி, புள்ளியியல் கணக்கெடுப்பு, விற்பனைக் கூடங்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மூலம் விவசாயிகளுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத்தின் மூலம் செயல்படுத்துதல்.

4. வேளாண் பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள், வனப் பொருட்கள் போன்றவற்றை நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டத்தினை அமலாக்குதல்.

### விற்பனைக் குழுக்கள்

தமிழகத்தில் தற்போது 16 விற்பனைக் குழுக்கள் இயங்கி வருகின்றன. இவ்விற்பனைக் குழுக்கள் இதுவரை தனி அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. தற்போது நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் கீழ் இயங்கி வருகின்றன. சென்னை மாவட்டம் நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தி உறுதி அறிவிக்கை வெளியிட வேண்டியுள்ளது.

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

16 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 270 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 44 சோதனைச் சாவடிகள், 108 ஊரக கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை விற்பனைக் கூட வளாகத்தில் ஒன்று கூட்டி விளைபொருள் வாங்குவது, விற்பது போன்ற பல செயல்களில் ஈடுபடச் செய்வது, மறைமுக ஏலமுறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்று தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

விற்பனைக் குழுக்கள் விளைபொருள் மதிப்பில் 1 சதவிகிதத்தினை விற்பனைக் கட்டணமாக வியாபாரிகளிடம் வசூலிக்கின்றன. வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்/விற்பனை செய்வோரிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. ஒழுங்குமுறை விற்பனைக்

கூடங்களில் இடைத்தரகர்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. விற்பனைக்குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினால் கிடைக்கும் பயன்கள்**

1. ஒரே சீராக சரியான எடைக்கான விற்பனை
2. வணிக முறை தரம் பிரிப்பு
3. கிட்டங்கி வசதி
4. உரிமம் பெற்ற வியாபாரிகளிடையே போட்டி விற்பனையில் அதிகபட்ச விலை
5. மறைமுக ஏலமுறை
6. வங்கி வசதிகள்
7. உடனடி பணம் பட்டுவாடா
8. அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு
9. இடைத்தரகர்கள், கமிஷன் ஏஜெண்டுகள் ஆகியவர்களைத் தவிர்த்தல்
10. பொருளீட்டு கடன் வசதி
11. விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, சுகாதாரக் கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள்
12. வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இடவசதி
13. இலவச மருத்துவ வசதி
14. தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்
15. தேவையான அளவு விளை பொருட்களை ஒரே இடத்தில் வாங்க வசதி
16. பணப்பட்டுவாடா செய்திட வசதி
17. தொலைபேசி வசதி



ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 1999-2000 ஆம் ஆண்டு முடிய அமைக்கப்பட்ட விற்பனைக் குழு வாரியான அடிப்படை வசதிகள் விவரங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்**

முக்கிய விளைபொருட்களில் வாணிபத்தை ஒழுங்குபடுத்திட இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 40 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**பொருளீட்டுக் கடன்**

சிறு/மிகச்சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டு, 147 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்து விளைபொருட்களின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, ரூ. 25,000/- அதிகபட்சமாகப் பெறலாம். முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை. மீதமுள்ள நாட்களுக்கு 12 விழுக்காடு முதல் 14.5 விழுக்காடு வரை வட்டி வசூலிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்**

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் விளைபொருளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/ குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ. 25,000/- மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, உயிர் இழக்கும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் குடும்பத்தில் உள்ள சட்டபூர்வமான வாரிசுதாரருக்கு மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், நபரொன்றுக்கு வருடமொன்றுக்கு தவணைக் கட்டணமாக ரூ. 10/-ஐ உரிய விற்பனைக் குழுவும் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியமும் சமபங்காகச் செலுத்துகின்றன.

**வணிக முறை தரம் பிரிப்பு**

விவசாயிகளின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ப சரியான விலை கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக 96 வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் 1 புகையிலை தரம் பிரிப்பு மையமும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பணி கிராமங்களில் விவசாயிகளின் பண்ணைகளில் மேற்கொள்ளப்படுகிறது. இம்மையங்கள் 'அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி தொழில்நுட்ப மையம்' என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பப் பணி வசதிகளை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள்.

**அக்மார்க் தரம் பிரிப்பு**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும் மற்றும் ஒரு முதன்மை ஆய்வகமும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம் பிரிப்பின் கீழ் மையத் தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்களும், மையத்தொகுப்பிற்கு உட்படாத உணவுப் பண்டங்களும், பயிற்சி பெற்ற தொழில் நுட்ப அலுவலர்களால் தரபிரிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு அக்மார்க் முத்திரைச் சீட்டுகள், உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிப்படையில் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் முன்னிலையில் வழங்கப்படுகிறது. 1999-2000 ஆம் நிதியாண்டில் சென்னை (தெற்கு), திருச்சி-1, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய நான்கு அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்த அரசு ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கீடு தெய்துள்ளது. நவீன உபகரணங்கள் வாங்கி பொருத்தப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம்**

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் முக்கிய பணிகள் வருமாறு:



*1. விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகள்*

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்வதில் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்து விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

*2. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்*

திருச்சியை மையமாகக் கொண்டு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறை மற்றும் விவசாயிகள் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின் மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக்குழு பணியாளர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

*3. கட்டுமானப் பணிகள்*

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், உரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணப்பட்டுவாடா அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உள் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச் சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

*4. விற்பனை அபிவிருத்தி நிதி*

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்திற்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு சந்தை அபிவிருத்தி நிதிக்காக ஒதுக்கீடு செய்து விற்பனைக் குழு அபிவிருத்திக்காக செலவிடப்படுகிறது. மீதமுள்ள 50 விழுக்காடு தொகை வாரிய நிர்வாகத்திற்கும் விளம்பரம் மற்றும் பிரச்சாரம்,

பயிற்சி உள்ளிட்ட வாரியத்தின் இதரப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது.

**செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

1. பன்னாட்டு மலர் ஏல மையம், சென்னை

சென்னை விமான நிலையம் அருகில் பள்ளிக்கரணை கிராமத்தில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.02 கோடி மதிப்பில், ஒரு பன்னாட்டு மலர் ஏல மையம் அமைக்க முதலில் அபீடா நிறுவனம் இசைவளித்திருந்தது. இம்மையம் அமைப்பதற்காக 30 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் வசப்படுத்தியுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்படும். மலர் உற்பத்தியாளர்கள், உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் மலர் விற்பனை செய்யும் நோக்கத்திற்காக முதற்கண் சென்னை விமான நிலையத்திற்கு அருகில் பள்ளிக்கரணை கிராமத்தில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.15.00 கோடி மதிப்பில் சிறிய மலர் ஏல மையம் ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. நெல் வணிக வளாகம், மதுரை

மதுரை மாநகரின் புறநகர்ப் பகுதியான மாட்டுத்தாவணி என்ற இடத்தில் 9.03 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் வணிக வளாகம் அமைக்கப்படுகிறது. இதற்காக ரூ.4.464 கோடியை மதுரை மாநகராட்சிக்குச் செலுத்தி நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு ரூ.17.00 கோடியாகும். 1-3-1999 அன்று மதுரையில் நடைபெற்ற விழாவில் வளாகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இவ்வணிக வளாகக் கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் (கட்டடங்கள்) துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. வெல்ல வணிக வளாகம், திருச்சி

திருச்சி மாநகரத்தில் ரூ.12.30 கோடி மதிப்பில் வெல்ல வணிக வளாகம் அமைக்கப்பட உள்ளது. திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. துணைச் சிறை வளாகத்தில் கட்டுவதாக இருந்த கருத்துரு நிலத்திற்கான அதிக விலையை கருத்தில் கொண்டு கைவிடப்பட்டது. இவ்வெல்ல வணிக வாளாகம் அமைக்கத்தக்க இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



4. மஞ்சள் வணிக வளாகம், ஈரோடு

மஞ்சள் விற்பனைக்கென அனைத்து வசதிகளுடன் நவீன மஞ்சள் வணிக வளாகம் ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறையில் உள்ள டாசிட் வளாகத்தில் ரூ.30.89 கோடி உத்தேச மதிப்பில் அமைக்கப்பட உள்ளது. வளாகத்திற்கான இடம் தேர்வு செய்யும் பணி உயர்நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததால் தாமதப்பட்டது. தற்போது உயர்நீதிமன்றம் இறுதி ஆணை பிறப்பித்துவிட்டதால் முதற்கட்டமாக 50 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இவ்வணிக வளாகம் கட்டும் பணிகள் பொதுப்பணித் (கட்டடங்கள்) துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

5. வியாபாரிகளுக்கு பொருளீட்டுக் கடன் வசதி

தற்போது விவசாயிகளுக்கு மட்டும் பொருளீட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. வியாபாரிகளுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டும் விவசாயிகளுக்கு உடனடி பணப்பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்ற நோக்கிலும் 100 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் என்ற அளவில் ரூ.1000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வசதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் உரிமம் பெற்ற வியாபாரிகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

6. மாவட்டங்களில் பசுமைக் கூடம் நிறுவுதல்

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தகுதிவாய்ந்த பூக்கள், காம்புடன் கூடிய நவீனப் பூக்கள் உற்பத்தி பற்றி விவசாயிகள் கற்றறிந்து செயலாக்கிட உதவிடும் வகையில் 8 மாவட்டங்களில் ரூ.48 இலட்சம் செலவினத்தில் விளக்கத் திடல்களாக பசுமைக் கூடங்கள் நிறுவுகின்ற திட்டம் அமலாக்கப்படவுள்ளது.

**7. 1999-2000 ஆண்டு பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, செயல்பாடு முன்னேற்றம் அடைந்து வருகின்றது :**

1. 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வேளாண்மை இடுபொருட்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் விற்பனை மையம் அமைத்தல்.

திட்ட மதிப்பீடு ரூ.75.00 இலட்சம்

2. 3 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் (விழுப்புரம், செஞ்சி, திருப்பூர்) மின்னணு எடை மேடை அமைத்தல்

திட்ட மதிப்பீடு ரூ.45.00 இலட்சம்

3. விவசாயிகள்/வியாபாரிகளுக்கு 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஓய்வறைகள் அமைத்தல்

திட்ட மதிப்பீடு ரூ.80.00 இலட்சம்

4. 100 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளுக்கு பொருளீட்டுக் கடன் வழங்குதல்

திட்ட மதிப்பீடு ரூ.1000 இலட்சம்

5. 170 கிராமங்களில் உலர் களம் அமைத்தல்

திட்ட மதிப்பீடு ரூ.297.50 இலட்சம்

6. 4 அக்மார்க் ஆய்வகங்களை நவீனப்படுத்துதல் [சென்னை (தெற்கு), திருச்சி-1, திருநெல்வேலி மற்றும் விருதுநகர்]

திட்ட மதிப்பீடு ரூ.25.00 இலட்சம்

**8. உழவர் சந்தைகள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25-10-1999 அன்று தமிழ்நாட்டில் நகரப்பகுதிகளில், 100 இடங்களில் உழவர் சந்தைகள் நிறுவப்படும் எனவும், இதன் மூலம் காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்கள் ஆகிய விளை பொருட்களை உற்பத்தியாளர்கள் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்ய இயலும் என்று அறிவிப்பு வெளியிட்டார்கள்.

உழவர்களுக்கு பேருந்துகளில் தங்கள் விளைபொருட்களை கொண்டுவரும் மூட்டைகளுக்கு கட்டணம் வசூலிப்பதில்லை. தோட்டக்கலைத் துறையால் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. விற்பனைக் குழுக்களால் எடை தராசும், கடைகளும் முதலில் வரும் நபருக்கு முதல் கடை என்பது போல் வரிசைக் கிரமமாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விளைபொருள்களின் விலை விவசாயிகள் மற்றும் அலுவலர்கள் அடங்கிய குழுவால் தினமும் நிர்ணயம் செய்யப்படுகிறது. இதுவரை 32 உழவர் சந்தைகள் துவங்கப்பட்டுள்ளன. மொத்தம் 100 உழவர் சந்தைகளை துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



**9. வேளாண்மை விற்பனை குறித்த உயர் நிலைக் குழு**

வேளாண்மை விற்பனைத் துறையில் 1987 ஆம் வருட தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் மற்றும் 1991 ஆம் வருட தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) விதிகளின் செயலாக்கம் மற்றும் சட்ட விதிமுறைகளின்படி விற்பனைக் கட்டணம் வசூலிப்பதில் தொடர்ந்து இருந்து வரும் சில பிரச்சினைகள் குறித்து விரிவாக சீராய்வு செய்து அரசுக்கு அறிக்கை தரும் வகையில் செயலர், வேளாண்மைத் துறை அவர்களைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர்கள், வணிகர்கள், விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. உயர்நிலைக் குழு பலமுறை கூடி விவாதித்தது. 25-11-1999 அன்று சென்னையிலும், பின்னர் 1-12-1999 அன்று மதுரையிலும் நடைபெற்ற குழுவின் கூட்டங்களில் வணிகர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து. மேலும் 17-12-1999 அன்றைய கூட்டத்தின்போது விவசாயச் சங்க பிரதிநிதிகளின் கருத்துக்களை கேட்டறிந்தது. இக்குழு, கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, புதுடெல்லி மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அம்மாநிலங்களின் விற்பனை முறைகளையும், செயல்பாடுகளையும் கண்டறிந்தது. இந்த உயர்நிலைக்குழு பிற மாநிலங்களில் விற்பனைக் குழுக்களில் செயல்முறைகள் மற்றும் விற்பனை முறைகள், கட்டுமான வசதிகள் ஆகியவற்றையும் உரிமம் வழங்கும் முறைகள், விற்பனைக் கட்டண விதிப்பு முறைகள், கணக்கு அறிக்கை பெறுதல், கணக்குகளை ஆய்வு செய்தல், அனுமதிச் சீட்டு பெறுதல் போன்ற நடைமுறைகளையும் ஆய்வு செய்து அரசுக்கு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும்.

**10. உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய வணிக வளாகங்கள்**

விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருட்களுக்கு அதிகபட்ச விலை கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கிலும் வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்புக்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் அமைத்திட கீழ்க்கண்ட வணிக வளாகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன :

1. பருத்தி வணிக வளாகம், தேனி.
2. தேங்காய் வணிக வளாகம், பட்டுக்கோட்டை.

[2000 ஏப்ரல் 6

3. காய்கறிகள் வணிக வளாகம், மேட்டுப்பாளையம்.

4. காய்கறிகள் வணிக வளாகம், உடுமலைப்பேட்டை.

## அட்டவணை-1

### மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், சோதனைச்சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலை தரம் பிரிப்பு மையம் விவரங்கள்

| வ எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் | துணை விற்பனை கூடங்கள் | சோதனை சாவடிகள் | ஊரகக் கிட்டங் கிகள் | வணிக முறை தரம் பிரிப்பு மையம் | பருத்தி தரம் பிரிப்பு மையம் | புகையிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 14 | 1 | 3 | 5 | 7 | .. | .. |
| 2. | வேலூர் | 12 | .. | .. | 4 | 5 | .. | .. |
| 3. | திருவண்ணாமலை | 16 | .. | .. | 7 | 10 | .. | .. |
| 4. | கடலூர் | 10 | 1 | 3 | 3 | 6 | .. | .. |
| 5. | விழுப்புரம் | 18 | .. | .. | 9 | 13 | 1 | .. |
| 6. | சேலம் | 19 | .. | 5 | 2 | 6 | .. | .. |
| 7. | தர்மபுரி | 16 | .. | 2 | 4 | 5 | .. | .. |
| 8. | கோயம்புத்தூர் | 18 | 5 | 5 | 11 | 2 | 3 | .. |
| 9. | ஈரோடு | 23 | 6 | 5 | 8 | 10 | 2 | 1 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 19 | 2 | 4 | 10 | 4 | .. | .. |
| 11. | தஞ்சாவூர் | 29 | .. | 7 | 7 | 5 | .. | .. |
| 12. | புதுக்கோட்டை | 10 | .. | 3 | 2 | 2 | .... | |
| 13. | மதுரை | 21 | .. | 1 | 8 | 7 | 1 | .. |
| 14. | இராமநாதபுரம் | 20 | .. | 1 | 10 | 6 | 1 | |
| 15. | திருநெல்வேலி | 19 | .. | 1 | 13 | 6 | 3 | |
| 16. | கன்னியாகுமரி | 6 | .. | 4 | 5 | 2 | .... | |
| | மொத்தம் | 270 | 15 | 44 | 108 | 96 | 11 | 1 |



2000 ஏப்ரல் 6]

## அட்டவணை-2

### ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள்

| வ. எண். | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட்டங்கி | ஊரக கிட்டங்கி | பரிவர்த் தவனைக் கூடம் | உலர் களம் | விவசா யிகள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 7 | .. | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2. | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3. | திருவண்ணாமலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4. | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5. | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6. | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | .. | 4 | 3 |
| 7. | தர்மபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8. | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9. | ஈரோடு | 14 | 12 | 8 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11. | தஞ்சாவூர் | 12 | 12 | 7 | 20 | 9 | 8 | 11 | 11 |
| 12. | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13. | மதுரை | 14 | 1 | 8 | 10 | 16 | 4 | 10 | 12 |
| 14. | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15. | திருநெல்வேலி | 15 | 3 | 13 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16. | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |

[2000 ஏப்ரல் 6

## அட்டவணை - 3

### விற்பனைக்குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

| 1. காஞ்சிபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. திருத்தணி | 2 திருப்பத்தூர் | 2. ஆரணி |
| 3. திருவள்ளூர் | 3. ஆற்காடு | 3. வந்தவாசி |
| 4. செங்குன்றம் | 4. அரக்கோணம் | 4. சேத்துப்பட்டு |
| 5. மதுராந்தகம் | 5. வாணியம்பாடி | 5. செய்யார் |
| 6. உத்திரமேரூர் | 6. காவேரிப்பாக்கம் | 6. போளூர் |
| 7. பொன்னேரி | 7. குடியாத்தம் | 7. செங்கம் |
| 8. திருக்கழுக்குன்றம் | 8. கலவை | 8. புதுப்பாளையம் |
| 9. சுங்குவார்சத்திரம் | 9. அம்மூர் | 9. வானாபுரம் |
| 10. பள்ளிப்பட்டு | 10. காட்பாடி | 10. வேட்டவலம் |
| 11. ஊத்துக்கோட்டை | 11. ஆம்பூர் | 11. தெள்ளார் |
| 12. அச்சிரப்பாக்கம் | 12. திமிரி | 12. மங்கல மாமண்டூர் |
| 13. கும்மிடிப்பூண்டி | | 13. தேசூர் |
| 14. நசரத்பேட்டை | | 14. பெரணமல்லூர் |
| | | 15. தூசி |
| | | 16. கீழ்பென்னாத்தூர் |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் |
|---|---|
| 1. விருத்தாசலம் | 1. திண்டிவனம் |
| 2. கடலூர் | 2. திருக்கோவிலூர் |
| 3. பண்ருட்டி | 3. உளுந்தூர்பேட்டை |
| 4. திட்டக்குடி | 4. விழுப்புரம் |
| 5. காட்டுமன்னார்கோவில் | 5. சின்னசேலம் |
| 6. சிதம்பரம் | 6. கள்ளக்குறிச்சி |
| 7. குறிஞ்சிப்பாடி | 7. செஞ்சி |
| 8. சேத்தியாதோப்பு | 8. தியாகதுர்கம் |
| 9. ஸ்ரீமுஷ்ணம் | 9. சங்கராபுரம் |
| 10. புவனகிரி | 10. திருவெண்ணெய்நல்லூர் |
| | 11. மணலூர்பேட்டை |
| | 12. அவலூர்பேட்டை |
| | 13. மரக்காணம் |
| | 14. விக்ரவாண்டி |
| | 15. அனந்தபுரம் |
| | 16. வளத்தி |
| | 17. மூங்கில்துரைப்பட்டு |
| | 18. கிளியனூர் |



2000 ஏப்ரல் 6]

| 6. சேலம் | 7. தர்மபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| 1. சேலம் | 1. தர்மபுரி | 1. திருப்பூர் |
| 2. ஆத்தூர் | 2. கிருஷ்ணகிரி | 2. அவினாசி |
| 3. நாமக்கல் | 3. ஓசூர் | 3. சேவூர் |
| 4. ராசிபுரம் | 4. கெலமங்கலம் | 4. அன்னூர் |
| 5. திருச்செங்கோடு | 5. பாலக்கோடு | 5. காரமடை |
| 6. சங்ககிரி | 6. பெண்ணாகரம் | 6. கோயம்புத்தூர் |
| 7. கொங்கனாபுரம் | 7. போச்சம்பள்ளி | 7. சூலூர் |
| 8. கொளத்தூர் | 8. காவேரிப்பட்டிணம் | 8. பல்லடம் |
| 9. வேலூர் | 9. ஊத்தங்கரை | 9. உடுமலைப்பேட்டை |
| 10. மேச்சேரி | 10. அரூர் | 10. ஆனைமலை |
| 11. வாழப்பாடி | 11. பாப்பிரெட்டிபட்டி | 11. பொள்ளாச்சி |
| 12. தம்மம்பட்டி | 12. கொளத்தூர் | 12. மலையடிப்பாளையம் |
| 13. நாமகிரிப்பேட்டை | 13. பர்கூர் | 13. நெகமம் |
| 14. தலைவாசல் | 14. ராயக்கோட்டை | 14. கிணத்துக்கடவு |
| 15. ஓமலூர் | 15. தென்கனிக்கோட்டை | 15. தொண்டாமுத்தூர் |
| 16. காடையம்பட்டி | 16. பாப்பாரப்பட்டி | 16. மடத்துக்குளம் |
| 17. சங்கவல்லி | | 17. பெதப்பம்பட்டி |
| 18. கருமந்துறை | | 18. பொங்கலூர் |
| 19. சோளக்காடு | | |

| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 1. ஈரோடு | 1. ஜெயங்கொண்டம் | 1. அதிராமபட்டினம் |
| 2. அவல்பூந்துறை | 2. கரூர் | 2. அம்மாப்பேட்டை |
| 3. கொடுமுடி | 3. அரியலூர் | 3. பூதலூர் |
| 4. சிவகிரி | 4. மணப்பாறை | 4. கும்பகோணம் |
| 5. சித்தோடு | 5. ஆண்டிமடம் | 5. மதுக்கூர் |
| 6. பவானி | 6. துறையூர் | 6. ஒரத்தநாடு |
| 7. பூதப்பாடி | 7. பெரம்பலூர் | 7. பட்டுக்கோட்டை |
| 8. அந்தியூர் | 8. இலால்குடி | 8. பாபநாசம் |
| 9. மைலம்பாடி | 9. திருச்சிராப்பள்ளி | 9. பேராவூரணி |
| 10. கவுந்தப்பாடி | 10. தொட்டியம் | 10. தஞ்சாவூர் |
| 11. கோபி | 11. மணச்சநல்லூர் | 11. வல்லம் |
| 12. நம்பியூர் | 12. குளித்தலை | 12. திருப்பனந்தாள் |
| 13. வெள்ளக்கோவில் | 13. துவரங்குறிச்சி | 13. வலங்கைமான் |
| 14. சத்தியமங்கலம் | 14. இரும்பூதிபட்டி | 14. பாப்பாநாடு |
| 15. புஞ்சைபுளியம்பட்டி | 15. சின்னதாராபுரம் | 15. கிவலூர் |
| 16. தாளவாடி | 16. புள்ளம்பாடி | 16. கொரடாச்சேரி |
| 17. பெருந்துறை | 17. தாத்தையங்கார்பேட்டை | 17. குத்தாலம் |
| 18. குன்னத்தூர் | 18. மேலணைக்குழி | 18. மன்னார்குடி |
| 19. காங்கேயம் | 19. அரும்பாவூர் | 19. மயிலாடுதுறை |

| 9. ஈரோடு | 11. தஞ்சாவூர் |
|---|---|
| 20. வெள்ளாங்கோவில் | 20. நாகப்பட்டினம் |
| 21. தாராபுரம் | 21. பூந்தோட்டம் |
| 22. மூலனூர் | 22. செம்பனார்கோவில் |
| 23. அலங்கியம் | 23. சீர்காழி |
| | 24. வேதாரண்யம் |
| | 25. வடுவூர் |
| | 26. குடவாசல் |
| | 27. திருப்பூண்டி |
| | 28. திருவாரூர் |
| | 29. திருத்துறைப்பூண்டி |

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| 1. ஆலங்குடி | 1. தேனி | 1. விருதுநகர் |
| 2. அறந்தாங்கி | 2. திண்டுக்கல் | 2. இராஜபாளையம் |
| 3. புதுக்கோட்டை | 3. திருமங்கலம் | 3. சாத்தூர் |
| 4. கந்தர்வகோட்டை | 4. ஒட்டன்சத்திரம் | 4. அருப்புக்கோட்டை |
| 5. ஆவுடையார்கோவில் | 5. உசிலம்பட்டி | 5. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 6. கிரனூர் | 6. பழனி | 6. வத்திராயிருப்பு |
| 7. கிரமங்கலம் | 7. நத்தம் | 7. வெம்பக்கோட்டை |
| 8. பொன்னமராவதி | 8. கம்பம் | 8. சிவகெங்கை |
| 9. இலுப்பூர் | 9. வத்தலகுண்டு | 9. திருபுவனம் |
| 10. கரம்பக்குடி | 10. மேலூர் | 10. மானாமதுரை |
| | 11. போடிநாயக்கனூர் | 11. சிங்கம்புணரி |
| | 12. சின்னமனூர் | 12. காரைக்குடி |
| | 13. மதுரை | 13. இளையான்குடி |
| | 14. கோபால்பட்டி | 14. தேவக்கோட்டை |
| | 15. டி.கல்லுப்பட்டி | 15. இராமநாதபுரம் |
| | 16. வாடிப்பட்டி | 16. பரமக்குடி |
| | 17. வடமதுரை | 17. கமுதி |
| | 18. ஆண்டிப்பட்டி | 18. திருவாடனை |
| | 19. வேடசந்தூர் | 19. இராசசிங்கமங்கலம் |
| | 20. உத்தமபாளையம் | 20. முதுகுளத்தூர் |
| | 21. பெரியகுளம் | |

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி |
|---|---|
| 1. கோவில்பட்டி | 1. ஈத்தாமொழி |
| 2. சங்கரன்கோவில் | 2. வடசேரி |
| 3. தூத்துக்குடி | 3. கலியக்காவிளை |



| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி |
|---|---|
| 4. புதூர் | 4. திங்கள் சந்தை |
| 5. கடம்பூர் | 5. குலசேகரம் |
| 6. கழுகுமலை | 6. தொடுவட்டி |
| 7. தென்காசி | |
| 8. அம்பாசமுத்திரம் | |
| 9. வள்ளியூர் | |
| 10. ஸ்ரீவைகுண்டம் | |
| 11. திருநெல்வேலி | |
| 12. விளாத்திகுளம் | |
| 13. கடையநல்லூர் | |
| 14. திசையன்விளை | |
| 15. பாலூர்சத்திரம் | |
| 16. திருவேங்கடம் | |
| 17. எட்டையபுரம் | |
| 18. சிவகிரி | |
| 19. ஆலங்குளம் | |

## அட்டவணை 4

### தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|
| 1. சென்னை | சென்னை(வடக்கு), (தெற்கு) மற்றும் முதன்மை ஆய்வகம். |
| 2. வேலூர் | வேலூர் |
| 3. கடலூர் | பண்ருட்டி |
| 4. தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5. திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி-1, திருச்சிராப்பள்ளி-2 |
| 6. கரூர் | கரூர் |
| 7. மதுரை | மதுரை-1, மதுரை-2 |
| 8. தேனி | தேனி |
| 9. திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10. விருதுநகர் | விருதுநகர் |
| 11. திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12. தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13. கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14. சேலம் | சேலம் |
| 15. தர்மபுரி | தர்மபுரி |
| 16. கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17. ஈரோடு | பெருந்துறை, ஈரோடு 1, 2, காங்கேயம் 1, 2 வெள்ளக்கோவில், சித்தோடு. |

## அத்தியாயம் 9

### வெளிநாட்டு நிதி உதவியுடன் செயல்படும் திட்டங்கள்

**1. வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம்**

வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் 1995-96 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஐந்தாண்டு காலத் திட்டமாகும். இத்திட்டம் டிசம்பர் 2000 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறது. இத்திட்டத்தைத் தமிழ்நாட்டில் ரூ.112.85 கோடி செலவில் செயல்படுத்துவதற்கு உலக வங்கி நிதி உதவி அளித்துள்ளது. வேளாண் உயர் கல்வியின் தரத்தையும் இதன் தொடர்புடைய பணியிடைப் பயிற்சியினை மேம்படுத்துவதும், இத்திட்டத்தில் பங்கேற்கும் மாநிலங்களில் வேளாண் மனித வளத்தை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். வேளாண் துறையை நவீனப் படுத்துவதற்காக மேற்கொள்ளும் இந்தியாவின் முயற்சிக்கு இது பேருதவியாக இருக்கும்.

இத்திட்டத்தில் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று 169 அலுவலர்கள் பயிற்சி பெற்று வேளாண் சார்ந்த நவீன தொழில் நுட்பங்களை அறிந்து வந்துள்ளார்கள். மேலும், இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற பல்வேறு நிறுவனங்களில் 1500 அலுவலர்களுக்கு வேளாண் சார்ந்த தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் 71 ஆசிரியர் குடியிருப்பு, தேர்வு அறை மற்றும் கணனி மையங்கள் கட்டப்பட்டுள்ளன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் மாணவர், ஆசிரியர் விடுதிகள் மற்றும் 2 விளையாட்டு வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. . மேலும், தகவல் தொடர்பு மைய, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. மாதவரத்தில் தோட்டக்கலைப் பயிற்சி மையம், அபிஷேகப்பட்டி மற்றும் ஒசூரில் கால்நடை பயிற்சி நிலையம் மற்றும் விடுதி, வைகை அணையில் வனத் துறை பயிற்சி மையம், கணினி அறை மற்றும் சென்னையில் மீன் வள பயிற்சி மையம் கட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் மற்றும் துறைகளின் திட்டப் பணிகளைச் செவ்வனே செய்திட பல்கலைக்கழகங்களுக்கும், துறைகளுக்கும் 579 கணினிகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் ஒலி, ஒளிக் கருவிகள், அலுவலக ஆய்வக உபகரணங்கள், புத்தகங்கள்



மற்றும் வெளியீடுகள் வாங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் அலுவலகர்களை அதிக அளவில் களப் பயிற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு ஏதுவாக 17 ஊர்திகள் வாங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 112.85 கோடி ரூபாயில் பிப்ரவரி 2000 முடிய ரூ.67.78 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை**

**ஒப்பளிப்பு மற்றும் செலவினம்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | துறை | ஒப்பளிப்பு | செலவினம் பிப்ரவரி 2000 முடிய |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் | 49.04 | 35.69 |
| 2. | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் | 41.09 | 21.65 |
| 3. | வேளாண்மை | 2.13 | 0.74 |
| 4. | தோட்டக்கலை | 5.40 | 2.91 |
| 5. | வேளாண் பொறியியல் | 3.68 | 1.21 |
| 6. | கால்நடை பராமரிப்பு | 4.55 | 1.89 |
| 7. | மீன் வளம் | 2.38 | 1.00 |
| 8. | வனம் | 3.39 | 1.66 |
| 9. | திட்ட மேற்பார்வை மற்றும் செயலாக்கப் பிரிவு | 0.84 | 0.77 |
| 10. | மனித சக்தி தேவை மதிப்பீடு | 0.35 | 0.26 |
| | மொத்தம் | 112.85 | 67.78 |

**2. தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம்**

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயப் பண்ணை மகளிருக்குப் புதிய வேளாண் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளித்தல், உற்பத்தியை அதிகரித்தல், சிறு மற்றும் மிகச்சிறு விவசாயக் குடும்பங்களின் உணவு உற்பத்தியை அதிகரித்தல், பண்ணை மகளிரின் மேம்பாட்டையும், உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கையும் ஏற்பது மற்றும் அவர்களின் முழுத் திறனையும் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் டென்மார்க்

நாட்டு நிதி உதவியுடன் அயல்நாட்டு நிதி உதவி பெறும் திட்டமாக செயல்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் சென்னை நீங்கலாக இதர மாவட்டங்களில் ரூ.33.92 கோடி ஒதுக்கீட்டுடன் 68,900 பண்ணை மகளிரை ஏழாண்டுகளில் பயிற்றுவிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தை மார்ச் 2002 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ஊதியம் மற்றும் இதர படிகளில் 50 விழுக்காடு மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.626.09 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பிப்ரவரி 2000 வரை ரூ.524.324 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பொருள் மற்றும் நிதி இலக்கு பிப்ரவரி 2000 முடிய சாதனை மற்றும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான திட்டம் ஆகியன வருமாறு:-

| வ. எண் | இனம் | 1999-2000 இலக்கு | பிப்ரவரி 2000 வரை சாதனை |
|---|---|---|---|
| 1. | கிராமப்புற பயிற்சி | 330 | 311 |
| 2. | சிறப்புப் பயிற்சி | 171 | 126 |
| 3. | பண்ணை மகளிர் கருத்தரங்கு | 116 | 107 |
| 4. | தொடர் நடவடிக்கை | 330 | 281 |
| 5. | பண்ணை மகளிர் குழு | 291 | 291 |
| 6. | நிதி (ரூ. இலட்சத்தில்) | 626.09 | 524.324 |

**2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கு**

| வ. எண் | இனம் | இலக்கு (எண்கள்) |
|---|---|---|
| (1) | பொருள் | |
| 1. | தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி | 555 |
| 2. | பண்ணை மகளிர் ஒருங்கிணைப்புக் கருத்தரங்கு | 54 |
| 3. | பண்ணை மகளிர்குழு அமைப்புப் பயிற்சி | 370 |
| 4. | குழு உறுதிப்படுத்தும் பயிற்சி | 370 |
| 5. | குழு சார்ந்த சிறப்புப் பயிற்சி | 370 |
| (2) | நிதி (ரூ. இலட்சத்தில்) | 597.62 |



### 3. விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

1. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (கட்டம் 2)

விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களாவன :

(1) தரங்குன்றிய நிலங்களில் உரிய நில உபயோக முறைகளை அறிய வைத்து பிரபலப்படுத்துதல்.

(2) மண் மற்றும் நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்து அவற்றை சீரிய முறையில் உபயோகித்து உரிய பலன் பெற மானாவாரி சாகுபடிக்கும், தோட்டக்கலை பயிர் வளர்ப்பிற்கும், காடு வளர்ப்பிற்கும் நில உபயோகிப்பாளர்களுக்கு வழி வகுத்தல்.

(3) விவசாயிகளுக்கு குறுகிய மற்றும் நீண்டநாள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் இரண்டாவது கட்டம் 120 கிராமங்களில் மாநிலத்தின் பங்காகிய ரூ.995.44 இலட்சம் உள்ளடக்கி ரூ.4,172.44 இலட்சம் செலவில் 42,500 எக்டர் நிலத்தில் ஆகஸ்ட் 1994 முதல் ஏழு ஆண்டுகளில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 1. தாவர அரண்கள் அமைத்தல், 2. வேளாண் காடுகள் மேம்படுத்துதல், 3. துளைக்கிணறுகள் அமைத்தல், 4. தாவர அரண்கள் பாதுகாத்தல், 5. வேளாண் காடுகள், 6. மேய்ச்சல் நிலங்களைப் பராமரித்தல், 7. பயிர்கள் வளர்த்தல், 8. இடைப்பட்ட இடங்களில் தோட்டக்கலைப் பயிர், சிக்கனமான செலவின மரங்கள் மற்றும் வருடாந்திர பலன்தரும் மரங்கள் வளர்த்தல் மற்றும், 9 மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு போன்ற முக்கியமான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 31-3-1999 முடிய உள்ள காலத்தில் ரூ.2,017.82 இலட்சம் செலவில் 22,539 எக்டர் நிலத்தில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 வரை ரூ.518.10 இலட்சம் செலவில் 5,853 எக்டர் நிலத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. டானிடா ஆய்வுக் குழு திட்டம் செயல்படுத்தும் பகுதியை 1999 ஜனவரி மாதம் பார்வையிட்டது.

மேற்படிக் குழு துறையினால் செயல்படுத்தப்படும் பணியின் தரத்தினையும், திட்டச் செயல்பாட்டையும் பாராட்டியுள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளின் ஈடுபாடு, கிராம வளர்ச்சி சங்கங்களின் செயல்பாடு ஆகியவைகளும் ஆய்வுக் குழுவினால் பாராட்டப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தை மார்ச் 2003 வரை நீட்டிக்க இக்குழு பரிந்துரைத்துள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.415.00 இலட்சம் செலவில் 4000 எக்டேர் பரப்பில் பணிகள் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2. விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத்திட்டம்**

இத்திட்டம் விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 83 கிராமங்களில் மாநில அரசின் பங்காகிய ரூ.71.39 இலட்சத்தைச் சேர்த்து மொத்தம் ரூ.1300.30 இலட்சம் செலவில் 11,000 எக்டர் நிலத்தில் நவம்பர் 1994 முதல் 5 ½ ஆண்டு காலத்திற்குச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் 1. வேளாண்காடு மேம்பாடு, 2. தாவர அரண் அமைத்தல், 3. மேச்சல் நில மேம்பாடு, 4. பயிர்கள் வளர்த்தல், 5. தாவர அரண்களுக்கு இடைப்பட்ட இடங்களில் தோட்டக்கலைப் பயிர் மற்றும் சிக்கனமான செலவின மற்றும் வருடாந்திர பலன்தரும் மரங்கள் வளர்த்தல், 6. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு போன்ற முக்கியமான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திட்ட தொடக்க நாளிலிருந்து 31-3-1999 முடிய ரூ.768.18 இலட்சம் செலவில் 5190 எக்டரில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி 2000 முடிய 732 எக்டர் நிலத்தில் ரூ.198.44 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.125.00 இலட்சம் செலவில் 250 எக்டர் பரப்பில் பணிகள் செயலாக்கப்பட உள்ளன.



## அத்தியாயம் 10

### மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

**அ. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோ∴பெட்)**

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோஃபெட்) மற்றும் அதன் சார்புடைய 211 வட்டார மற்றும் மாவட்ட அளவிலான சங்கங்களின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு :

1. புல்டோசர்கள், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள், நெல் நாற்று நடவு இயந்திரங்கள் போன்றவற்றை வாடகைக்கு அளித்தல்.

2. வேளாண் மக்களுக்கும் அரசு துறைகளுக்கும் மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களுக்கும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகளைச் சீர்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகளைச் செய்தல்.

3. வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக்கருவிகள் ஆகியவற்றைத் தயாரித்து வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்தல்.

4. இரசாயன உரம், இயற்கை உரம் போன்ற வேளாண் இடு பொருட்கள் விநியோகம் செய்தல்.

5. ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், இரும்புக் கதவுகள் தயாரித்து விநியோகம் செய்தல் போன்ற பிற அரசு வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்குதல்.

6. வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்.

**அ. அக்ரோ∴பெட்டின் வாடகைக்கு விடும் பணிகள்**

1. தரிசு நிலங்களை மேம்படுத்த 5 டிராக்டர்களையும் 10 புல்டோசர்களையும் வாடகைக்கு விடும் பணியை அக்ரோஃபெட் செய்து வருகிறது.

2. 4 ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டு பணியாற்றி வருகின்றது.

3. ஒரு ஆழ்துளையிடும் கருவியை விவசாயத்திற்காகவும் குடிநீர் வசதிக்காகவும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திட வாடகைக்கு விட்டு வருகின்றது.

4. 5 சாலை உருளைகளை ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் கிராமப்புற சாலைகள் அமைப்பதன் பொருட்டு வாடகைக்கு விட்டு வருகின்றது.

**ஆ. சார்புச் சங்கங்களின் வாடகைக்கு விடும் பணிகள்**

அக்ரோஃபெட் சார்பு மையங்கள் 10 டிராக்டர் டோசர்கள், 237 டிராக்டர்கள் மற்றும் டிரைலர்கள், 81 பவர் டில்லர்கள், ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் கருவி, 4 பாறை உடைக்கும் கருவிகள் மற்றும் 50 ஆயில் இன்ஜின் பம்பு செட்டுகளை விவசாயிகளுக்கு வாடகைக்குத் தந்து சேவை செய்து வருகின்றன.

**2. வேளாண் மக்களின் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகளைச் சீர்படுத்துதல் மற்றும் பராமரித்தல்**

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளைச் சீர்படுத்தவும் மற்றும் பராமரிப்பதற்கும் இணையத்தைச் சார்ந்த 118 சங்கங்களில் பட்டறை இயந்திரங்களான பற்ற வைக்கும் இயந்திரம், துளையிடும் இயந்திரம், கிரைண்டர்கள், கம்ப்ரசர்கள் ஆகிய வசதிகள் அமைக்கப் பெற்றுள்ளன. 12 மாவட்ட மையங்களிலும் வாகனங்களை விசைநீர் மூலம் சுத்தம் செய்யும் கருவி, ஹைட்ராலிக் ராம்ப், ஏர் கம்ப்ரசர்கள் முதலியன கொன்டு வேளாண் கருவிகளைப் பழுதுபார்க்கும் மற்றும் சீராக்கம் செய்யும் பணிகளையும் ஆற்றி வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் மாதனூர், கடலூர் மாவட்டத்தில் கடலூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் மல்லிப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மணமேல்குடி ஆகிய 4 இடங்களில் டீசல் விநியோக மையங்கள் அமைக்கப்பெற்று டீசல் விநியோகம் செய்து வருகின்றன.

**3. மேம்படுத்தப்பட்ட வேளாண் உபகரணங்கள் மற்றும் கைக்கருவிகள் தயாரித்தல்**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் வடிவமைக்கப்பட்ட வேளாண் கருவிகளை அக்ரோஃபெட் மற்றும் அதன் சார்பு மையங்களின் மூலம் உள்ளூர் தேவைக்கேற்ப தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வருகிறது.



**4. வேளாண் இடுபொருட்கள் விநியோகம் செய்தல்**

அக்ரோஃபெட் சார்பு மையங்களின் மூலம் இரசாயன உரங்கள், இயற்கை உரம், பூச்சிக் கொல்லி மருந்துகள் மற்றும் ஜிப்சம் போன்ற இடுபொருட்களை வேளாண் மக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

**5. அரசு சார்புத் திட்டங்கள்**

தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு ஆகியவைகளின் பல்வேறு திட்டங்களை அக்ரோஃபெட் அதன் 211 சார்பு மையங்களின் மூலம் நல்ல முறையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு செயலாக்கம் செய்து வருகின்றது:-

அ. மேம்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகம்

வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்களை இணையமும் அதன் சார்பு மையங்களும் தயாரித்து வழங்கிட அரசு அனுமதித்துள்ளது. அதன்படி மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளான தழை மிதிக்கும் கருவிகள், கடலை உடைக்கும் கருவிகள், சமன்படுத்தும் தகடுகள், சேறு கலக்கும் கருவிகள், ஒரு வழிக் கலப்பைகள், இருவழிக் கலப்பைகள் மற்றும் கரை அமைக்கும் கலப்பைகள் போன்றவற்றை அக்ரோஃபெட் சார்பு மையங்கள் தயாரித்து வருகின்றன. இந்த விவசாயக் கருவிகள் வேளாண் விரிவாக்க மையங்களுக்கு வழங்கப்பட்டு வேளாண் மக்களுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. பிப்ரவரி 2000 முடிய ரூ.211.28 இலட்சம் மதிப்பிற்கான 44,563 வேளாண் கருவிகள் விநியோகம் செய்துள்ளது.

ஆ. வறட்சி நிவாரணத் திட்டத்திலும், இதர திட்டங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

வறட்சி நிவாரணத் திட்டத்திலும் இதர திட்டங்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அளித்ததுபோல் இவ்விணையத்திற்கும் அரசால் ஒப்படைக்கப்பட்டன. 1999-2000 ஆம் ஆண்டில் ரூ. 90.00 இலட்சம் மதிப்பில் 321 ஆழ்துளைக் கிணறுகள் அக்ரோஃபெட்டின் மூலம் அமைக்கப்பட்டுள்ளன.

இ. இரும்புக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் தயாரித்து விநியோகம் செய்தல்

மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்திலும் இதர திட்டங்களிலும் ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஏனைய திட்டங்களின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகள் மற்றும் பள்ளிகளுக்கு ரூ.243.22 இலட்சம் மதிப்பிற்கான 26,403 இரும்புக் கதவுகள் மற்றும் ஜன்னல்களை அக்ரோஃபெட் தயாரித்து விநியோகித்துள்ளது.

ஈ. உழவர் சந்தை கட்டுமானப் பணிகள்

தமிழக அரசு இந்த இணையத்திற்கு உழவர் சந்தை கட்டுமானப் பணிகளை அமைக்க ஆணை பிறப்பித்தது. இவ்விணையத்திற்கு வழங்கப்பட்ட காலக் கெடுவிற்குள் 18 உழவர் சந்தைகள் செவ்வனே கட்டி முடிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. பிற இடங்களில் உழவர் சந்தை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உ. தமிழ்நாடு மின்சார வாரியம் இரும்பு கிரில் வேலைகள்

தமிழ்நாடு மின்சார வாரியம் இவ்விணையத்திற்கு இரும்பு கிரில் தயாரிக்கும் பணியை வழங்கியது. பெரும்பாலான மாவட்டங்களில் இரும்பு கிரில் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

ஊ.அக்ரோஃபெட்டின் கிடங்கு மற்றும் விற்பனை நிலையம்

அக்ரோஃபெட் கீழ்க்காணும் உபகரணங்களை, விழுப்புரம், திருவள்ளூர், திருச்சி மற்றும் திருநெல்வேலியில் உள்ள விற்பனை மையங்களின் மூலம் விற்பனை செய்து வருகிறது.

1. பல்வேறு அளவுகளில் இரும்பு பைப்புகள்.
2. பல்வேறு அளவுகளில் பி.வி.சி. பைப்புகள்.
3. மின் மோட்டார் பம்புசெட்டுகள் மற்றும் ஸ்டார்ட்டர் போன்ற உபகரணங்கள்.
4. கைத்தெளிப்பான்கள், விசைத் தெளிப்பான்கள்
5. இந்தியா மார்க்-2 கைப்பம்புகள்
6. வேளாண் கைக்கருவிகளான மண்வெட்டிகள், கடப்பாரைகள், கோடாரி முதலியன.
7. தார்ப்பாய்கள் முதலியன.



அக்ரோஃபெட்டின் நிதி செயலாக்கம்

1995-96 முதல் 1999-2000 (பிப்ரவரி 2000 முடிய) அக்ரோஃபெட்டின் நிதி செயலாக்கம் பின்வருமாறு :

| வரிசை எண் | ஆண்டு | செயலாக்கம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1995-96 | 1689.00 |
| 2. | 1996-97 | 1550.80 |
| 3. | 1997-98 | 2286.22 |
| 4. | 1998-99 | 2128.45 |
| 5. | 1999-2000(பிப்ரவரி 2000 முடிய) | 1145.08 |

ஆ. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்)

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.5.0 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.160.05 இலட்சமாகும். இதில் தேசிய பால்வள வாரியம் வழங்கிய ரூ.98.88 இலட்சங்களும், எண்ணெய் வித்து உற்பத்தியாளர் சங்கங்கள் வழங்கிய ரூ.61.17 இலட்சங்களும் அடங்கும். எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை (எண்ணெய் மற்றும் அதன் உபபொருட்கள்) ஆகியவற்றினை ஒருங்கிணைப்பதே இவ்விணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

கட்டுமான வசதிகள்

தற்சமயம் டான்காப்பில் எண்ணெய் வித்துக்களைப் பதப்படுத்தும் இரண்டு ஆலைகள் திருவண்ணாமலை மற்றும் விருத்தாச்சலம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. எண்ணெயைச் சிப்பமிடும் அமைப்பானது திருவண்ணாமலை, விருத்தாசலம் மற்றும் சென்னையில் கிண்டி ஆகிய மூன்று இடங்களில் அமைந்துள்ளன. இணையத்தில் எண்ணெய் வித்துக்களைப் பதப்படுத்தி, பாதுகாத்து மற்றும் எண்ணெயைச் சிப்பமிடுவதற்காக பின்வரும் கட்டுமான வசதிகள் உள்ளன.

[2000 ஏப்ரல் 6

| வ.எண் | விவரம் | அலகு | திருமலை | விருத்தாசலம் | கிண்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | மணிலா உடைத்தல் | நாளுக்கு/டன் | 150 | 150 | .. | 300 |
| 2. | எண்ணெய் பிழிதல் | " | 125 | 100 | .. | 225 |
| 3. | எண்ணெய் சுத்திகரித்தல் | " | 10 | .. | .. | 10 |
| 4. | பிண்ணாக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல் | " | 40 | 40 | .. | 80 |
| 5. | கிடங்கு வசதி | டன் | 7000 | 5000 | .. | 12000 |
| 6. | எண்ணெய் சேமிப்புக் | கலன் | 1000 | 1700 | 5020 | 7720 |
| 7. | சிப்பமிடுதல் | நாளுக்கு/டன் | 30 | 30 | 45 | 105 |

மேலும், டான்காப் நெய்வேலியில் 120.4 எக்டர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ள வட்டார உழவியல் மையமானது தமிழ்நாடு மாநிலத்தின் மொத்த மணிலா வல்லுநர் விதை உற்பத்தியில் 50 விழுக்காடு மணிலா வல்லுநர் விதையினை உற்பத்தி செய்கிறது. இதே வளாகத்தினுள் ஒரு பயிற்சி மையமும் அமைந்துள்ளது. இப்பயிற்சி மையத்தின் முக்கிய நோக்கம் விரிவாக்கப் பணியாளர்களுக்கும் முன்னோடி விவசாயிகளுக்கும் பயிற்சி கொடுப்பதேயாகும். 1999-2000 ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையம், பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஒரு சிறப்புப் பயிற்சி முகாமை ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் நிதி உதவியோடு மிகவும் சிறப்பாக நடத்தியது. மேலும் டான்காப், செப்டம்பர் 1997-ல் நான்கு விதை பதப்படுத்தும் மையங்களை நெய்வேலி, விருத்தாசலம், திருவண்ணாமலை மற்றும் செய்யார் ஆகிய இடங்களில் கிடங்கு வசதிகளுடன் நிறுவியுள்ளது.

**முக்கியப் பணிகள்**

1992-93-ல் இணையத்தின் கொள்முதல் மற்றும் எண்ணெய் உற்பத்தி, இலாபகரமற்ற வியாபார சூழ்நிலையின் காரணமாக, தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1993-94 ஆம் ஆண்டிலிருந்து பாமாலினை வெளிச் சந்தையில் வாங்கி சிப்பமிட்டு மீண்டும் கூட்டுறவுத் துறையின் விற்பனை அங்காடிகளுக்கு விற்பனை செய்வதைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. தமிழக அரசு இந்த இணையத்தின் புனரமைப்புக்காக வழி வகைகள் நிதியாக ரூ.1 கோடியும், ஆதார நிதியாக ரூ.80 இலட்சமும் நிதி உதவி அளித்து, இவ்விணையத்தின் வளர்ச்சிக்கு மேலும் உதவி செய்தது. இது தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மதிய உணவுத்



2000 ஏப்ரல் 6]

திட்டத்திற்காகத் தேவைப்படும் சமையல் எண்ணெய் அனைத்தையும் டான்காப் விற்பனை செய்ய வழி வகை செய்தது. விருத்தாச்சலத்தில் அமைந்துள்ள எண்ணெய் பிழியும் ஆலை தேசிய பால்வள வாரியத்தின் நிதியுதவியுடன் புதுப்பிக்கப்பட்ட பின்பு டான்காப், கரீப் 1998-99 மற்றும் ரபி 1999 பருவத்திலும் மணிலா எண்ணெய் தொடர்ந்து உற்பத்தி செய்தது. இவ்வகையில் ஒன்றரை வருட குறுகியகால கட்டத்தில் இந்த இணையமானது மணிலா எண்ணெயை மீண்டும் நுகர்வோர் விற்பனைக்காக அறிமுகம் செய்து வெற்றி கண்டது.

மணிலா எண்ணெயிலும், சூரியகாந்தி எண்ணெயிலும் புதிய வணிகப் பெயர்களில் ஒரு லிட்டர் சிப்பத்திலும், 15 கிலோ டின்களிலும் நுகர்வோர் சந்தைக்கு அறிமுகம் செய்தது. வடித்தெடுக்கப்பட்ட மணிலா எண்ணெயினையும், சுத்திகரிக்கப்பட்ட மணிலா எண்ணெயினையும் "சுவை" என்ற வணிகப் பெயரில் மீண்டும் வெளியிடப்பட்டது. சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் "சந்தோஷ்" என்ற வணிகப் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டது. பாமாலினைத் தவிர டான்காப்பின் எண்ணெய் வகைகள் அனைத்துமே அக்மார்க் முத்திரையுடன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த இணையமானது சமையல் எண்ணெய் வகைகளை விரிவாக்கும் நோக்கத்துடன் 1999-2000 ஆம் ஆண்டின் போது அக்மார்க் தரமுடைய நல்லெண்ணெயை "சந்தோஷ்" என்ற விற்பனைப் பெயருடன் அறிமுகம் செய்தது.

டான்காப் தன் வசமிருக்கும் அனைத்துக் கட்டுமான வசதிகளின் உபயோகத் திறனை அதிகப்படுத்தி வருவாய் ஈட்டும் நோக்கத்துடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மதிய உணவுத் திட்டத்திற்கும், பிற வாடிக்கையாளர்களின் பொருட்டும் சிப்பமிடும் பணியை மேற்கொண்டுள்ளது. எண்ணெய்க் கிடங்குகள், மணிலா விதைக் கிடங்குகள் ஆகியவைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

**விற்பனை**

1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 வரை நுகர்வோர் விற்பனை, மொத்த விற்பனை, எண்ணெய் வித்து விதைகள் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் விற்பனை, வாடகை ஆகியவற்றின் மூலமாக ஏற்பட்ட மொத்த விற்னை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | விவரம் | சாதனை அளவு (மெ.டன்) | சாதனை நிதி (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அ. | விற்பனை | | |
| 1. | சமையல் எண்ணெய் | 3849.64 | 1132.35 |
| 2. | பிண்ணாக்கு | 813.27 | 69.02 |
| 3. | விதைகள் மற்றும் இதர இடுபொருள்கள் (எண்ணெய்வித்து பெருக்குத் திட்டம் உட்பட) | .. | 550.64 |
| ஆ | இதர வருமானம் | | 102.89 |
| | மொத்தம் | | 1854.90 |

## எண்ணெய் வித்து உற்பத்திப் பெருக்குத் திட்டம்

மத்திய அரசின் எண்ணெய் வித்து பெருக்குத் திட்டத்தின் ஒரு பகுதியை டான்காப் தன் திட்டப் பகுதிகளில் அமல்படுத்தி வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் பல்வேறு இடுபொருட்களைத் திட்டப் பகுதிக்கும் (சங்கங்கள் மூலமாக) மற்றும் இத்திட்டம் செயல்படுத்தப்படாத பிற மாவட்டங்களுக்கும் வழங்குவதற்காக ரூ.296.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக இடுபொருட்கள் விநியோகம் (ஜிப்சம், விதை நேர்த்தி மருந்து, பயிர் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் விதைகள், வல்லுநர் விதை உட்பட) செய்யப்பட்டுள்ளன. பிப்ரவரி 2000 முடிய சாதனை, 2000-2001 ஆம் ஆண்டுக்கான குறியீடு குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

(நிதி ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பொருள் | இலக்கு 1999-2000 அளவு | சாதனை 2000 வரை நிதி | பிப்ரவரி அளவு | பிப்ரவரி நிதி | 2000-2001 திட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| அ. | வேளாண் துறைக்கு இடுபொருள் விநியோகம் | | | | | |
| 1. | ஜிப்சம் (மெ.டன்) | 15880 | 158.80 | 15832 | 158.32 | 200.00 |
| 2. | வேர்ப்புழு கட்டுப்படுத்தல் (எக்டர்) | | | | | |
| 3. | விதை நேர்த்தி மருந்து (எக்டர் இலட்சத்தில்) | 1.264 | 22.75 | 1.223 | 22.01 | 15.00<br>30.00 |
| 4. | சிறுதளை (எண்கள்) | | | | | |
| 5. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு | | | | | 50.00<br>25.00 |



| வ. எண் | பொருள் | இலக்கு 1999-2000 அளவு | இலக்கு 1999-2000 நிதி | சாதனை பிப்ரவரி 2000 வரை அளவு | சாதனை பிப்ரவரி 2000 வரை நிதி | 2000-2001 திட்டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 6. | இனக்கவர்ச்சிப் பொறி (எண்கள்) | | | | | 10.00 |
| 7. | பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் (எண்கள்) | | | | | 5.00 |
| 8. | நுண்ணுயிர் கலவை (ரைசோபிய கரைசல்) | | | | | 25.00 |
| 9. | பண்ணைக் கருவிகள் (எண்கள்) | | | | | 10.00 |
| | கூடுதல் | | 181.55 | | 180.33 | 370.00 |
| ஆ. | டான்காப்பின் விவசாயிகளின் இடுபொருள் விநியோகம்-விதை பொருட்கள் (குவி.) | | | | | |
| 1. | வல்லுநர் விதை உற்பத்தி | 105 | 1.50 | 151.3 | 2.27 | 19.00 |
| 2. | ஆதார விதை உற்பத்தி | 3600 | 7.20 | 1154.2 | 2.31 | 5.00 |
| 3. | விதை கிராமம்(குவி) | 5000 | 10.00 | 27.6 | 0.06 | 2.00 |
| 4. | சான்றுவிதை விநியோகம் (குவி) | 8917 | 26.75 | 36.1 | 1.40 | 10.00 |
| 5. | உண்மை நிலை விதை விநியோகம் | | | 315.7 | 0.79 | 5.00 |
| 6. | சிறுதளை | | | 22080 | 24.98 | 30.00 |
| இ. | விதை சாரா இனங்கள் | | | | | |
| 1. | பெருவிளக்கப் பண்ணை (எண்கள்) | 485 | 8.00 | 388 | 7.23 | 10.00 |
| 2. | விதை நேர்த்தி மருந்து (எக்டர் இலட்சத்தில்) | 0.125 | 2.25 | 0.138 | 2.50 | 3.00 |
| 3. | வேர்ப்புழு கட்டுப்படுத்துதல் (எக்டரில்) | 1300 | 6.50 | 1212 | 6.06 | 7.50 |
| 4. | ஜிப்சம் (மெ.டன்) | 4000 | 40.00 | 4101 | 41.01 | 80.00 |
| 5. | விவசாயிகளின் பயிற்சி(எண்கள்) | 5000 | 10.00 | 3970 | 7.94 | 15.00 |
| 6. | பயிர்ப் பாதுகாப்புக் கருவி (எண்கள்) | 300 | 3.30 | 405 | 2.30 | 5.00 |
| 7. | பணியாளர் எதிர்பாராச் செலவினம் | .. | .. | .. | .. | 15.00 |
| | கூடுதல் | .. | 115.20 | .. | 98.85 | 206.50 |
| | **மொத்த கூடுதல்** | .. | **296.75** | .. | **279.18** | **576.50** |

## நிதிநிலை அறிக்கை

1999-2000 ஆம் ஆண்டில் சமையல் எண்ணெய்களின் விலை 40 விழுக்காடு வீழ்ச்சி அடைந்த போதிலும் டான்காப் கடந்த ஆண்டைக் காட்டிலும் அதிகமாக விற்பனை செய்துள்ளது. இந்த வீழ்ச்சி இணையத்தின் மொத்த வருமானத்தை பாதித்த போதிலும் நட்டம்

வெகுவாகக் குறைந்துள்ளது. இணையமானது ஏப்ரல் 1999 - பிப்ரவரி 2000 முடிய ரூ.1916.61 இலட்சம் தான் (இருப்பு சரக்கு உட்பட) ஈட்ட முடிந்தது. டான்காப் கடந்த ஆண்டு சாதனை ரூ.2077.06 இலட்சம். மேலும் 1999-2000 ஆம் ஆண்டுக்கு டான்காப் மொத்த வியாபாரம் ரூ. 22 கோடி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டின் மொத்த வியாபாரம் ரூ.23.40 கோடியாகும். ஆனால் நடப்பு ஆண்டில் இந்த இணையமானது நட்டத்தை ரூ.33.36 இலட்சத்திற்குக் குறைக்க முடிந்தது. கடந்த ஆண்டின் நட்டம் ரூ. 41.33 இலட்சம் ஆகும். இந்த இணையம் 2000-2001 ஆம் ஆண்டில் நட்டத்தை முழுமையாக தவிர்க்க முடியும் என எதிர்பார்க்கிறது.

**2000-2001-க்கான திட்ட நடவடிக்கைகள்:**

2000-2001-ல் டான்காப் தற்போது கடைபிடித்து வரும் அனைத்து வியாபார நடவடிக்கைகளையும் தொடர்ந்து செய்யும் மற்றும் புதிய சமையல் எண்ணெய்கள் விற்பனையையும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. மணிலா கொள்முதல் மற்றும் எண்ணெய் உற்பத்தி மார்ச் 2000-ல் (ரபி பருவத்தில்) தொடங்கப்பட உள்ளது. 2000-2001-ல் டான்காப்பின் விற்பனைத் திட்டத்தின்படி மொத்த வருமானமாக ரூ.30 கோடி ஈட்ட தேவையான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | விவரம் | அளவு மெ.டன் | மதிப்பு ரூ.இலட்சம் |
|---|---|---|---|
| 1. | சமையல் எண்ணெய், பிண்ணாக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மணிலா பருப்பு | 6500 | 1914 |
| 2. | எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் வேளாண் இடுபொருட்கள் விற்பனை | | 577 |
| 3. | எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் வராத திட்டங்கள்-வேளாண் இடுபொருள்கள் விற்பனை | | 309 |
| 4. | இதர வருமானம் . | | 200 |
| | மொத்தம் | | 3000 |

மேற்கண்ட விற்பனை அளவின் அடிப்படையில் இந்த இணையமானது 2000-2001 ஆம் ஆண்டில் மொத்த லாபமாக ரூ.40 இலட்சம் முதல் ரூ.50 இலட்சம் வரை ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.



## இ. தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம்
### (டி.என்.ஏ.ஐ.)

1. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் கீழ்வருமாறு :

(அ) வேளாண்மை வளர்ச்சி பெறச் செய்யவும், நவீனமயமாக்க உதவும் பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை வளர்ச்சி அடையச் செய்தல், நிறுவுதல், தானே நிறுவி நடத்துதல்.

(ஆ) வேளாண்மை உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்துவதற்கான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்.

(இ) மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளை விரைவில் வளர்ச்சி பெற ஊக்குவித்தல்.

2. இந்நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இந்நிறுவனம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:—

(அ) சூரியகாந்தி எண்ணெய், பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் மீன்பிடி வலைகள் ஆகிய பொருட்களை உற்பத்தி செய்து பெருமளவில் விற்பனை செய்வது.

(ஆ) உரங்கள், விவசாயக் கருவிகள் மற்றும் உபகரணங்களை பெருமளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்வது.

**உற்பத்தி நடவடிக்கைகள்**

**3.1. பூச்சிக்கொல்லி மருந்து ஆலை, அம்பத்தூர்**

அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ள பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்பு ஆலை கீழ்க்கண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரித்து வருகிறது :—

திரவ மருந்து

| | | | |
|---|---|---|---|
| அ. | பாஸ்போமிடான் | 86% | எஸ்.எல் |
| ஆ. | எண்டோசல்பான் | 35% | இ.சி. |
| இ. | மோனோ குரோட்டாபாஸ் | 36% | எஸ்.எல். |
| ஈ. | குயினால்பாஸ் | 25% | இ.சி. |
| உ. | சைபர்மெத்ரின் | 10% | இ.சி. |
| ஊ. | பென்வலரேட் | 20% | இ.சி. |
| எ. | குளோரோபைரிபாஸ் | 20% | இ.சி. |

[2000 ஏப்ரல் 6

| | | | |
|---|---|---|---|
| ஏ. | அஸாடிரக்டின்(வேப்பெண்ணை) | 0.03% | இ.சி. |
| ஐ. | மாலத்தியான் | 50% | இ.சி. |
| ஒ. | புடோகுளோர் | 50% | இ.சி. |

இந்த ஆலையின் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனையின் அளவும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (பிப்ரவரி 2000 வரை) | 2000-2001 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு (லிட்டரில்) | 97404 | 148290 | 197800 | 215582 | 200655 | 240000 |
| விற்பனை அளவு (லிட்டரில்) | 96941 | 152925 | 196948 | 215955 | 209510 | 240000 |
| விற்பனைத்தொகை (ரூ. இலட்சத்தில்) | 230.41 | 334.31 | 382.44 | 395.53 | 349.03 | 458.30 |

### 3.2. மீன்பிடி வலை ஆலை, கிண்டி

இந்த ஆலையின் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்களும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (பிப்ரவரி 2000 வரை) | 2000-2001 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி அளவு (டன்களில்) | 53 | 21 | 22 | 31 | 33 | 50 |
| விற்பனை அளவு (டன்களில்) | 58 | 25 | 26 | 32 | 26 | 50 |
| விற்பனைத்தொகை (ரூ. இலட்சத்தில்) | 104.15 | 43.02 | 46.12 | 50.73 | 37.38 | 80.70 |



2000 ஏப்ரல் 6]

### 3.3. சூரியகாந்தி எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை, போச்சம்பள்ளி

இக்கழகம் தர்மபுரியில் உள்ள போச்சம்பள்ளி என்ற இடத்தில் ஒரு முழுமையான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியுள்ளது. இந்த ஆலையிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் "சனோலா" என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆலையிலிருந்து கிடைக்கும் துணை உற்பத்தி பொருளாகிய எண்ணெய் பிழிந்து எடுக்கப்பட்ட பிண்ணாக்கு, கோழி மற்றும் கால்நடை உணவுப் பொருள்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சூரியகாந்தி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க தாய் நிறுவனம் சூரியகாந்தி விதையை முறையாக விவசாயிகளிடமிருந்து நேரிடையாக நல்ல விலை கொடுத்து கொள்முதல் செய்து வருகிறது.

சனோலா எண்ணெய் வணிகத்தையும் விற்பனையையும் மேம்படுத்தும் பொருட்டு, புதுடில்லியிலுள்ள சூப்பர் பஜார் கூட்டுறவு விற்பனை நிலையத்துடன் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பயனால் செப்டம்பர் 1999-ல் சனோலா எண்ணெய் புதுடெல்லியில் அறிமுகப்படுத்தப்பட்டு மாதம் சுமார் 100 டன் வரை விற்பனை செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லியிலுள்ள "இன்ஸ்டிடியூட் ஆப் எகனாமிக் ஸ்டடீஸ்", அரசுத் துறையின் தரமான தயாரிப்பான சனோலாவின் தரம் மிகவும் சிறப்பாக இருப்பதை அங்கீகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு "உத்யோக் ரத்தன்" என்னும் விருதினை வழங்கியுள்ளது. மேலும் இக்கழகத்திற்குத் தரக்கட்டுப்பாட்டுடன்கூடிய தரமான எண்ணெயை அறிமுகப்படுத்தியதற்காக நிர்வாகத்தினைப் பாராட்டும் பொருட்டு "எக்சலன்ஸ் அவார்ட்" என்னும் விருதினையும் வழங்கியுள்ளது. :

இந்த ஆலையின் கடந்த ஐந்து ஆண்டு கால உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்களும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

[2000 ஏப்ரல் 6

| | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 | 1999-2000 (பிப்ரவரி 2000 வரை) | 2000-2001 |
|---|---|---|---|---|---|---|
| உறபத்தி அளவு (டன்களில்) பிழிதல் | 8433 | 5731 | 7450 | 6680 | 4344 | 7750 |
| சுத்திகரித்தல் | 2785 | 3033 | 3081 | 3016 | 2165 | 4500 |
| கரைத்து எண்ணெய் எடுத்தல் | 4918 | 4880 | 4628 | 4059 | 2457 | 4650 |
| விற்பனை அளவு (டன்களில்) | | | | | | |
| எண்ணெய் | 3035 | 3204 | 3387 | 2955 | 1947 | 4500 |
| இதர எண்ணெய் துணைப் பொருட்கள் | 4984 | 2377 | 4101 | 4708 | 2468 | 4315 |
| விற்பனைத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 1653.00 | 1590.71 | 1767.08 | 1932.75 | 1104.73 | 2501.05 |

சனோலா எண்ணெய் விநியோகம் சம்பந்தமாக மஸ்கட் மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளிலிருந்து வியாபார சம்பந்தமான தகவல்களை இக்கழகம் சமீபத்தில் பெற்றிருக்கிறது. எனவே, இக்கழகம் எச்.எ.சி.சி.பி. போன்ற பன்னாட்டு தரச்சான்றினை சனோலா எண்ணெய்க்கும் பெற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்மூலம் உள்நாட்டு சந்தையில் நிலவும் போட்டிகளுக்கிடையில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் முயன்று வருகிறது.

**3.4. கூட்டு முயற்சியில் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம், செயல் விளக்கப் பனை எண்ணெய் தயாரிப்பு ஆலை ஒன்று நிறுவுவது சம்பந்தமாக**

ரூபாய் 400.00 இலட்சத்தில் கூட்டு வர்த்தகத்தில் பனை எண்ணெய் தயாரிப்பு செயல் விளக்க ஆலை ஒன்றினைக் கீழ்க்கண்ட தொழில் முனைவோர்களுடன் தாய் நிறுவனம் சேர்ந்து தமிழகத்தில் நிறுவிட, அரசு ஆணையிட்டுள்ளது :

(1) தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகம்.

(2) காவேரி பாம் ஆயில் லிமிடெட்



2000 ஏப்ரல் 6]

(3) எஸ். அண்டு எஸ். இண்டஸ்ட்ரீஸ் அண்டு எண்டர்பிரைசஸ் லிமிடெட்

(4) கே.கே. ஆர். பாம் ஆயில் (இ) லிமிடெட்

இப்பனை எண்ணெய் செயல் விளக்க ஆலையின் ஒருமணி நேர தயாரிப்புத் திறன் 2.5 டன்கள் ஆகும். மேற்கண்ட மூன்று தனியார் தொழில் முனைவோர்களும் எண்ணெய் பனை பழக்குலைகளை எண்ணெய் பிழிவதற்காக இந்த ஆலைக்கு வழங்குவார்கள். மத்திய அரசு ரூ.240.00 இலட்சத்தினை உதவி மானியமாக அளிக்கும். மீதமுள்ள ரூ.160.00 இலட்சமும் மேற்கண்ட நான்கு செயல்படுத்தும் நிறுவனங்களால் சமமாக முதலீடு செய்யப்படும். இத்திட்டத்தின் மொத்த செயல்பாடுகளும் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும். தமிழ்நாடு அரசின் வேளாண்மை இயக்குநர் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகத்துடனும் மூன்று தொழில் முனைவோர்களுடனும் கலந்து பேசி மேற்படி திட்ட ஆலை அமைவதற்கான இடத்தினைத் தேர்வு செய்வார்.

**3.5. வர்த்தக நடவடிக்கைகள்**

**(அ) விவசாயக் கருவிகள்**

இக்கழகம் பிரசித்தி பெற்ற அனைத்து வகை உற்பத்தியாளர்களின் டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்களை விற்பனை செய்யும் உரிமை பெற்றுள்ளது. இப்பண்ணை இயந்திரங்கள் இதற்குப் பொருத்தமான கேஜ்வீல், கல்டிவேட்டர், தரமான உரிதி பாகங்கள், டயர் டியூப் மற்றும் பேட்டரிகளுடன் அனைத்து கிளை மையங்கள் மூலமும் விற்பனை செய்து வருகிறது. இக்கழகத்திற்குத் தமிழகம் முழுவதும் 9 பகுதி மையங்களும், 16 விற்பனை கூடங்களும் உள்ளன.

இந்த வணிக நடவடிக்கைகளின் கடந்த ஐந்து ஆண்டு கால விற்பனை அளவும் 2000-2001 ஆம் ஆண்டுக்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

[2000 ஏப்ரல் 6

| | 95-96 | 96-97 | 97-98 | 98-99 | 99-2000 (பிப்ரவரி 2000 வரை) | 2000-2001 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை அளவு டிராக்டர், பவர் டில்லர் (எண்களில்) | 1203 | 952 | 1664 | 1508 | 1527 | 1735 |
| மதிப்பு (ரூ இலட்சத்தில்) | 1287.27 | 1091.84 | 1930.19 | 1692.34 | 1472.01 | 2045.75 |
| உதிரிபாகங்கள் (ரூ. இலட்சத்தில்) | 1144.18 | 729.14 | 673.07 | 826.92 | 819.26 | 939.20 |

**(ஆ) விவசாயம், இயந்திரமயமாக்குவதை ஊக்குவித்து விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரக் கலப்பைகளையும், உபகரணங்களையும் வழங்கும் திட்டம் (மத்திய அரசின் ஆதரவு பெற்றது)**

**1999-2000 :**

1. தமிழக அரசு பவர் டில்லர் ஒன்றுக்கு ரூ. 30000 மானியத் தொகை அடிப்படையில் 1100 பவர் டில்லர்கள் விநியோகிக்க ரூபாய் 330.00 இலட்சம் வழங்கியுள்ளது. இதில் இதுவரை 540 பவர் டில்லர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1999-2000 நிதியாண்டு முடிவிற்குள் மீதமுள்ள பவர் டில்லர்கள் விநியோகிக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

2. 30 குதிரை சக்தி வரை திறன் கொண்ட 378 சிறு டிராக்டர்கள் ஒரு டிராக்டருக்கு ரூ.30000 மானியத் தொகை அடிப்படையில் வழங்க, தமிழக அரசு ரூ. 113.40 இலட்சம் வழங்கியுள்ளது. இதில் இதுவரை 30 சிறு டிராக்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டின் இறுதிக்குள் அனைத்து டிராக்டர்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்படும்.

3. ஒரு டிராக்டரின் இணை இயந்திரக் கருவிக்கு ரூ. 10,000 மானியத் தொகை அடிப்படையில் 300 கருவிகள் விநியோகிக்க தமிழக அரசு ரூபாய் 30.00 இலட்சம் வழங்கியது. இதுவரை 3 இயந்திரக் கருவிகள் மட்டும் விநியோகிக்கப்பட்டுள்ளன. வேளாண் இணை இயக்குநர்கள் இத்திட்டத்திற்கான பயனாளிகளை இனங்கண்டவுடன் இத்திட்டம் 1999-2000 நிதியாண்டின் இறுதிக்குள் நிறைவேற்றப்படும்.



2000 ஏப்ரல் 6]

**4. உரங்கள் :**

அநேக தலைசிறந்த உர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உரங்களைப் பெருமளவில் இக்கழகம் விற்பனை செய்து வருகிறது.

இப்பிரிவின் கடந்த ஐந்து ஆண்டுகால விற்பனை அளவும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | 95-96 | 96-97 | 97-98 | 98-99 | 99-2000 (பிப்ரவரி 2000 வரை) | 2000-2001 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை அளவு (டன்களில்) | 5065 | 8182 | 9112 | 16269 | 6187 | 20000 |
| விற்பனை தொகை (ரூ. இலட்சத்தில்) | 308.40 | 326.99 | 384.49 | 712.28 | 273.84 | 920.43 |

மேலும் இக்கழகம் இந்த ஆண்டில் உயிரின பூச்சிக்கொல்லி மருந்துகளின் உற்பத்தியைத் தொடங்கி, பிப்ரவரி 2000 முடிய ரூ. 0.68 இலட்சம் மதிப்புள்ள 1099 கிலோ டிரைக்கோ டெர்மா விருடி என்னும் உயிரின பூச்சிக்கொல்லி மருந்தை விற்பனை செய்துள்ளது.

**5. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் :**

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு வேளாண்மை தொழில் வளர்ச்சிக் கழகத்தை மாநில அளவில், மாநில அளவிலான பதப்படுத்தப்பட்ட உணவு வகை தொழில் வளாகத்தை மேம்படுத்துவதற்கான செயல்முறை திட்டங்களை எடுத்துரைத்து, ஊக்குவிக்கும் நிறுவனமாக தேர்ந்தெடுத்துள்ளது.

மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான அமைச்சகம் மற்றும் அபீடா நிறுவனம் வழங்கும் பல்வேறு மானிய உதவித் தொகையை தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு கிடைக்கச் செய்ய இக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இது சம்பந்தமாக இக்கழகத்தின் முக்கிய பணிகள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன :—

(1) தொழில் வளர்ச்சிக்கு முறையான திட்டமிடுதல்

(2) எல்லாவிதமான விவரங்களும், விபரக்குறிப்புகளும் தொழில் முனைவோர்களுக்கு ஒரே இடத்தில் கிடைப்பதற்கு வசதி செய்து கொடுத்தல்.

(3) தொழில் முனைவோரின் திட்டங்களுக்கு சரி ஒப்புரவு பங்கு தொகை முதலீடு செய்து நிதியுதவி வழங்குதல்.

(4) தனிப்பட்ட தொழிற்பேட்டைகளை நிறுவி, மேம்படுத்தி அதன்பின்னர் தொழில் முனைவோர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

(5) நவீன தொழில் நுட்பங்களைப் பதப்படுத்துவோர் விழிப்புணர்ச்சியுடன் அறிவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் தேவையான வழிமுறைகளை ஏற்படுத்துதல்.

(6) தொழில் முனைவோர்களுக்கு அத்தியாவசியமான பயிற்சி திட்டங்களை அளித்தல்.

(7) திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் வளர்ச்சிக்கும் ஆவன செய்தல்.

(8) விரைவில் முன்னேறக்கூடிய பிரிவுகளுக்கு இடையில் ஏற்படும் இடையூறுகளை அரசிடம் எடுத்துக் கூறி நீக்குதல்.

**6. தமிழ்நாடு வேளாண் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கும் ஊக்கம்/வசதிகள்**

(1) உணவு/விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளை இணைப்பிரிவின்கீழ் தொடங்குவதற்கு 11 விழுக்காடு சரி ஒப்புரவு பங்குத்தொகை முதலீடு செய்ய கலந்துகொள்ளுதல்.

(2) மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் அமைச்சகத்தின் கடன்/மானியம் போன்றவற்றை கிடைக்கப்பெற தொழில் முனைவோர்களின் திட்டங்களைப் பரிந்துரை செய்தல்.

1999-2000 ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்களின்கீழ், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு நிதி உதவி வழங்கியுள்ளது :—



| தொழில் முனைவோரின் பெயர் | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை |
|---|---|
| 1. தர்மபுரி மாவட்டம், காளிப்பேட்டையில் மெஸர்ஸ் நெக்டர் பையோ-டெக் நிறுவனத்தில் வேம்பை அடிபடையாகக் கொண்டு பூச்சிக்கொல்லி மருந்து தயாரிக்கும் திட்டத்தில் சரி ஒப்புரவு பங்குத்தொகை முதலீடு செய்தல். | ரூ. 22.00 இலட்சம் |
| 2. போச்சம்பள்ளியிலுள்ள தாய் நிறுவனத்தின் எண்ணெய் வளாகத்திற்கு எண்ணெய் பிழிந்தெடுக்கும் பிரிவின் கொள்திறனை மேம்படுத்துவதற்காக மேலும் எண்ணெய் பிழியும் இயந்திரம், துணைக் கருவிகள் மற்றும் ஜெனரேட்டர் வாங்குதல். | ரூ. 25.00 இலட்சம் |

மேலும், மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகம், பயிற்சி மையங்களை பல்வேறு மாவட்டங்களில் நிறுவுவதற்காக மானியத் தொகையை வழங்க ஒப்பளித்துள்ளது. ஊரக பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் வகையில், ஊரகத் தொழில் முனைவோருடன் சேர்ந்து தகுந்த மாதிரியான தொழில் நுட்பங்களை உபயோகப்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்வது மிகவும் அவசியமாகும். இத்திட்டம் தொழில் முனைவோர்களை மேம்படுத்துவதிலும் தொழில் நுட்பங்களை உபயோகப்படுத்தி, ஊரக விவசாய மூலப் பொருட்களைக் கொண்டு, பதப்படுத்திய உணவு பொருட்களைத் தயாரிப்பதிலும், தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் அவர்களாகவே ஒரு சிறிய தொழிற்பிரிவை மேலாண் செய்வதற்கும் உதவியாக இருக்கும். இத்திட்டம் ஊரக தொழில்முனைவோர்களுக்கு தொழில்நுட்ப வகையில், உற்பத்தி, விற்பனை, தரக்கட்டுப்பாடு, வரவு-செலவுத் திட்டம் போன்றவற்றில் பயிற்சி அளித்து அவர்களுக்குத் தாமாகவே இந்த மாதிரியான திட்டங்களைத் தீட்டி நடத்துவதற்கான தன்னம்பிக்கை கொடுக்கிறது. இந்தப் பிரிவுகள் ஊரக மக்களுக்குத் தாங்கள் உற்பத்தி செய்யும் மூலப்பொருட்களைப் பதப்படுத்துவதற்கான கட்டணத்தைக் கொடுத்தும், பதப்படுத்திக்கொள்ளும் வசதியையும் செய்து தருகிறது.

இதுவரை 26 உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களுக்கு மத்திய அரசு உதவி மானியத் தொகை வழங்கியுள்ளது. மேலும் 16 உணவு பதப்படுத்தும் பயிற்சி மையங்களின் திட்டங்கள், மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசின் மானியத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது.

அபீடாவின் நடைமுறை அலுவலகம், சென்னையில் இக்கழகத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ளது.

அபீடா நிறுவனம் தமிழ்நாட்டில் தங்களுடைய நடைமுறை அலுவலகம் ஒன்றை தாய் நிறுவனத்தில் அமைத்துள்ளது. அதன்மூலம் விவசாய உற்பத்தி பொருட்களின் சமீபத்திய நிலைமை, உலக அளவிலான வழங்குதல் மற்றும் தேவை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உற்பத்தி பொருட்களை வழங்குவதற்கான வழிமுறைகள் போன்ற விவரங்களை அளிக்கும். சென்னையில் இந்த நடைமுறை அலுவலகம் திறந்ததினால் தொழில் முனைவோர்கள், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் பெங்களூருக்கோ ஐதராபாத்துக்கோ செல்லாமல் ஏற்றுமதிக்கான தற்போதைய விவரங்கள் மற்றும் எந்தெந்த நாடுகளில் விற்பனை செய்யலாம் என்ற விவரங்களைப் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டிலுள்ள தொழில்முனைவோர்களும், தொழிலை மேம்படுத்துவோர், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள் தங்களின் உற்பத்தி பொருட்களை உலகச் சந்தைக்கு ஏற்றுமதி செய்ய இந்தப் புதிதாக திறக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**விற்பனை அளவு**

1999-2000 ஆண்டில் பிப்ரவரி 2000 முடிய இக்கழகத்தின் விற்பனை ரூபாய் 40.00 கோடியாகும். 2000-2001 ஆம் ஆண்டின் மொத்த விற்பனை ரூபாய் 70.00 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஈ. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனம் லிமிடெட் (டான்ஹோப்)

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நிறுவனத்தின் (டான்ஹோப்)தலையாய நோக்கம், தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர்களின் முழு ஈடுபாட்டுடன் வலிமையுடைய கூட்டுறவு தத்துவத்தின் அடிப்படையில் அவர்களின் உற்பத்தி பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கு வழிவகுத்தலாகும். இக்குறிக்கோளினை அடைந்திட அறுவடைக்குப்பின் பொருட்களைக் கையாள்வதற்குத் தேவையான உள்ளமைப்பு வசதிகளைப் பெற்று அடித்தளம் அமைத்துக் கொடுப்பதே முக்கியமானதாகும். இந்த நோக்கத்தின் அடிப்படையில் "தமிழ்நாட்டில்



ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்" ரூ.40.52 கோடி செலவில் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்ட செயல்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.10.23 கோடியில், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் 1998-99 முதல் 2000-2001 முடிய 3 ஆண்டு காலத்தில் சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் இத்திட்டத்தின்கீழ் கொள்முதல் மையங்கள், சில்லறை விற்பனை அங்காடிகள், பலவகைப் பழரச தயாரிப்பு நிலையங்கள், வாழைப்பழம் பழுக்க வைக்கும் நிலையம், பணியாளர்கள் நியமனம், போக்குவரத்து வாகனங்கள் வாங்குதல், கணிப் பொறிகள் வாங்குதல் போன்றவைகளின் பொருட்டு ரூ.4.70 கோடி செலவினத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அரசு பங்குத் தொகையாக ரூ.188 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தைச் செயற்படுத்தும் வகையில் சென்னையில் படப்பை, சேலம் மாவட்டத்தில் அயோத்தியாப்பட்டினம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் கொள்முதல் மையங்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு படப்பையிலும், ஒட்டன்சத்திரத்திலும் கொள்முதல் மைய கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய மூன்று மாவட்டங்களில் 75 சில்லறை விற்பனை அங்காடிகள் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 13 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை எழிலக வளாகத்தில் ஒரு நுகர்வோர் விற்பனை அங்காடி அக்டோபர் 1999-ல் தொடங்கப்பட்டு பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. மேலும் மற்ற புதிய விற்பனை நிலையங்களை விரைவில் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் இரண்டாம் கட்டமாக திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

டான்ஹோப்பில் தற்போது 3545 அங்கத்தினர்கள் உள்ளனர். அவர்களால் செலுத்தப்பட்ட பங்குத் தொகை ரூ.35.63 இலட்சம் ஆகும். 1997-98 ஆம் ஆண்டில் ரூ.39.58 இலட்சமும், 1998-99 ஆம் ஆண்டில் ரூ.85.86 இலட்சமும், 1999-2000 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2000 முடிய விற்பனை அளவு ரூ.98.24 இலட்சமுமாக

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.